
# யாழ்ப்பாண முஸ்லிம்கள்

## வரலாறும் பண்பாடும்



JPL
C9330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேகரிப்பு பகுதி

# யாழ்ப்பாண முஸ்லிம்கள் வரலாறும் பண்பாடும்

KOHA JPL

9330

கலாபூஷணம் எம். எஸ். அப்துல் ரஹீம்
B.A.(Ceylon) Dip.in Ed.,M.Ed.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

இஸ்லாமிய இலக்கிய கழகம்
யாழ்ப்பாணம்

217108

217108 C.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு டிசம்பர் 1979

மறுபதிப்பு 2008

History and Culture of Jaffna Muslims
By
Kalabooshana M. S. Abdul Raheem,
B.A.(Ceylon) Dip.in Ed.,M.Ed.


உரிமை ஆசிரியருக்கு

விலை: Rs. 300/=

ISBN 978-955-51198-0-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JPL



தன்னையழித்து என்னையாளாக்கிய
இன்னுயிர்த் தந்தை

## மீரான்கண்டு முகம்மது சுல்தான்

அவர்களின்
இனிய நினைவுக்கு
இந்நூல் அர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

954.93

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

# உள்ளடக்கம்


**பக்கம்**

1. என்னுரை ............ i
2. அணிந்துரை ............ ii
3. மதிப்புரை ............ iii
4. பாராட்டுரை ............ iv
5. நன்றியுரை ............ v

**பகுதி I - வரலாறு**

1. முஸ்லிம்களின் குடியேற்றமும் பரம்பலும் ............ 01
2. போர்த்துக்கேயர் காலம் ............ 21
3. ஒல்லாந்தர் காலம் ............ 31
4. ஆங்கிலேயர் காலம் ............ 41
5. சுதந்திரத்தின் பின் ............ 46
6. 1980 இன் பின்னர் ............ 57

**பிற்சேர்க்கை**

1. அடிக்குறிப்புகள் ............ 79
2. சில குறிப்புகள் ............ 81
3. உசாத்துணை ............ 86

**பகுதி II - பண்பாடு**

1. மொழி ............ 88
2. இலக்கியப் பங்களிப்புகள் ............ 107
3. அரபு இலக்கியப் பங்களிப்பு ............ 138
4. சமகால இலக்கியப் பங்களிப்பு ............ 141
5. கல்வி ............ 157
6. சமய விழிப்புணர்ச்சி ............ 165
7. பள்ளிவாசல்கள் (படங்கள் நூலின் இறுதியில்) ...... 169
8. உடைகள் ............ 178
9. உணவு ............ 181
10. சமய சமூக விழாக்கள் ............ 182
11. முஸ்லிம்களுக்கே உரித்தான கலைநிகழ்ச்சி ......... 193
12. திருமண சம்பிரதாயங்கள் ............ 195
13. தொழில்கள் ............ 210
14. சமூக சேவை இயக்கங்கள் ............ 213
15. உள்ளூராட்சி அரசியலில் முஸ்லிம்கள் ............ 219


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை



வாழ்த்த வாயும் தாழ்த்த தலையும் தந்த தனிப்பெரும் முதல்வனைப் புகழ்ந்து மாநிலத்தில் மக்கள் மான்புற வாழ வழிகாட்டிய மாநபியினை வாழ்த்தித் தொடங்கு கின்றேன்.

07.08.1977 இல் யாழ்ப்பாண பல்கலைக்கழக இஸ்லா மிய நாகரிகத்துறை விரிவுரையாளர் மௌலவி. கே. எம். எச். ஹாலிதீன் அவர்கள் ஒழுங்கு செய்திருந்த இதே தலைப்பிலான கருத்தரங்கில் கலந்து உரையாற் றும் சந்தர்ப்பம் ஒன்று எனக்கு தரப்பட்டது. அப்போது வந்திருந்த என் நண்பர்கள் இதில் மேலும் ஆய்வு செய்து நூலொன்றை வெளியிடுமாறு கேட்டனர்.

நமக்கு ஒரு வரலாறு வேண்டும் என்ற ஆவலினால் எடுத்து முயற்சியின் பெறுபேறே இது. இந்நூல் எனது முதலாவது முயற்சி. எவரையும் மனம் நோகவைக்கும் எண்ணம் எனக்கு இல்லை. இயன்றவரை என்னால் பெறமுடிந்த தகவல்களைச் சேர்த்துள்ளேன். சில தகவல்கள் தவறானதாக இருக்கலாம். பெருமனம் கொண்டு எனக்கு தெரிவித்தால் எதிர்காலத்தில் திருத்திக் கொள்ள முடியும். எனது முழு நூலையும் பார்வையிட்டு முன்னுரையும் அணிந்துரையும் தந்துதவிய நீதியரசர் அல்ஹாஜ். எம். எம். அப்துல் காதர், துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஆகியவர்களுக்கும், மிகவும் அழகிய முறை யில் அட்டைப்படம் வரைந்துதவிய என் நண்பர் வை. சிவசுப்பிரமணியம் (ரமணி) அவர்களுக்கும், என்னைப் பற்றிப் பின் அட்டையில் எழுதிப் பெருமைப் படுத்திய என் குரு இளங்கீரன் அவர்களுக்கும், அழகுற அச்சுப்பதித்த நாமகள் அச்சக அதிபருக்கும், அங்கு கடமை புரியும் தோழர்களுக்கும், நூலாக்கத்தில் பயன்மிகு ஆலோசனைகள் தந்த நண்பர்கள் அனைவருக்கும் என் உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கிறேன். அத்துடன் அழகான முறையில் அச்சிட்டு உதவிய AJ அச்சக நிறுவனத்தாருக்கும் எனது நன்றி உரித்தாகட்டும்.

அன்புடன்
**எம். எஸ். அப்துல் ரஹீம்**
(1.12.1979)

1980 இன் பின் நடந்த சம்பவங்களையும் 1990 இல் ஏற்படுத்தப்பட்ட பலவந்த வெளியேற்ற சம்பவங்களையும் இப்பதிப்பில் சேர்ந்திருக்கிறேன். யாரையும் புண்படுத்தும் நோக்கம் எதுவும் இல்லாது ஒரு வரலாற்று ஆவணமாகப் புலம் பெயர்ந்து அவதியுறும் என் உடன்பிறப்புக்களுக்காக மறுபதிப்பாக வெளியிடுகின்றேன்.

அன்புடன்
**எம். எஸ். அப்துல் ரஹீம்**
(2008)

XB/6/1/2 - அரச தொடர்மாடி,
எட்மன்டன் வீதி,
கிருலப்பனை,
கொழும்பு - 06.
தொ.பே.இல: 0112514001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

*கௌரவ அல்ஹாஜ் எம். எம். அப்துல்காதிறு*
*பீ. ஏ.(சிறப்பு) வரலாறு*
*அப்பீல் நீதிமன்ற நீதியரசர் - ஸ்ரீலங்கா*

தாம் எழுதும் நூல்களை விற்பனை செய்து முதலைத்தன்னும் மீட்டமுடியாதிருக் கின்றதே என்ற காரணத்தால் ஆற்றலிருந்தும் செயலற்று இருக்கிறார்கள், பல வருங்கால ஆசிரியர்கள். ஆராய்ச்சி செய்து அதுவும் ஏட்டிலில்லாதவற்றை பலரிடம் வினவி செய்திகள் சேகரித்து அவற்றில் சிலவற்றைத் தேர்ந்து ஆக்க மாக்குவது மாபெருஞ்சிரமம். ஆசிரியர் எம். எஸ். ஏ. ரஹீம் அவர்கள் இவை களினால் மனம் தளராது இந்நூலை இயற்றியதற்காக அவரை நான் மனமாரப் பாராட்டுகிறேன். தன் பெற்றோரை எப்படி ஒருவன் நன்கறிந்திருக்க விரும்பு வானோ அதேபோன்று தன் சமூகத்தின் சரித்திரத்தை உணர்ந்திருத்தல் அத்தியா வசியம். பாரம்பரியம் அறிந்த சமுதாயம்தான் தனது கண்ணியத்தைக் காப்பாற்றி அதற்காகத் தொடர்ந்தும் உழைத்து வரும். நானும் ஒரு யாழ்ப்பாண முஸ்லிம் என்ற கோதாவில் எனது தொன்மையையும், பெருமையையும் எடுத்துரைத்த தற்காக எனது நன்றியும் ஆசிரியருக்கு உரியது.

அராபிய மக்கள் ஆரம்பத்தில் இலங்கையின் தென்மேற்கு கரையில்தான் குடியேறினார்கள் என்ற தென்பகுதி ஆராய்ச்சியாளர்களின் கூற்றை நிராகரித்து, அவ்விடத்து முஸ்லிம்களின் தாய்மொழியும் தமிழ்மொழியாக இருப்பதனால் ஆரம்பக் குடியேற்றம் வடபகுதியில்தான் இருந்ததென்றும் இங்கிருந்துதான் தெற்கே பரந்தார்கள் என்று தயக்கமில்லாமல் அறைகூவும் ஆசிரியரைப் பாராட்டு கின்றேன். கருத்து வேற்றுமையினால்தான் அறிவு மலரும். எனவே ஆசிரியரின் கூற்று மேலும் ஆராய்ச்சிக்கு இடமளிக்குமானால் அதுவே போதுமானது.

அவரை நான் பாராட்டுவதுடன் அவருடைய கை ஓய்ந்திடாமல் தொடர்ந்தும் பல நூல்களை ஆக்குவதற்கு சமூகம் இந்நூலை வாங்கி அவருக்கு உற்சாக மூட்டக் கடமைப்பட்டிருக்கின்றது. இவருடைய வெற்றி மேலும் பலருக்கு உற்சாகமளிக்கக்கூடியதாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் ஆற்றல் வெளிக்கொணரப்படுவதுடன் அறிவும் வளரும்.

**வஸ்ஸலாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை

*பேராசிரியர் சு. வித்தியானந்தன் M.A.Ph D*
*துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்*

ஈழத்து முஸ்லிம்களின் வரலாறு பற்றிய முழுமையான நூலொன்று இதுவரை எழுதப்படாவிடினும் இத்துறையில் ஈடுபட்டுள்ள அறிஞர்கள் அவ்வப்போது சிற்சில முயற்சிகளிலீடுபட்டு வந்தனர். இவ்வகையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் ஈழத்து முஸ்லிம் தமிழறிஞருமான A. M. A. அஸீஸ் அவர்களின் **"இலங்கையில் இஸ்லாம்"** என்னும் நூல் குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து இஸ்லாமிய நாகரீகத் துறையினர் யாழ்ப்பாண முஸ்லிம்களின் வரலாறு பற்றிய கருத்தரங்கினைச் சென்ற ஆண்டு யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியில் நடாத்தினர். அதைத் தொடர்ந்து அப் பாடசாலையிற் கற்பிப்பவரும் பட்டதாரி ஆசிரியருமான ஜனாப் M. S. A. ரஹீம் அவர்கள் யாழ்ப்பாண முஸ்லிம்களின் வரலாறும் பண்பாடும் என்ற இச் சிறிய நூலினை வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்து முஸ்லிம்களுக்குத் தனித்துவமான ஒரு வரலாறுண்டு. போர்த்துக் கேயருக்கு எதிராகச் சிங்கள மன்னர்கள் நடாத்திய போராட்டத்தில் அம் மன்னருக்கு ஆதரவு கொடுத்தமை போன்று போர்த்துக்கேயருக்கு எதிராகத் தமிழ் மன்னர்கள் நடாத்திய போராட்டத்திலும் தமிழ் மன்னர்கட்குத் துணையாக நின்றவர்கள் முஸ்லிம் மக்கள். இவர்களின் வரலாற்றினை ஆராய்ச்சிபூர்வமாக மேற்கொள்ளுதல் பயன்தரும் முயற்சியாகும்.

இந்நூலினை ஆசிரியர் இரண்டு பாகங்களாகப் பிரித்துள்ளார். முதற்பாகத்தில் யாழ்ப்பாண முஸ்லிம்களின் வரலாறு விபரிக்கப்படுகிறது. அவர்கள் குடியேறிய இடங்கள் அவர்கட்கும் தமிழ் மக்களுக்கும் இருந்த தொடர்புகள் ஆகியன இப்பிரிவிற் கூறப்பட்டுள்ளன.

இரண்டாம் பாகத்தில் யாழ்ப்பாணத்து முஸ்லிம்களின் பண்பாடு விபரிக்கப்படு கிறது. அம்மக்களின் பேச்சு வழக்கு; தமிழ் இலக்கியத்திற்கு அவர்கள் ஆற்றிய பணி, அரபு இலக்கியத்திற்கு அவர்களின் பங்களிப்பு, அவர்களின் கல்வி வளர்ச்சி, திருமண சம்பிரதாயங்கள், விழாக்கள், அவர்களிடையே காணப்பட்ட சமூக இயக்கங்கள் ஆகியன இப்பிரிவிற் கூறப்பட்டுள்ளன.

சரித்திரத்தை விடக் கூடிய கவனத்தை ஆசிரியர் பண்பாட்டு அம்சங்களிலேயே செலுத்தியுள்ளார். பண்பாட்டு அம்சங்களிற் செலுத்தப்பட்ட கவனம் சரித்திர அம்சங்களிலும் செலுத்தப்பட்டிருப்பின் இந்நூல் இன்னும் சிறப்பாக அமைந்திருக் கக்கூடும்.

எனினும் இவ்வகையில் இந்நூல் ஒரு முதல் நூல் என்ற வகையில் பாராட்டிற் குரியது. சம காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் பல முதியவர்களை நேரிற் கண்டு அளவளாவி ஆசிரியர் பல அரிய தகவல்களைப் பெற்றுள்ளார். இத் தகவல்கள் மென்மேலும் இத்துறையில் உழைக்க விரும்புவர்கட்கு அரியனவாகும். இம் முயற்சியில் ஜனாப் M. S. A. ரஹீம் அவர்கள் தொடர்ந்து பணி செய்ய வேண்டுமென்பதே நமது அவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டுரை

***சுபைர் இளங்கீரன்***

பேராதனைப் பல்கலைக் கழக பட்டதாரியும் பயிற்றப்பட்ட ஆசிரியருமான முகம்மது சுல்தான் அப்துல் ரஹீம் இலக்கியப் பற்றும் எழுத்தார்வமும் உள்ளவர். முற்போக்கு உணர்வும் சமுதாயப் பற்றும் உடைய அவருடைய ஆர்வத்தின் வெளிப்பாடே இந்நூல்.

இத்தகைய ஒரு நூலை எழுதி வெளியிடுவதென்பது மிகவும் சிரமமானதொன்றாகும். இப்பணியில் பெருமையுடன் முனைந்து தன் சொந்தப் பணத்திலேயே இந்நூலை வெளியிட்டுள்ள ஆசிரியர் ரஹீம் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

யாழ்ப்பாண முஸ்லிம்கள் வரலாற்றையும் பண்பாட்டையும் புலவர்கள், கல்விமான்கள், எழுத்தாளர்கள் மற்றும் மக்கள் பற்றி யாவரும் அறிந்து கொள்வதற்கு இந்நூல் இன்றைய தலைமுறையினருக்கும் எதிர்காலச் சந்ததியினருக்கும் பயனுள்ளது. இந் நிலைத்த பணியைச் செய்த ஆசிரியர் ரஹீம் மேலும் பல நூல்களைத் தொடர்ந்து வெளியிட முஸ்லிம் மக்கள் உட்பட யாவரும் ஆதரவு வழங்குவர் என எதிர்பார்க்கிறேன்.

**இளங்கீரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

அல்ஹம்துலில்லாஹ் எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. நாங்கள் வெளியேற்றப் பட்ட காலம் முதலாக இந்த நூலை அச்சிட்டு வெளியிடும்படி பலரும் கோரினர். துரதிஷ்டவசமாக புத்தகத்தின் பிரதி என்னிடம் இருக்கவில்லை. கொழும்பு பல்கலைக் கழகத்தில் நான் டிப்ளோமா கற்கும்போது எனது சக மாணவர்கள் அனைவரும் எனது புத்தகத்தின் பிரதிகளை வாங்கினர். இவ்வாறு பெற்றுக் கொண்ட யாழ்ப்பாணத்தை சேர்ந்த செல்வி. வ. ஆறுமுகம் நான் கேட்காமலே தானாக முன்வந்து இந்த புத்தகத்தை அன்பளிப்பு செய்தார். அந்தப் புத்தகமே இன்று மறுபதிப்பு செய்ய உதவுகிறது. எனவே அவருக்கு முதற்கண் என் நன்றி உரித்தாகுக.

நான் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின் வெளியிடலாம் என்று இருந்தேன். தொடர்ந்து எனது இரு கண்களும் பார்வை இழந்து போனதால் எனது மகன் முகம்மது சுல்தான் ஹிஸாம் அவர்கள் மூலம் வெளிக் கொணர்கிறேன். இதனை எழுதும்போது ஆக்கபூர்வமான தகவல்களைத் தந்த ஆசிரியர் யாழ் அசீம் அவர்களுக்கும், நூலை வெளியிட நிதி உதவி புரிந்த எனது மகனும், முன்னாள் வீரகேசரி உதவி ஆசிரியர் ரஹீம் ராஜி அவர்களுக்கும், சரவை பார்த்துதவிய எனது மக்கள் ரசானா, ஹிஸாமா ஆகியவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு

**M. S. அப்துல் ரஹீம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண முஸ்லிம்களின் வரலாறு

# பகுதி I

## முஸ்லிம்களின் குடியேற்றமும் பரம்பலும்.

யாழ்ப்பாண முஸ்லிம்களின் வரலாறு நீண்ட காலத்தைக் கொண்ட ஒன்றாகும். ஈழத்தில் முதலில் அராபியர் குடியேறி வாழ்ந்த பகுதிகள் தமிழர் பெருமளவினராக வாழ்ந்த வட பகுதியில் தான் என்பதனை முஸ்லிம்களின் தாய்மொழியாம் தமிழும் அவர்கள் பின்பற்றுகின்ற பண்பாட்டு அம்சங்களும் நன்கு புலப்படுத்துகின்றன. என்றாலும் வரலாற்று ஆய்வாளர்கள் எதிர்கொள்ளுகின்ற சிலாசாசனங்களோ வேறு வகை நம்பத் தகுந்த சான்றுகளோ இதனை நிரூபிக்கப் போதியதாக இல்லாத தால் இக்கருத்து பலமற்றுள்ளது. முஸ்லிம்கள் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தும் ஒரே இடத்தில் இருந்திருப்பார்களானால் அல்லது போர்த்துக்கேய ஆக்கிரமிப்பாளர்களால் அவர்கள் கட்டிடங்கள் சிதைக்கப்பட்டுச் சூறையாடப்பட்டு துரத்தப்படாது இருந்திருப்பார் களானால் சான்றுகள் கிடைத்திருக்கும். முஸ்லிம்கள் குடியேறிய காலத்திலிருந்து அவதானிக்கும்போது இன்று முஸ்லிம்கள் வாழுகின்ற பகுதி ஐந்தாவது அல்லது ஆறாவது இடம் என்பது தெளிவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குலகத்தில் போர்த்துக்கேயர் தலையெடுக்கும் வரை அராபியர்களே பெரும் செல்வாக்கு உடையோராயிருந்தனர். அராபியரின் வணிகக் கணங்கள் தந்த பொற்குவையே கீழை நாடுகளில் சாம்ராஜ்ஜியங்கள் தோன்றவும் காலாக இருந்துள்ளன. இஸ்லாம் சமயம் முகம்மது நபி (ஸல்) அவர்களின் முயற்சியினாலே அராபியாவில் வேரூன்ற முன்னதாகவே அராபியரின் வருகை பற்றிப் பண்டைய இலக்கியங்களில் பேசப்படுகிறது. இத்தகைய அராபிய வணிகர்களை இரண்டு பெரிய காரணிகள் இலங்கைக்குக் கொண்டு வந்திருக்கலாம். ஒன்று தென் ஆசிய நாடுகளின் மத்தியில் அமைந்திருந்த நிலைமையும் இங்கிருந்த வணிக வாய்ப்பும். அடுத்தது ஆதி பிதா ஆதம் (அலை) முதலில் இறக்கப்பட்ட இடம் இலங்கைதான் என்று அன்றும் நன்கு பரவியிருந்த செய்தி. இக்காரணிகளால் வந்து உறவாடிய அராபியர் காலப்போக்கில் ஈழத்தின் காலநிலை, தரைத்தோற்றம், வணிக வாய்ப்பு என்பவற்றால் கவரப்பட்டுக் குடியேறியதில் வியப்புக்கே இடமில்லை. இவர்கள் இவ்வாறு எக்காலத்தில் வந்தனர் என்பதற்கான ஆதாரங்கள் குறைவாகவே உள்ளன.

பைஹகீ (ரஹ்) அவர்களும் தபரீ (ரஹ்) (கி. பி. 838) அவர்களும் "ஆதம் (அலை) இலங்கையில்தான் முதன்முதலில் வந்திறங்கினர். அது அப்போது இந்தியாவின் ஒரு பாகமாக இருந்தது. ஆதம் (அலை) இங்கிருந்து மக்காவுக்குச் சென்று அதன் பின் இலங்கைக்கே திரும்பி, வாழ்ந்து வந்தனர்" என்று கூறுகிறார்கள். இதனையே இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களும் கூறுகிறார்கள். கி. பி. 956 இல் இங்கு வந்த மஸ்ஊதியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயூக்தி (ரஹ்) அவர்களும் கூட ஆதம் (அலை) அவர்களின் அடக்க ஸ்தலம். இலங்கையிலுள்ள "பூஸ்" மலையில் உள்ளது என்றே உறுதிப்படுத்துகிறார்கள்.[1]

"விதுரனும் துரியோதனனும் அரபு மொழியிலேயே சம்பாஷித் தனர்" என்பதனால் அரபு மக்களின் தொடர்பு மாபாரத காலத் திலும் இருந்தது என்பதனைப் புலப்படுத்தும் என்று மௌலானா ஸையித் சுலைமான் நத்வி குறிப்பிடுகிறார். ஈழத்தோடு தொடர்புடைய பல நாடுகாண் போர் தத்தமது குறிப்புகளில் ஈழம் பற்றிப் பெய்துள்ளனர்.

மென்லைக் சுலைமான் கி. பி. 851 லும் அபூசையித் கி. பி. 916 லும் மஸ் ஊதி கி. பி. 956 லும் அல் இத்ரீசி பதினோராம் நூற்றாண்டிலும், அல் கஸ்வாணி 1275 லும்[2] இப்னு பதூதா 1344 லும் இங்கு வந்துள்ளனர். இப்னு பதூதாவின் குறிப்பில் யாழ்ப்பாண மன்னனாகிய ஆரியச் சக்கரவர்த்தியிடமிருந்து பல கப்பல்கள் ஓமானுக்குப் புறப்பட ஆயத்தமாயிருந்தன என்றும் காணப்படுகிறது.[3]

சுலைமான் ஸைராபி என்ற அரபி வியாபாரி ஹிஜ்ரி 237 இல் அதாவது கி. பி. 817 இல் எழுதிய தன்னுடைய பிரயாணக் குறிப்பிலேதான் எல்லாவற்றிற்கும் முதலாக இலங்கையையும் ஆதம் (அலை) அவர்களின் அடிச்சுவட்டையும் பற்றிக் கூறியிருக்கிறார். அத்துடன் இத்தீவின் அம்பர், முத்து, தேங்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவை அரபு தேசம் முழுவதும் கியாதி பெற்றிருந்தது என்றும் கூறுகிறார்.

இவருக்குப் பின் 24 வருடங்கள் கழித்து அதாவது கி. பி. 841 இல் இத்தீவுக்கு வந்த அபூ ஸையித் ஸைராபி பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"இத்தீவில் அரபி வியாபாரிகள் குடியேறியிருக்கிறார்கள். அங்குள்ள ஜனங்கள் அவர்களை ஹிம்சித்துப் பொருள்களைக் கொள்ளை கொண்டனர்."

மௌலானா மௌலவி செய்யித் சுலைமான் நத்வி அவர்கள் ஹிஜ்ரி மூன்றாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில்தான் அதாவது கி. பி. 8 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் இஸ்லாம் பரவி யிருக்க வேண்டுமென யூகிக்கப் போதிய காரணங்கள் இருப்ப தாகக் கூறுகிறார்.

அதேபோல புஷ்ரங் இப்னு ஸஹர்யார் என்ற அரபியல்லாத கப்பலோட்டி ஒருவர் தன்னுடைய கடற் பயணக் குறிப்புகளில், இலங்கையில் இஸ்லாமியக் குடியேற்றங்கள் அதிகமாக இருந்த தாகவும் அவர்களில் அநேகர் ஆலிம்களாகவும் ஹாஜிகளாகவும் இருந்ததாகவும் எழுதியிருக்கிறார்.[4]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. பி. 712 இல் உமையாக்களின் தளபதி ஹஜ்ஜாஜ் இப்னு யூசுப் ஈராக்கின் ஆளுநராக இருந்தபோது ஹாஷீம் கிளையினர் இந்தியாவின் மேற்குக் கரையில் கொங்கோணத்திலும் கன்னியா குமரியின் கிழக்கிலும் குடியேறி வாழ்ந்தனர். அக்காலையில் தங்களுக்கு ஏற்கனவே அறிமுகமான இலங்கையின் வடபகுதி யான யாழ்ப்பாணத்திலும் குடியேறியிருக்கலாம்.

முஸ்லிம்களின் முதற் குடியேற்றம் நடைபெற்றதாகக் கருதப்படும் எட்டாம் நூற்றாண்டில் கொங்கோணக் கரையிலும், மலையாளக் கரையிலும் மஹல்லதீவு எனப்படும் மாலைதீவுகளிலும் நிகழ்ந் திருக்க வேண்டும். அதே காலத்தில் யாழ்ப்பாணம் தொடக்கம் காலி முனை வரையிலான மேற்குக் கரையின் பக்கமே முதல் முஸ்லிம்களின் குடியேற்றம் நிகழ்ந்திருத்தல் வேண்டும்.

இலங்கையின் நீதியரசராக இருந்த சேர் அலெக்சாண்டர் ஜோன்ஸ்ரன் அவர்கள் ஈழத்தில் முஸ்லிம்களின் குடியேற்றம் கி. பி. 8 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே நிகழ்ந்து இருக்க வேண்டும் என்று கூறுகிறார். மேலும் அவர் இலங்கை முஸ்லிம்களைப் பற்றிக் கூறுகையில் இலங்கைக்கு வந்த முஸ்லிம்கள் பாரசீகக் குடாவுக்கூடாக பஸறாவுக்குள்ளும், பாக்தாத்தோடும் அந்த நாட்டில் கலீபா அரசாட்சிக்குட்பட்ட தேசங்களோடும் அறபுக்கடல் எகிப்தின் நிலப்பரப்பு, மத்தய தரைக்கடல், ஸ்பெய்ன் ஏனைய இஸ்லாமிய ராச்சியத்துடனும் தொடர்புற்றுப் பின்னப்பட்ட காரணத்தினால் இஸ்லாமிய சமயச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்ட நூற்களுடன் கிரேக்க ரோம மொழியிலிருந்து வைத்தியம், சரித்திரம், தத்துவம் போன்ற கல்வித்துறை நூல்களை அரபியில் மொழிபெயர்த்து பல தேசங்களிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வந்ததாகக் கூறுகின்றார்.[5]

1787 இல் டச்சு அதிகாரி ஒருவர் கொழும்பிலுள்ள முஸ்லிம் களின் மையவாடியிலிருந்து ஹிஜ்ரி 317 அதாவது கி. பி. 898 ஆண்டு நாட்டப்பட்ட அரபு எழுத்துக்களுடனான கல்வெட்டு ஒன்றை எடுத்து இங்கிலாந்து கொண்டு சென்றார். கொழும்பில் கண்டுபிடிக்கப்பட்ட பழைய அரபு எழுத்து (கூபிக்) முறை சார்ந்த கல்வெட்டு ஹிஜ்ரி 337 (கி. பி. 959) என்ற திகதியுடன் காணப்படுவதானது இக்காலத்தில் இலங்கை முஸ்லிம்களுக்கும் பாக்தாதின் அப்பாசிய இராச்சியத்துக்கும் இடையில் நெருங்கிய கல்வி கலாச்சாரத் தொடர்பு இருந்தமையை விளக்குகிறது. கி. பி. எட்டாம் நூற்றாண்டில்தான் ஈழத்தில் முஸ்லிம்கள் குடியேற்றம் நடந்திருக்க வேண்டும் என்று திரு. சைமன்காசிச் செட்டியும் கூறுகிறார்கள்.

அப்துல் மலிக்பின் மறுவானுடைய காலத்தில் நாடு கடத்தப்பட்ட முஸ்லிம்களும் 8ம் நூற்றாண்டில் இங்கு வந்து குடியேறி யுள்ளனர்.

முஸ்லிம்கள் ஈழத்தில் முதலில் எப்பகுதியில் குடியேறினார்கள் என்பதில் ஆய்வாளரிடையே கருத்து வேறுபாடு உண்டு. முதற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேற்றம் பேருவலை என்பர் பெரும்பாலார். இது சிறிது சிந்திக்கப்பட வேண்டியதாகும். கி. பி. எட்டாம் நூற்றாண்டு அளவில் தமிழர் ஆதிக்கம் இலங்கையின் தென்பகுதி மேற்குப் பகுதிகளில் குறைவாகவே இருந்திருக்கிறது. வடபகுதியே காலத்துக்குக் காலம் நிகழ்ந்த தென்னிந்தியப் படையெடுப்பு களாலும் குடியேற்றங்களாலும் தமிழர் செல்வாக்கு மிகுந்து காணப்படுகிறது. இந்த நிலையில் இங்கு முதலில் முஸ்லிம்கள் குடியேறி அங்குள்ள மக்கள் மத்தியில் அடைந்த செல்வாக்கு காரணமாக ஏற்கனவே குடிகொண்டிருந்த இந்துக்களின் நல் லெண்ணத்துக்கு இலக்கானதன் காரணத்தால் உயர்குடியிற் பிறந்த நல்லொழுக்கமுடைய இந்துப் பெண்மணிகள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு இவர்களுக்குத் துணைவியராகும் வாய்ப்பைப் பெற்றனர். ஆறுமுக நாவலர் அவர்கள் **'யாழ்ப்பாணத்துச் சமயநிலை'** என்ற கட்டுரையிலே கிறீஸ்தவ மதத்தைத் தழுவிய வர்களை மிகவும் கேவலமாக இடித்துரைக்கும் அதேவேளையில் முஸ்லிம்களைப் பற்றி எதுவும் பேசாதிருப்பதானது, முஸ்லிம்கள் எந்த நிலையில் வைத்துக் கணிக்கப்பட்டிருந்தனர் என்ற நிலை யினைத் தெளிவாக்கும். இப்படியாகத் தமிழ்ப் பெண்களை அராபியர் மணந்ததனாலேயே அவர்களின் தாய்மொழி தமிழாக இருக்கிறது. முதற் குடியேற்றம் சிங்கள மக்கள் சூழவுள்ள பேருவலையில் நிகழ்ந்திருந்தால் முஸ்லிம்களின் தாய்மொழி சிங்களமாக ஆகியிருக்க வேண்டும். அத்துடன் சிங்களவரின் பண்பாட்டு அம்சங்களும் நிறைந்திருக்க வேண்டும். மாறாக முஸ்லிம்களின் பண்பாட்டு அம்சங்களில் தமிழர் பண்பாட்டின் செல்வாக்கு விரவியிருத்தலை நன்கு அவதானிக்க முடியும். போர்த்துக்கேயரும் பின்வந்த ஒல்லாந்தரும் யாழ்ப்பாணத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த பள்ளிவாசல்கள் கட்டிடங்கள் யாவற்றையுமே சிதைத்து அந்தக் கற்களைக் கொண்டே பறங்கித் தெருப் பகுதியில் கட்டிடங்களை நிர்மாணித்தபடியால் எந்தவிதமான வரலாற்றுச் சான்றுகளும் பெறமுடியாது போய்விட்டது.

1344 இல் இப்னு பதூதா மாலைதீவு சென்று வருகையில் வானிலை சீராக அமையாததினால் கரையிறங்கி யாழ்ப்பாண அரசனாகிய ஆரியச் சக்கரவர்த்தியைக் காணச் செல்கிறார். அக்காலையில் அரபு நாடுகளுடன் ஆரியச் சக்கரவர்த்தி வணிகத் தொடர்பு கொண்டிருந்ததாகவும் குறிப்பிடுகின்றார். பல ஆய்வாளரும் கருதுவது போல இப்னுபதூதா இறங்கிய இடம் புத்தளமாக இருந்தால் அங்கிருந்து ஆரியச் சக்கரவர்த்தியிடம் வரவேண்டியதில்லை. சிங்கள மன்னர்களிடம் சென்றிருக்கலாம். எனவே அண்மைக்கால ஆய்வாளர்கள் கருதுவதுபோல பருத்தித் துறைப்பகுதியாக இருக்க வேண்டும். பாவா ஆதமலைக்குச் செல்லும் வழியிலுள்ள மேனார் மெந்தலி (மன்னார் - மாந்தை)ப் பகுதியில் ஒரு முஸ்லிமாவது காணப்படவில்லை என்ற கூற்றி லிருந்து ஆரியச் சக்கரவர்த்தியின் ஆணைக்குட்பட்ட பகுதியில் முக்கியமாக யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் வாழ்ந்திருக்கின்றனர் என்பது புலனாகும்.

இலங்கை முஸ்லிம்களை முதன்முதல் 'MOOR' என்று குறிப்பிட்ட வர்கள் போர்த்துக்கேயரேயாவர். இதனால் மொறோக்கோ தேசத்திலிருந்து வந்து குடியேறியவர்கள் என்ற கருத்தினைக் கொள்வது நன்று என்றே நான் கருதுகிறேன். மொரோக்கோ தேசத்தவர்கள் பெரும்பான்மையும் 'ஹனபி' மத்ஹபைப் பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றுபவர்கள் இலங்கை முஸ்லிம்களோ பெரும்பான்மையினரும் 'ஷாபி' மத்ஹபைப் பின்பற்றுகிறவர்கள். புதிய இடம் ஒன்றுக்குக் குடிபெயர்ந்ததனால் தமது மத்ஹபை மாற்றியிருக்க மாட்டார்கள்.

போர்த்துக்கேயருடைய நாட்டுக்கு அண்மையில் உள்ள இஸ்லாமிய நாடு மொரோக்கோ அங்கு தாம் கண்டவர்களைப் போலவே சமய வணக்கங்களில் ஈடுபட்ட முஸ்லிம்களை இங்கும் MOOR என்று போர்த்துக்கேயர் அழைத்தனர். எனவே இலங்கை முஸ்லிம்களுக்கும் மொரோக்கோவுக்கும் எந்தவிதத் தொடர்பு மில்லை என்பதனை இதன் மூலம் அறியலாம். இந்த MOOR என்ற பதத்துக்கு தமிழ்ப்பதமாக சோனகன் என்ற பதம் வழக்கி லுள்ளது. இந்திய வரலாற்று ஆய்வாளர் துலுக்கர் (துருக்கர்) மகமதியர்கள் என்றே பெரிதும் முஸ்லிம்களைக் குறிக்கக் கையாளுகிறார்கள். சிங்களத்தில் மரக்கலமினிசு என்பதும் சிலவேளை இந்த மூர் என்பதன் மருவல் என்று வாதிடுவோரும் உளர். மரக்கலம் என்ற தமிழ்ப் பதத்திலிருந்தே மரக்கலமினிசு என்று வந்திருக்க வேண்டும் எனத் துணிவதே பொருத்தமாகலாம். இதேபோல சுவர்க்கத்துக்குரியவன் என்ற பொருள்படும், சுவனன் என்ற பதம் மருவியே சோனகர் என்ற வந்தது என வாதிடு வோரும் உளர். உலகிலே வேறு எங்கணுமே முஸ்லிம்கள் சோனகர் என்று குறிப்பிடப்படாததால் இதிலும் தமிழின் செல்வாக்கே பிரதிபலிப்பதனைக் காணலாம். இதனை விடத் தமிழிலக்கியங்களில் உரோமர், கிரேக்கர், அராபியர் அனைவருமே யவனர் என்று குறிப்பிடப்படுகிறார்கள். யவனர் என்ற தமிழ்ப் பதத்திற்கு கம்மாளர், சித்திரக்காரர், சோனகர் என்ற பதங்களும் உண்டு. சோனகம் என்பது ஐம்பத்தாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசங்களில் ஒன்று என்றும் பதினெட்டுப் பாஷையில் ஒன்று என்றும் பொருள்படும். சோனகர் என்பதற்கு துலுக்கர், யவனர், உவச்சர் யவன தேசத்தவர் என்றும் பொருள்கள் அகராதியில் உண்டு. சிங்கள இலக்கியமான **"ஹிர சந்தேசய"** என்ற நூலில் இந்த யவன என்ற பதமே **"யோன்"** என்று குறிப்பிடப் படுவதும் ஈண்டு நோக்கத்தக்கது. ஈழத்து நூல்களில் இந்தச் சோனகர் என்ற பதம் ஆரியச் சக்கரவர்த்திகளின் காலத்தின் பின் எழுந்த நூற்களிலேயே காணப்படுகிறது. 1344 இல் ஆரியச் சக்கரவர்த்தியுடன் உரையாடும் இப்னுபதூதா தன்னை அறிமுகம் செய்யும்போது சோழமண்டல (சுல்தான்) அரசனுக்குப் பெண் கொடுத்த மைத்துனனும் நண்பனும் என்று அறிமுகம் செய்கிறான். இவ்வாறு ஏற்பட்ட அறிமுகத்தால் சோழமண்டலத் தான் என்ற பதம் சோழகன் என்றும் பின்பு சோனகன் என்றும் மருவியிருக்கலாம் எனத் துணியவும் இடமுண்டு. அல்லது சோழகக்காற்று எனப்படும் தென்மேல் பருவக்காற்று வீசும் காலத்தில் தான் பெரும்பாலும் ஈழமண்டலக் கரையினை அடைந்துள்ளதால், அதன் பெயரையொட்டியே சோழகர் மருவி சோனகராக வந்ததோ எனவும் துணியலாம்.

அராபியரின் முதற் குடியேற்றம் யாழ்ப்பாணமும் அதனைச் சூழ்ந்த தீவுகளிலுமே நடந்திருக்க வேண்டும். ஆரம்பகால முஸ்லிம்கள் பற்றிய குறிப்பை ஆராய்கையில் கி. பி. 8 ஆம் நூற்றாண்டில் இடம்பெற்றதாக ஒரு சம்பவம் கூறப்படுகிறது. பாண்டு மகாராசன் காலத்தில் யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள உசுமன்துறை, வலித் தூண்டல், சேந்தான் குளம் போன்ற பகுதிகளில் முக்குகக் குடியிருப்புகள் இருந்தன என்று காணப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகிறது. இவர்கள் சிங்களக் கூலியாட்களைக் கொண்டு மீன் பிடித்து கருவாடு ஆக்கி வணிகம் செய்து வந்துள்ளனர். கீரிமலையிலுள்ள நகுலேசர் ஆலயத்தை அசுத்தப்படுத்தி னார்கள் என்ற காரணத்தால் இந்த முக்குகர்கள் வெளியேற்றப் பட்டு மட்டக்களப்பில் குடியேறினர்.

தமிழ்நாட்டில் வாழ்ந்த சேரமான் பெருமாள் (கி. பி. 800) என்ற அரசர் ஒருவர், இந்து சமயத்தைச் சேர்த்தவர். பல இந்துமதப் பக்திப் பதிகங்களைப் பாடினார். அராபிய வணிகரின் வருகையும் அதனால் ஏற்பட்ட கொள்கைத் தாக்கமும் அவரை இஸ்லாம் மதத்தைத் தழுவ வைத்தன. அவர் தனது பெயரை அப்துர்ரஹ்மான் சாமிரி என்று மாற்றிக் கொண்டார். இவர் அராபியரிடம் பெருமதிப்பு வைத்திருந்தார். அராபியரின் கப்பற் படை உதவி மன்னருக்கு என்றும் தேவையாக இருந்ததனால் தம் நாட்டில் உள்ள மீன்பிடிகாரர்களான முக்குவர்களில் ஒவ்வொரு குடும்பத்திலும் எவரேனும் ஒரு ஆண் இஸ்லாத்தைத் தழுவி வாழவேண்டும் என்று ஆணையிட்டார். அவர்களின் பரம்பரையினரே முன்கூறப்பட்ட வலித்தூண்டல், சேந்தான்குளம், உசுமன் துறை ஆகிய இடங்களில் வாழ்ந்தவர்கள் எனவும் துணியலாம்.

வரலாற்றுச் சான்றுகளில் கடற் கொள்ளைக்காரராக வெடியரசன் என்பவனும் மீரா என்பவனும் குறிப்பிடப்படுகிறார்கள். அப்போது ஏற்பட்ட கலகம் ஒன்றைத் தொடர்ந்து வெடியரசன் மட்டக் களப்புக்கு ஓடி ஒரு முக்குவக் குறிச்சியை ஆரம்பித்தான். மீரா என்பவன் விடத்தல் தீவுக்கு ஓடி முகம்மதியக் குடியேற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றை ஆரம்பித்தான்.[6] என்றும் சான்றுகள் கூறுகின்றன. மீராவும் அவனது சனமும் என்று குறிப்பிடப்படுவதால் ஏற்கனவே முஸ்லிம்கள் கடற்கரையோரங்களில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதும் புலனாகும். வெடியரசன் என்று சொல்லப்படுபவனும் ஒரு முஸ்லிமாக இருக்கலாம் எனத் துணியவும் இடமுண்டு.

யாழ்ப்பாணம் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்றும் நுகரைப்பற்றில் முழுக்க முழுக்க முஸ்லிம்களே (துலுக்கர்) வாழ்ந்தார்கள்[7] என்றும் சான்றுகள் கூறும். முதலாம் விஜயபாகு முழுநாட்டையும் ஆண்ட காலத்தில் அவனது படைவீரராக யாவாவைச் சேர்ந்த கூலிப் படையினரைக் கொண்டு வந்து வைத்திருந்தான்.[8] குலோத்துங்க சிங்கையாரியன் 13 ஆம் நூற்றாண்டிலே யாப்பகுவவை அழித்தபோது பல யாவுகர்கள் சிறையாகப் பிடிக்கப்பட்டனர்.[9] அவ்வாறு சிறையாகப் பிடிக்கப் பட்ட யாவுகர்களை சாவகச்சேரியில் குடியமர்த்தினான். இந்த யாவுகர்கள் அனைவரும் முஸ்லிம்களாயிருந்தனர். இதனால் முஸ்லிம்களின் சாவகச்சேரியிலான குடியேற்றம் 13 ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்திருக்க வேண்டும். இவர்கள் கனகசூரிய சிங்கையாரியன் காலத்தில் 1564 இல் துரத்தப்பட்டனர்.

ஆதிக் குடியேற்ற காலங்களை விட இந்தியாவின் தக்கணத் தில் பாமனீ சுல்தான் ஆட்சியில் வட இலங்கையையும் அடக்கி ஆண்டபோது 1422 அளவில் மற்றொரு முஸ்லிம் குடியேற்றமும் நிகழ்துள்ளது. 1450 இல் சிறி சங்கபோதி புவனேகபாகு கனக சிங்கையாரியனை வென்ற பின்பும் இந்தியாவிலிருந்து வட இலங்கைக்கு ஒரு முஸ்லிம் குடியேற்றம் நிகழ்ந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணக் குடாநாடெங்கணும் முஸ்லிம்கள் பரந்து வாழ்ந்த துடன் நெயினா(ர்)தீவு மண்டைதீவு, மண்கும்பான், காரைதீவு என்னும் தீவுகளிலும் முஸ்லிம்கள் பரந்து வாழ்ந்துள்ளனர் என்பதற்குப் போதிய சான்றுகள் உண்டு. இன்றும் குடாநாட்டின் பெரும்பாலான காணிகள் சோனகன் வடலி, சோனகவெளி, சோனகவாடி, சோனகஅடி, சோனகரடைப்பு என்றும் சில முஸ்லிம்களின் தனிப் பெயரையும் கொண்டு விளங்குகின்றன. இவை போன்ற பலவற்றை குடாநாட்டின் பெரும்பாலான காணி களின் தாய் உறுதிகளிலிருந்து பெறலாம்.

9330

மண்டைதீவு, காரைதீவு என்பவற்றில் இன்று முஸ்லிம்கள் வாழ்வ தில்லை என்றாலும் மண்டை தீவில் முன்பு வாழ்ந்த முஸ்லிம் களால் தமது காலத்தின் பின் பள்ளிவாயில்களுக்கு எழுதிய காணிகள் இன்றுமிருப்பதை அவதானிக்கலாம். காரைதீவில் இன்றும் ஒரு குறிச்சிக்கு சோனகரடைப்பு என்ற பெயர் உண்டு. இவற்றைவிட உசுமான்துறை வலித்தூண்டல் என்பவற்றிலும் உசன் என்பதிலும் முஸ்லிம் பெயர்களின் செல்வாக்கைக் காணலாம்.

நயினாதீவு, மண்கும்பான், மண்டைதீவு, காரைதீவு ஆகிய இடங்களில் பெரும்பாலும் முத்துக்குளித்தல், அம்பர் பெறல், சங்கு குளித்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்ட கீழைக்கரை இஸ்லாமியரின் செல்வாக்கே மிகுந்திருக்க வேண்டும். இருந் தாலும் இதற்கு முன்பே பெருமானாரின் காலத்திலும் அதன் பின் வாழ்ந்த கலீபாக்களின் காலத்திலும் சமயப் பிரசாரம் மேற்கொள்ளவென வெளியேறிய நல்லடியார்கள் பலர்



217108

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிருடன் வந்து ஈழத்தின் பல்வேறு கரைகளையும் அடைய சிலர் மரணித்த நிலையிலேயே கரையையடைந்தனர். இவ்வாறான நல்லடியார்கள் வாழ்ந்த காலத்திலும் சிலர் இறந்த பின்பும் அவர்கள் அடங்கப்பட்ட சமாதிகளின் அருகிலும் சில அற்புதச் செயல்களை மக்கள் கண்டறிந்து அவர்களை அவ்லியா எனப்படும் (வலியுல்லாஹ்) ஆண்டவனின் நண்பர் என்று கொண்டாடினர். இவ்வாறான ஒரு சமாதி வெள்ளைக் கடற்கரையில் உண்டு. இங்கு அடக்கம் செய்யப்பட்டிருப்பவர் சுல்தான் அப்துல்காதர் வலியுல்லா என்றும் அவரின் தங்கையே நயினாதீவில் அடங்கியுள்ளார்கள் என்றும் மக்கள் இன்றும் நம்புகிறார்கள். இவ்வாறு கடற்றொழில் நாட்டம் மற்றும் வியாபாரம் காரணமாக இங்கு குடியேற்றங்களை அமைத்த வர்கள் காலப்போக்கில் குடாநாட்டிற்கு பெயர்ந்திருத்தல் கூடும்.

ஆரம்ப காலத்தில் முஸ்லிம்களின் பிரதான குடியிருப்புகளாக ஐந்து பகுதிகளை நம்மால் அடையாளம் காணமுடியும். இந்த ஐந்து பகுதிகளில் தலையாயது தற்போது அலுப்பாந்தி என்று அழைக்கப்படும் இறங்குதுறை, பறங்கித்தெரு, சின்னக்கடை, கோட்டை, பொலிஸ் நிலையம் ஆகிய பகுதிகளை அடக்கியது.

அடுத்தது மீசாலை எனுமிடத்தில் அமைந்திருந்த உசன் என்ற பகுதி. மூன்றாவது சாவகச்சேரிக்கு அண்மையிலுள்ள சோனகன் புலவு என்ற பகுதியாகும். நான்காவது நல்லூர்க்கோயில் இன்று அமைந்துள்ள பகுதியாகும். ஐந்தாவது இன்று முஸ்லிம் கள் பெருமளவினராக வாழ்கிற நாவாந்துறைக்குக் கிழக்கான பகுதியாகும். இவற்றைவிட சாவகச்சேரி, கொடிகாமம், பருத்தித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறை, ஆனைக்கோட்டை என்பவற்றையும் பிற இடங்களை யும் கொள்ளலாம். யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வெளியே கிளிநொச்சி, பள்ளிக்குடா, நாச்சிக்குடா என்பனவும் முஸ்லிம் குடியிருப்புகளேயாகும்.

இவையனைத்துள்ளும் காலத்தால் முந்தியது அலுப்பாந்தி, பறங்கித்தெரு பகுதியாகும். "அல்பாண்டிகா" என்பதன் மூலமே அரபு ஆகும். அல்பாண்டிகா என்றால் கருத்து சுங்க சேகரிப் பாளர் என்பதாகும். அராபிய வணிகர் காலத்தில் இது பிரதான துறையாக இருந்தது. மன்னன் ஏற்றுமதி இறக்குமதிகளுக்கு சுங்கம் சேகரித்தான். அராபியர் அப்பகுதியை அல்பாண்டிகா என்று அழைத்தனர். அதுவே மருவி அலுப்பாந்தி என்று வந்தது. இக் குடியேற்றம் அராபிய வணிகர் தொடர்பால் வந்ததாகும். போர்த்துக்கேயர் வந்து முஸ்லிம்கள் வாழ்ந்த பகுதிகளை முற்றாக நிர்மூலமாக்கிவிட்டபடியால் எவ்வித ஆதாரங்களையும் தேடமுடியாதுள்ளது.

அராபிய வணிகர்களின் பரம்பரையாக வந்தவர்கள் இன்றைய டச்சுக்கோட்டை அமைந்துள்ள பகுதியில் தமது பண்டக சாலையை நிறுவி அதனைச் சூழவே வாழ்ந்து வந்தார்கள். இவ்வாறு வாழ்ந்த காலத்தில் இன்று கொட்டடியில் அமைந்திருக் கின்ற மையவாடியே அவர்களின் முதல் மையவாடிப் பகுதியாக இருந்தது. அராபிய வணிகர்கள் தமது தானியங்களைச் சேகரிக்க கொட்டு எனும் சேமிப்புத் தானங்களை நிறுவியிருந்த னர். இவ்வாறு பல சேமிப்புத் தானங்கள் நிறைந்த பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டடி என்று அழைக்கப்பட்டது. இன்றும் அப்பகுதி கொட்டடி என்று அழைக்கப்படுகிறது. இதனைவிட இன்றுள்ள வங்கசாலை வீதி முதலாம் இரண்டாம் குறுக்குத் தெருக்கள் சின்னக்கடைப் பகுதிகள் குடியிருப்பாகவும் இருந்தன. இன்று முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள பள்ளிவாசல் ஒரு சிறு தைக்காவாகவும் இன்று சின்னக்கடையில் அமைந்துள்ள புதுமை மாதா கோவில் (Our Lady of Miracles) ஜும் ஆப் பள்ளியாகவும் இருந்தது. இப்பள்ளி ஒரே வேளையில் ஆயிரக்கணக்கானவர்கள் நின்று தொழக்கூடிய பிரமாண்டமான பள்ளியாகவும் அமைந்திருந்தது. பண்டகசாலையாக அமைந்திருந்த டச்சுக் கோட்டை அமைந் துள்ள பகுதிக்கு பொருட்கள் கொண்டு வரும் பகுதியாக அலுப் பாந்தியும் மண்டைதீவுத் துறையும் பயன்படுத்தப்பட்டன.

இதே காலத்துக்குச் சற்றுப் பின்னாக சாவகச்சேரிக்கும் கொடி காமத்துக்குமிடையில் உள்ள மிருசுவில் எனுமிடத்தில் காயல் பட்டினத்திலிருந்து சில முஸ்லிம்கள் வந்து குடியேறினர். இந்தியா விலிருந்து பெரும்பாலும் இங்கு வந்து குடியேறியவர்கள் தாங்கள் அங்கு வசித்த கிராமங்களின் பெயரையே சூட்டினர். உதாரணம்: திருநெல்வேலி, நல்லூர் போன்றன. அதேபோல இந்தியாவின் மீசலை என்ற கிராமத்தவர்கள் அதிகம் குடியேறிய பகுதியை அதே பெயரால் மீசாலை என அழைத்திருக்கலாம். அந்த மீசலையே காலப்போக்கில் மீசாலையாயிற்று. தென் மிருசுவில் பகுதியிலே உசன் (ஹுசைன்) என்பவர் பெரிய நிலச் சுவாந் தாராக இருந்திருக்கிறார். இவர்கள் பெரும்பாலும் வணிகத் தையே தமது சீவனோபாயமாகக் கொண்டிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் இன்றிருப்பது போன்று கடைத்தெருக்கள் இல்லை. வாரத்தில் ஓரிரு நாட்கள் மட்டும் கூடுகின்ற சந்தைகளே இருந்தன. இத்தகைய சந்தைகள் சாவகச்சேரி, எழுதுமட்டுவாள், பளை, முகாவில், கொடிகாமம் என்ற இடங்களில் கூடின. எனவே இவற்றிற்குப் பொதுவாக உள்ள தென் மிருசுவில் என்னுமிடத்தில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் சந்தை சாகிபு என்று அழைக்கப் பட்டனர். சாகிபு என்ற பதம் தோழர் என்று பொருள் படும். இன்றும் வயது முதிர்ந்த இரு நண்பர்கள் தம்முள் உரையாடும் போது **"தோழை"** என்று விளிப்பர். இது தோழர் என்ற பதத்தின் மருஉ ஆகும். இவர்கள் சந்தை தோறும் காணப்பட்டதால் சந்தைச் சாய்பு (சந்தை சாகிபு) என்றழைக்கப்பட்டனர். இன்று இப்பகுதியில் முஸ்லிம்கள் வாழாதபோதிலும் மீசாலை, உசன் என்ற பெயர்கள் இன்றும் அவ்விடங்களில் வழக்கிலுள்ளன.

இதே காலத்தில் மற்றுமொரு மிகவும் பெரிய குடியிருப்பு நல்லூரில் அமைந்திருந்தது. இங்கும் ஒரு பெரிய ஜும் ஆப் பள்ளி அமைந்திருந்தது. இதிலும் ஆயிரம் பேர் வரை தொழக் கூடியதாக இருந்தது. பிற்காலத்தில் உசனில் வாழ்ந்தவர்களும் இங்கு வந்து குடியேறினர். இங்கு வாழ்ந்தவர்கள் வணிகத்துடன் வைத்தியம், போர்ப்படை அரசியல் ஆலோசனை ஆகியவற்றி லும் கவனம் செலுத்தினர். இன்று நல்லூர்க் கந்தசுவாமி கோயில் இருக்குமிடத்தில் ஒரு பள்ளிவாசலும் அந்தப் பள்ளி வாசலையண்டி ஒரு மையவாடியும் அதனைச் சூழ முஸ்லிம் களும் குடியிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பகுதியில் குடியேறுமுன் சாவகச்சேரிக்கு அருகில் உள்ள சோனகன் புலவிலும் சிறிது காலம் வாழ்ந்துள்ளனர். இன்றும் அப்பகுதி சோனகன் புலவு என்று வழங்கி வருகிறது.

இறுதியாக இதே காலத்திலும் அதன் பின்பும் முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் இன்று முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் நாவாந்துறைக்குக் கிழக்கிலும் வாழ்ந்து வந்தார்கள். இன்று முஸ்லிம்கள் வாழும் பகுதியிலிருந்து நல்லூருக்கு ஒரு பெரிய வீதி இருந்தது. வீதியின் இரு மருங்கிலும் முஸ்லிம்கள் வாழ்ந்து வந்தனர்.

இந்தப் பிரதான ஐந்து குடியிருப்புக்களை விடவும் பொதுவாக குடாநாடெங்கணும் பரவியிருந்ததற்குப் போதிய ஆதாரமுண்டு. கொடிகாமம், சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய குடாநாட்டின் பகுதிகளிலும் நயினாதீவு, மண்கும்பான் ஆகிய தீவுகளிலும் இன்றும் பள்ளிவாயில்கள் உண்டு. மண்கும்பான் பள்ளிவாசல் முற்றாக இடிக்கப்பட்டு அண்மையில் பெரிதாக நிர்மாணிக்கப் பட்டுள்ளது.

போர்த்துக்கேயர் ஆதிக்கம் பெறுவதற்கு முன்னுள்ள காலப் பகுதிகளில் யாழ்ப்பாண அரசனின் அந்தரங்க ஆலோசகர் களாகவும் வைத்தியர்களாகவும் முஸ்லிம்கள் பலர் கடமையாற்றி யுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை விட அபிசீனியப் பகுதியிலிருந்தும் முக்கியமாக நீக்கிரோவ முஸ்லிம்களும் யாழ்ப்பாண மாவட்டத்தில் குடியேறி யுள்ளனர். இவர்கள் இங்கு குடியேறிப் பெரிதும் கடற்றொழில் களிலேயே ஈடுபட்டனர். இன்றும் இவர்களின் வழித்தோன்றல் கள் யாழ்ப்பாணத்திலும் நாச்சுக்குடாவிலும் இருப்பதனைக் காணலாம்.

இலங்கைக்குப் போர்த்துக்கேயர் வரும்வரை முஸ்லிம்கள் மிகுந்த கௌரவத்துடன் வாழ்ந்தனர். கி. பி. 12 ஆம் நூற்றாண்டு முதல் அராபிய வர்த்தகர்களின் வணிகக் கணங்கள் இந்து சமுத்திரத்தைத் தங்களின் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்தன. கி. பி. 14 ஆம் நூற்றாண்டில் சோழப் பேரரசின் எழுச்சிக்கு மேற்காசிய வணிகக் கணங்களும், அவைகளால் கிடைத்த பொற் குவைகளுமே காரணமாயிருந்தன. வடக்குத் தமிழரசு தெற்கின் சிங்கள அரசை எதிர்க்கப் போதிய பலம் தந்ததும் இந்த வணிகக் கணங்களேயாகும். முஸ்லிம்கள் வாழ்வில் தமிழர் தம் பண்பாட்டு அம்சங்கள் பலவும் புகுவதற்கு இங்கு நிலவிய ஒற்றுமையே காலாக அமைந்தது. முஸ்லிம் வணிகர்கள் பலர் தவள முறையையும் ஈழத்துக்கு அறிமுகம் செய்து வைத்தனர். வணிகத்துக்காகச் செல்கின்ற தவள மாடுகள் தங்கிச் செல்லவென பல சுமைதாங்கிகளைக் கட்டினர். மடங்களை நிர்மாணித்தனர். கிணறுகளையும் தம் செலவிலேயே தோண்டினர். இவற்றில் சிலவற்றை இன்றும் காணலாம். யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள ஆறுகால் மடம் இவற்றுள் ஒன்றாகும். இது முன்பு முஅத்தின் மடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அழைக்கப்பட்டது. முஅத்தின் என்ற அரபுப் பதத்தை உச்சரிப்பது சிரமமாக இருந்ததனால் தூண்களைக் கணக்கிட்டே ஆறுகால் மடம் என அழைத்தனர். இம் மடத்தோடு சேர்ந்து ஒரு நன்னீர்க் கிணறும் சுமைதாங்கியும் அமைந்துள்ளன. இதன் பழைய தாய் உறுதிகள் இதனைப் புலப்படுத்தும்.

போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரு முன்னரே யாழ்ப்பாண மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் முஸ்லிம்கள் பரந்து வாழ்ந்து வந்துள்ளனர். நாச்சுக்குடா, பள்ளிக்குடா, பூநகரிக் குடியேற்றங்களும் காலத்தால் முந்தியனவே. பூநகரியின் பொறுப்புள்ள தலைவராக நெய்னாப்பிள்ளை மரைக்கார் என்பவர் இருந்ததையும் சான்றுகள் உறுதிப்படுத்தும்.

எனவே போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும்போது 5 பிரதான குடியிருப்புகளிலும் ஏனைய 10க்கு மதிகமான இடங்களிலும் முஸ்லிம்கள் பரந்து வாழ்ந்துள்ளார்கள். நாட்டின் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகங்கள் அவர்கள் கையிலேயே இருந்தன. தமிழ் மக்களுடன் எவ்வித போட்டி பொறாமையும் கொள்ளாது மனமகிழ்வுடன் வாழ்ந்து வந்துள்ளார்கள். படை வீரர்களாக அரச ஆலோசகர்களாக வைத்தியர்களாக மட்டுமல்லாது சிறந்த வணிகக் கணங்களின் தலைவர்களுமாக அவர்கள் திகழ்ந்துள் ளார்கள். இக்காரணங்களால் மிக முக்கியமான இடத்தினை அவர்கள் பெற்றிருந்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்த்துக்கேயர் காலம்

போர்த்துக்கேயர் ஆதிக்கம் என்று இலங்கையில் பரவத் தொடங்கியதோ அன்றிலிருந்து முஸ்லிம்களின் வாழ்வும் வளமும் சிதையத் தொடங்கியது. முஸ்லிம்கள் ஆண்டு அனுபவித்த அத்தனையையுமே இழந்து விட்டார்கள். அவர்களால் நிம்மதியாக வாழ முடியாதும் போய்விட்டது. அதுவரை காலமும் வணிகத்துறை முழுவதும் அராபிய முஸ்லிம்களின் கைகளிலேயே இருந்தன. அவர்களுக்கு நாடு பிடிக்கின்ற ஆசையோ அன்றேல் நாட்டைச் சூறையாடுகின்ற நாட்டமோ இருக்கவில்லை. நேர்மையான முறையில் வணிகம் செய்தனர். சுதேசிகளின் அன்புக்கு இலக்காகினர். வந்தவர்களில் பலர் சுதேசப் பெண்களை மணந்து மற்றவர்கள் பின்பற்றத்தக்க உயர் வாழ்வு ஒன்றைக் கைக்கொண்டிருந்தனர். எனவே அவர்கள் ஈழத்தையே தமது தாயகமாகக் கொண்டதில் வியப்பில்லை. மத்திய ஆசியாவில் நடைபெற்ற சிலுவை யுத்தம் காரணமாக கொன்ஸ் தாந்திநோப்பிள் வழி அடைக்கப்படவே புதிய பாதைகள் தேடி ஐரோப்பியர் புறப்பட்டனர். கடலின் நடுவிலும் யுத்தம் பரந்தது. இதனால் முஸ்லிம்கள் எங்கு வாழ்ந்தார்களோ அங்கெல்லாம் போர்த்துக்கேயர் அழிவுகளை ஏற்படுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டை இராச்சியத்தில் போர்த்துக்கேயர் நுழைவதை முதலில் எதிர்த்தவர்கள் முஸ்லிம்களே. யாழ்ப்பாணத்திலும் அவ்வாறே. இதே கொள்கையை மாயாதுன்னையும் அவனது மகனான இராஜசிங்கனும் கொண்டிருந்ததனால் பெரும்பாலான முஸ்லிம் கள் இவர்களுடன் இணைந்து போர்த்துக்கேய ஏகாதிபத்தியத்துக் கெதிராகப் போரிட்டனர்.

போர்த்துக்கேயர், கோட்டை மன்னன் புவனேகபாகு இறக்க தர்மபராக்கிரமபாகுவின் பெயரில் இலங்கையின் ஏனைய இடங் களிலும் தமது ஆக்கிரமிப்புக் கரத்தினை நீட்டினர். கொழும்பிலும் ஏனைய கரையோரப் பிரதேசங்களிலும் முஸ்லிம் சகோதரர்கள் கொல்லப்படுவதையும் அவர்கள் வாழ்ந்த பகுதிகள் சூறையாடப் படுவதையும் கேள்வியுற்ற யாழ்ப்பாண முஸ்லிம்களும் இணைந்து எழுந்ததில் வியப்பில்லை. [யாழ்ப்பாணத்தில் உள்ள முஸ்லிம்கள் அனைவரும் சின்னக்கடைச் சந்தைக்கு அருகில் இருந்த ஜும் ஆப் பள்ளியில் கூடியிருந்து ஆலோசனை புரிந்தனர். தாம் வாழும் நாட்டையும் மக்களையும் காக்கும் புனிதப்போரில் - ஜிஹாது - ஈடுபடுவது என்பது முடிவாயிற்று. காதர்வாலாவின் தலைமையில் படை திரண்டது. படையின ருக்கு யாழ்ப்பாண மன்னனும் ஆதரவு அளித்தான். அவனுக் கெதிராக உள்நாட்டில் சதியொன்று நடப்பதனை அறிந்து அவன் அதில் கலந்து கொள்ளவில்லை. காதர் வாலா என்ற முஸ்லிம் படைத்தளபதியின் தலைமையில் திரண்ட ஒரு பெரும்படை பூநகரி விடத்தல்தீவு, முருங்கன், சிலாபத்துறை வழியாகத் தெற்கு நோக்கி நடக்கலாயிற்று. தெற்கிலிருந்து கொழும்பு கோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கி மாயாதுன்னையின் படைவர வடக்கிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கி காதர் வாலாவின் படை சென்றது. சிலாபத் துறையில் போர்த்துக்கேயப் படையும் இஸ்லாமியர் படையும் கைகலந்தன. போர்த்துக்கேயரிடம் நவீன படை பலம் இருந்த தால் காதர் வாலாவைக் கொன்று வீரர்கள் பலரைச் சிறைசெய்து கோட்டைக் காட்டுக்குக் கொண்டு சென்றது.[10]

காதர் வாலாவால் ஏற்றி வைக்கப்பட்ட சுதந்திர தாகம் காதர் வாலாவின் மரணத்தால் அணைந்துவிடவில்லை. மேலும் பலர் திரண்டெழுந்தனர். இத்தகைய யுத்தங்களால் வீர மரணம் அடைவதுடன் (பீசபீல்) நாட்டையும் அழிவிலிருந்து காப்பாற்ற லாம் என்று உறுதியுடன் நம்பினர். இதனால்தான் தோல்வி மேல் தோல்வி வந்தபோதும் முஸ்லிம்கள் சளைத்துவிடவில்லை. 1517 இல் யாழ்ப்பாண முஸ்லிம்கள் மீளவும் ஒரு படை திரட்டி போர்த்துக்கேயரின் கோட்டையை வளைத்தனர். அப்போதும் முஸ்லிம்களுக்குத் தோல்வியே கிடைத்தது. பின்னர் 1520 இல் ஒரு படையுடன் சென்றனராயினும் அப்போதும் தோல்வியே ஏற்பட்டது. தோல்விகள் ஏற்பட்டபோதும் நாடு காக்கும் பணியில் நம்மவர் காட்டிய துணிவும் ஆர்வமும் பாராட்டப்பட வேண்டும். இதற்காக நாம் நம் முன்னவர்களுக்கு நன்றிக் கடப்பாடு உடையவர்கள் ஆவோம். ஆரம்ப காலங் களில் போர்த்துக்கேயர் ஆட்சியை யாழ்ப்பாண மன்னர்களும் எதிர்த்தனர். இதனால் முஸ்லிம்களுடன் இணைந்தே இருந்தனர்.

1560 இல் யாழ்ப்பாணத் துறைமுகம் ஊடாக உள்ளே நுழைந்த போர்த்துக்கேயர் சோனகர்களின் கிட்டங்கிகளைச் சூறையாடினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10000 கண்டி நெல்லையும் 400 கண்டி அரிசியையும் ஏனைய வீட்டு விலங்குகளாகிய ஆடு, மாடு, கோழி போன்றவற்றையும் சூறையாடிச் சென்றனர்.[11]

1590 இல் புவிராசசிங்கன் தென் இந்திய சோனகபடைத் தலைவனான கொட்டிமூசா மரிக்காரிடம்[12] போர்த்துக்கேயரைத் தான் எதிர்ப்பதற்குப் போதிய படைப்பலம் தன்னிடம் இல்லை யாதலால் உதவி செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டான். அவனும் அதற்குச் சம்மதித்தான். என்றாலும் காற்று வாய்ப்பாக இல்லாத காரணத்தினால் அவனும் அவனது படைகளும் சிலாபத்தில் வந்து தங்கினர். இந்த செய்தியை முன்பே அறிந்த போர்த்துக்கேயர் படை உதவி வருமுன்னரேயே யாழ்ப்பாணத்தைத் தாக்கினர். தாக்கி வரும் வழியில் சிலாபத் தில் தங்கியிருந்த கொட்டிமூசா மரைக்காரின் படையையும் சிதைத்தனர். பலரைக் கொலையும் செய்தனர். ஒரு சிலர் தப்பியோடினர். இந்தச் சம்பவத்திலிருந்து முஸ்லிம்களுக்கும் தமிழ் மன்னர்கள், சிங்கள மன்னர்கள் ஆகியவர்களிடையேயும் நிலவிய ஒற்றுமை புலனாகும்.

1591 இல் சீதாவாக்கை ராஜ்ஜியத்திலிருந்து தென்னிந்தியாவின் தஞ்சாவூர் ராச்சியத்துக்கு உதவி தேடி அனுப்பிய தூதை யாழ்ப்பாண மன்னர் மடக்கினார்.[13] ஏற்கனவே பகைமையைத் தேடிக்கொண்ட யாழ்ப்பாண மன்னர் இதன் மூலமாக நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று விரும்பியிருக்கலாம். மன்னன் எதிர்பார்த்தது போலவே போர்த்துக்கேயர் மகிழ்ந்தனர். இதனால் போர்த்துக்கேயருக்கும் யாழ்ப்பாண மன்னருக்குமிடையில் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பந்தம் உருவாகிற்று. அந்த ஒப்பந்தத்தின்படி முஸ்லிம்கள் துரத்தப்பட்ட இடங்களில் மிகவும் அமர்த்தப்படக்கூடாது என்றும் மேலும் இடம் கோலாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற பொறுப்புக்களை யாழ்ப்பாண மன்னர் ஏற்றார். இது முஸ்லிம்கள் மீது போர்த்துக்கேயர் எவ்வளவு வெறுப்புக் கொண் டிருந்தனர் என்பதனைக் காட்டுவதாகும். இந்த சம்பவத்தின்பின் படிப்படியாக யாழ்ப்பாண இராச்சியத்தின் விடயங்களில் போர்த் துக்கேயர் தலையிடத் தொடங்கினர். அவர்கள் தமது மதமான கத்தோலிக்க மதத்தைப் பிரச்சாரம் செய்வதில் அதிக கவனம் செலுத்தினர். கொள்கை ரீதியான பிரச்சாரம் இவர்களுக்கு வெற்றி தரவில்லை. ஏற்கனவே பல பகுத்தறிவாளர் இஸ்லாத் தின்பால் கவரப்பட்டிருந்தார்கள். எனவே சலுகைகள், உதவிகள் மூலம் தம் மதத்துக்குத் திருப்ப முயன்றனர். தமது கருத்துக் குச் செவிசாய்க்காத, தமது கருத்துக்கு முரணானவர்களிடம் கர்ணகடூரமாக நடந்தனர். முஸ்லிம்கள் ஒருவராவது கத்தோலிக்க மதத்தைத் தழுவ மறுத்தது அவர்களுக்குப் பெரிய தோல்வியாக இருந்தது. எனவே முஸ்லிம்களை யாழ்ப்பாணத்தி லிருந்து முற்றாகக் கருவறுக்கவே விரும்பினர்.

முஸ்லிம்கள் தமது பொருட்களை வைத்து எடுப்பதற்கென ஒரு பண்டகசாலையை இன்று டச்சுக்கோட்டை அமைந்துள்ள பகுதியில் கட்டியிருந்தனர். இது ஏற்கனவே போர்த்துக்கேயரால் சூறையாடப்பட்டு இருந்தது. யாழ்ப்பாண மன்னன் கொடுத்த அனுமதியின்படி பகலெல்லாம் நாட்டிலும் இரவில் கப்பல்களிலும் தங்கிய போர்த்துக்கேயர் சிறிய ஒரு வீட்டைக் கட்டிக் கொள்ள அனுமதி கோரினர். சூழ்ச்சியை அறியாத மன்னனும் சம்மதித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். 1591 இல் ஏற்கனவே முஸ்லிம்கள் கட்டியிருந்த பண்டக சாலையை தமதாக்கினர்.[14] படிப்படியாக அதில் ஆயுதங்கள் குவித்து ஒரு கோட்டை போலாக்கி விட்டனர். மன்னன் விரும்பினால் இந்த அனுமதியை வழங்க மறுத்திருக்கலாம். ஏற்கனவே நடந்து முடிந்த விடயங்கள், உள்ளூரில் நிலவிய அரசியல் நெருக்கடிகள் கூடவிருந்தே குழிபறித்து விட முயன்ற வர்களின் ஆலோசனைகள் அனைத்துமே அவனை அனுமதி கொடுக்க வேண்டிய நிலையில் கொண்டு வந்தன. 1615 இல் ஒரு நாள் உலாச் சென்ற மன்னன் சங்கிலியன் அங்கு ஒரு கோட்டை இருப்பதைக் கண்டு அதனை இடித்து விட்டான்.

பிரித்தானிய ஏகாதிபத்தியம் 151 வருடங்களும் ஒல்லாந்தர் 142 வருடங்களும் யாழ்ப்பாணத்தைத் தம் கீழ் வைத்திருந்த போதும் போர்த்துக்கேயர் 1621 முதல் 1658 வரையிலான 37 வருடங்கள் மட்டுமே ஆண்டதற்குக் காரணமே அவர்கள் கையாண்ட கொடுமைகள் நிறைந்த ஆட்சி முறையேயாகும். மக்கள் ஆதரவு கிஞ்சிற்றும் அவர்களுக்கிருக்கவில்லை. போர்த் துக்கேயர் பிறமதங்களைப் பொறுத்தவரை சமயப் பொறுமை யைக் கொள்ளவில்லை. முஸ்லிம்கள் மீது கீழை நாடுகளில் அவர்கள் தொடர்ந்து சிலுவைப் போர்களை நடத்தியே வந்தனர்.

இன்று சின்னக் கடையில் அமைந்துள்ள புதுமை மாதா கோவில் (Our Lady of Miracles) முன்பு முஸ்லிம்களின் முதலாவது மிகவும் பெரிய ஜும் ஆப்பள்ளியாக இருந்தது. ஒரே நேரத்தில் 1000 பேர் நின்று தொழத்தக்க பிரமாண்டமான பள்ளியாக இருந்தது. அச் சூழலில் வாழ்ந்த முஸ்லிம்கள் இம்சிக்கப்பட்டனர். அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த இடங்களிலிருந்து அனைவருமே துரத்தப்பட்டனர். இதனால் அனைவரும் இடம்பெயர்ந்தனர். குடாநாட்டின் ஏனைய இடங்களுக்கும் ஏனைய பகுதிகளுக்கும் குறிப்பாக வன்னிப் பகுதிகட்கும் சென்று குடியேறினர். சிலர் தமது எதிர்கால நலன் கருதி தெற்கு, கிழக்கு, மத்திய பகுதிகளுக்கும் செல்லத் தலைப்பட்டனர். பெருமளவினராக மத்திய மலைநாட்டுப் பகுதியைக் கொண்ட கண்டி ராச்சியத்துக்குச் சென்று பின்பு கண்டிய மன்னனால் கிழக்கில் குடியேற்றப்பட்டனர். இவ்வாறு முஸ்லிம்கள் அனைவருமே துரத்தியடிக்கப்பட்ட பின்பு மே மாதம் 8 ஆம் திகதி 1614 ஆம் ஆண்டில் பள்ளிவாயிலும் இடிக்கப்பட்டு **“பிறேசிபெட்ரோடி பெண்டாக்”** என்பவரால் அப் பள்ளிவாசல் அமைந்திருந்த இடத்தில் ஒரு தேவாலயம் நிறுவப்பட்டது. அப்போது அதற்கு வெற்றித் திருமகள் கோவில் (Our Lady of Victory) என்று பெயருமிட்டனர். பின்பு காலகதியில் அக்கோயில் புதுமை மாதா கோவில் என்று அழைக்கப்பட்டது.[15] அக் கோயிலை இன்றும் சின்னக்கடையில் காணலாம். இது நடை பெற்றபோது யாழ்ப்பாணத்தைப் பரராசசேகர பாண்டியன் ஆண்டு வந்தான்.

டச்சுக்கோட்டையில் தற்போது முனியப்பர் கோவில் அமைந் துள்ள பகுதிக்குப் பின் உள்ள மரத்தினடியில் ஒரு அவ்லியா (நல்லடியார்) வின் ‘சியாறம்’ எனும் அடக்கஸ்தலம் இருப்ப தாகக் கர்ண பரம்பரையாக வழங்கி வருகின்ற செய்தியொன்று உண்டு. இவர் போர்த்துக்கேயரால் கோட்டையில் வைத்துக் கொல்லப்பட்டவராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே காலத்தில் போர்த்துக்கேயரின் கொடுமையினால் வெளியேறிய ஒரு சாராரும், ஏற்கனவே இந்தியாவில் இருந்து குடியேறி விவசாயத்தைத் தம் தொழிலாகக் கொண்டிருந்தவர்களும் உசன் என்ற பகுதியில் வாழ்ந்தவர்களுடன் கலந்தனர். இக்காலத்திலேயே விவசாயம் மீன்பிடி என்பவற்றைத் தம்தொழிலாகக் கொண்டிருந்த பலர் ஏற்கனவே மீரா என்று குறிப்பிடப்பட்டவரால் ஆக்கப்பட்ட விடத்தற் தீவிற்கும் முசலி, வவுனியாப் பகுதிக்கும் பூநகரி பள்ளிக்குடா, நாச்சிக்குடா ஆகிய இடங்களுக்கும் பெயர்ந்திருக்கிறார்கள்.

இதே காலத்தில் முஸ்லிம்களின் இரண்டாவது பெரிய குடியிருப்பான தென் மிருசுவிலில் உள்ள முஸ்லிம்களும் பாதிப்படைந்தனர். மன்னன் பலமிழக்க இழக்க முஸ்லிம்கள் வாழ்ந்த பகுதிகளும் போதிய பாதுகாப்புத் தரும் பகுதிகளாகக் காணப்படாது போகவே அவர்களும் தெற்கு நோக்கி இடம்பெயர ஆரம்பித்தனர். பூநகரியின் செல்லையா தீவில் இன்றும் இவ்வாறு குடியேறிய பழைய பூர்வீகக் குடிகளின் வழித் தோன்றல்கள் வாழ்ந்து வருகிறார்கள். முல்லைத்தீவு தனியூற்று என்பனவும் இக்காலத்திலேயே குடியேற்றங்கள் ஆகி இருக்கவேண்டும். முஸ்லிம்கள் பெருமளவினராக வாழ்ந்த தன்மையினாலேயே ஆங்கிலேயர் காலத்தில் பூநகரியின் தலைமைக்காரனாக நெய்னாப்பிள்ளை மரைக்காயர் என்பவர் இருந்துள்ளார் என்று சான்றுகள் கூறும்.

இக்காலத்திலேயே உசனில் வாழ்ந்த சிலருள் ஒரு சாரார் சாவகச்சேரிக்கும் சங்கத்தானைக்கும் இடையில் உள்ள பகுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேறினர். அது அன்று முதல் சோனகன் புலவு என்று வழங்கப்படலாயிற்று. இன்றும் அப்பகுதி **'சோனகன் புலவு'** என்றே அழைக்கப்படுகிறது.

அரசரோடு தொடர்புடைய தொழில் புரிந்த பலர் இக்காலத்தில் நல்லூரில் வாழ்ந்து வந்தனர். 1410 முதல் யாவுகர் சேரியில் வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் பலர் சப்புமால் குமரையாவை எதிர்த்ததனால் கனகசூரிய சிங்கையாரியன் காலத்தில் அதாவது 1564 இல் துரத்தப்பட்டனர். அவர்களும் வேறு இடங்களில் சென்று சிதறிக் குடியேறினர். இக்காலத்தில் சில வணிகர்கள் நல்லூர் வீதியிலிருந்து நாவாந்துறை ஈறாக இருந்த, மிகவும் அகன்ற வீதியின் இருமருங்கும் குடியிருந்தனர். முஸ்லிம்களின் பள்ளிவாசல்களை மட்டுமல்லாது இந்துக்களின் கோவில்களை யும் இடித்துத் தரைமட்டமாக்கினர். இச்செயலானது முஸ்லிம் களையும் தமிழரையும் ஒன்றுபட வைத்தது.

பொதுவாக யாழ்ப்பாண முஸ்லிம்கள் மீது தீராத சமயப் பகையைப் போர்த்துக்கீசர் கொண்டிருந்தனர். ஐரோப்பாவில் மட்டுமல்லாது உலகு எங்ஙனுமே அரசியல், சமய, வியாபார எதிரிகளாக முஸ்லிம்களே விளங்கினர். எனவே இவர்கள் ஆட்சியில் முஸ்லிம்கள் அடைந்த நஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. சுருங்கக்கூறின் இக்காலத்தில் முஸ்லிம்களால் நிம்மதியாக வாழ முடியாது போய்விட்டது. யாழ்ப்பாணத்தைத் தமது தாயகமாகக் கொண்ட முஸ்லிம்கள் அனைவருமே தமது தொழில் செல்வம் அனைத்தையுமே இழந்து, யாரும் துணையற்ற நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணார்பண்ணைச் சிவன்கோவிலுக்குப் பின் உள்ள காணி ஒன்றின் பெயர் இன்றும் சோனகன் தரவு என்று குறிப்பிடப்படுவது சிவன்கோவில் நிர்மாணிக்கப்படுவதற்கு முன் அதாவது 1713 இன் முன் முஸ்லிம்கள் சிலர் வாழ்ந்த பகுதியாக இருக்க வேண்டும் என்பதைப் புலப்படுத்தும். இன்றும் சிவன் கோவில் மேற்கு வீதியில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான ஆதனங்கள் இருக்கின்றன.

அண்மையில் காமால் வீதியில் கட்டிடம் அமைக்கப்படும்போது M. S. ஹக்கீம் என்பவர் தமது புதிய வீட்டை நிர்மாணிக்க அத்திவாரம் வெட்டும்போது 2 1/2 அடி உயரமான கலையம்சம் பொருந்திய சண்டீசுவரரின் கருங்கற் சிலையையும் 9" உயர மான வெண்கல அம்மன் சிலையையும் கண்டெடுத்து மாநகர சபை ஆணையாளரிடம் கையளித்தார். இவை பாதுகாப்புக் கருதி முஸ்லிம்களிடம் கொடுத்துப் புதைத்து வைக்கப்பட்டிருந்த தாகலாம். இவையும் போர்த்துக்கேயர் காலத்துக்கே உரியவை யாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒல்லாந்தர் காலம்

இவர்களின் காலம் 1658 முதல் 1796 வரையிலாகும். ஒல்லாந்த ரின் நடவடிக்கைகள் பெரும்பாலும் போர்த்துக்கீசருக்கு எதிரா கவே இருந்தன. கத்தோலிக்கத்துக்கு எதிராகப் பல சட்டங் களைக் கொண்டு வந்தனர். 1658 - 1659 ஆண்டு காலங்களில் கொண்டு வரப்பட்ட சட்டங்கள் கத்தோலிக்க சமயத்தை அனுஷ் டிக்கத் தடை விதித்ததுடன் கரையோர மாகாணங்களிலிருந்து குருமாரையும் வெளியேற்றியது. கத்தோலிக்க குருமாருக்குப் புகலிடம் தருதல் அல்லது மறைத்து வைத்தல் மரண தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்பட்டது. விவாகம், ஞானஸ் நானம் பெறுதல் யாவும் ஒல்லாந்தத் திருச்சபையிலேயே நடைபெற வேண்டும். இவற்றுக்காகவும் ஏனைய செயல்களுக் கும் கத்தோலிக்கரிடமிருந்து அதிக வரி அறவிடப்பட்டதுடன் கத்தோலிக்கர் அரசாங்க உத்தியோகம் வகிப்பதும் தடைசெய்யப் பட்டது. இப்படியான முறைகளைக் கையாண்டதன் முக்கிய நோக்கங்கள் போர்த்துக்கேயரின் வர்த்தகம் கடல் வலிமை ஆகியவற்றை நசுக்கி அவர்களின் ஆதிக்கத்தை ஒழிப்பதேயாகும். அத்துடன் கத்தோலிக்கம் தவறான வழிகாட்டும் சமயம் என்றும் அவர்கள் கருதியிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே கொள்கையினை இஸ்லாமியர் மீதும் பின்பற்றினர்.[16] அக்கால முஸ்லிம்கள் முகம்மது நபி (ஸல்) அவர்களின் நடைமுறைகளை (ஸுன்னத்)ப் பேணி தாடி வளர்த்தனர். செருப்புகள் அணிந்தனர். இப்படித் தாடி வளர்ப்பதற்கும் காலில் பாதணி அணிவதற்கும் முஸ்லிம்கள் வரி செலுத்த வேண்டியிருந்தது. என்றாலும் இவர்கள் வணிகத்தில் அதிக கவனம் செலுத்தியதனால் பெருமளவில் முஸ்லிம்களைப் பாதிக்கும் வண்ணம் இட்ட சட்டங்கள் யாவும் வியாபார நோக்கத்தைக் கொண்டனவாகவேயிருந்தன. யாழ்ப்பாணம், கொழும்பு, காலி, மாத்தறை போன்ற இடங்களில் முஸ்லிம்கள் வசிப்பதற்குத் தடை போடப்பட்டது. இதன் காரணம் வியாபாரத்திற்கான ஏகபோக உரிமையை இவர்கள் வைத்திருக்க விரும்பியதேயாகும். இத்தனைக்கும் இடையில் முஸ்லிம்கள் மீது போர்த்துக்கேயர் கொண்டிருந்த அளவு வெறுப்பும் பகைமையும் பாராட்டவில்லை. காரணம் இஸ்லாம் சமயம் பகுத்தறிவான கொள்கைகளையும் சில இடங்களில் புரட்டஸ்தாந்து சமயக் கொள்கையுடன் தொடர்பு பட்ட கொள்கைகளையும் கொண்டதாக இருக்கலாம். ஒல்லாந்தரும் சமய மாற்ற முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார்கள். எனினும் இவர்கள் கையாண்ட முறைகள் போர்த்துக்கீசர் கையாண்ட முறைகளில் நின்றும் வேறுபட்டவை. 1739 இல் அச்சகம் நிறுவி தேசிய மொழிகளில் பிரச்சாரம் செய்தனர். ஏழைகளுக்கு பணம், உடுபிடவை, கல்வி, உத்தியோகம் என்பவற்றை வழங்கி திசை திருப்ப முயன்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கேயரின் தாக்குதலுக்குப் பலியான முஸ்லிம்கள் குடா நாடெங்கணும் தறிகெட்டோடி முஸ்லிம்கள் வாழ்ந்த வேறிடங் களில் குடியேறினர். ஏற்கனவே மிருசுவிலின் உசன் பகுதியிலும் சென்று குடியேறியிருந்தனர். இக்காலத்தில் சமயப் பிரச்சாரம் மற்றும் வணிக நோக்கங்களுடன் காயல் பட்டினத்திலிருந்து பலர் வந்து குடியேற ஆரம்பித்தனர். இவர்கள் இங்கிருந்து சூழவுள்ள சந்தைகளில் வியாபாரம் செய்து வந்தார்கள். சனங்களும் பெருக பிரதான நகரமும் நல்லூராக அமைய அவர்களின் வணிகத்துக்கு வாய்ப்பில்லாது போய்விட்டது. அங்கிருந்து பெயர்ந்து சாவகச்சேரிக்கும் சங்கத்தானைக்கும் இடையிலுள்ள சோனகன் புலவு என்ற இடத்தில் குடியேறினார்கள். அந்த இடமும் பொருந்தாது போகவே ஏற்கனவே ஓரளவு முஸ்லிம்கள் வாழ்ந்த மற்றொரு பகுதியான நல்லூரில் குடியேறினர். பெருமளவினராக முஸ்லிம்கள் திரண்டதால் ஏற்கனவே நல்லூரிலிருந்து போர்த்துக்கேயரால் இடிக்கப்பட்ட பள்ளிவாயிலை மீளவும் பெரிதாக நிர்மாணித்து அவர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் வாழ்ந்த இடம் சோனகன் தோப்பு என வழங்கப்பட்டது. இன்று நல்லூர்க் கந்தசுவாமி கோயில் அமைந்துள்ள பகுதியிலேயே அன்று முஸ்லிம்களின் பள்ளிவாசல் அமைந்திருந்தது.

இக்காலத்தில் இங்கு வாழ்ந்த முஸ்லிம்களின் தலைவராக, வழிகாட்டியாக வாழ்ந்தவர் முகம்மது இப்றாஹிம் என்ற பெரியா ராவர். இவர் இறந்த பின் பள்ளிவாயில் அமைந்த நிலப்பரப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேயே அடக்கம் செய்யப்பட்டார். இவரின் அடக்க ஸ்தலம் (சியாறம்) கல்லினால் கட்டப்பட்டது. அது இன்றும் மூலஸ் தானத்துக்குப் பின்னால் அமைந்துள்ளது. இந்த சியாறத்தின் கால்மாடு (பக்கம்) மூலஸ்தானம் மறைத்துக் கட்டப்பட்ட சுவருக்கு வெளியே தெரிகிறது. இச் சியாறத்தில் இன்று வரை அணையா விளக்கு ஒன்று எரிக்கப்பட்டு வருகிறது. இது எப்போதும் எரிந்து கொண்டே இருக்கும்.

ஒல்லாந்தர் காலத்திலும் அதன் முன்பும் வருணப் பாகுபாடு நிலைத்திருந்தது. நல்லூரில் சாதிக்கு ஒரு வீதியாக 64 வீதி கள் இருந்தன. இந்த 64 சாதியினரும் உயர் சாதியினராகக் கணிக்கப்பட்டிருந்தனர் எனச் சான்றுகள் கூறும். துரும்பர் என்பவர்களும் பறையர்களும் தோட்டி வேலைகள் செய்து வந்தனர். இவர்கள் தமது பணிகளை இரவிலேயே ஆற்றினர். இவர்கள் பகற் காலங்களை தத்தமது சேரிகளிலேயே கழிப்பர். இப்படியானவர்கள் நகரத்தின் புறம்போக்கான இடங்களிலேயே அமைந்திருந்தனர். ஓட்டுமடத்திற்கருகிலுள்ள துரும்ப குளமும் அதையடுத்துக் காணப்படும் பறைச்சேரி வெளியும் இவர்களின் குடியிருப்புகளாக இருந்தன. அம்பட்டர், வண்ணார், பள்ளர், நளவர், பறையர், துரும்பர் முதலானவர்களுக்கு இருப்பிடமோ வீதிகளோ இருக்கவில்லை. இவர்கள் தாழ்ந்த சாதியினராகக் கருதப்பட்டதாகச் சான்றுகள் கூறுகின்றன.[17]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாம் சமயம் தொழிலைக் கொண்டோ, பிறப்பைக் கொண்டோ, வர்க்க பேதத்தைக் கொண்டோ மக்களைப் பாகு பாடு செய்வதைக் கண்டிப்பாக வெறுத்து ஒதுக்கிய போதும் யாழ்ப்பாண முஸ்லிம்கள் தாழ்ந்த சாதியினராகக் கருதப்பட்ட வர்கள் செய்த தொழில் எதனையும் இன்று வரை செய்யாதிருப்ப தானது தமிழ்ப் பண்பாட்டின் செல்வாக்கினையே காட்டுவதாக உள்ளது. அத்துடன் முஸ்லிம்கள் தங்கள் மனைவியராகக் கொண்ட பெண்கள் உயர் சாதியினராகவே இருந்தார்கள். முஸ்லிம்கள் நல்லூரில் வாழ்ந்த காலத்தில் இந்த 64 வீதிகளில் ஒன்றிலேயோ பலவற்றிலேயோ வாழ்ந்ததால் அவர்களும் உயர் சாதியினருள் ஒருவராகவே கணிக்கப்பட்டுள்ளனர்.

ஒல்லாந்தர் மிகவும் உயர்ந்த வரிகளை விதிப்பதிலேயே அதிக கவனம் செலுத்தினர். முத்துக் குளிப்பவர்கள் மீதும் சிறப்பாக வணிகத்திலீடுபட்ட அதிராம் பட்டினத்தாரின் வாரிசுகள் மீதும் அளவுக்கு மீறிய வரிகளைச் சுமத்தியதால் முஸ்லிம்கள் பலர் தமது முத்துக் குளிக்கும் தொழிலை விட்டு வேறு தொழில்களைத் தேட ஆரம்பித்தனர். புரட்டஸ்தாந்து சமயத்தைப் பரப்ப ஒல்லாந்தர் நடவடிக்கைகள் எடுத்தாராயினும் போர்த்துக்கேய ரைப் போன்று கடுமையாக நடக்கவில்லை. எனவே ஏற்கனவே போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட கோயில்களைப் புனருத்தார ணம் செய்ய இந்துக்கள் முன்வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைப் புனருத்தாரணம் செய்யும் போது முஸ்லிம்களின் பள்ளிவாசல் இடிபடுவதும் அவர்கள் குடியிருப்புக்களைப் பறிப்பதும் தவிர்க்க முடியாததாகிவிட்டது. முஸ்லிம்கள் அங்கு குடியிருந்தால் நல்லூர்க் கந்த சுவாமி கோயிலைப் பெரிதாகக் கட்டமுடியாது போய்விடும் என்பதறிந்து முஸ்லிம்களை நல்லூரிலிருந்து வெளியேற்ற இந்துக்கள் பல நடவடிக்கைகளை எடுத்தனர். முஸ்லிம்கள் அங்கு குடியிருந் தால் பள்ளிவாசலை இடிப்பது சாத்தியமாகாது எனக் கண்டு அங்கு குடியிருக்கும் முஸ்லிம்களை அப்புறப்படுத்தித் தரும்படி ஒல்லாந்த அதிகாரிகளைக் கோரினர். ஒல்லாந்தர் வர்த்தகத் திலும் வரிகள் அறவிடுதலிலும் தான் அதிக கவனம் செலுத்தினர். அத்துடன் உருவ வணக்கத்துக்கு புரட்டஸ்தாந்து சமயத்தவரைப் போல முஸ்லிம்களும் எதிராக இருந்தபோதிலும் போர்த்துக்கேயரை வெளியேற்ற முஸ்லிம்கள் பெருமளவில் உதவி புரிந்திருந்ததாலும் அவர்கள் இந்துக்களின் கோரிக் கையை நிறைவேற்றுவதாகக் கூறியபோதும் நிறைவேற்றாது காலம் தாழ்த்தினர். இன்று கந்தசுவாமி கோயில் அமைந்துள்ள பகுதியின் மேற்குப் பகுதியிலேயே முஸ்லிம்களின் வீடுகள் அமைந்திருந்தன. அந்த இடங்களை விடும்படி இந்துக்கள் கோர முஸ்லிம்கள் மறுத்தனர். எனவே அவ்விடத்திலிருந்து முஸ்லிம்களை வெளியேற்ற மிகவும் ஈனமான முறையொன்றைக் கையாண்டனர். முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் மதுபான மும் பன்றி இறைச்சியும் விலக்கப்பட்ட (ஹறாமான) உணவு வகைகளாகும். இதனை நன்கறிந்த இந்துக்கள் ஒரு பன்றியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொன்று முஸ்லிம்கள் பொதுவாக நீரருந்தும் எல்லாக் கிணறுகளிலும் இட்டனர். இதனால் நல்லூரில் வாழ்ந்த முஸ்லிம்கள் அனைவரும் அழுது புலம்பினர். அவர்கள் அருந்து வதற்குத் தூய்மையான நீர் எங்கும் கிடைக்கவில்லை. நீர் அருந்தாமல், உண்ணாமல் பல நாட்கள் அவர்கள் பட்டினி கிடந்தனர். அவர்களுக்கு உதவ யாருமே முன்வரவில்லை. இந்த நிலையில் படிப்படியாகத் தாம் வாழ்ந்த இடங்களை விட்டுப் பெயர்ந்து ஏற்கனவே ஓரளவு முஸ்லிம்கள் வாழ்ந்து வந்த நாவாந்துறையின் கிழக்குப் பக்கமாகச் சென்று குடியேறினர்.[18]

தங்களுக்கு இக்காலத்தில் இழைக்கப்பட்ட மனிதாபிமானமற்ற கொடுஞ் செயலை வன்மையாகக் கண்டித்தபோதும் இந்துக்கள் பெரும்பான்மையினராக இருந்த தன்மையினால் எதிர்த்துப் போராட முடியாது போய்விட்டது. கந்தசுவாமி கோயிலை விஸ்தரித்தல் என்ற கொள்கையின் கீழ் அனைவரும் ஒன்று திரண்டிருந்தனர். இது கண்டு புதிய இடத்துக்கு வந்தபின் அங்குள்ளவர்களுடன் சேர்ந்து திரண்டு மீளவும் நல்லூருக்குச் சென்றார்கள். அப்போது ஒரு ஒப்பந்தம் உருவாகிற்று. வருடத் துக்கு ஒருமுறை அங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ள முகம்மது இப்றாஹீம் அவர்களின் சியாறத்தை (சமாதியை) தரிசிக்க அனுமதிக்க வேண்டும். முஸ்லிம்கள் பெருநாட் தினங்களில் வந்து தமது சமய வழிபாடுகளை செய்யத் தடை செய்யக் கூடாதென்றும் சரத்துக்கள் சேர்க்கப்பட்டன. இந்த ஒப்பந்தத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியே தான் கோயிலின் மேற்குப்புறப் பகுதியில் முஸ்லிம்கள் உள்ளே செல்வதற்கு வாயில் ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. அந்த வழியின் மூலமே அவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். பின்வந்தோர் அதே செயலைத் தொடர்ந்து செய்து வராததினால் இப்போது அந்தக் கதவும் நீக்கப்பட்டு சுவர் இடப்பட்டுள்ளது. இன்றும் அந்த வில்வளைவினைக் கொண்ட வாசலின் வடிவு உள்ளது. கோயில் கட்டும்போது மூலஸ்தானத்தை முகம்மது இப்றாஹீம் என்பவர் அடங்கப்பட்ட சமாதியின் மேலேயே அமைக்க முயன்றனர் என்றும் அச் சமாதியை உடைக்க முயன்ற வேலையாள் அதே ஆயுதத்தால் தாக்குண்டபடியால் அந்த முயற்சி தடைப்படவே அந்த சமாதியிலிருந்து சில அடிகளுக்கு இப்பால் மூலஸ்தானத்தின் வேல் பதிக்கப்பட்டதாகக் கூறுவர். இந்தக் கோயிலின் உரிமை சம்பந்தமாக ஆங்கிலேயர் காலத்தில் ஒரு வழக்கும் நடந்ததாகவும் கூறுவர். இன்றுவரை அச் சமாதி இடிக்கப்படாமல் உள்ளது. அது ஒரு பீடம் போலக் கட்டப்பட்டுள்ளது. முஸ்லிம்களும் இந்துக்களும் இந்த சம்பவம் ஒன்றைத் தவிர மற்ற வகையில் எல்லாம் நெருங்கியே மிக அன்யோன்னிய உறவுடன் பழகி வந்தனர். வண்ணார்பண்ணை யில் வைத்தியலிங்கச் செட்டியார் என்ற பெயருடைய ஒருவர் வாழ்ந்து வந்தார்.[19] இதே காலத்தில் முஸ்லிம் பகுதியில் முகம்மது தம்பி மரைக்கார் என்ற பெயருடைய ஒருவரும் வாழ்ந்து வந்தார். இவர்களிருவரும் மிகவும் நெருங்கிய நண்பர் களாக இருந்தனர். இருவருமே முத்துச் சிப்பி குத்தகைக்கு எடுத்து வணிகம் செய்து வந்தனர். 1713 இல் ஒல்லாந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டை கட்டுவதற்கென கொண்டு வந்த கற்களில் எஞ்சிய கற்களை இவர்கள் இருவருமே விலைக்கு வாங்கினர். இந்தக் கோட்டை கட்டப்பட்ட அதே கற்களினால் வண்ணார்பண்ணை சிவன்கோவிலை வைத்தியலிங்கச் செட்டியார் கட்டினார். இதே காலத்தில் தான் முஸ்லிம்கள் வாழும் பகுதியில் இரண்டு தைக்காக்களும் ஒரு பெரிய பள்ளிவாசலும் கட்டப்பட்டது. முஸ்லிம் கல்லூரி வீதியில் அமைந்துள்ள பெரிய பள்ளிவாசல் என்னும் ஜும்ஆப் பள்ளி இக்காலத்திலேயே கட்டப்பட்டது.

வண்ணை வைத்தியலிங்கச் செட்டியார் கோவிலைக் கட்டும் போது பலவகையிலும் முகம்மது தம்பி மரைக்கார் அவருக்கு உதவி செய்தார். நன்றி மறவாப் பண்புடைய வைத்தியலிங்கச் செட்டியார் பெரிய குளத்தைக் கட்டிக் கொடுத்தார். எனவே 1713 இல் தான் பெரிய பள்ளிவாசலும், பெரிய குளமும், ரிபாயியாத் தைக்காவும், முகிதீன்பள்ளி வீதியிலிருக்கும் முகிதீன் பள்ளியும் கட்டப்பட்டன.

ஒல்லாந்தர் காலத்தில் தான் காணிகளுக்குத் தோம்பு எழுதும் முறை ஆரம்பிக்கப்பட்டது. எனவே பழைய காணிகள் காட்டுகின்ற காணியின் பெயர்கள் பெரிதும் இஸ்லாமியப் பெயர்களாகவே இருக்கின்றன. இவை பெரிதும் முஸ்லிம்கள் நிலைகொண்டிருந்த இடங்களாக இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் தமிழில் மட்டுமல்லாது அரபுத் தமிழிலும் உறுதிகள் எழுதப்பட்டன. அரபுத் தமிழும் தேசிய மொழியாக ஒல்லாந்தர் அங்கீகரித்திருக்கலாம். இத்தகைய அரபுத் தமிழ் உறுதிகள் நொத்தாரிசு இனாயத்துல்லா என்பவரால் எழுதப் பட்டிருந்தன. இது நீலநிறத்தாளில் காணப்பட்டது. ஒல்லாந்தர் இக்காலத்தில் பல கல்விச்சாலைகளை ஸ்தாபித்திருந்தனர். என்றாலும் அங்கு தங்கள் பிள்ளைகள் சென்று படிப்பதை முஸ்லிம் பெற்றோர்கள் விரும்பவில்லை. அங்கு சென்று தங்கள் பிள்ளைகள் கல்வி பயில்வதனால் அவர்கள் மதத்துக்கு மாறிவிடலாம் என்று ஐயுற்றதே காரணமாகலாம். அரபு மொழியை நன்கு கற்றார்கள். மார்க்க நூலான திருக்குர் ஆனை வாசிக்க அரபுக்கல்வி இன்றியமையாததாக இருந்தது. அவர்களின் தந்தையர் மொழி அரபாக இருக்க தாய்மொழி யாகத் தமிழே இருந்தது. தமிழைப் பேசினார். அவர்கள் தமிழை முறையாகக் கற்காத காரணத்தினால் அரபு எழுத்துக் களில் தமிழை எழுதினர். இப்படியாகவே அரபுத்தமிழ் தோன்றியது. பிற்காலத்தில் அரபுத்தமிழில் பல இலக்கியங் களும் எழுந்தன. சுருங்க நோக்கின் ஒல்லாந்தர் காலத்தில் முஸ்லிம்கள் தமக்கு நிரந்தரமாகத் தங்க ஓரிடத்தை தேடிக் கொண்டதுடன் மீளவும் பழைய நிலைக்கு ஓரளவுக்கு மீளும் நிலையினையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலேயர் காலம்

இவர்களின் ஆட்சியின் கீழிருந்த காலம் 1796 முதல் 1947 வரையுள்ள 151 ஆண்டுகளாகும். இவர்கள் காலத்தில் குறிப்பிடத்தக்க வரலாற்று அம்சங்கள் அடங்காவிடினும் தேசிய ரீதியில் சில விடயங்களை வென்றெடுக்கவும் அரசியலில் விழிப்புணர்வு பெறவும் முனைவதனை அவதானிக்கலாம். இக்காலம் முன்னைய இரு காலங்களையும் போலல்லாது முஸ்லிம்களால் சிறிது நிம்மதியாக வாழ முடிந்ததுடன் இழந்த பொருளாதார வளத்தை மீட்டுக் கொள்ளக்கூடியதாகவும் இருந்தது. இக்காலத்தில் முஸ்லிம்கள் தம்மை மீளவும் ஒரு வர்த்தக சமுதாயமாக ஆக்கிக் கொண்டார்கள். பொருளாதார நிலைமை பலமடைய இழந்துபோன உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கத் தொடங்கியதுடன் இவர்கள் அதில் வெற்றியும் கண்டனர். எனினும் கல்வியைப் பொறுத்தவரையில் ஈழத்தின் ஏனைய பகுதிகளிலுள்ள முஸ்லிம்கள் போலப் பின்தங்கியே இருந்தனர். போர்த்துக்கேயரதும் ஒல்லாந்தரதும் கல்வி முறை போலவே ஆங்கிலேயரின் கல்வி முறையும் இருக்கும் என்று எண்ணினர். இருந்தாலும் பிரித்தானியர் ஆட்சியின் கடைக் கூற்றுப் பகுதிகளில் சில கல்விமான்கள் தோன்றச் சுற்றாடலின் செல்வாக்கே காரணமாக இருந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் குழந்தையின் மகன் என்று அழைக்கப்பட்ட ஒருவரின் முயற்சியினால் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் சம்பந்தமாக வழக்கு ஒன்று நடந்து அதிலே அவர் வென்றதாகக் கூறுவர். இதற்கு ஆதாரம் தேடமுடியாது உள்ளது.

செழிப்பான நிம்மதியான வாழ்வு ஒன்று நிகழும்போதே நல்ல பல காவியங்கள் எழும் என்பது இலக்கிய வரலாறு தரும் அனுபவமாகும். இக்காலப் பகுதியில் முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் இந்த நிலை ஏற்பட்டிருந்ததனால் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பதுறுத்தீன் புலவர் என்பவர் 4000 விருத்தங்களினாலான முகியித்தீன் புராணத்தை 1811 இல் எழுதினார். இது காவிய அமைப்பை ஒட்டி எழுந்தது. ஈழத்தின் முதற்றமிழ்க் காப்பியம் என்று கொள்ளப்படத்தக்கது.

1822 இல் பேர்சிவல்அலன்டைக் என்பவரது முயற்சியால் யாழ்ப்பாண முஸ்லிம்கள் வாழும் பகுதியில் சனநெருக்கம் அடர்த்தியாகக் காணப்படுகிறது என்ற காரணத்தினால் புது வீதிகள் திறக்கப்பட்டன. இக் காலத்தில் திறக்கப்பட்ட புது வீதிகளில் ஒன்றுதான் இன்று முஸ்லிம் கல்லூரி வீதி என வழங்கப்படும் வீதியாகும். இது முன்பு ராப்ஸ் வீதி என்று அழைக்கப்பட்டது. இது ராப்ஸ் என்பது இவ் வீதியை அமைத்த வரின் பெயராகலாம்.

இக்காலத்தில் சிறந்த கலை நுணுக்கம் கொண்ட தொழிலாளர் பலர் வாழ்ந்திருக்கின்றனர். 1898 இல் சிறந்த கலைஞர்களுக் கான பாராட்டு விழாவில் சரும வேலையில் திறமை மிக்கவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற காரணத்தினால் ஜனாப் காதர் முகம்மது என்பவர் யாழ்ப்பாண அரசாங்க அதிபரால் கௌரவிக்கப்பட்டார்.[20]

19 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் முஸ்லிம்கள் கல்வியில் காட்டிய ஆர்வத்தின் காரணமாக பல அறிஞர்கள் தோன்றினர். புலவர்கள் தோன்றினர். 1904 இல் இலங்கையின் முதல் முஸ்லிம் வழக்கறிஞராக மர்ஹூம் M. C. அப்துல்காதர் B.A. அவர்கள் சித்தியடைந்தார்கள்.[21] இவர் தேசிய ரீதியிலான வெற்றி ஒன்றினைப் பெற்றார். இவர் கல்வி கற்று முதல் முஸ்லிம் பட்டதாரி, முதல் முஸ்லிம் வழக்கறிஞர் என்ற பட்டங்களைப் பெற்றுக் கொண்டபோதும் சமய அனுஷ்டானத்தில் பண்பாட்டைப் பேணுவதில் அதிக அக்கறை கொண்டிருந்தார். வழக்கு விசாரணையின்போது நீதிபதியையும் கோட்டையும் மரியாதை செய்வதற்காக அணிந்துள்ள துருக்கித் தொப்பியை அகற்ற வேண்டும் என்ற முறை நிலவி வந்த காலம். இந்த முறைக்கு எதிராக முஸ்லிம்கள் தொப்பி அணிவது மற்றவர் களைக் கௌரவப்படுத்துவதற்காகவே தவிர அவமானப்படுத்து வதற்கல்ல என்றும் அவ்வாறு அணிவது மதத்தின் சின்னமாகும் என்றும் மற்றையவர்கள் அணியும் தொப்பியிலிருந்து வேறுபட்டது என்றும் வாதாடி வெற்றி பெற்றார். தொப்பியில்லாமல் வழக்காடு மன்றத்துக்குள் செல்லமாட்டேன் என்று சூளுரைத்து அதன்படி வெற்றியும் பெற்றார். இதன் மூலம் துருக்கித் தொப்பியை எக் காரணம் கொண்டும் எந்த வேளையிலும் முஸ்லிம்கள் அகற்ற வேண்டியதில்லை என்பதனை நிலைநாட்டினார். இவ்வாறு வெற்றி பெற்றது 1905 இலாகும். முதலாம் உலக மகா யுத்தத்தையண்டிய காலப் பகுதியில் நிர்வாகம் சீராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கவில்லை. உள்நாட்டு வெளிநாட்டு பொருளாதாரம் சீர்கேடடைந்து காணப்பட்டது. மக்களிடம் வறுமை தலைவிரித் தாடியது. பட்டினியால் மக்கள் திருடவும் கொலை செய்யவும் கூடத் தலைப்பட்டனர். பொருட்களைப் பதுக்கி வைத்திருந்த வர்கள் பெருங் கொள்ளை லாபம் சம்பாதித்தனர். இக்காலத்தில் முஸ்லிம்களில் சிலர் யாழ்ப்பாணம் சந்தையில் வியாபாரம் செய்து வந்தனர். இக்கடைகளையெல்லாம் மக்கள் சூறை யாடினர். இதற்கெதிராக நிர்வாகம் இயங்கியது. கொள்ளைக் காரர்களைச் சுடும்படி பணித்தது. இவ்வாறு ஒரு கொள்ளைச் சம்பவத்தையொட்டி சந்தை அமளிதுமளிப்பட்டபோது அப்போது எலுமிச்சம் பழ வியாபாரம் செய்து கொண்டிருந்த முஸ்லிம் வட்டாரத்தைச் சேர்ந்த கதிர் லெப்பை என்பவர் தனது பொதி களுடன் வீடு செல்ல முயலும்போது பொலிசாரால் தவறுதலாகச் சுடப்பட்டார். இது நடந்தது 1914 லிலாகும்.

இதனைத் தொடர்ந்தும் நாடெங்கும் பதட்டநிலையே காணப் பட்டது. 1918 லும் ஒரு கலவரம் நடந்தது. 1918 நவம்பர் 10 இல் பருத்தித்துறை சுன்னாகம் ஆகிய பகுதிகளில் முஸ்லிம் களுக்குச் சொந்தமான புடவைக் கடைகள் கலவரக்காரர்களால் கொள்ளையடிக்கப்பட்டன. பொலிசார் உடனடியாக ஏற்ற நடவடிக்கைகள் எடுத்ததனால் கலவரம் அடங்கியது. எட்டுக் கலகக்காரர்கள் காயமடைந்தனர். ஒருவர் கடுமையான காயம் அடைந்தார்.[22]

1920 இல் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எல்லா இன, மதத்தவராலும் மதிக்கப்பட்ட உதார குணங்களையுடைய ஜனாப் அய்னியாப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை என்ற முஸ்லிம் பெருவர்த்தகர் காலமான செய்தியை 24.1.1920 இல் **'உதய தாரகை'** செய்தி வெளியிட்டிருந்தது.[23] இவரது குடும்பத்தினரும் இவரும் எடுத்த முன்னோடியான நடவடிக்கைகளினால் சமுதாயத்தினர். தமது பழைமை சார்ந்த சில மூடநம்பிக்கைகளை விடக்கூடியதாக இருந்தது.

முஸ்லிம்கள் தாம் முன்பு வாழ்ந்த பகுதிகளில் மீன் உண்ண நன்கு பழகியிருந்தனர். ஆதலால் புதிய இடத்தில் குடியேறிய பின்னரும் தாம் அந்த மீன்பிடித் தொழிலைச் செய்யாததால் நாட்டுப் புறங்களிலிருந்து சில மீனவர்களான திமிலர் என்ற வகுப்பாரைக் கொண்டு வந்து தமது சுற்றாடலில் கடலையண்டிய பகுதிகளில் தமக்குச் சொந்தமான நிலங்களில் குடியேற்றினர். இக்காலத்தில் பறைச்சேரி வயல் பொம்மைவெளி போன்ற வயல்கள் அனைத்தும் முஸ்லிம்களுக்கும் சொந்தமானவையா யிருந்தன. வயலில் சூடடிக்க ஆயத்தமாக வைக்கப்பட்டிருந்த நெற்சூடுகளை சில திமிலர் வளர்த்த மாடுகள் வந்து மேய்ந்து அழித்துவிட்டன. இதனால் ஆத்திரம் கொண்ட நில உரிமை யாளரான முஸ்லிம் ஒருவர் அந்த மாட்டை அடித்தார். இதனை யறிந்த மாட்டின் உரிமையாளன் அங்கு ஏதோ அலுவலாகச் சென்ற முஸ்லிம் ஒருவரை அடித்தார். இது இருவர் பகுதியிலும் கலவரமாக மூழத் தொடங்கியது. இரு பக்கமும் ஒவ்வொரு குழுக்கள் இயங்கி இரு சாராரையும் தாக்கியது. இதனால் இரு பக்கத்தைச் சேர்ந்த மக்களும் தாக்கத்திற்குள்ளாகினர். இக்காலை பக்கீர் மீராலெப்பை, நானாசாகிபு, பிச்சை என்பவர் கள் முஸ்லிம் பகுதியில் முன்னின்றவர்களாவர். இது நடந்தது 1925 லாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரத்தின் பின்

விவசாய நடவடிக்கைகளில் ஈழத்தின் எல்லாருமே ஈடுபடும்போது முஸ்லிம்கள் அதில் ஈடுபடாதிருந்தது வியப்பல்ல. இக்காலப் பகுதியில் முஸ்லிம்களிடம் சில இந்து உயர் அதிகாரிகள் மாற்றாந் தாய் மனப்பான்மையுடன் நடந்து கொண்டனர். முஸ்லிம்கள் விவசாயக் குடியேற்றங்களுக்கு விண்ணப்பித்த போதும் அவர்கள் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. சில சமயங்களில் காணிக் கச்சேரிகளுக்குச் சென்ற முஸ்லிம்கள் மிகவும் கேவலமாக நடாத்தப்பட்டனர். ஆரம்ப காலத்தில் இவ் வகைக் குடியேற்றத் திட்டங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரே கவனம் செலுத்தினர். காணிக் கச்சேரிகள் நடக்கும்போது ஒருவருடைய விவசாய அனுபவம், அவரது குடும்ப அளவு என்பன கணிக்கப்பட்டு புள்ளி வழங்குவதுண்டு. அப்போ தெல்லாம் இப்போது ஓய்வு பெற்றுள்ள முன்னாள் உதவி அரசாங்க அதிபர் முஸ்லிம்களை மிகவும் இழிவாக நடத்தினார். முஸ்லிம்கள் எப்போதும் தூய்மையான ஆடையுடனேயே செல்லு வார்களாதலால் அதனை மனத்தில் கொண்டு **"என்ன காக்க ரமாரே உடுப்பு ஊத்தையாகப் போயிடும் எண்டு பார்க் கிறீரே உப்பிடியெண்டால் எப்பிடி விவசாயம் செய்யிறது. மற்றவர்களைப் போல நிலத்தில் இரும்"** என்றும். அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரியின் தந்தையுடைய வயதான ஒரு முஸ்லிம் வயோதி பரைப் பார்த்து "இப்ப இவ்வளவு பிள்ளைகள் எண்டால் இன்ன மும் பெறுவீரோ" என்றும் இதுபோன்ற எழுத்தில் எழுதமுடியாத அளவு விடயங்களையும் அந்த அதிகாரி கேட்டாராம் மானிய முறைச் சமுதாய அமைப்பு ஆங்கிலேயர் காலத்தில் உத்தி யோகம் பார்ப்பவர்கள் சாதாரண குடியானவர்கள் என்ற நிலை யில் நிலவி வந்துள்ளது. இந்த அதிகாரிகளைக் காணச் செல்கிற சாதாரண பொதுமக்கள் தமது தோளிற் சால்வையே அகற்றிக் கூனிக் குறுகி வேலைகளைச் சாதிக்க வேண்டி யிருந்தது. இந்த நிலையில்தான் முஸ்லிம்கள் விவசாய நடவடிக்கைகளில் கவனம் செலுத்த முடியாதிருந்தது.

இக்காலத்தில் வாழ்ந்த ஒரு பிரமுகர் இவ்வாறு காணிகள் கோரும் சிலரை அழைத்துக் கொண்டு அவர்களின் பாராளுமன்ற உறுப்பினரான G. G. பொன்னம்பலம் அவர்களது கூற்றுக்கேற்ப சாவகச்சேரி வே. குமாரசாமியிடம் அழைத்துச் சென்றார். அப்போது அவர் கூறிய கூற்றும் இங்கு கவனிக்கத்தக்கது. **"ஊசிநூல் விக்கிற உங்களுக்கெல்லாம் ஏதுக்கு விவசாயக் காணி"** என்பதே அதுவாகும். வெள்ளையர் ஆட்சியிலும் பின்பு சுதந்திரமடைந்த பின்பும் யாழ்ப்பாணத்தில் நிலவிய அதிகார நிலைக்கு இவை உதாரணங்களாகும்.

முஸ்லிம்களின் அயராத முயற்சி காரணமாக கிளிநொச்சி முரசுமோட்டையில் பக்கீர் தம்பி என்றவருக்கு முதன் முதலில் குடியேற காணி வழங்கப்பட்டது. இப்படியாகவே 1951 இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டிகுளம் பகுதியில் மிஸ்கின் சாகிபு, அப்துல் ஹமீது, முகம்மது அப்துல்காதர் ஆகிய மூவருக்கும் வழங்கப்பட்டது.

முஸ்லிம்கள் சேர்ந்து வாழவேண்டியவர்கள். இவ்வாறு தனித்துத் தனித்து வாழ்வதனால் அவர்களது பண்பாடு அழிக்கப்படுகிறது என்று பலவிதமான முறைப்பாடுகள் தரப்பட்டு, முஸ்லிம்களுக்கு ஒரு தொகுதியாக குடியேற்றத் திட்டம் வழங்கப்பட வேண்டும் என்று கோரினர். இத்தகைய கோரிக்கைக்கு வழிவகுத்து ஆலோசனை தந்தவர் முதலியார் செ. முத்துத்தம்பி ஆவார். காணி கோருகிறவர்கள் அனைவரையும் ஒரு சங்கமாக அமைத்து அதன் பின்பு நடவடிக்கையில் ஈடுபடுமாறு இவர் ஆலோசனை கூறினார். அதன் படியே 125 அங்கத்தவர்கள் கொண்ட சங்கம் உருவாகிற்று. இதன் தலைவராக மர்ஹூம் முகம்மது மீராசாகிபுவும் செயலாளராக M. E. ஷாகுல், M. Y. கச்சுமுகம்மது ஆகியவர்களும் கடமையாற்றினர். ஆரம்பத்தில் இச்சங்க நடவடிக்கைகளில் குவாசி M. M. சுல்தான் பங்கெடுத்தபோதும் பிற்பகுதியில் அப்போது வழக்குரைஞராக இருந்த M. M. அப்துல்காதர் மிகவும் கூடிய முயற்சி எடுத்தார். பல சமயங்களில் இவர் இம் முயற்சியில் தனது பணத்தையே செலவிட்டுள்ளார்.

1953 ஆம் ஆண்டில் இச் சங்கம் M. E. ஷாகுல் தலைமையில் தங்களது பாராளுமன்ற உறுப்பினர் G. G. பொன்னம்பலத்தைக் கொழும்பில் பேட்டி கண்டது. இப் பேட்டியின்போது தமக்கு ஒரு தொகுதியாகக் காணி வழங்கப்பட வேண்டும் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரிக்கையை முன்வைத்தனர். அவர் சென்ற தூதுக்குழுவின் முன்னரேயே தனது தொலைபேசியை எடுத்து அப்போதையக் காணி அமைச்சரான புலங்குலமை திசாவையுடன் உரையாடி 125 காணிகளை கிளிநொச்சிக் குடியேற்றத் திட்டத்தில் முஸ்லிம் களுக்கு வழங்க வேண்டுமென்று கோரினார். பின்னர் அவ்வாறே தரப்படும் என்று அமைச்சர் தெரிவித்ததாக G. G. P. தெரிவித்ததும் சென்ற தூது கோஷ்டி மகிழ்ந்தது. அவரைப் புகழ்பாடி துதித்து நன்றி கூறி மீண்டது. இப்படி மீளும் வழியில் செயலாளர் M. E. ஷாகுல் அவர்கள் இவ்வாறு நாம் கேட்டவுடன் அனுமதித்த அமைச்சருக்கும் நன்றி கூறி மீளுவோம் என்று குழுவினரிடம் தெரிவித்து அமைச்சரைச் சந்திப்பதற்கு வழிவகுக்க டாக்டர் எம். சி. எம். கலீல் அவர்களை நாடினர். டாக்டர் M. C. M. கலீல், குழுவினரை அழைத்துக் கொண்டு தேனீர்ச்சாலைக்குச் சென்றார். அத்தேனீர்ச்சாலையில் சர்ஜோன் கொத்தலாவல, W. தஹநாயக்கா, எம். டி. பண்டா ஆகியவர்களும் M. C. M. கலீல் அவர்களுடன் ஒன்றாகவே இருந்தபோது டாக்டர் கலீல் அவர்கள் இக் குழுவினரைச் சுட்டிக்காட்டி நடந்த விடயங்களை அவர்களுக்குத் தெரிவித்தார். G. G.. பொன்னம்பலம் அவர்களை நன்கு அறிந்தவரான சர்ஜோன் உடனடியாக பாராளுமன்றத்துக் குள் சென்று அமைச்சர் புலங்குலமையைக் கூட்டிக் கொண்டு வந்தார். வந்தவர் "இவ் விடயங்கள் அனைத்தும் உண்மை யானவையா? இதோ இவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருக் கிறார்கள். உங்களுக்கு நன்றி சொல்வதற்காக" என்று தெரிவித்தவுடன் அமைச்சர் புலங்குலமை திசாவை ஒன்றும் அறியாது விழித்தார். அப்போது M. E. ஷாகுல் அவர்கள் "ஐயா இன்று காலை 10 மணியளவில் எமது தொகுதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம். பி. உங்களுடன் தொலைபேசியில் கேட்டு நீங்களும் சம்மதித்தீர்களே'' என்று கூற, அவர் பதைத்து எழுந்து ''நீர் கனவு கண்டீரா?'' அப்படி இதுவரை ஒன்றும் நடக்கவில்லையே என்றார்.

யாழ்ப்பாண முஸ்லிம்களிடமிருந்து சென்ற தூதுக்குழு யாழ்ப்பாண எம். பி. யாலேயே நன்கு ஏமாற்றப்பட்டதை உணர்ந்து கொண்ட டாக்டர் M. C. M. கலீல் அவர்கள் விடயத்தை மறுநாளே அகில இலங்கை முஸ்லிம் லீக்கைக் கூட்டி முயற்சித்தார்.

இதன் பலனாக யாழ்ப்பாண முஸ்லிம்களின் குடியேற்றத் திட்டப் பிரச்சினையை அமைச்சர் புலங்குலமைதிசாவைக்கு விளக்கு வதற்காக எல்லா முஸ்லிம் அமைச்சர்களும் உறுப்பினர்களும் செனட்டர்களும் சபாநாயகரும் அறிஞர் அல்ஹாஜ் A. M. A. அஸீஸ் அவர்கள் தலைமையில் சென்று நிலையை விளக்கினர். பின்னர் 100 பேருக்கு வழங்கப்படும் என்று உறுதியளித்தார் அமைச்சர் புலங்குலமை.

எல்லா வீடுகளும் ஒவ்வொரு தொகுதிக் காரியாதிகாரிகளுக்கும் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டிருந்ததனால் திடீரென அவ்வளவு காணியைப் பெறுவது முடியாத காரியமாக இருந்தது. அமைச்சர் யாழ்ப்பாண அரசாங்க அதிபருடன் உடனேயே தொலைபேசி மூலம் உரையாடி 30 குடியேற்றக் காணிகளை ஒருவாறு பெற்றுக் கொடுத்தார். அந்த வருடமே நீதிபதியாகப் பதவி உயர்வு பெற்றிருந்த அல்ஹாஜ் எம். எம். அப்துல்காதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் அப்போது உதவி அரசாங்க அதிபராக இருந்த திரு. நவரத்தினராஜாவுடன் தொடர்பு கொண்டு ஏற்ற நடவடிக்கைகளை எடுத்தார். இந்த 30 இலும் 15 பேர் வரை யிலேயே உடனடியாகக் குடியேறினர்.

இதே 1953 ஆம் ஆண்டில் நீதிபதியாகப் பதவி உயர்வு பெற்ற அல்ஹாஜ் எம். எம். அப்துல்காதர் அவர்களுக்கு M. E. ஷாகுல் அவர்களது முயற்சியினால் யாழ்ப்பாண முஸ்லிம்கள் சார்பில் ஒரு வரவேற்பும் பாராட்டு விழாவும் நடத்தினர்.

1954 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்து சைக்கிள் வீரன் M. முத்து முகம்மது அவர்கள் ஒரு சாதனையை நிலைநாட்ட முயன்றார். 23.6.1954 அதிகாலை 5.32க்கு வடமுனையாம் காங்கேசன்துறையி லிருந்து புறப்பட்டு தென்முனையாம் அம்பாந்தோட்டையை எவ்வித ஓய்வும் எடுக்காமல் சென்று அடையும் சாதனையை மேற்கொண்டார். இதன்படி 43 1/2 மணித்தியாலத்தில் 408 மைல்களை ஓடி தங்காலை என்ற இடத்தில் தனது சாதனையை நிறுத்தினார். இவரைப் பாராட்டி யாழ்ப்பாண மக்கள் விழா வொன்றை எடுத்தனர். இவ்விழாவில் நீச்சல் வீரர் திரு. நவரத்தின சாமியும் கலந்து கொண்டார்.

1954 இல் யாழ்ப்பாண முஸ்லிம்களின் வரலாற்றிலேயே அவர்கள் சிறுபான்மையினராக இருந்தபோதும் யாழ் மாநகரசபையில் அவ்வருடம் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்ட வழக்கறிஞர் எம். எம். சுல்தான் அவர்கள் முதல் முஸ்லிம் மேயராகத், தெரிவு செய்யப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1969 இல் அப்போது யாழ்ப்பாணத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ஸ்ரீமான் G. G. பொன்னம்பலம் தனது சில இந்துமத ஆதரவாளர்களைத் திருப்தி செய்யும்பொருட்டு முஸ்லிம்களுக்கு நீண்டகாலம் சொந்தமாகவிருக்கும் கொட்டடியில் அமைந்துள்ள முஸ்லிம்களின் மையவாடியை அகற்றும் முயற்சியில் ஈடுபட்டார். இச்செயலை இறுதி நேரத்தில் அறிந்த யாழ்ப்பாண முஸ்லிம்கள் கொதித்து எழுந்தனர். வன்மையாக இச் செயலைக் கண்டித்தனர். அப்போது இலங்கை முஸ்லிம்களின் உரிமைக்குரலாக வெளிவந்து கொண்டிருந்த "இன்ஸான்" பத்திரிகையில் இவ்விடயத்தை ஜனாப். ரஹீம் அவர்கள் வெளிக்கொணர்ந்து தெற்கிலுள்ள முஸ்லிம்களின் ஆதரவினைக் கோரிநின்றார். இதன் பயனாக இப்பிரச்சினை யாழ்ப்பாண முஸ்லிம்களின் பிரச்சினையாக மட்டுமல்லாமல் இலங்கை முஸ்லிம்களின் பிரச்சினையாக்கப்பட்டது. இவ்விடயத்தில் இரண்டாம் முறையாக யாழ்ப்பாண முஸ்லிம்களுக்காக கொழும்பிலும் மற்றுமிடங்களிலும் வாழ்கின்ற முஸ்லிம் தலைவர்கள் ஒன்று கூடினர். அப்போது சுகாதார அமைச்சராக இருந்த கௌரவ E. L. சேனநாயக்கா அவர்களை முஸ்லிம் தலைவர்கள் சென்று கண்டு நிலையை விளக்கினர். இந்த அரும்பெரும் முயற்சியில் இலங்கை மேமன் இயக்கத் தலைவராகவும் சமூக சேவகராகவும் விளங்கிய அல்ஹாஜ் உஸ்மான் பைலா அவர்கள் தீவிர பங்கெடுத்தார். நிலைமையை நன்குணர்ந்த அமைச்சர் E. L. சேனநாயக்கா அவர்கள் நேரிலே குற்றச்சாட்டுக்களை அறிய வந்தார். இங்கு அடக்கம் செய்யப்படும் மையித்துக்களால் சூழ வர உள்ள கிணறுகளின் நீர் கெட்டுவிடுகிறது என்பது G. G. பொன்னம்பலம் அவர்களின் வாதமாகும். அமைச்சர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தபோது சூழ உள்ள நீர்க்கிணறுகளில் உள்ள நீர் அமைச்சரால் பரிசீலிக்கப்பட்டது. அந்த நீர்களில் திட்டமிட்டே ஒரே இரசாயனப் பொருள் கலந்திருப்பதனை அமைச்சர் கண்டார். மையத்து அடக்குதல் அதன் ஆழம், வருடம் ஒன்றுக்கு அங்கு அடக்கப்படும் சராசரி மையத்துக்களின் தொகை என்பன அவரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்ட பின் அமைச்சர் அவர்கள் ஏற்கனவே வெளியிட்டிருந்த மையத்தை அடக்குதலைத் தடுக்கும் சட்டத்தை நிராகரித்தார். இப்பணியில் ஜனாப் T. செய்னுல் ஆப்தீன் H. S. T. உரிமையாளர் ஹாபிஸ் ஆகியவர்களின் நடவடிக்கைகள் பாராட்டப்படத்தக்கனவாயிருந்தன.

இந்த நடவடிக்கையினால் முஸ்லிம் மக்களின் அன்பைப் பெறத் தவறிய பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் பொம்மைவெளிக் குடியேற்றத் திட்டத்தின் மூலம் மீளவும் நிலைநாட்ட முயன்றார்.

சேர் ராசிக்பரீத் அவர்களுடன் யாழ்ப்பாண முஸ்லிம்கள் தொடர்பு கொண்டு அப்போதைய அரசாங்க அதிபரான வேர்ணன் அபேயசேகராவின் ஆதரவுடன் முஸ்லிம்கள் சிலருக்குச் சொந்தமாயிருந்த பொம்மை வெளியைச் சுவீகரித்து காணியற்ற மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்தனர். எனினும் முஸ்லிம் களின் நீண்ட கால ஆதரவாளரான ஸ்ரீமான் G. G. பொன்னம் பலத்தின் மீது கொண்ட வெறுப்பு 1970 தேர்தலின் அவரது தோல்விக்கு வழிவகுத்த காரணிகளுள் ஒன்றாக அமைந்தது.

1972 இல் யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பா அவர்களின் முயற்சியினால் பொம்மைவெளி 200 வரையிலான குடியிருக்க நிலமற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. எனினும் அந்தப் பகுதி மழை காலத்தில் 2 அடி முதல் 3 அடி வரை நீர் தேங்கும் பகுதியாகவே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே காலத்தில் முஸ்லிம்கள் சிலர் ஒன்று சேர்ந்து தமக்கு குடியேற்ற நிலம் தரப்பட வேண்டும் என்று இடையறாது கோரி வந்ததனால் பள்ளிக்குடா என்ற காட்டுப்பகுதி சிலருக்கு வழங் கப்பட்டது. இங்கு நீர் வசதி மிகவும் குறைவானதாகவும் மேட்டுநிலமாகவும் இருந்ததனால் பலர் குடியேறப் பின்னின்றனர். சிலர் இப்பகுதியில் குடியேறினர். எனினும் வாழ்க்கை வசதிகள் இல்லாதிருந்ததனால் அவர்களும் அந்நிலங்களைக் கைவிட்டு மீண்டும் வந்தனர். 12.5.1972 இல் மகாம் ஒன்றுக்குச் சொந்த மான காணியில் மாநகரசபை மூர்மார்க்கட்டைக் கட்டியது.

1973 இல் பொம்மை வெளிக் குடியிருப்பாளர் சங்கம் தமது வசதிகளை உயர்த்த முயன்றது. திருவாளர் அல்பிரட் துரை யப்பா அவர்கள் இப்பகுதிகளுக்கு மின்சார வசதிகளைச் செய்து கொடுத்தார். நீர் யாவும் உவர்ப்பாக இருந்ததனால் குடிநீரை வான் மூலம் வழங்க ஏற்பாடும் செய்தார். இதே ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட முஸ்லிம் உதவுவோர் சங்கம் துரையப்பாவின் மறைவின் பின், பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. C. X. மாட்டின் அவர்களிடம் சென்று நிலையை விளக்கியது. அவர் இந்த நடவடிக்கையில் உடனடியாக இயங்கி அரசாங்க அதிபர் திரு. லால் விஜயபாலா அவர்களுடன் பல முறை நேரில் வந்து பார்த்து நிலையை அமைச்சருக்கு அறிவித்தார். நாடாளுமன்றத்திலும் இது பற்றி 11.12.1975 அன்று உரையாற்றி னார். அப்போதைய விவசாய அமைச்சர் ஹெக்டர் கொபேகடுவ அவர்களிடம் நிலையினை விளக்கி மத்திய அரசாங்கத்திட மிருந்தும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்தும் நிதியை ஒதுக்கி 2 1/2 லட்சம் ரூபா செலவில் பொம்மை வெளியில் நீர் தேங்கும் நிலையை நீக்கினார். அவர் அதை மக்கள் வாழக்கூடிய பகுதியாக மாற்றினார். 1977 இல் பொலிஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுமக்கள் மோதலினால் 50க்கு மேற்பட்ட முஸ்லிம் கடைகள் தீக்கிரையாகின.

1977 தேர்தலின் பின் சில திமில சமூகத்தைச் சேர்ந்த வாலிபர் களுடன் முஸ்லிம் வாலிபர்கள் ஏற்படுத்திக் கொண்ட பிணக்கு ஒரு கலவரமாக வெடித்தது. இரு சாராரும் எதிர் தரப்பினரைக் கண்ட இடமெல்லாம் தாக்கினர். சில முஸ்லிம் வீடுகள் உடைக்கப்பட்டுக் கொள்ளையடிக்கப்பட்டன. இதனால் ஆத்திரம் கொண்ட சில முஸ்லிம் வாலிபர்கள் வீதியருகே இருந்த ஒரு திமில சமூகத்தைச் சேர்ந்தவருக்கான மரக்காலையை உடைத்தனர்.

இதன் பின்பு மறுநாள் சில திமில சமூக இளைஞர்கள் துப்பாக்கி, பெற்றோல் சகிதம் வந்து பொம்மைவெளியில் வாழ்ந்த ஏழை களின் ஓலைக்கொட்டில் வீடுகளுக்கு நெருப்பூட்டினர். உயிரைக் காக்க வெளியேறி ஓடியவர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டனர். ஒரு முஸ்லிம் வாலிபர் பலத்த காயத்துக்குள்ளானார். இதனால் 40 ஏழை முஸ்லிம்களின் வீடுகளும் அவர்களது துணிமணி அனைத்தும் நெருப்புக்கு இரையாயின.

இதனை அடுத்து கலவரம் பெரிதாக வெடிக்காது பொலிசார் தகுந்த நடவடிக்கை எடுத்தனர். இந்தச் சம்பவங்களால் தமக்கு ஏதும் ஆபத்து நேரலாம் என அறிந்த திமில சமூக மக்கள் அங்குள்ள தேவாலயம் ஒன்றில் தஞ்சமடைந்தனர். வீடுகளை இழந்த முஸ்லிம்கள் ஒஸ்மானியாக் கல்லூரியில் தஞ்சம் புகுந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சில நாட்கள் பதற்றநிலை நீடித்தது. இப்போதைய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் அவர்களின் முயற்சியினாலும் கத்தோலிக்கப் பாதிரிமார் சிலரின் முயற்சியாலும் சமாதான நிலை ஏற்பட்டது.

தீவைப்பினால் வீடிழந்த மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு வேண்டிய பொருட்களை சுய உதவி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வழங்க வீடமைப்புத் திணைக்களம் முன்வந்தது. வீடுகளைக் கட்ட கூலிகள் கூடக் கொடுக்க முடியாத நிலையில் இருந்ததனால் உள்ளூரிலும் வெளியூரிலும் உள்ள பலரிடம் நிதி உதவி கோரிப் பெறப்பட்டது. தற்போது இந்த வீடுகள் கட்டி முடிவடையும் நிலையில் உள்ளன. இப்பணியில் பிரதிக் காணி ஆணையாளர் M. M. மக்பூல், ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் A. H. ஹாமீம், கல்வி அதிகாரி M. A. C. S. A. ஸலாம் பிரபல வர்த்தகர் K. N. M. மீரான் சாகிபு ஆகியவர்களும் பிறரும் தீவிரமாக உழைத்து வருகின்றனர்.

இரு முறையும் திமில சமூக மக்களுடனேயே பிரச்சினைப்பட்ட முஸ்லிம்கள் பெரும்பான்மையினரான இந்துக்களுடன் மிகவும் நேசமாக வாழ்ந்து வருகிறார்கள் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

1979 இல் முஸ்லிம் இலக்கியங்கள் பற்றிய பல பயன் தரத்தக்க ஆய்வுகளை நிகழ்த்தியமைக்காகவும் கலையும் பண்பும் என்ற நூலை எழுதிப் பணி புரிந்தமைக்காகவும் முஸ்லிம்களால் நன்கு மதிக்கப்பட்ட பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் துணை வேந்தராக நியமிக்கப்பட்டமை குறித்து ஒரு பாராட்டு விழாவை முஸ்லிம்கள் அன்னாருக்கு அளித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1980 இன் பின்னர்

இந்த நூலின் முதற்பதிப்பு டிசம்பர் 1979 இல் வெளியிடப்பட்டது. வெளியீட்டு விழா யாழ்ப்பாணம் மீரானியா கல்லூரி மண்டபத்தில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் கௌரவ யோகேந்திரா துரைசாமி அவர்களை பிரதம அதிதியாக கொண்டு நடத்தப் பட்டது. மூத்த எழுத்தாளரும் மல்லிகை ஆசிரியருமான தோழர் டொமினிக் ஜீவா சிறப்புரையாற்றினார். முதற் பிரதியை தீ. பி. ஜுவல்ஸ் உரிமையாளர் M. S. A. M. ராஜா பெற்றுக் கொண்டார்.

அராபியரின் இலங்கை வருகையுடன் ஆரம்பமாகியது. யாழ்ப்பாண முஸ்லிம்களின் குடியேற்றம் அதாவது கி. பி. எட்டாம் நூற்றாண்டில் வந்த அராபியர்கள் யாழ்ப்பாணத்தில் குடியேறினர். அன்று முதலாக தமிழ் மக்களுடன் ஐக்கியமாக வாழ்ந்து வந்த முஸ்லிம்களின் கட்டுப்பாடான பிறருக்குத் துன்பம் தராத வாழ்வு கண்டு பொறாமை கொண்டவர்கள் காலத்துக்குக் காலம் பல துயரமிக்க சம்பவங்களை ஏற்படுத்தியே வந்துள்ளனர். ஆனால் அவை யாவும் குறிப்பிட்ட சில குழுக்களின் செயலாகவே இருந்தது. ஆரம்ப முஸ்லிம்களின் குடிப் பரம்பல் நயினாதீவு, மண்கும்பான், மண்டைதீவு, அல்லைப்பிட்டி, காரை தீவு போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவுப் பகுதிகளிலும் குடாநாட்டில் கொழும்புத்துறை, அலுப் பாந்தி, சாவகச்சேரி, உசன் போன்ற பகுதியிலும் பருத்தித்துறை, கொடிகாமம் போன்ற பகுதிகளிலும் முஸ்லிம்கள் தற்போது வாழ்ந்த பகுதிகளிலும் வாழ்ந்து வந்தனர்

தற்போது 'திலிபன் நகர்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள நல்லூரிலும் முஸ்லிம்கள் வாழ்ந்தனர். 1515, 1520 ஆகிய ஆண்டு காலப் பகுதியில் யாழ்ப்பாண மன்னனுக்காகப் போர்த்துக் கேயரை எதிர்க்கவல்ல பலம் வாய்ந்த போர் வீரர்களாகவும் முஸ்லிம்கள் இருந்தனர்.

இவ்வாறு பல நூற்றாண்டுகளாக வாழ்ந்த முஸ்லிம்களை வெளியேற்றும் முதல் திட்டம் 1560 இல் கால் கோளாயிற்று. அப்போது யாழ்ப்பாணத்தை ஆண்ட போர்த்துக்கேயரின் உதவி யுடன் முஸ்லிம்களின் பண்டகசாலைகள், கிட்டங்கிகள் கொள்ளை யடிக்கப்பட்டன. நெல், அரிசி, கால்நடைகள் சூறையாடப் பட்டன. அப்போது வாழ்ந்த முஸ்லிம்களின் ஜும் ஆப் பள்ளி யொன்று புதுமை மாதா கோவிலாக்கப்பட்டது. (ஆதாரம் - Ancient Jaffna) இதனால் அப்பகுதியிலிருந்த முஸ்லிம்கள் வெளியேறி ஏற்கனவே முஸ்லிம்களிலிருந்த நல்லூரிலும் முஸ்லிம் தெருவிலும் குடியேறினர். போர்த்துக்கேயரின் கொடுங் கோல் ஆட்சி முடிவடைந்ததும் ஒல்லாந்தரின் ஆட்சி தொடங் கிற்று. ஏற்கனவே நல்லூர்க் கந்தசுவாமி கோயிலாயிருந்த இடம் போர்த்துக்கேயரால் புனித யேம்சு ஆலயமாக்கப்பட்டதால் தங்களிலும் சிறுபான்மையான முஸ்லிம்கள் அக்காலத்தில் அடர்த்தியாக பள்ளிவாசல் மையவாடிகளுடன் வாழ்ந்த இடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்குள்ளவர்களை பலாத்காரமாக வெளியேற்றுவதன் மூலம் தமது கந்தசுவாமி கோயிலை அமைத்தனர். முஸ்லிம்கள் தமது பள்ளிவாசல் மையவாடி ஆகியவற்றை விட்டு அகல மறுத்தபோது முஸ்லிம்கள் குடிக்கும் நீர்நிலை யாவற்றிலும் பன்றியை வெட்டி உள்ளிட்டனர். இதனால் அங்கிருந்தும் முஸ்லிம்கள் வெளியேறி ஏற்கனவே முஸ்லிம்கள் வாழ்ந்த வளமற்ற நாவாந்துறைக்குக் கிழக்கே குடியேறினர். (ஆதாரம்-யாழ்ப்பாண வைபவமாலை).

இந்த இரு சம்பவங்களும் வரலாற்று ரீதியாக முஸ்லிம்களை வெளியேற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாகும். இவையாவும் அன்றிலிருந்து மொழியால் ஒன்றுபட்ட போதிலும் மதத்தால் வேறுபட்ட காரணத்தினால் ஏகத்துவ நெறிக்கு இடப்பட்ட சவால்களாகவே அமைந்தன.

நாடு சுதந்திரம் அடைந்த பின்பும் இந்நிலை வேறு வடிவில் தொடர்ந்தும் நீடித்தது. அரசியலில் உரிமை பெறுகிற அளவு சனத்தொகை இல்லாத காரணத்தால் உரிமைக் குரலற்றவர்களாகவே முஸ்லிம்கள் இருந்தார்கள். நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், குடியேற்றங்கள், அரச மானியம் வழங்கல், வீடமைப்புக் கடன்கள் வழங்கல், வீடமைப்புத் திட்டங்கள், வியாபார நிலையத்துக்கான நிலம் ஒதுக்கல் வேலை வாய்ப்புகள் அனைத்திலும் தமிழ் அதிகாரிகளால் முஸ்லிம்கள் ஒதுக்கப்பட்டனர்; புறக்கணிக்கப்பட்டனர். முன்னாள் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர்களும் இன ஒதுக்கல் கொள்கையையே கடைப்பிடித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் வி. என். நவரத்தினம் அவர்கள் தமது உரைகளில் பல விடங்களில் "யாழ்ப்பாண மக்கள் எல்லாத் துறையிலும் இஸ்ரேலிய யூதர் களை ஒத்தவர்கள். எனவே அனைத்து நடவடிக்கையிலும் இஸ்ரேலியர்களைப் பின்பற்ற வேண்டும்" என்று அடிக்கடி முழங்கினர்.

இக்கால கட்டத்தில் தமது கொள்கைகள் மட்டுமே நிலைக்க வேண்டும் என்ற எண்ணம் இன்றைய புலிகளிடம் இருப்பது போன்றே வெறியொன்று அக்கால தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்தது. எனவே தமது கருத்துக்கு முரணானவர்கள் அரசியலில் தலையெடுப்பதை அவர்கள் விரும்பவில்லை. எனவே தமது கருத்துக்கு முரணான வர்களைக் கொலை செய்து புதியதோர் சகாப்தத்தைத் தோற்று வித்தனர். என்றுமே சாத்தியமாகாத "தமிழ் ஈழம்" என்னும் கோரிக்கையை முன்வைத்து வாலிபர்களை ஆயுதம் ஏந்த வைத்தனர். உள்நாட்டில் நிலவிய கல்வித் தரப்படுத்தல், உத்தியோக வாய்ப்பின்மை ஆகியவற்றால் விரக்தியடைந்த வாலிபர்கள் உயர் கல்விக்காகவும் வேலை வாய்ப்புக்காகவும் ஐரோப்பா செல்ல முயன்றனர். இதற்கு அதிக அளவு பணம் தேவைப்பட்டது. அதனால் ஆரம்பத்தில் அவர்கள் அனைவரும் வங்கிக் கொள்கைகளில் ஈடுபட்டனர். இவ்வாறு தோன்றிய சில கொள்ளையர்களும் - கடத்தல்காரர்களும் அரசால் தண்டிக் கப்பட்டபோது அவர்கள் தியாகிகளாக்கப்பட்டார்கள். கல்விக்கும் மனிதத் தன்மைக்கும் மதிப்புக் கொடுத்த தமிழ் வாலிபர்கள் துப்பாக்கிக் கலாசாரத்துக்கு அடிமையாகினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்ற ஆசனம் பிடிக்கும் சுயநலவாதிகளால் எவ்வித பலனும் பெறமுடியாது போன யாழ்ப்பாண முஸ்லிம்கள் துப்பாக்கி ஏந்திய வாலிபர்கள் மூலமாவது விமோசனமும் நீதியும் கிடைக்கும் என்று எதிர்பார்த்ததில் வியப்பில்லை. எனவே எப்படித் தமிழ் மக்கள் இத்தகைய துப்பாக்கிக் கலாச்சாரம் ஏற்படுத்திய உணர்வுகளுடன் ஒன்றியிருந்தார்களோ அதுபோன்ற உணர்வுகளுடன் முஸ்லிம்களும் ஒன்றியிருந்தனர். காலத்துக்குக் காலம் முஸ்லிம்களிடமிருந்து பணம் வசூல் செய்யப்பட்டது. வாகனங்கள் கடத்தப்பட்டன. பண வசதி படைத்தவர்களும் கடத்தப்பட்டனர். அவர்களுள் சிலர் சமூக விரோதிகள் என்ற பெயரில் கொல்லப்பட்டனர். எந்த ஒரு சமுதாயத்திலும் மன நோயாளர்கள் காணப்படுவது வழக்கம் அந்த வகையில் யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் மத்தியிலே இருந்த மன நோயாளர்களான மீரான் மொகிதீன், சமூன், அப்துல் (அப்புல் பப்புல்) ஆகியோர் சிங்கள அரசுக்காக உளவு பார்ப்பவர்கள் என்ற குற்றச்சாட்டில் புலிகளால் கொல்லப்பட்டனர்.

இலங்கை அரசாங்க நிர்வாகம் பலவீனப்பட்டு துப்பாக்கி நிர்வாகம் நிலவிய காலத்திலும் யாழ் முஸ்லிம்கள் துப்பாக்கி நிர்வாகம் விதிக்கும் சட்டத்துக்குக் கீழ்பட்டே நடந்தனர். முஸ்லிம் பெயர்களில் இஸ்லாமிய நாடுகளில் ஆயுதப் பயிற்சி பெற்றனர் விடுதலைப் புலிகள். ஆரம்பத்தில் பயிற்சியும் பண உதவியும் புரிந்த இந்திய அரசு, தமது எண்ணத்துக்கு சார்பாக நடக்க மறுத்து அமெரிக்க C.I.A, இஸ்ரேலிய மொசாட் ஆகிய வற்றின் ஆலோசனைகளை ஏற்று நடக்க முற்பட்டதால் புலிகளைப் பகைத்தது. இந்திய ராணுவத்தினரின் வருகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகளைக் காட்டுக்கு அனுப்பியது. அதன் பின் இந்திய ராணுவத்தினரால் EPRLF, ENDLF போன்றன ஆயுதமயப்படுத் தப்பட்டதுடன் புதிதாகவும் TNF என்ற தமிழ்த் தேசிய இராணுவமும் அமைக்கப்பட்டது. இந்த இயக்கங்கள் யாவும் துப்பாக்கி முனையிலேயே முன்னவர் விட்ட பணியினைத் தொடர்ந்தனர். கொள்ளைகள், கடத்தல்கள் ஆகியவற்றுடன் பலாத்காரமாகச் சிறுவர்களைப் பிடித்து பயிற்சிக்குக் கொண்டு செல்லல் என்ற புதிய அத்தியாயத்தையும் தொடக்கி வைத்தனர். இவ்வாறு பிடிக்கப்பட்ட முஸ்லிம் சிறுவர்கள் பயிற்சிக்குச் செல்ல மறுத்தபோது சித்திவதை செய்து துன்புறுத்தப்பட்டனர். சிலரை விடுதலை செய்ய பல லட்சங்களும் பல ஆயிரங்களும் லஞ்ச மாகக் கொடுக்க வேண்டியிருந்தது.

இவ்வாறான EPRLF நடவடிக்கையால் ஜமா அதே இஸ்லாமி யைச் சேர்ந்தவரும் இரண்டு குழந்தைகளின் தந்தையாருமாகிய B. ஜுனைதீன் என்பவரும் S. M. ஹனீபா என்ற பண்டாரவளை வாலிபர் ஒருவரும் EPRLF ஆல் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். EPRLF இயக்க உறுப்பினர்கள் கேட்ட உடனே தமது மோட்டார் சைக்கிள்களை வழங்க மறுத்ததே இவர்கள் செய்த குற்றமாகும். ஜுனைதீன் கொல்லப்படுவதனால் ஜமா அதே இஸ்லாமியினர் கண்டன ஊர்வலம் நடத்துவர். அப்போது முஸ்லிம்களைச் சுடுவதன் மூலம் அவர்களை வெளியேற்றி விடலாம் என்றே EPRLF ம் IPKF ம் கூட எதிர்பார்த்தன. ஆனால் இறைவன் அருளால் முஸ்லிம்கள் அச் சந்தர்ப்பத்தில் புத்திசாலித் தனமாக நடந்து கொண்டனர். ஜுனைதீன் என்பவர் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பரணி ஹோட்டல் மேல் மாடியில் காரியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்தவர்களான EPRLF ஆல் அவர்களது காரியாலயத்தில் வைத்துத் தாக்கப்பட்டு பின்னர் IPKF ட்ரக்கின் பாதுகாவலுடன் அம்மன் வீதியில் வைத்துச் சுடப்பட்டார். எனவே இவ்வாறான கொடுமைகளிலிருந்து விடுதலை பெற புத்திஜீவிகளால் வழிநடத்தப்படும் புலிப்படையினரின் வருகையை ஏனைய தமிழர்கள் எதிர்பார்த்தது போல முஸ்லிம்களும் எதிர்பார்த்தனர்.

இதே நிலை மட்டக்களப்பிலும் நிலவியது. காரைதீவுப் பொலிஸ் நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தி 39 முஸ்லிம் பொலிசாரைத் தனிமையாகப் பிரித்து EPRLF சுட்டுக் கொன்றதன் மூலம் முஸ்லிம்களுக்கும் தனியாக ஒரு துப்பாக்கிப் பிரிவினர் அவசியம் என்பது உணரப்பட்டது. அதன் வெளிப்பாடே முஸ்லிம் ஊர்காவல் படையாகும். இந்திய இராணுவ வெளியேற்றத்தைத் தொடர்ந்து EPRLF, ENDLF ஆகியன தம்மால் இயன்ற வரை கொள்ளையடித்துக் கொண்டு வெளியேறினர்.

ஹாதி அபூபக்கர் வீதி 94ம் இலக்கத்தில் புலிகள் தமது அலுவலகத்தை வைத்திருந்தனர். இந்த அலுவலகத்தின் மீது கோட்டையிலிருந்து வீசப்பட்ட செல் இலக்குத் தவறி 81ம் இலக்க வீட்டில் விழுந்ததால் அந்த வீட்டில் வசித்த மீரான் நாச்சியா என்ற தாயும் அவரது மகள் தாஹிராவும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இக் காலத்தில் யாழ்ப்பாணப் பகுதிக்கு விடுதலைப் புலிகளின் பொறுப்பாளராக இருந்த நிந்தவூரை சேர்ந்த பாரூக் என்பவர் கோட்டையை நோக்கிய தாக்குதலின் போது உள் கட்சி முரண்பாடு காரணமாக விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டார். புலிகள் நியாயத்துடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்பர் என்றே மக்கள் ஆரம்பத்தில் எதிர்பார்த்தனர். ஆரம்பத்தில் நியாயமாக நடப்பது போல காட்டிக் கொண்டாலும் கால கதியில் தமிழின விடுதலை என்ற நோக்கிலிருந்து வழுவி கொள்ளையடிப்பதில் LTTE லயித்தது.

முஸ்லிம் வட்டாரத்தில் இரண்டு குழுக்கள் சமய, சமூக பணிகளில் ஈடுபட்டு வந்தன. அவற்றுள் ஒன்று ஜமாஅதே இஸ்லாமி, மற்றையது தப்லீக் ஜமாஅத். இவை இரண்டுக் குள்ளும் ஒருவித மனக் கசப்பு இருந்தது. இந்த உள்முரண்பாடு காரணமாக தப்லிக் ஜமாத்திற்கு ஆதரவாக செயற்பட்ட இளைஞர் அமைப்பு ஒரு வெள்ளிக்கிழமை இரவில் ஜமா அதே இஸ்லாமி பயிற்சி மன்றத்தை உடைத்து அதிலுள்ள இஸ்லாமிய நூல்களையும் திருக்குர்ஆன் பிரதிகளையும் தீயிட்டு புதுப்பள்ளி சந்தியில் வைத்து அழித்ததுடன் ஜமாஅதே இஸ்லாமி அங்கத்தவர்களின் வீடுகளையும் அடித்து நொறுக் கினர். இதனைத் தொடர்ந்து தபலீக் ஜமாத்திற்கு ஆதரவு அளிப்பதன் மூலம் ஒரு இயக்கமும் ஜமாஅதே இஸ்லாமிக்கு ஆதரவு அளிப்பதன் மூலம் மற்றொரு இயக்கமும் தூண்டி விட்டன. இதில் ஒஸ்மானியா கல்லூரிக்கு முன்பாக ஒரு இயக்கத்திடமிருந்து பெற்ற கைக்குண்டை வெள்ளை என்பவர் வீசியெறிந்து வெடிக்கச் செய்தார். இதனால் முன்னாள் கிராம சேவகர் எம். எஸ். ஜ.்.பர் அவர்களும் ஒரு சிறுவனும் அப்துல் ஹக் என்ற இளம் குடும்பஸ்தரும் கொல்லப்பட்டனர். இதனால் ஊர் அல்லோகல்லோலப்பட்டது. வெள்ளை என்பவர் இஸ்லாமிய இளைஞர் அமைப்புக்கு ஆதரவாக செயல்ப்பட்டவர். இந்த விடயத்தில் தலையிட்ட விடுதலைப்புலிகள் வெள்ளையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைது செய்ததுடன் அவரது வாக்குமூலத்தின் அடிப்படையில் ஜலீல் ஆசிரியரையும் கைது செய்தனர்.

அதன் பின்னர் ஐந்து சந்தியில் வைத்து வெள்ளையையும் ஜலீல் ஆசிரியரையும் 23.07.1986 அன்று புலிகள் சுட்டுக் கொன்றனர். இக்காலத்தில் இளம் வயதிலேயே இலங்கை நிர்வாக சேவை பரீட்சையில் சித்தியடைந்து கிளிநொச்சியில் காணி அதிகாரியாக பணி புரிந்து தமிழ் மக்களுக்கு அளப்பரிய சேவை புரிந்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபராக பணியாற்றிய வேலையில் 22.01.1988 அன்று விடுதலைப் புலிகளால் ஜனாப் எம். எம். மக்பூல் தாரா புரத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். இதன் தொடர்ச்சியாக முஸ்லிம் நிர்வாக சேவை உத்தியோகத்தர்களை திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் கொன்று குவித்தனர்.

துப்பாக்கி முனையில் ஆட்களைக் கடத்தல் வீடுகளில் கொள்ளை யடித்தல், பணயமாக வைத்துப் பல இலட்சம் கோரல் வாகனக் கடத்தல், கட்டாய ஆட்சேர்ப்பு என்பன நிகழ்ந்தன. பணயமாகக் கொண்டு சென்ற பலர் கொல்லப்பட்டனர். இதனால் வெகுண் டெழுந்த சிலர் மட்டக்களப்பில் புலிகளைக் காட்டிக் கொடுக்கத் தலைப்பட்டனர். இக்கால கட்டத்தில் உலகளாவிய ரீதியில் முஸ்லிம்களை அழித்துக் கொண்டிருக்கும் மொசாட் புலிகளுக்கு உதவ ஆரம்பித்தது. எனவே அவர்களின் ஆலோசனையைக் கேட்க வேண்டிய நிலை புலிகளுக்கு ஏற்பட்டது. கூடவே C. I. A. யுடன் தொடர்புடைய அன்ரன் பாலசிங்கமும் ஆதர வாகவே இருந்தார். இதன் பிரதிபலிப்பாகவே உலகம் எங்குமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்காலத்திலுமே நடைபெற்றிராத கொடுமைகளை புலிகள் புரிந்தனர். இலங்கை இராணுவத்துடனான மோதலில் தொடர்ந்து தோல்விகளைத் தழுவிய புலிப்படையினர் பேச்சு வார்த்தைகள் மூலம் காலத்தைக் கடத்தித் தம்மை வலுப்படுத்தி மேலும் கொள்ளையிட முயன்றனர். பேச்சு வார்த்தைகளில் இலங்கை அரசை ஏமாற்றியதன் மூலம் சர்வதேச பயங்கரவாதியான இஸ்ரேலினைத் தவிர்ந்த ஏனைய உலக அரசுகள் எதனதும் ஆதரவைப் பெறமுடியாது போய்விட்டது. எனவே சர்வதேச அரங்கில் அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான யுத்தம் அல்ல. இது ஓர் இனக் கலவரமே என்று காட்ட பல முயற்சிகளையும் புலிகள் மேற்கொண்டனர்.

கடந்த காலங்களில் தமிழர் முஸ்லிம் ஒற்றுமை பற்றி அடிக்கடி எழுதிய பிரசுரங்கள், பத்திரிகை அறிக்கைகள் எல்லாமே காற்றில் பறந்தன. விடுதலைப் புலிகள் கொஞ்சம் கொஞ்சமாக தமது பிரசாரங்களில் முஸ்லிம்கள் மீதான இனத்துவேசத்தை வளர்க்க ஆரம்பித்தனர். விடுதலைப் புலிகளின் மக்களின் முன்னணியும் இனத்துவேஷ விசத்தைக் கக்கியது. மட்டக்களப்பில் நடக்காத சம்பவங்களையெல்லாம் நடந்ததாகக் கூறி முஸ்லிம்களுக்கு எதிரான அலையொன்றைத் தோற்றுவிக்கப் பகீரதப் பிரயத்தனம் எடுத்தனர். இதற்கிடையில் மட்டக்களப்புச் சம்பவங்களை மிகைப் படுத்தி தமிழர்களை முஸ்லிம்கள் கொல்லுகிறார்கள் என்ற கருத்தை ‘ஈழநாதம்’ பத்திரிகை மூலமும் ஏனைய அவர்களது கட்டுப்பாட்டிலுள்ள சகல பத்திரிகைகள் மூலமும் தமிழ் மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்தனர். இதன் மூலம் தமிழ் மக்கள் முஸ்லிம்களைப் புறக்கணித்துத் துன்புறுத்துவார்கள் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் எதிர்பார்த்தனர். முன்போலவன்றி புலிகளின் பிரச்சாரத்துக்குத் தமிழ் மக்கள் அடிபணியவில்லை. எனவே இச்சதி முயற்சியிலும் தோல்வியே அவர்களைத் தழுவியது. இவர்களின் மொசாட் தந்திரம் புத்திஜீவிகளான தமிழ் மக்களிடம் எடுபடவில்லை. அத்துடன் ஏற்கனவே நடந்து முடிந்த 1958, 1977, 1983 கலவரங்களின்போது தெற்கிலுள்ள முஸ்லிம்கள் தமிழரைக் காப்பாற்றி உயிருடன் அனுப்பிய நன்றிக் கடப்பாடும் இருந்தது.

1990 யூன் மாதத்தில் ஒவ்வொரு லொறி உரிமையாளரும் மாதமொன்றுக்கு பத்தாயிரம் ரூபாவும் அதேபோல கடை உரிமையாளர் மாதமொன்றுக்கு 1000/= முதல் 25000/= வரையும் புலிகளுக்கு வரி கொடுக்க வேண்டியிருந்தது. இது போல மாடு ஒன்றுக்கு 100/= வும், ஆடு ஒன்றுக்கு 50/= கூட வரியாக விதித்தனர். கொழும்பில் இருந்து வரும் சகல பொருட்களுக்கும் புலிகள் வரி விதித்தனர். உள்ளூராட்சி நிர்வாக முறைகளில் சிற்றூர் அவை, வட்ட அவை, இணக்க மன்றுகள் போன்ற அமைப்புகளை உருவாக்கினர். இவ்வாறான அமைப்புகளுக்கு யாழ் முஸ்லிம்கள் ஒத்துழைப்பு அளிக்க மறுத்தனர். முஸ்லிம் வட்டாரத்தில் இவற்றின் செயற்பாடு நடைபெறவில்லை. இதனாலும் புலிகள் முஸ்லிம்கள் மீது ஆத்திரமுற்றிருந்தனர்.

இதே காலப் பகுதியில் 13 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களை EPRLF, ENDLF கும்பல் பிடித்தது போலவே விடுதலைப் புலிகள் "பங்கர் வெட்டுதல்" என்ற சாட்டில் பிடிக்க ஆரம்பித்தனர். பெற்றோர் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பவில்லை. பள்ளிவாசல்களுக்குத் தொழச் சென்ற சிறுவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட பலாத்காரமாகப் பிடிக்கப்பட்டனர். "மண் மீட்பு நிதி" என்ற பெயரில் குடும்பத்திற்கு இரண்டு தங்கப் பவுண்கள் பெறப்பட்டன. இந்நிலையில் தமது பிள்ளைகளைக் காக்க வேண்டும் என்ற எண்ணம் மீதூர தமது பொருட்கள் யாவற்றை யும் விட்டு புகலிடம் தேடித் தெற்கே சிறுகச் சிறுகச் செல்லவாரம் பித்தனர்.

IPKF காலத்தில் ஓரளவு முஸ்லிம்கள் வெளியேறி தெற்கே வந்தனர். இவ்வாறு முஸ்லிம்கள் தமது பாரம்பரிய பிரதேசங் களிலிருந்து வெளியேறுவதை கொழும்பு ஜமா அதே இஸ்லாமி விரும்பவில்லை. எனவே எஞ்சியிருக்கும் முஸ்லிம்களின் பசிப் பிணியை நீக்குவதற்காக பல லொறிகளில் உலர் உணவுப் பொருட்கள் அனுப்பப்பட்டன. அவ்வுணவுப் பொருட்கள் மீரானியா கல்லூரியில் களஞ்சியப்படுத்தப்பட்டு யாழ்ப்பாணம் ஜமாஅதே இஸ்லாமியரினால் முஸ்லிம்களுக்கும் ஏனைய தமிழ் சமூகத்தினருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இவ்வாறு வெளியேறிய யாவரும் புலிகளால் நன்கு பரிசோதிக் கப்பட்டு உடைமைகளும் பறிக்கப்பட்டன. "இனி எங்கே தமிழ் ஈழத்துக்கு வரப் போகிறீர்கள். கடைசி முறையாகப் பார்த்துக் கொண்டு செல்லுங்கள்" என்று ஆசீர்வதித்தே அனுப்பினர். தாகத்தால் வருத்தமடைந்த சிறுவர்களுக்கும் பெண்களுக்கும் கூட குடிக்க நீர் தர மறுத்தனர். யாழ்ப்பாண முஸ்லிம்கள் பல தாங்கொணாத கஷ்டங்களைப்பட்டே தெற்கே வர முடிந்தது. முதலில் கேரதீவு மூலம் கடல் கடந்து நாச்சிக்குடாவில் மூன்று நாள் தங்கியே வவுனியாவுக்கு லொறி எடுக்க வேண்டியிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு நாச்சிக்குடாவில் தங்கியிருந்த காலத்தில் துப்பாக்கி ஏந்திய புலிகளால் பலரின் நகைகளும் பணங்களும் கூட சூறையாடப்பட்டன.

1990 யூன் மாதத்திலிருந்து முஸ்லிம்கள் சிறுகச் சிறுக வெளியேற ஆரம்பித்தனர். இவ்வாறு வெளியேறியவர்கள் அனுராதபுர மாவட்டம் இக்கிரிக்கொல்லாவை கிராமத்தை வந்தடைந்தனர். இக் கிராம முஸ்லிம் மக்கள் மிகவும் வறிய விவசாயிகளாக இருந்த போதிலும் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா முஸ்லிம் மக்களை நல்ல முறையில் வரவேற்று தங்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் இரண்டு அல்லது மூன்று குடும்பங்களை வாடகை எதுவும் பெறாது தங்க வைத்திருந்தனர். இக்காலத்தில் மன்னார் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அல்ஹாஜ் (சுந்தரமூர்த்தி) அபூபக்கர் அவர்கள் பேருவலை சீனங்கோட்டை வாலிபர்களின் உதவியோடு இரண்டு லொறிகளில் உலர் உணவுப் பொருட்களையும் துணிமணிகளையும் கொண்டு வந்து அகதிகளுக்கு விநியோகித்தனர். இதன் பின்னர் ஒரு வாரத்தில் அப்போதைய அரசாங்க அமைச்சர் ஒருவர் அவரது பரிவாலம் சூழ பதினான்கு சொகுசு வாகனங்களில் வந்தார். இவரது வருகை பற்றி பள்ளிவாசல் ஒலிபெருக்கியில் ஒலிபரப்பப்பட்டது. மக்கள் திரண்டு பள்ளிவாசலுக்கு வந்தனர். அந்த அமைச்சர் ஒரு சிறிய கையடக்க பனடோல் வில்லைகளை அகதி முகாம் பொறுப்பாளரிடம் கொடுத்து யாழ்ப்பாண முஸ்லிம் பெண்கள் குழுமியிருந்த இடத்திற்கு சென்று "நீங்கள் விரும்பினால் உங்களை அரபு நாடுகளுக்கு பணிப்பெண்களாக அனுப்பி வைப்பேன்" என்றார். அது கேட்ட யாழ்ப்பாண முஸ்லிம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் நாங்கள் எவ்வளவுதான் கஷ்டப்பட்டாலும் பணிப்பெண் களாக போகமாட்டோம். எங்கள் கணவன்மார்களுக்கு அரபு நாடுகளில் வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுங்கள் என்றபோது அவர்கள் எல்லாம் புலிகளின் ஆதரவாளர்கள். அவர்களை அனுப்ப முடியாது என்று அந்த அமைச்சர் கூறினார். இக்கிரிக் கொல்லாவையிலுள்ள ஏழை முஸ்லிம்கள் அன்சாரிகளாக நடந்து கொண்டனர். அமைச்சரோ எறிகிற வீட்டில் பிடுங்குவதையே லாபமாக கொண்டு செயற்பட்டது வேதனைக்குரியது.

இவ்வாறு யாழ்ப்பாண முஸ்லிம்கள் வெளியேற்றப்படுவதை தடுக்கும் முயற்சி ஜுலை மாதத்தில் ஆரம்பமானது. இது "பாஸ்" (Pass) முறை வழங்குவதன் மூலம் அமுல்படுத்தப்பட்டது. பாஸ் வழங்குவதிலும் குடும்பத்தில் ஒருவருக்குக் கொடுத்து மற்றவருக்குக் கொடுக்காமலிருப்பதன் மூலம் வெளியேறாது தடுக்கப்பட்டனர். இவ்வாறு வெளியேறுபவர்கள் 2 தங்கப்பவுண் அல்லது 10000/= ரூபாய் வழங்க வேண்டும் என்றும் நிர்ப் பந்திக்கப்பட்டனர்.

செப்டம்பர் மாதமளவில் சில சமூக சேவகர்களான M. A. C. முபீன் (ஐ.தே.க. வடபிரதேச அமைப்பாளர்) மௌலவி B.A. சுபியான் (ஜமாஅதே இஸ்லாமி) உட்பட 30க்கும் மேற்பட்ட யாழ்ப்பாண முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் இடப்பட்டனர்.

இக்காலத்தில் சாவகச்சேரியிலுள்ள சுல்தான் நிறுவனத்தைச் சேர்ந்த A. கலீல் என்பவர் ஒரு வாக்கி டோக்கி வைத்திருந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற (பொய்யான) குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு அவரது கடையில் உள்ள அனைத்துப் பொருட்களும் சூறையாடப் பட்டன. இதன் பின்னர் முதலில் சாவகச்சேரி முஸ்லிம்கள் வெளியேறும்படி பணிக்கப்பட்டுள்ளனர். மறுநாள் கிளிநொச்சி முஸ்லிம்களும் அதன் பின்னர் மன்னார், வவுனியா முஸ்லிம் களும் வெளியேற்றப்பட்டனர். அத்துடன் ஏற்கனவே பலாத்கார மாகப் பிடிக்கப்பட்டு படைகளில் இருந்த முஸ்லிம் வாலிபர்களின் ஆயுதங்களைப் பறித்துக் கொண்டு துரத்தினர். சில சிரேஷ்ட உறுப்பினர்களைச் சுட்டுக் கொன்றனர்.

இவ்வாறு எல்லாப் பகுதிகளிலுமிருந்து முஸ்லிம்கள் வெளியேற் றப்படுவது குறித்து யாழ்ப்பாண முஸ்லிம்கள் புலிகளுடன் தொடர்பு கொண்டபோது, "யாழ்ப்பாண முஸ்லிம்கள் ஏனைய பகுதி முஸ்லிம்களிடமிருந்து வேறுபட்டவர்கள். அவர்கள் வெளியேற வேண்டியதில்லை" என்று அவர்கள் பதிலளித்தனர். இலங்கை இராணுவத்திடம் தமது பலம் வாய்ந்த அரண்களைப் பறிகொடுத்த புலிகள் போராட்டத்தைத் திசை திருப்ப இந்த வழியைக் கையாண்டனர். யாழ்ப்பாண முஸ்லிம்கள் அனை வரும் வெட்டிக் கொல்லப்பட வேண்டும், அவர்களை உயிருடன் வெளியேற்றக்கூடாது என்பது மட்டக்களப்பு விடுதலைப் புலிகளின் தலைவன் கரிகாலனின் அவாவாக இருந்தது.

நாவலர் வீதியில் மஸ்ரவுத்தீன் பாடசாலைக்கு அருகில் இருந்த மாடி வீட்டில் சுமார் 10 பேர் வரை இருந்தனர். இந்த வேளையில் இரவில் வந்த குண்டு வீச்சு விமானத்தை நோக்கி புலிகள் டோச் லைட் வெளிச்சத்தைப் பாய்ச்சினர். இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமானிகள் இங்கு ஏதோ புலிகளின் முகாம் இருப்பதாக கருதி தண்டுவீச்சை நடாத்தினர். இதனால் அந்த மாடி வீடு இடிந்து விழுந்து 12.09.1990 இல் ஸ்தலத்திலேயே ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 பேர் பலியாகினர். தொடர்ந்து முஸ்லிம் கல்லூரி வீதியில் அமைந்திருந்த முகாம் மீது வீசிய குண்டும் இலக்குத் தவறி மூவரின் உயிரைக் குடித்தது. இவை யாவும் முஸ்லிம் வட்டாரத்தில் அழிவுகளை ஏற்படுத்த வேண்டுமென்ற புலிகளின் திட்டமிட்ட நடவடிக்கையேயாகும்.

ஜூன் மாதமளவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலிருந்த புலிகளின் முகாமிலிருந்து வீசப்பட்ட செல் குண்டு வீச்சால் காதி அபூபக்கர் வீதியிலுள்ள இரண்டு வீடுகள் உடைக்கப்பட்டன. ஐந்து சந்தியில் ஒரு தமிழ்ப் பெண்ணும் கொல்லப்பட்டார். இவ்வாறு முஸ்லிம் பகுதிகளில் குண்டுவீச்சு நடத்தி அதன் மூலமும் வெளியேற்ற முயன்றனர்.

ஏற்கனவே வெளியேறிய முஸ்லிம்களின் வீடுகள் உடைக்கப்பட்டு தையல் மெஷீன், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் பெறுமதி வாய்ந்த பொருட்களைச் சூறையாடினர். சில வீடுகளை உடைத்து உரும்பிராயிலிருந்து தமிழர்களைக் கொண்டு வந்து குடியேற்றினர்.

30.10.1990 அன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்து முஸ்லிம் ஆண்களையும் ஜின்னா மைதானத்துக்கு வரும்படி ஒலிபெருக்கி மூலம் காலை 7.30 மணிக்கு அறிவித்தனர். இந்த அறிவிப்பைத் தொடர்ந்து சுமார் ஆயிரம் புலிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்களும் பெண்களுமாக முஸ்லிம் வட்டாரத்தை முற்றுகை யிட்டனர். இதன் மூலம் முஸ்லிம் வட்டாரத்திலிருந்து எவரும் வெளியேற அனுமதிக்கப்படவில்லை. கூட்டம் ஜின்னா மைதானத் தில் நடந்து கொண்டிருக்கும்போது புலிகள் வீடுகளில் புகுந்து நகைகள், பணம் முதலியவற்றைச் சூறையாடினர். கூட்டத்துக்குச் செல்லாது வீட்டிலிருந்த முஸ்லிம் பெண்களிடம் கழுத்திலுள்ள தைப் பறித்து அறுத்தனர். குழந்தைகளின் கையில் உள்ள மோதிரங்கள் கூட வெட்டி எடுக்கப்பட்டன. காதுத் தோடுகள் கழற்றப்பட்டன. இவ்வாறு பெற்ற பணம், நகைகள் மூலம் தத்தமது காற்சட்டைகளை நிரப்பிக் கொண்டனர்.

கூட்டத்தில் யாழ் நகரப் பொறுப்பாளன் ஆஞ்சநேயன் (இளம்பரிதி) என்பவன், “அன்பான முஸ்லிம் மக்களே, ஒரு மனம் வருந்தத்தக்க செய்தி. மட்டக்களப்பில் முஸ்லிம் ஊர் காவல் படையினரால் நாளாந்தம் 25 முதல் 50 வரையிலான தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படு கிறார்கள். அத்தோடு சாதாரண அப்பாவித் தமிழ் ஆண்கள் 25 பேர் வரை வெட்டிக் கொல்லப்படுவதோடு 25 பேர் வரை வெட்டுக் காயங்களோடு வந்து கொண்டிருக்கிறார்கள். இவர் களின் வருகையால் இங்கு தமிழினம் கொதித்துக் கொண்டிருக் கிறது. நாம் அவர்களைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறோம். இங்கு அவ்வாறான ஒரு கலவரம் வருவதற்கு முன்னால் அடுத்த இரண்டு மணி நேரத்துக்குள் யாழ்ப்பாணத்தை விட்டுப் போக வேண்டும்” என்று சொன்னான். அவ்வேளையில் கூட்டத்தி லிருந்தவர்கள் கால எல்லையை நீடிக்கும்படி பல கோரிக்கை களை வெளியிட்டனர். அனைத்தும் நிராகரிக்கப்பட்டதுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வித பொருட்களும் கொண்டு செல்லக்கூடாது. தேவை யானால் சிறிதளவு பணமும், சங்கிலியும், சைக்கிளும் கொண்டு செல்லலாம் எனக் கூறினான். கூட்டம் முடிந்து ஆண்கள் வீட்டுக்கு வந்தபோது வீட்டிலுள்ள நகைகள், பணங்கள் என்பன துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன.

12 நூற்றாண்டுகளாக மண்ணோடு ஒட்டிய உறவை இரண்டு மணி நேரத்துக்குள் துப்பாக்கி முனையில் உதறி விடுவதென்பது இலேசான காரியமாக இருக்கவில்லை. அகப்பட்டதைக் கையில் எடுத்துக் கொண்டு உடுத்திய உடையுடன் ஏற்கனவே அறிவித்த மூன்று பாதைகள் மூலம் முஸ்லிம்கள் வெளியேறினர். மூன்று பாதைகளிலும் ஆண்கள் வேறாகவும் பெண்கள் வேறாகவும் புலிகளால் பரிசோதிக்கப்பட்டனர். அவ்வேளையில் இச் சொத்துக்கள் யாவும் தமிழரிடமிருந்து முஸ்லிம்கள் சுரண்டிப் பெற்றது. அவற்றைக் கொண்டு செல்ல முடியாது என்றும் நீங்கள் எல்லாம் தென்பகுதியில் சென்று பிச்சையெடுக்கும் காட்சியை நாம் தொலைக்காட்சியில் பார்க்க வேண்டும் என்றும் பட்டினியால் அலைந்து சாக வேண்டும் என்று கூறிப் பொருட்கள் யாவற்றையும் பறித்தனர். இவ்வாறு அங்கிருந்து வெளியேற் றப்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் 3500 ஆகும். மொத்த மக்கள் தொகை 21000 அசையும் சொத்துக்கள் பணம் நகையுட்பட 700 கோடி ரூபாவுக்கு மேலாகும். அசைவற்ற சொத்துக்கள் யாவும் 7000 கோடி பெறுமானமுடையது. நகரில் இருந்த முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் 500க்கு மேற்பட்டவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. 8ம் நூற்றாண்டிலிருந்து பாங்கொலி ஒலித்த 9 ஜும் ஆ பள்ளிவாசல்களும் 10 தைக்காக்கலும் இன்று ஆளரவமற்று ஓய்ந்து விட்டன. இந்த ஒரு நிகழ்ச்சிக்குப் புலிகள் என்றோ ஒருநாள் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

ஐந்து சந்தியிலுள்ள தடை முகாமில் மானிப்பாய் வைத்திய சாலையில் நோய்வாய்ப்பட்டு குண்டுவீச்சால் பாதிக்கப்பட்டுக் கிடந்த அனைத்து முஸ்லிம் நோயாளர்களும் ஸ்டெச்சரில் கொண்டு வந்து வீசப்பட்டனர். பெண்களின் உள்ளாடைகள் உட்படப் பரிசோதித்தனர். சிலவேளைகளில் பெண்கள் நிர்வாண மாக்கப்பட்டுப் பெண் புலிகளால் பரிசோதிக்கப்பட்டனர். அவர்கள் கொண்டு வந்த ஆடைகள் உட்பட அனைத்துப் பொருட்களும் புலிகளால் பறிக்கப்பட்டன. உடுத்திய உடையுடன் வெறுங் கையுடன் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த லொறிகளில் ஆடுமாடுகள் போல அடைக்கப்பட்டு அனுப்பப்பட்டனர். வழிவழியே இருந்த புலித்தடை முகாம்களிலும் பரிசோதனை நடாத்திப் பொருட்களைப் பறித்தனர்.

இவ்வாறு அளவற்ற அனர்த்தங்களைப் புரிந்த புலிக் கொள்ளை யர்களின் தலைவன் ஒருவன் "திலகன்" என்பவன் லண்டன் B.B.C. க்கும் இந்திய "இந்து" பத்திரிகைக்கும் அளித்துள்ள பேட்டியில் முஸ்லிம்கள் அங்கிருந்து துரத்தப்படவில்லை. இது அரசின் பிரச்சாரமே என்று கூறியது வேடிக்கையாக இல்லையா...?

யூதர்கள் வெளிநாடுகளிலிருந்து வந்து குடியேறி அங்கு நிரந்தரமாக வாழ்ந்து வந்த பலஸ்தீனர்களை பிரிட்டிஷ்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க உதவியுடன் அகதிகளாக்கி வெளியேற்றினர். ஆனால் புலிகளோ 12 நூற்றாண்டுகளாக வாழ்ந்த முஸ்லிம் மக்களை இரண்டு மணி நேரத்தில் அனைத்து உடைமைகளையும் பறித்துக் கொண்டு உடுத்த உடையுடன் மாற்றுடையின்றி வெளி யேற்றினர். அவ்வாறு வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களைப் பார்த்து பூந்தோட்டத்திலிருந்த துப்பாக்கி கொள்ளையர்களான புலிகள் "அடேய் சுல்தான்களெல்லாம் பக்கிரியாப் போனீங்களாடா" என்று எள்ளி நகையாடினர். அவர்கள் அதுவரை பேசிய சகோதரத்துவமும் சமதர்மமும் என்னவாயிற்று?

அதன் பின்னர் முஸ்லிம்களிடமிருந்து சூறையாடப்பட்ட பொருட் கள் யாவும் ஸ்ரான்லி வீதியிலுள்ள நாக விகாரைக்கு எதிரி லுள்ள கட்டடத்தில் எழிழகம், தமிழருவி ஆகிய புலிகளின் அங்காடிகள் மூலம் விற்கப்பட்டன. தாங்கள் முஸ்லிம்களை வெளியேற்றியது நியாயமானதே என்பதை நிரூபிக்க அவர்களின் ஊடகங்களாகச் செயற்பட்ட 'புலிகளின் குரல்' வானொலியிலும், 'நிதர்சனம்' தொலைக்காட்சியிலும் பொய்யான செய்தி பல வற்றைப் பரப்பினர். அதன்படி முஸ்லிம்கள் பள்ளிவாசல்களில் ஆயுதங்களை பதுக்கி வைத்திருந்தனர் என்ற மலிவான பொய்ப் பிரச்சாரங்களையும் மேற்கொண்டனர். பணயமாக பிடிக்கப்பட்ட எம். கே. எஸ். அப்துல் காதர் அடித்து துன்புறுத்தி கொலை செய்யப்பட்டார்.

முஸ்லிம்களைத் தெற்கே அனுப்புவதன் மூலம் இனக் கலவரம் தோன்றும் என மனப்பால் குடித்த புலிகள் அதிலும் தோல்வி யையே தழுவினர். முஸ்லிம்கள் வடக்கிலிருந்து வெளியேறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை செஞ்சிலுவைச் சங்கம், சர்வோதயம், றெட்பானா ஆகிய அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒன்று கூட முஸ்லிம் களுக்கு உணவு நிவாரணப் பொருட்களை வழங்கவில்லை.

சர்வதேச இஸ்லாமிய நிவாரண இயக்கத்தினரால் (IRRO) வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்களை யாழ்ப்பாணம் கொண்டு செல்லவும் புலிகள் அனுமதிக்கவில்லை. இவ்வாறு முஸ்லிம் களை வெளியேற்றியதன் பின்னர் மீளவும் வந்து குடியேறி விடுவார்களோ என்ற அச்சத்தில் வீடுவாசல்களை இடித்து கதவுகள், நிலைகள், யன்னல்கள், கூறைகள் ஆகியவற்றையும் பெயர்த்து எடுத்து விற்றனர். இவ்வாறு சூறையாடிச் சுவை கண்ட புலிகள் கிழக்கிலும் இதே நிலையை எதர்பார்த்து கொலையிலும் கொள்ளையிலும் ஈடுபட்டனர்.

புலேந்திரன் தலைமையில் அம்பாறையில் பௌத்த பிக்குகளை யும் அப்பாவி சிங்கள, முஸ்லிம் மக்களையும் கொன்று குவித்தனர். புலிகள் எப்போதும் நிராயுத பாணிகளையே தாக்குவதுண்டு. எல்லைப்புற சிங்கள, முஸ்லிம் கிராமங்களும் இவர்களுக்கு விதிவிலக்காகவில்லை. 4 வயதுடைய முஸ்லிம் பாலகன் ஒருவன் மரத்தில் அடித்துக் கொலை செய்யப்பட்டான். இச் சம்பவம் பொலனறுவையில் இடம் பெற்றது. 03.08.1990 வெள்ளி காத்தான்குடியில் இரவு இஷாத் தொழுகையில் ஈடுபட் டிருந்தவர்களை இரக்கமில்லாது சுட்டுக் கொன்றனர். சுட்டு முடிந்த பின்பும் கைவிளக்கொன்றைக் கொண்டு வந்து “சுட்டவர் கள் போய்விட்டார்கள் மீதமாக உள்ளவர்கள் எழுங்கள் என்று கூறி அவ்வாறு மீள எழுந்தவர்களையும் சுட்டு இரத்த ஆறு ஓடச் செய்தனர். இவ்வாறு பள்ளிவாசல்களில் கொலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதன் மூலம் அப்பிரதேசங்களை விட்டு முஸ்லிம்களை துரத்தி விடலாம் என்றும் புலிகள் எதிர்பார்த்தனர். அவர்களுக்கு இராணுவ ரீதியிலும் அரசியல் ரீதியிலும் தோல்வியே கிடைத்தது.

1990 ஒக்டோபர் மாதம் 30ம் திகதி முஸ்லிம்கள் வடக்கிலிருந்து புலிகளால் துடைத்தெறியப்பட்டனர். சரியாக ஐந்து ஆண்டு களின் பின்னர் 1995 ஒக்டோபர் 30 இல் புலிகளால் யாழ்ப்பாண தமிழர்களே துரத்தியடிக்கப்பட்டனர். அன்றிலிருந்து இன்று வரை புலிகள் ஒடுக்கப்பட்டுக் கொண்டே வருகிறார்கள். வெகு விரைவில் புலிகள் இல்லாத சமுதாயம் வடக்கில் மலரும். அப்போது தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர் அனைவரும் ஒன்றுமையாக வாழ்வார்கள்.

1990 இல் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் இக்கிரிக்கொல்லாவை, மதவாச்சி, கோழிபந்தாவ, அனுராதபுரம், நேகம, கலாவெவ, நொச்சியாகம ஆகிய பகுதிகளில் அகதி முகாம்களில் வாழ்ந்தனர். பின்னர் மொழிப் பிரச்சினை காரணமாக சிலர் இவ்விடங்களை விட்டு புத்தளம், பலாவி, நுரைச்சோலை, கற்பிட்டி, மதுரங்குளி, சிலாபம் பலகைத்துறை பெரிய முல்லை, கொழும்பு, மாபோல, தெஹிவளை, பாணந்துறை, பேறுவலை, தர்ஹாநகர் போன்ற இடங்களில் குடியேறி வாழ்க்கின்றனர். எனினும் பெருமளவு யாழ்ப்பாண முஸ்லிம்கள் புத்தளம் அகதி முகாம்களிலும் தில்லையடி ரத்மலியாய போன்ற குடிநீர் வசதி யற்ற பகுதிகளிலும் அல்லலுறுகின்றனர். இவர்கள் அனைவரும் தங்கள் தாயகத்தை நோக்கிய பயணத்திற்காக காத்திருக் கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிற்சேர்க்கை I
# பகுதி I

## அடிக்குறிப்புகள்

| இல. | நூற்பெயர் | பக்கம் |
|---|---|---|
| 1. | இஸ்லாமிய கலைக் களஞ்சியம் | |
| 2. | Ancient Jaffna | 200 |
| 3. | யாழ்ப்பாண வைபவ விமரிசனம் | 85 |
| | Ancient Jaffna | 211 |
| 4. | முஸ்லிம்களின் தற்காலநிலை | 65 |
| 5. | மறுமலர்ச்சித் தந்தை | 2 |
| 6. | யாழ்ப்பாண பூர்வீக வைபவம் | 5 |
| | யாழ்ப்பாண வைபவ விமரிசனம் | 4-5 |
| | வையா பாடல் | 21-22 |
| | வையா பாடல் | 42 |
| | யாழ்ப்பாண வைபவமாலை | 9 |
| 7. | யா. வை. வி. | 47 |
| | வையா பாடல் | 42 |
| 8. | யாழ்ப்பாணச் சரித்திரம் | 56 |
| | யா. வை. வி. | 81 |
| | யா. வை. மா. | 60 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 9. | யா. ச. | 86 |
| 10. | யா. ச. | 53 |
| | யா. வை. கௌமுதி | 56 |
| 11. | யா. வை. வி. | |
| 12. | யா. வை. வி. | 138 |
| 13. | யா. வை. வி. | 136 |
| 14. | யா. ச. | 64 |
| | யா. வை. கௌ | 56 |
| | Notes on Jaffna | 91 |
| 15. | Notes on Jaffna | 137-138 |
| 16. | ஒல்லாந்தர் காலச் சமயநிலை | |
| | க. ச. அருமைநாயகம் (சிந்தனை) | |
| 17. | யா. ச. | 37 |
| 18. | யாழ்ப்பாண வைபவமாலை | 91 |
| | யாழ்ப்பாண சரித்திரம் | 86 |
| | யாழ்ப்பாண பூர்வீக வைபவம் | 32 |
| | A Hand Book of the Jaffna Peninsula | 17 |
| 19. | யாழ்ப்பாணச் சரித்திரம் | 94 |
| | யாழ்ப்பாண பூர்வீக வைபவம் | 39 |
| 20. | Notes on Jaffna | 289 |
| 21. | Notes on Jaffna | 272 |
| 22. | Notes on Jaffna | 318 |
| 23. | Notes on Jaffna | 338 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில குறிப்புகள்

1. **Book:- Notes on Jaffna.**
   **By John Hentry Martin 1922 page 138**
   The Moors at the time had a Mosque close to the landing place on the lake. And this site which lay within the Fort of to day. the father ( Fracy pedro de Bentacor) succeeded by a stratagem in obtaining for his purpose. The Hindu Raja of Tanjore gave him generous assistance and, on 8th May 1614 the foundation of the new church of our Lady of victory was laid.

2. **Book:- The Kingdom of Jaffna Patam 1645**
   **By P. E. Piers 1944 page 33**
   The Alfandiga (Collector of Customs) அலுப்பாந்தி a word of arabic origin.

3. **Book:- Notes on Jaffna. Page 318**
   On the 10th November 1918. A riot occurred in Jaffna resulting in the looting of several cloth boutiques. The Police promptly quelled the roit. Eight rioters were injured one fatally. These traders were partly Tamil and partly Moor men.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. Book:- A Hand book to Jaffna Penimsula by S. Karthigesu 1905 page 17.**

**The Moor**

Mr. P. Arunachalam write according to its strict interepretation the term moor which means an inbabitant of Morocco is misleading when to the people of Ceylon who go by that name and who do not lay claim to an african origin.

In Ceylon the term in a relic of the rule of the portuguese who gave to the Ceylon Mohammedians the name of his co-religonist of Morocco and is used to desegnate all Mohammedians father than Malays bron in Ceylon or southeren India and speaking Tamil is their mother tongue.

The Moors of Jaffna are the descendants of one santha saibo and his friends who came from Kaialpatnam (East of cape commarin) and settled at Mirusuvil South for purposes of trade. They called South Mirusuril usan. From there they came out to Nalloor where they were driven by the Tamil by throwing pigs in the wells as it was considered that the proximity of Islam to the sacred shring was improper. The Moors sold their land and went to Navanthurai now called. They are a race of shop keeper and petty traders while a hand full of their leave settled down as agriculturen.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. நூல்:- யாழ்ப்பாணச் சரித்திரம் பக். 56, 57**
**ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை 1933.**

துருக்கர் சிலர் ஒருபடையாகத் திரண்டு காதர் வாலா என்பவனைத் தலைவனாகக் கொண்டு மரக்கலங்களிலேறி சலாபத்தை அடைந்தார்கள். அவர்களைத் தர்மபராக்கிரம பாகு படை எதிர்த்துக் காதர் வாலாவைக் கொன்று வீரரைச் சிறை செய்து கோட்டைக் காட்டுக்குக் கொண்டேகிற்று. 1517 இல் துருக்கர் மீண்டுமொரு படையோடு பறங்கிகள் கட்டிய கோட்டையை வளைத்தனர். அப்படையைப் பறங்கிகள் முரிந்தோடத் தாக்கினர். 1520 இல் மீண்டும் துருக்கர் ஒரு படையோடு வந்து அக்கோட்டையை வளைத்தனர். அப்போரிலும் தோல்வியுற்றனர்.

**6. நூல்:- யாழ்ப்பாணச் சரித்திரம் பக். 86, 87**
**ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை 1933.**

இக் காலத்தில் காயல் பட்டினத்திலிருந்து சில சோனகர் வந்து மிருசுவில் என்னுமிடத்திற் குடியேறினார்கள். அவர்கள் குடிகொண்டவிடம் உசன் என்னும் சோனகத் தலைவனுக்கு உரியதாகினமையால் உசன் என வழங்குகின்றது. அச் சோனகர்கள் அங்கு நின்று மகன்று சோனகன் புலவில் சிறிது காலம் வைகி அதுவும் வாய்ப்பாகாமையால் இப்போது நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிருக்குமிடத்துக்கு மேல் பாகத்திலே குடிகொண்டார்கள். அங்கே ஒரு பள்ளிவாயிலும் கட்டினார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது முன் இடிபட்ட கந்தசுவாமி கோயிலை மீளவும் கட்டுதற்கு தமிழர் முயன்று சோனகரை அவ்விடத்தினின்றும் நீக்கித் தருமாறு ஒல்லாந்த தேசாதிபதிக்கு விண்ணப்பஞ் செய்தார்கள். ஒல்லாந்த தேசாதிபதி அதற்கனுகூலஞ் செய்வதாகத் கூறியும் செய்யாது காலம் போக்கினான். அது கண்டு தமிழர் சோனகரை அவ்விடத்தை விடும்படி கேட்டும் இரந்தும் பார்த்தார்கள். முடிவில் அந்நிலத்துக்குப் பெரு விலை தருவதாயுங் கேட்டார்கள். சோனகர் அதற்கும் இசையாமை கண்டு தமிழர் ஒரு பன்றியைக் கொன்று அவர்களுக்கெல்லாம் பொதுவாயிருந்த கிணற்றிலிட்டார்கள். அது கண்டு சோனகர் தங்கள் நிலத்தை விற்று விட்டு நாவாந்துறைக்குக் கிழக்கேயுள்ள இடத்தை வாங்கிக் கொண்டு அங்கே குடியேறினார்கள். அது சோனகதெருவென வழங்குகின்றது. சோனகர்கள் அக்கால முதல் பெரும்பாலும் வியாபாரத்தையே தமது தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள்.

அவர்களுள்ளே முயற்சியின்றி இருப்பவர்களைக் காண்பதரிது. அவர்கள் சமயாபிமானமும் ஒற்றுமையும் பெரிதும் உடையவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. நூல்:- யாழ்ப்பாண வைபமாலை
- மயில்வாகனப் புலவர் பக். 60
பதிப்பு நா. பொன்னையா,
திருமகள் அழுத்தகம் 1949

அக் காலத்தில் சந்தச்சாய்வு என்பவனால் முகம்மது மார்க்கத் தவர்களாக்கப்பட்ட தமிழ் வமிசத்தவர்களான சில சோனகக் குடிகள் காயல் பட்டணம் முதலிய இடங்களிலிருந்து வந்து தென்மிருசுவில் என்னும் ஊரிலே குடியிருந்து சாவகச்சேரி, கொடிகாமம், எழுதுமட்டுவாள், முகாவில் என்னுமிடங்களில் உள்ள சந்தைகளில் வியாபாரம் பண்ணிக்கொண்டு தாங்களிருந்த தென் மிருசுவிலுக்கு உசன் என்று பெயருமிட்டார்கள். சில காலம் அவ்விடத்திலிருந்து அவ்விடம் வசதிப்படாததினால் அந்தச் சோனகக் குடிகள் அவ்விடத்தைவிட்டு நல்லூரில் கந்தசுவாமிகோவிலிருந்த இடத்திலே வந்து குடியிருந்தார்கள். சோனகர் அதிலே குடியிருந்தாற் கந்தசுவாமி கோயில் கட்ட வருங்கால் தடையாயிருக்கும் என்று நினைத்து தமிழர் கூடி பார்த்தும் கூடாமற் போயிற்று. அந்த நிலங்களுக்கு அதிக விலை தருவோம் எங்களுக்கு விற்று விடுங்கள் என்றும் கேட்டுப் பார்த்தார்கள். சோனகர்கள் அதற்கும் சம்மதிக்கவில்லை. யாதொரு இணக்கத்துக்கும் சோனகர் சம்மதியாதே போனதனால் அந்தத் தமிழர் பன்றியிறைச்சியைக் கொண்டு போய் அவர்கள் தண்ணீர் குடிக்கும் கிணறுகளில் போடுவித்தார்கள். பன்றி யிறைச்சியைக் கண்டவுடனே சோனகர் அழுது புலம்பிப் பட்டினியாய்க் கிடந்து ஆற்றாமல் ஈற்றிலே தமிழருடன் தங்கள் பெருநாட்களில் தாங்கள் வந்து தங்கள் சமய வழிபாடு செய்யத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடை பண்ணாதிருப்பதற்கு ஒரு உடன்படிக்கை எழுதிவித்துக் கொண்டு கிடைத்த விலையையும் வாங்கிக் கொண்டுபோய் நாவாந்துறைக்குக் கிழக்குப் பக்கமாகக் குடியேறினார்கள்.

**8. நூல்:- யாழ்ப்பாணச் சரித்திரம் பக். 134**

புதியவர் புகுந்தால் மீளுதற்கரியதாய்ச் சந்துப் பின்னலாய்க் குடிநெருங்கிக் கிடந்த சோனக தெருவை இவர் (துவைனம் 1869) சதுரங்க மனைபோலக் குறுக்கு நெடுக்குமாக அநேக தெரு வீதிகளை வகுத்து விளக்கமாக்கினார்.

# உசாத்துணை


1. இஸ்லாமிய கலைக்களஞ்சியம் - அப்துற்றஹீம்
   யுனிவர்சல் பப்ளிசர்ஸ் சென்னை
2. முஸ்லிம்களின் தற்கால நிலைமை - வ. மி. சம்சுத்தீன்
   சாஹிப். 1929 சென்னை கார்டியன் அச்சகம்
3. மறுமலர்ச்சித் தந்தை - ஏ இக்பால்
   1971 விண்மதி வெளியீடு நாவலப்பிட்டி
4. வையா பாடல் - ஜே. என். அருட்பிரகாசம் 1921
5. யாழ்ப்பாண வைபவமாலை - மயில்வாகனப்புலவர்
   நா. பொன்னையா பதிப்பு 1949
   திருமகள் அழுத்தகம் சுன்னாகம்.
6. யாழ்ப்பாணச் சரித்திரம் - ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை
   1933 நாவலர் அச்சகம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. யாழ்ப்பாண வைபவ விமரிசனம் - சுவாமி ஞானப்பிரகாசர்
1928 அச்சுவேலி ஞானப்பிரகாசர் யந்திரசாலை.
8. யாழப்பாண வைபவக் கௌமுதி கே. வேலுப்பிள்ளை 1918
9. யாழ்ப்பாண பூர்வீக வைபவம் - கா. மதியாபரணம்
1927 நாவலர் அச்சகம்
10. Ancient Jaffna Mudallyar C. Rasanayakam 1926
11. A Hand book of the Jaffna Peninsula, S. Karthigesu American
Ceylon Misson Press Tellippalai 1903
12. The Kingdomn of Jaffna Pattm P. E. Pieris
1944 Daily News Press
13. Notes on Jaffna John Hentry Martin
1922 American Ceylon Mission Press Tellippalai
14. கைலாசமாலை - த. கைலாசபிள்ளை 1906
15. இலங்கையில் இஸ்லாம் - ஏ. எம். ஏ. அஸீஸ்
கலைவாணி புத்தக நிலையம்
16. இஸ்லாமியத் தென்றல் - ம. மு. உவைஸ்
17. இலங்கைச் சோனகர் இனவரலாறு
ஐ. எல். எம். அப்துல் அஸீஸ்
18. Glimpses from the past of the Moors of Sri Lanka.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டு அம்சங்கள்

# பகுதி II

## மொழி

உலகின் பல பாகங்களிலுமிருந்து வந்தவர்களை ஒன்றிணைத்த சக்தியாக இஸ்லாம் இருந்திருக்கிறது. தமிழ் மொழி இலகுவாகப் பேசக் கற்றுக் கொள்ளக்கூடிய மொழியாக இருந்ததினால் இங்கு குடியேறிய முஸ்லிம்கள் அனைவருமே தமிழை அழகாகப் பேசினர். அக்காலத்தில் இன்று போலப் கல்விச்சாலைகளோ பாடத்திட்டங்களோ இல்லை. யாராவது ஒரு ஆலிம் தன் வீட்டிலிருந்து அரபு மொழி, சமய நடைமுறைகள் என்பவற்றைக் கற்றுக் கொடுப்பார். எனவே அரபு மொழியையும் அதன் எழுத்துக்களையும் நன்கு கற்றவர்கள் அரபு மொழியில் தாமறிந்த தமிழ் வாக்கியங்களை எழுத ஆரம்பித்தனர். இதனால் அரபுத் தமிழ் பிறந்தது அரபுத் தமிழில் மார்க்க நூல்கள் மலிந்தன. பல இலக்கியங்கள் அறபுத் தமிழில் எழுந்தன. இவ்வாறு இவை அறபுத் தமிழில் எழுந்தாலும் தமிழிலக்கியங்களில் பேணப்படுகின்ற யாப்புகள் ஒழுங்காகப் பின்பற்றப்பட்டன. காணிகளின் உறுதிகள் கூட அறபுத் தமிழில் எழுதப்பட்டன. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நொத்தாரிசு இனாயத்துல்லா என்பவர் இவ்வாறு அரபுத் தமிழில் காணி உறுதிகளை எழுதியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையாளக் கரையை அண்டியே காயல்பட்டினம், தேவி பட்டினம் என்ற பகுதிகள் அமைந்துள்ளன. இந்த மூன்று பகுதிகளிலுமிருந்தும் வந்த நல்லடியார்கள் சமய போதனைகள் புரிந்தனர். ஹதீஸ் மன்றுகளை அமைத்து மக்களை நல்வழிப் படுத்தினர். சமய வழிகாட்டுதலில் காயல் பட்டினத்தை விட மலையாளமே அதிக கவனமெடுத்தது. பொதுவாக யாழ்ப் பாணத் தமிழையே மலையாளம் கலந்த தமிழென்பர் தென்னிந்தியத் தமிழகத்தார். சென்னை நகரத்துக்கு யாழ்ப் பாணத்தார் சென்றால் "நீங்கள் மலையாளமா?" என்று வினவுகிற அளவுக்குத் தமிழ் உச்சரிப்பு அமைந்துள்ளது. முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் முஸ்லிம்களின் மதபோதகர்கள் பெரும்பாலும் மலையாளிகள் ஆதலினால் அவர்களின் உச்சரிப்பு பெரிதும் கலந்துள்ளமை வியப்புக்குரியதல்ல.

## யாழ்ப்பாண முஸ்லிம்களின் பேச்சுத் தமிழில் ஒலிமாற்றங்களும் சிறப்பு வழக்குகளும்

ஈழத்து முஸ்லிம்களின் பேச்சுத் தமிழில் பிரதேசங்களுக்கிடை யிலான வேறுபாடுகளும் சூழலின் செல்வாக்கும் அவதானிக்கப் பட்டுள்ளன. ஈழத்து முஸ்லிம்களின் பேச்சு வழக்கில் சிறப்பாக தெற்கு மேற்கு மாகாணங்களில் அதிகமாக ஒலி வேறுபாடு களும், சிங்கள மொழியின் செல்வாக்கும் மிகுந்துள்ளது போலவே யாழ்ப்பாண மட்டக்களப்புப் பிரதேசங்களின் பேச்சு மொழியிலும் பல வேறுபாடுகள் மிகுந்துள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பாக யாழ்ப்பாண முஸ்லிம்களின் மொழி அவர்களைச் சூழ்ந்து வாழ்கின்ற யாழ்ப்பாணத் தமிழ்மக்களின் மொழியி லிருந்தும் பல வகையிலும் வேறுபட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்கள் தனித்து ஒரு தொகுதியாக வாழ்வதனாலும் அவர்கள் ஏனைய தமிழ் மக்களுடன் அதிக தொடர்புகளின்றி இருப்பதனாலும் இத்தகைய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அடுத்து முஸ்லிம்களின் மொழி வழக்கில் சமயமும் அதிக செல்வாக்கு செலுத்தியுள்ளது. அரபு மொழியிலுள்ள எழுத்துக் களின் ஆட்சி அரபுத்தமிழ் நூல்களில் கையாளப்பட்டு வருகின்ற சொற்கள் என்பனவும் கூட அவர்களின் மொழியாட்சியை நன்கு பாதித்துள்ளன. பெரும்பாலான சமய போதகர்கள் தென் இந்தியாவின் கேரளப் பகுதியிலிருந்தோ காயல் பட்டினம், தேவி பட்டினம், அதிராம் பட்டினம் போன்ற பகுதிகளில் இருந்தோ வந்து போதனைகள் புரிந்ததனால் அவர்களிடமிருந்து பெற்ற சொல்லாட்சியும் ஒலிமாற்றமும் கூட யாழ்ப்பாண முஸ்லிம்களின் பேச்சு வழக்கில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

தெற்கின் பிரதான மொழியான சிங்களச் செல்வாக்கு யாழ் முஸ்லிம்களின் பேச்சுவழக்கில் மிக அருகியே காணப்படுகிறது. தமிழர் பேச்சு வழக்கினில் பொதுவாக அவதானிக்கப்பட்ட ஒலி மாற்றங்கள் யாழ்ப்பாண முஸ்லிம்கள் வழக்கிலும் காணப்படு கின்றன.

அவையாவன:

1. சொற்களின் இடையில் வருகின்ற வல்லின றகரம் பகரமாக மாறுகின்றது.

   **உ-ம்:** நாற்பது - நாப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சொற்களின் இடையில் வருகின்ற ற்று என்பது த்து என்று மாறுகிறது.

**உ-ம்:** காற்று - காத்து

நேற்று - நேத்து

சோற்று - சோத்து

மற்ற - மத்த

3. சொற்களின் இடையில் வருகின்ற த், ச் என்று மாறுகின்றது.

**உ-ம்:** அடைத்தான் - அடைச்சான்

எரித்தான் - எரிச்சான்

படித்தான் - படிச்சான்

குடித்தான் - குடிச்சான்

இத்தகைய மாற்றங்கள் தனித்து வருவதை விட துணை வினைகளுடன் அமையும்போதே பெரிதும் ஏற்படுகின்றன.

**உ-ம்:** அடைத்து வைத்தான் - அடைச்சு வைச்சான்

படித்துக் கொண்டான் - படிச்சுக் கொண்டான்

அடித்துக் கொன்றான் - அடிச்சுக் கொன்றான்

சொல்லின முடிவில் லகர ளகரங்களின் முற்றுக்கள் உகரத் தைச் சேர்த்துக் கொள்கின்றன.

கல் - கல்லு

பல் - பல்லு

முள் - முள்ளு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இடையின ரகரத்தைத் தொடர்ந்து வல்லெழுத்துக்கள் வரும் போது முன்னே வரும் இடையின ரகரம் மறைய மறைந்த நிலையிலேயே ஒலிக்கப்படுகிறது.

சர்க்கரை - சக்கரை
வளர்ப்பு - வளப்பு
பார்த்து - பாத்து
சேர்த்தான் - சேத்தான்

6. மொழி முதலில் வருகிற ஐகாரத்தைத் தொடர்ந்து மெல்லின மகர ஒற்று வரும்போது ஐகாரம் அகரமாகிறது.

ஐம்பது - அம்பது

இவை யாவும் பொதுவான தன்மையாக உள்ளன.

யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் பேசும் வழக்கிலிருந்தும் முஸ்லிம்களின் தமிழ் வேறுபட்டு ஒலிக்கிறது.

யாழ்ப்பாணத்தார் வழக்கில் எழுவாய் முதலிலும் அதனைத் தொடர்ந்து இறுதியிலும் ஒலிக்கப்படும் வழக்கு உண்டு. இவ் வழக்கு யாழ்ப்பாணத்து முஸ்லிம்களிடத்து காணப்படுவதில்லை.

| **யாழ்ப்பாணத் தமிழர் வழக்கு** | | **முஸ்லிம்களின் வழக்கு** |
|---|---|---|
| கண்டநான் | - | கண்டேன் |
| வந்தநீயே | - | வந்தாயா, வந்தியா |
| கேட்டவர் | - | கேட்டார் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோல யாழ்ப்பாணத் தமிழர் வழக்கில் இங்கு பாரடா என்பது இங்கேர்ரா, இங்கேற்றா என்று ஒலிக்க முஸ்லிம்கள் தம் வழக்கில் இங்கப் பாரடா என்று ஒலிப்பர்.

உன் அம்மா என்பது கொம்மா என்றும் உன் அப்பா என்பது கொப்பா என்றும் உன் அக்கா என்பது கொக்கா என்றும் யாழ்ப்பாணத் தமிழர் ஒலிப்பர்.

இதனை முஸ்லிம்கள் முறையே உங்க உம்மா, உங்க வாப்பா, உங்க ராத்தா எனவும் ஒலிப்பர். உம்முன் என்பது அம்மாவை யும், அபுன் என்பது அப்பாவையும் குறிக்கும் அரபுச் சொற் களாகும். உறவு முறையைக் குறிக்கும் சொற்களில் அரபு மொழி கலந்த தமிழின் செல்வாக்கை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

தொலைவுக்கா என்ற பதத்தை யாழ்ப்பாணத் தமிழர் துலைக்கே என்று ஒலிக்க முஸ்லிம்கள் தொலைக்கா எனவே வினவுவர். யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் வழக்கில் உகரச் சுட்டு பெரும்பாலும் அடிக்கடி பயின்று வருகிறது.

உது, உவர், உப்பிடி, உவள், உவன், உங்கதான், உங்கினைக்க என்பது போன்ற சொற்கள் முஸ்லிம்கள் வழக்கில் பயன்படுத்தப்படுவதேயில்லை.

புகையிலை என்பதனை யாழ்ப்பாணத்தார் பொயிலை என ஒலிக்க முஸ்லிம்களோ போயிலை என ஒலிக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணைக் குறிக்கும் அன்னை என்ற சொல் யாழ்ப்பாணத்தார் வழக்கில் அணை அல்லது எணை என்றே ஒலிக்கப்படுகிறது.

சொல்லணை, பாரணை, கேளணை என்றும், அன்னை என்ற பதம் விளிக்கப்படும்போது எணோய் எனவும் வரும். இவ்வாறு வழங்குவதும் யாழ்ப்பாண முஸ்லிம்கள் வழக்கில் இல்லை. இதேபோல ஆணையிடும்போது யாழ்ப்பாணத் தமிழர் பயன் படுத்தும் முறையும் முஸ்லிம்களிடமில்லை. ஆணையிடும் வழக்கமும் இல்லை.

உன்மேல் ஆணை, கடவுள் மேலாணை, தாய் மேலாணை என்ற பதங்கள் முறையே உன்னாணை, கடவுளாணை, கொம்மாவாணை என்று யாழ்ப்பாணத் தமிழர் தம் பேச்சு வழக்கில் வருகிறது. தமிழ் மக்களுடன் நன்கு ஊடாடிப் பழகுகிற சில முஸ்லிம்கள் மட்டும் உன்னான, என்னான என்று வழங்குவர். இத்தகைய வழக்கு மிகவும் குறைவு.

கடவுளறிய, முருகனறிய என்று யாழ்ப்பாணத்தார் சத்தியஞ் செய்யும்போது பயன்படுத்தப்படுவதனையொட்டி முஸ்லிம்களும் அல்லா அறிய என்பதனை அல்லாறிய எனவும் வழங்குவர்.

இருந்தார்கள், வந்தார்கள் என்ற பதங்களை அதாவது உயர் திணைப் பலர்பால் விகுதியாகப் பயின்று வரும் ஆர் என்ற விகுதியும், கள் என்ற விகுதியும் மறைய எஞ்சியுள்ள வினையடி யும் காலங்காட்டும் இடைநிலையும் சேர்ந்துள்ள நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை என்ற விகுதி பெற்று யாழ்ப்பாணத் தமிழர் பேச்சு வழக்கில் ஒலிக்கும்.

| | | |
|---|---|---|
| வந்தார்கள் | - | வந்தவை |
| இருந்தார்கள் | - | இருந்தவை |

இவ்வாறு இறந்தகாலம் அமைவதுபோல நிகழ்கால, எதிர்கால வினைமுற்றுகள் இனம் என்ற விகுதியைப் பெற்று ஒலிக்கும்.

| | | |
|---|---|---|
| வருவார்கள் | - | வருவினம் |
| படிப்பார்கள் | - | படிப்பினம் |
| வருகிறார்கள் | - | வருகினம் |
| படிக்கிறார்கள் | - | படிக்கினம் |

என்று ஒலிக்கப்படுகிறது. இத்தகைய அவை இளம் என்ற பதங்களை வினைமுற்றுக்களின் இறுதியில் சேர்த்து ஒலிக்கும் மரபும் யாழ்ப்பாண முஸ்லிம்கள் வழக்கிலில்லை. இதுபோல உயர்திணைப் பெயர்களைச் சுட்டும் பெயர்களிலும் ஏற்படும் மாற்றங்கள் முஸ்லிம்கள் வழக்கில் இல்லை.

அவர்கள் > அவை > அவையள்

அவன் > அவள் > அது

இவ்வாறு உயர்திணைச் சுட்டுக்கள், அ்.றிணைச் சுட்டு விகுதி களைப் பெற்றொலிக்கும் பண்புகூட யாழ் முஸ்லிம்கள் வழக்கில் இல்லை. இதுபோல தமிழ் மக்களுக்கே உரிய சில சிறப்புச் சொற்களை பயன்படுத்துகிற சில தன்மையும் முஸ்லிம்களிடம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுதல் - பறைதல்

எனவே இதுகாறும் வழங்கியவற்றால் யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் வழக்கிலிருந்தும், யாழ்ப்பாண முஸ்லிம்களின் வழக்கு வேறுபட்டுள்ளதைக் கண்டோம்.

3. இனி யாழ்ப்பாண முஸ்லிம்கள் மத்தியில் சிறப்பாக ஏற்படுகிற ஒலி மாற்றங்களையும் முஸ்லிம்களிடம் மட்டுமே பயின்று வரும் சிறப்புச் சொற்களையும் பார்ப்போம்.

மொழியில் முன்னே வரும் உயிரெழுத்துக்கள் அடையும் மாற்றங்களும் உதாரணங்களும் வருமாறு:

| | |
|---|---|
| அ-இ | கடா - கிடா - கிடாய் |
| | கடாரம் - கிடாரம் |
| அ-எ | நகம் - நெகம் |
| ஆ-ஏ | வாங்கு - வேங்கு - வேண்டு |
| இ-எ | இறைச்சி - எறைச்சி |
| | கிடந்தான் - கெடந்தான் |
| | நிலைமை - நெலைமை - நெலமை |
| இ-உ | பிடி - புடி |
| | பிட்டு - புட்டு |
| | திறப்பு - துறப்பு |
| இ-ஒ | மிளகாய் - மொளகாய் |
| உ-எ | புரட்டு - பெரட்டு |
| | புரளி - பெரளி |
| உ-ஒ | உங்கள் - ஒங்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ-இ செலவு - சிலவு

எ-ஏ பெய் - பேய் (பேய்தது)

எ-ஒ பெண் - பொண்

ஏ-ஆ சேவல் - சாவல்

ஒ-உ கொடு - குடு

பொறாமை - புறாமை

தொடக்கம் - துடக்கம் - துவக்கம்

1-2 மொழியின் இடையில் வருகின்ற உயிர் எழுத்துக்கள் சிலவும் இதேபோன்ற மாற்றங்களை அடைகின்றன.

ஐ-அ இறைச்சி - இறச்சி

ஓ-அ வருவோம் - வருவம்

1-3 மொழி இறுதியில் உயிர் எழுத்துக்களின் மாற்றம் அவதானிக்கப்பட்டுள்ளது.

ஏ-ஐ அங்கே - எங்கை

ஏ-அ எங்கே - எங்க

ஐ-அ பச்சை - பச்ச

2 மெய்நிலைகளைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாண முஸ்லிம் களின் வழக்கில் மொழி முதலில் மாற்றங்கள் எதுவும் நிகழ்வ தில்லை. பெரும்பாலும் இடையிலேயே ஏற்படுகிறது.

க்-வ் நோகுது - நோவுது

ட்-ப் கேட்பேன் - கேப்பேன்

த்-ச் வைத்தேன் - வைச்சேன்

ப்-வ் கோபித்தான் - கோவித்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ற்-ட் கழற்று - கழட்டு

ண்-ம் எண்பத்தைந்து - எம்பத்தைந்து

ஆண்பிள்ளை - ஆம்பிள்ளை

ன்-ண் என்று - எண்டு

ந்-ஞ் ஐந்து - ஐஞ்சு

ள்-வ் வந்தாளா - வந்தாவா

4. யாழ்ப்பாண முஸ்லிம்களின் பேச்சு வழக்கில் ஈறு கெடுதல் அல்லது ஈறு திரிதல் என்பனவும் நிகழ்கின்றன.

வந்தாய் அல்லாவா - வந்தாயல்லவா - வந்தியல்லா என்றும்

முடியாமல் - முடியாம

கேட்பார்கள் - கேட்பாக

அவள் - அவ

வருவார் - வருவாக

விடவில்லை - விடயில்லை - விடயில

பெண்டிர் - பெண்டுகள் - பெண்டுக

போனால் - போனா

5. நிகழ்காலத் தெரிநிலை வினைமுற்றின் பேச்சு வழக்கின் காலம் காட்டும் இடைநிலை குறுகி ஒலிக்கிறது.

வருகிறேன் - வாறேன்

போகிறேன் - போறேன்

தருகிறேன் - தாறேன்

போகிறது - போகுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. தம்மையிடத்தில் நாம் என்பது நாம என்றும், நமது என்பது நம்மட என்றும் நம்மை என்பது நம்மளை என்றும் யாழ் முஸ்லிம்களின் வழக்கில் மாறுபடுகிறது. இதுபோலவே வருக என்பது வாரும், தருக என்பது தாரும் என்றும் ஒலிக்கப்படுகிறது.

7. சில ஏவல் வினைகள் முக்கியமாக னகர, ணகர ஈற்றை யுடையவை உகர விகுதி பெற்று ஒலிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| தின் | - | தின்னு |
| பண் | - | பண்ணு |

தின் என்னும் வினையடியாகப் பிறந்த பிற வினைச்சொல் தின்னப் பண்ணு என்ற கருத்தில் திங்கப்பண்ணு என்று ஒலிக்கப்படுகிறது.

8. பொதுவாகப் பிறவினைகள் ஆக்கப்படும்போது பண்ணு என்பதே அதிகம் பயின்று வருகிறது. செய் என்ற பதமும் வருவது உண்டு.

| | | | | |
|---|---|---|---|---|
| செய்வி | - | செய்யப்பண்ணு | | |
| படிப்பி | - | படிக்கப்பண்ணு | - | படிக்கச்செய் |
| போக்கு | - | போகப்பண்ணு | - | போகச்செய் |
| பாச்சு | - | பாயப்பண்ணு | - | பாயச்செய் |
| ஓட்டு | - | ஓடப்பண்ணு | - | ஓடச்செய் |
| நடத்து | - | நடக்கப்பண்ணு | - | நடக்கச்செய் |
| எழுப்பு | - | எழும்பப்பண்ணு | - | எழும்பச்செய் |
| ஊற்று | - | ஊற்றப்பண்ணு | - | ஊற்றச்செய் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
217108

9. உவமை உருபுகளில் போல என்பதே பெரிதும் பயன்பட்டா லும் சாதாரண பேச்சு வழக்குகளில் "ஆட்டம்" என்ற உவமை உருபு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அவனைப்போல - அவனாட்டம்

நாயைப்போல - நாயாட்டம் - நாய்மாதிரி

10. முஸ்லிம்கள் பேச்சு வழக்கில் ரகரம் லகரமாகவும் தகர மாகவும் மாற்றம் பெறுவதுண்டு. இது சிறுபான்மையே வழங்கப்படும்.

இரத்தம் - ரத்தம் - லத்தம் எனவும் நெத்தம் எனவும் ஒலிக்கப் படுவதுண்டு. பெரும்பாலும் ரத்தம் என்பதுவே வழக்கு.

உரல் - உதல்

விரல் - விதல்

என்றும் சிறுபான்மை ஒலிக்கப்படுவதுண்டு.

2. யாழ்ப்பாண முஸ்லிம்கள் மத்தியில் பிறமொழிச் சொற் களின் கலப்பு அல்லது ஆதிக்கம் ஆகியவற்றை நோக்கும் போது வழிபாடுகளின் போதும் உபதேசங்களின்போதும் பயன்படுத்தப்படுவதன் காரணமாக அரபு மொழியும், ஆட்சியி லிருந்து ஆதிக்கம் செலுத்திய காரணத்தால் ஆங்கிலமொழி யும், பெரும்பாலான மார்க்க உபன்னியாசகர்கள் கேரளப் பகுதியிலிருந்து வந்து உபதேசம் செய்ததனால் மலை யாள மொழியும் செல்வாக்குச் செலுத்தியுள்ள தன்மையை அவதானிக்கலாம். ஆயினும் அவையாவும் தமிழ் ஒலி வடிவம் பெற்றே ஒலிக்கின்றன.

ஜீவித்தல் - ஹயாத்து

மரணம் - மௌத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| உயிர் | - | றூஹு |
| உபதேசம் | - | ஒஸியத்து |
| கொடுமை | - | அதாபு |
| மண்ணறை | - | கபுறு |
| வரிசை | - | சப்பு |

என்பன அரபுப் பதங்களாகும்.

| | | |
|---|---|---|
| REGULATION | - | ரெக்கிளாசு |
| FAMILY | - | பமிலி, பெமிரி |
| STATION | - | டேசன் |
| MACHINE | - | மிசின் |
| WATCH | - | வாழ்ச்சி |
| WIRE | - | பயர் |
| CONDITION | - | கண்டிசன் |
| AGREEMENT | - | இக்கிரிமேந்து |

என்பன ஆங்கிலப் பதங்களாகும்.

| | | |
|---|---|---|
| வியாபாரப்பொருட்கள் | - | கச்சவடம் |
| அவளுடைய | - | அவளுட |
| அவனுடைய | - | அவனுட |
| இரவு | - | ராவு |

என்பன மலையாளப் பதங்களாகும்.

இதே மலையாளப் பதங்கள் அல்லது சொல்லாட்சி காரணமாக ஆறாம் வேற்றுமை உருபேற்ற நிலையில் யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் மட்டுமே ஒலிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சரியான வடிவம் | தமிழ் மக்கள் வழக்கில் | முஸ்லிம் மக்கள் வழக்கில் |
|---|---|---|
| எனது | என்ர | என்னட |
| உனது | உன்ர | உன்னட |
| அவனது | அவன்ர | அவனட |

3. சிறப்புச் சொல்லாட்சிகளைப் பொறுத்தவரையில் யாழ்ப் பாணத் தமிழ் மக்கள் வழக்கிலில்லாத சில நல்ல சொற் களும் செந்தமிழ் வடிவங்களும் கூடத் திரிபடைந்தும் திரிபடையாதும் சில முஸ்லிம் கள் பயன்படுத்துகின்றனர்.

நாற்றம் என்பது யாழ்ப்பாணத் தமிழர் நறுமணம் என்ற கருத்திற் கொள்ளாது இதற்கு எதிரிடையான துர்மணம் என்றே கொள்வர். முஸ்லிம்களிடம் துர்மணம் என்பதனைக் குறிக்க வீச்சம் என்ற செந்தமிழ்ச் சொல் பயன்பாட்டிலுள்ளது. இதேபோல சாறு, ஆணம் என்ற செந்தமிழ்ச் சொற்களும் முஸ்லிம்களால் சரியான முறையிற் பயன்படுத்தப்பட யாழ்ப்பாணத் தமிழ்மக்கள் குழம்பு, சொதி, ரசம் என்ற பதங்களையே பயன்படுத்துவர். இங்கு சொதி, ரசம் என்பன வடமொழியாயிருப்பது நோக்கத்தக்கது.

கருவாட்டுக் குழம்பு > கருவாட்டு ஆணம் என்றும்
மிளகு ரசம் > மிளகு சாறு என்றும்

முஸ்லிம்கள் சரியான சொல்லை பயன்படுத்துகின்றனர்.

எள்ளுப்போல என்பதனை யாழ்ப்பாணத் தமிழர் எப்பன் என்றே ஒலிப்பர். அது முஸ்லிம்களின் வழக்கில் சொற்சுருக்கம் கருதித் திரிபடைந்து இல்லிப்போல என்று ஒலிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சரிக்கை என்ற பதம் தமிழ் மக்களால் பயன்படுத்தப்படுவது குறைவு. இச்சொல் யாழ்ப்பாண முஸ்லிம்கள் வழக்கில் சொற் சுருக்கம் கருதித் திரிபடைந்து அச்சறுக்கை என்று ஒலிக்கப்படுகிறது.

இதேபோன்றே அம்புருவிக் கொண்டு ஓடுகிறான் என்னும் விரைவு பற்றிய செந்தமிழ் வழக்கு முஸ்லிம்களின் பேச்சுத் தமிழில் அம்புறிச்சுக் கொண்டு ஓடுகிறான் என்று ஒலிக்கப்படுகிறது.

அசுமாற்றம் என்ற நல்ல தமிழ்ச்சொல் யாழ்ப்பாணத் தமிழ் மக்களால் சிலமன் என்று ஒலிக்கப்படும்போது முஸ்லிம் மக்களால் அசுமாத்தியம் என்றே ஒலிக்கப்படும். முக்காடு என்னும் சரியான செந்தமிழ் வடிவத்தை மொட்டாக்கு என்று யாழ்ப்பாணத் தமிழர் தவறாக ஒலிக்க முஸ்லிம்களோ எத்தகைய திரிபுமின்றி முக்காடு எனச் சரியாக ஒலிக்கிறார்கள்.

இதேபோலவே பின்வரும் சில சொற்களும் யாழ்ப்பாணத் தமிழ் மக்களால் ஒலிக்கப்படாது. முஸ்லிம்கள் வழக்கில் மட்டுமே காணப்படுகிறது. அவை சரியான செந்தமிழ் வடிவத்திலிருந்து சிறு மாறுதலைப் பெற்று அல்லது பெறாது ஒலிக்கப்படுகின்றது.

| **செந்தமிழ் வடிவம்** | **முஸ்லிம்களின் வழக்கு** |
|---|---|
| சிப்பிலாட்டம் | சிப்பிலியாட்டம் |
| எப்பெயருக்கொத்தவன் | எப்பேருக்கொத்தவன் |
| வீசுதல் | விசுக்குதல் |
| சீர்கேடு | சீத்துவக்கேடு |
| திறன் | திறானி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பேதலித்துப் போதல் | பேதலிச்சுப் போதல் |
| மலைத்துப் போதல் | மலைச்சுப் போதல் |
| மக்கன் | மொக்கன் |
| சக்கட்டை(மடையன்) | சக்கட்டை |
| குறை சொல்லுதல் | நொட்டை சொல்லுதல் |
| ஒன்றுக்கும் உதவாதவன் | வெறுவிலி |

சில வயது முதிர்ந்த முஸ்லிம் பெண்கள் கோபங் கொண்டு திட்டும்போது (வசை கூறும்போது) வாழத் திட்டுவதே மரபாக உள்ளது. முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் ஒருவர் மீது வசை கூறுவது விலக்கப்பட்டுள்ளதால் இந்த நிலை வந்திருக்க லாம்.

நாசமத்துப் போவானே, போக்கழிஞ்சு போவானே என்பவற்றில் இதனைக் காணலாம். நாசமாகப் போகும்படியும், இறந்து விடும்படியும் திட்டுவதாக மனத்தில் எண்ணுகிற போதிலும் வசைவார்த்தை வடிவில் வரும்போது எதிர்க்கருத்துடன் ஒலிக்கப் படுவதைக் காணலாம்.

அண்மைக் காலத்திலேயே வழக்கறிஞர், வழக்குரைஞர் ஆகிய வர்களைக் குறிக்கும் தமிழ்ப் பதமாக சட்டத்தரணி என்ற சொல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இப்பயன்பாடு வருமுன்னே யாழ்ப்பாண முஸ்லிம் வட்டாரத்தில் உள்ள வயது முதிர்ந்த பலர் நியாயவாதிக்கு தரணி என்றே குறிப்பிட்டு வந்துள்ளனர். தரணி என்பதும் சரியான செந்தமிழ்ப் பதமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரபுத் தமிழில் அடிக்கடி பயன்படுத்தப்படும்பல பதங்கள் யாழ்ப்பாண முஸ்லிம்களால் ஒலிக்கப்படுகின்றன. இவையும் யாழ்ப்பாணத் தமிழ் மக்களால் ஒலிக்கப்படுவதில்லை. பெரும் பாலான சமயக் கருத்துக்கள் அரபுத் தமிழில் எழுதப்பட்டிருந்த தனால் அந்த நூற்களே பள்ளிவாசல்களில் போதனைக்கும் உதவின. ஆதலால் இச் சொற்கள் அவர்கள் வழக்கில் வந்தது வியப்பன்று. அவ்வாறு பயன்படுத்தப்படும் சொற்களும் அவற்றின் கருத்துக்களும் வருமாறு:

| | | |
|---|---|---|
| வள்ளிசா | - | பூரணமாக |
| பெர கண்டம் | - | நிம்மதியின்மை |
| சடப்புடம் | - | ஒழுங்கின்மை |
| வங்கிசம் | - | வம்சம் |
| அழிச்சாட்டியம் | - | அலட்சியம் |
| எத்திக்கொண்டான் | - | எய்திக்கொண்டான் |
| அல்லத் தட்டினான் | - | மறுத்துரைத்தான் |
| மறுதலித்தான் | - | விடைபகன்றான் |
| ஏனம் | - | பாத்திரம் |
| பிசகற | - | பிசகு அற, சந்தேகமின்றி |
| ஒளிவு | - | ஒளி |
| உத்தரிப்பு | - | வேதனை |
| அடகாய் | - | ஊறுகாய் (அடைகாய்) |

இதுபோலவே அரபுத் தமிழின் செல்வாக்கின் காரணமாக பெயர்ச் சொற்கள் வினைச்சொற்களாக்கப்படும்போது பட்டான் அல்லது ஆனான் என்பன பயன்படுத்தப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கைசேதப்பட்டான் | - | நஷ்டமடைந்தான் |
| பிரயாணப்பட்டான் | - | பிரயாணம் செய்தான் |
| வெளிப்பட்டான் | - | வெளிவந்தான் |
| தூரமானான் | - | நீங்கினான் |

இறுதியாக சில சொற்கள் முஸ்லிம்களின் வழக்கிலிருந்து இன்று அருகி வந்து முற்றாகவே மறையும் நிலையை அடைந்துள்ளன. இச்சொற்களும் பிற மொழியின் செல்வாக்கால் வந்தவையாகவே இருக்கவேண்டும்.

| | | |
|---|---|---|
| வெந்தயம் | - | உலுவா |
| உருளைக்கிழங்கு | - | அறுத்தாப்புக் கிழங்கு |
| தட்டுவம் | - | தட்டுப் பிளா |

இதுகாறும் விளக்கியவற்றிலிருந்து யாழ்ப்பாண முஸ்லிம்களின் பேச்சுத் தமிழின்மீது செல்வாக்கு செலுத்தியுள்ள சாதனங்களும் அதன் பயனாக ஏற்பட்ட மாற்றங்களும் ஆராயப்பட்டன. இத்தகைய மாற்றங்கள் யாவும் ஏன் நிகழ்கின்றன என்பதனையும் அம் மாற்றங்களின் தன்மை பற்றியும் தெளிவாக மொழியிய லாளர் ஒருவராலேயே ஆராயமுடியும். அத்தகைய ஆய்வு ஒன்றினை இத் தகவல்கள் வேண்டியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியப் பங்களிப்புகள்

தமிழ் மொழியைக் காலத்துக்குக் காலம் பல்வேறு சமயங்கள் வளம்படுத்தியுள்ளன. சமணமும் பௌத்தமும் சைவமும் வைணவமும், கிறீஸ்தவமும் போல இஸ்லாமும் தனது பங்களிப்பினைச் செய்துள்ளது. பண்டை இலக்கிய மரபை மட்டும் பேணி நில்லாது பின்னைப் புதுமைக்கும் வழிகாட்டியாய் பாரதியின் ''மேனாட்டு நல்லறிஞர்கள் சாத்திரங்கள் நம்மொழியில் பெயர்த்தல் வேண்டும்'' என்ற குரலுக்கு முன்பே அத்தகைய பணியில் இஸ்லாமிய இலக்கிய கர்த்தாக்கள் ஈடுபட்டு அரும்பணியாற்றியுள்ளனர். தமிழுலகம் செய்த அதிர்ஷ்டக் குறைவினால் அத்தனை நூல்களும் ஒட்டு மொத்தமாக நம் கரங்களுக்குக் கிடைக்கவில்லை. கிடைத்துள்ள சில பண்டைப் பனுவல்கள், அவர் தம் திறமையை, அவர் நம் தாய்மொழியாம் தமிழுக்கு ஆற்றியுள்ள தொண்டினை அறிய நமக்கு உதவுகின்றன.

இஸ்லாம் எப்படிக் குறிப்பிட்ட நாட்டவருக்கு அல்லது இனத்தவருக்கு என்றில்லாது உலகளாவிய கோட்பாடுகளை கொண்டுள்ளதோ அதுபோலவே இஸ்லாத்தைப் பின்பற்றும் இஸ்லாமியரும் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று மட்டுமில்லாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த மொழியைப் பின்பற்றினார்களோ அம் மொழியில் இறவாத புகழுடைய பல இலக்கியங்களைப் படைத்து அளித்துள்ளார்கள். உருது, பாரசீகம், அரபு, துருக்கி ஆகிய மொழிகள் போல தமிழும் அவர்களால் வளம்பெற்றது. ஈழத்தில் முஸ்லிம்கள் வாழ்வு கி. பி. எட்டாம் நூற்றாண்டில் தொடங்குகிறது என்பர் வரலாற்று ஆய்வாளர். இன்று நம் ஆய்வுக்கு கிட்டுகின்ற இலக்கியங்கள் எதற்கும் இரண்டாவதாக ஆகிவிடாது உயர்ந்து நிற்கின்ற தன்மையினாலே இந்த இலக்கியங்களுக்கு முன்பும் பல இலக்கியங்கள் தோன்றியிருக்க வேண்டும் என்பது புலனா கிறது. முன்னுள்ளோரால் அவை பேணிப் பாதுகாக்காமல் விடப்பட்டு இன்று நம் கைக்கெட்டாது போயிருக்கலாம். கைக்கு எட்டுவனவற்றிலிருந்து நாம் ஆய்வை மேற்கொள்ளுகையில் ஈழத்து இஸ்லாமிய இலக்கிய ஆக்கம் வெளியீடு என்பவற்றில் யாழ்ப்பாண முஸ்லிம்கள் சிலரே முன்னோடியாக இருந்திருக் கின்றனர் என்பது புலனாகும்.

ஆரம்பகால யாழ்ப்பாண முஸ்லிம்கள் தமது பங்களிப்பை முக்கியமாகச் செய்யுள், வசனநடை, மற்றும் வினாவிடை இலக் கியங்களிலேயே செய்துள்ளனர். அவர்களில் சிலர் தமிழ்ப் புலமையுடன் இசைப் புலமையும் பெற்றிருந்தார்கள். ஓரிருவர் அரபு மொழியிலும் பாமாலைகள் இலக்கண நூற்கள் அகராதி கள் என்பனவும் எழுதி இருக்கிறார்கள். யாழ்ப்பாண முஸ்லிம் களின் இலக்கியப் பங்களிப்பு 1800 ஆம் ஆண்டின் பின்னரே பெரிதும் ஆரம்பமாகிறது எனக் கொள்ள வேண்டும். எழுதித் தம் திறமையை மட்டும் வெளிக்கொணராது தரமான இலக்கியங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத் தம் செலவில் அச்சிட்டும் அரும்பணியாற்றியுள்ளனர் முதலில் பின்குறிப்பிட்ட பணியில் ஈடுபட்டோரின் பங்கினை ஈண்டு நோக்குவோம்.

பண்டைத் தமிழிலக்கியப் பனுவல்களைத் தேடிப் பரிசோதித்து அச்சுவாகனம் ஏற்றியவர் தமிழ்த் தாத்தா உ. வே. சா. ஐயர் ஆவார். இதே பணியினை ஈழத்தில் புரிந்தவர் சி. வை. தாமோதரம்பிள்ளை ஆவார். இவர்கள் இருவருக்கும் முன்பே சீறாப் புராணத்தின் தொடரான காதை கூறும் சின்னச்சீறாவை யாழ்ப்பாணத்து முஸ்லிம் ஒருவர் வெளியிட்டுப் பெருமைக்குரிய வர் ஆகிறார்.

காயல் பட்டினத்தில் பிறந்த பனீ அகமது மரைக்கார் அவர்கள் சின்னச்சீறா என்ற காப்பியத்தினை எழுதினார். இதனை ஹிஜ்ரி 1272 இல் அதாவது கி. பி. 1855 இல் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பரிகாரி மரைக்கார் என்று அழைக்கப்பட்ட உதுமா லெப்பை அவர்களின் குமாரர் பக்கிர் முகிதீன் என்பவர் பிரசுரித்தார். சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் தொல் காப்பிய சொல்லதிகாரத்தை 1868 இல் தான் வெளியிட்டார்கள். மகாமகோபாத்தியாய உ. வே. சா. ஐயர் அவர்களும் 1855 இல் தான் பிறந்தார்கள். இதே 1855 இல் தான் சி. வை. தா. அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து படிக்க ஆரம்பித்தார்கள். எனவே சி. வை. தா. , உ. வே. சா. அவர் களுக்கு முன்பே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பக்கீர் முகிதீன் நூல் வெளியிடும் பணியில் ஈடுபட்டார்கள் என்பதில் ஈழத்து முஸ்லிம்கள் அனைவருமே பெருமைப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீறா வசனம் முதலாக பல்வேறு உரைநடை இலக்கியங்களையும் உரைகளையும் எழுதி வெளியிட்டவர் குலாம் காதிறு நாவலர் அவர்கள். நாகூர்ப் புராணம் ஆரிபு நாயகம், மும்மணிக்கோவை போன்ற செய்யுள் நடைக் காவியங்களையும் எழுதியுள்ளார். இவற்றுள் ஆரிபு நாயகம் என்ற நூலுக்கு பொருள் உதவி புரியும் புரவலராக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மற்றொருவரான பாக்கியப்பா என வழங்கப்பட்ட முகம்மது லெப்பை மரைக்காயர் என்பவர் இருந்திருக்கிறார். இவ்விருவரையும் போல இன்னும் எத்தனையோ பேர் இருந்திருக்கலாம். அவர்கள் காலத்தால் மறக்கடிக்கப்பட்டு விட்டார்கள்.

இனி இலக்கியப் பங்களிப்பை நோக்கினும் அந்த வரிசையிலே 1800 க்குப் பின் தமிழ்ப் பணிபுரிந்த பலருள் ஓரிருவரைத்தான் நம்மால் பூரணமாக இனங்கண்டு கொள்ள முடிகிறது.

பதுறுத்தீன் புலவர், சேகுத்தம்பிப் புலவர், முகம்மது சுலைமான் லெப்பைப் புலவர், முய்யி அல்தீன் கற்புடையார், சு. அசனா லெப்பைப் புலவர், ஷைகு மகுறூபு, சுல்தான் தம்பிப் பாவலர், ந. மீரான் முகிதீன், அப்துல்லாப் புலவர், தைக்காப் புலவர், சீனித்தம்பி ஆலிம் ஆகியவர்களும் சுதந்திரத்தின் பின்னுள்ள காலப்பகுதியில் எஸ். எம். ஹுசைன் ஆலிம், ஏ. எம். ஏ. அஸீஸ், இளங்கீரன் லைலா முகிதீன் ஆகியவர்களும் குறிப்பிடத் தக்கவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதுறுத்தீன் புலவர்

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய உலகில் சீறாப் புராணத்திற்கு அடுத்து வைத்து எண்ணப்படுவது யாழ்ப்பாணத்து பதுறுத்தீன் புலவர் யாத்த முகிய்யித்தீன் புராணமாகும். இந்த முகிய்யித் தீன் புராணத்தினால் இரண்டு பெரும் சிறப்புகள் ஈழத்து முஸ்லிம் களுக்கு உண்டு. ஈழத்து தமிழ் இலக்கியப் பரப்பிலே இதிற் பொதிந்துள்ள அளவு பெருந்தொகையான பாடல்களைக் கொண்டு எந்த இலக்கியமும் இன்று வரை எழவில்லை. காப்பிய மரபு முற்ற முழுதாகப் பேணப்பட்டதாக ஈழத்தில் சைவமத அல்லது கிறீஸ்தவ மதத்தவர்களால் கூட இன்று வரை ஆற்ற முடியாத பெரும் பணியை இஸ்லாமியர் ஒருவர் புரிந்திருக்கிறார். இது முதலாவது. அடுத்து நம் கைக்கு எட்டியுள்ள இஸ்லாமிய இலக்கியங்களுள் தலையாயதாயும் 1811 இல் ஆக்கப்பட்டு முதற்றமிழிலக்கியம் என்ற பெயரையும் அது தட்டிக் கொள்ளு கிறது.

உமறுப்புலவர் காப்பிய நாயகனாக தன்னேரில்லாத் தலைவராக அண்ணல் நபி (ஸல்) அவர்களைக் கொள்ளுவது போல அவர்களின் அருமைப் பேரரும் அறிவுலக மேதையுமான முகியித்தீன் அப்துல்காதர் ஜீலானி இதில் காவிய நாயகனாகக் காட்டப்பட்டுள்ளார். இது 4000 விருத்தப் பாக்களால் ஆனது. இது எழுந்த காலத்தைப் பற்றி பதுறுத்தீன் புலவர் அவர்களே ஹிஜ்ரி 1231 ஆம் வருடம் என்று கூறுகிறார். இதன்படி நோக்குகையில் கி. பி. 1811 எனக் கொள்ளலாம். எனினும் இது 1848 இன் பின்னே அச்சிடப்பட்டுள்ளது. அதுவரை காலமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது கையெழுத்துப் பிரதியாகவே இருந்திருக்கிறது. பாயிரத்தின் 22 ஆம் செய்யுளில் இது எழுதி வெளியிடப்பட்ட செய்தி காணப்படுகிறது.

அருணபி ஹிஜிரத் தாயிரத்திரு நூற்று முப்பத்
தொரு வருடத்தில் ஜமாத்திலாகிறு பிறையின்றேதி
இரு சத மூன்று திங்கள் வாரத்திலின் புற்றேங்கி
மருவியே யெவருங் கேட்பப் பதுறுத்தீன் கவிசொன்னானே.

இந்த நூலினை வெளியிடப் பொருள் உதவி புரிந்தவராகவும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மற்றொருவரான உசைன் நயினா ருடைய மகன் செய்குமீறான் என்பவர் குறிப்பிடப்படுகிறார். இச் செய்தியைப் பாயிரத்தின் 23 ஆவது செய்யுள் கூறுகிறது. இரண்டு பாகங்களைக் கொண்டுள்ள இப் புராணம் முதற் பாகத்தில் 40 படலங்களையும் 2100 விருத்தப் பாடல்களையும் இரண்டாம் பாகத்தில் 34 படலங்களையும் 1700 விருத்தப் பாடல்களையும் கொண்டுள்ளது. முதலாம் பாகம் நாட்டுப்படலம், நகரப்படலம் என்பவற்றை முதலாகக் கொண்டு அவதாரம் முதல் சேணம் உயிர் பெற்றது ஈறாகவும் இரண்டாவது பாகம் கடலில் காயிபானவனை மீட்டிக் கலியாணம் செய்வித்த படலம் முதலாக காபு மலைக்கப்புறத்தார் வகுலு கேட்ட படலம் ஈறாகவும் கூறப்படுகிறது.

சிறப்புப் பாயிரத்தில் பரிசோதித்து அச்சிட்டு வெளியிட்ட பரிசோதனைக் கர்த்தா கோட்டாறு கா. ப. செய்குத்தம்பிப் பாவலர் அவர்கள் புலவரைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பதுறுத்தீன் புலவரவர்கள் சாந்தமும் பொறுமையும் தயவும் தெருட்சியும் தரக்கூடிய எல்லா வகையான நூல்களையும் கற்றுத் தெளிந்த கவியாடும் வல்லவர்கள் எல்லோரும் தோற்றோடும் வண்ணம் விடை தர வல்லவர் என்றும் மேகம் பொழிகின்ற இயல்பைப் போல கவி பொழியும் கவிராஜர் இவர் என்றும் மன்னர்கள் அனைவரும் தமது மணிகள் பொதிந்த முடியினைத் தாழ்த்திக் கௌரவிக்கும் வரப்பிரசாதர் என்றும் முன்பு வாழ்ந்த புலவர்கள் முழுப்பேருமே ஒருருவாக இந்த நிலத்தில் ஒருவராக வந்துதித்தது போன்றவர்" என்கிறார்.

அண்மைக் காலத்தில் இவரைப் பற்றிக் கருத்துத் தெரிவித்த ஓரிருவர் இவர் இந்தியாவின் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் என்றும், இவர் கடைசிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் வந்து வாழ்ந்திருக்க வேண்டும் என்றும் கருதுவர். இக் கூற்றுக்கு எவ்வித ஆதாரமும் கிடையாது. இது பற்றி எத்தகைய குறிப்பும் நூலில் காணப் படவில்லை. காணப்படுகிற குறிப்புகளில் எல்லாம் யாழ்ப் பாணமே இருப்பதனால் இவர் ஈழத்துப் புலவர் ஒருவரே என்றே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இந் நூலில் பாடல்கள் அனைத்துமே நயக்கத்தக்கன எடுத்துக் காட்டாக ஓரிரண்டை நாம் நுகரலாம்.

எழுந்திடும் கரிய மேக மிலங்கிழை கருஞ்சூன் முற்றி
அழுந்தியே பதறு மாறாய திர்ந்து மின்விழித்துக் காட்டி
பொழிந்திடுங் கதிர் குலாய மரகதப் பொருப்பின் மீதிற்
செழுங்கர முகியித்தீன்றங் கொடையெனச் செழிக்கப்பாயும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்கினங் கலைய ஆர்வைகள் மெலிய விரிசிறைப்
பறவைகளொலிப்ப
குலுங்கிய கனிகள் சிதறிடத் தருக்கள் குலைந்திட வேரற
வீழ்ந்து
அலங்கலென் றழிய விலங்கலினிருந்த வருமணிப் பலவளங்
கவர்ந்து
நிலங்கொளுங் குறிஞ்சிக் குறத்தியர் குடிகொணிலத்
திடை சரிந்தது நீத்தும்.

கம்பன் கையாண்ட உவமையொன்றினை உமறும் கையாண்டார் அதேபோல உமறுப்புலவர் கையாண்ட பொருள் ஒன்றையே பதுறுத்தீன் புலவரும் கையாளுகிறார்.

விரியுந்திரை வீசிய கைவிழி செம்மருங்கயல் வண்சூழல் சைவலமாய் பெருவெண்ணுரை யாடையுடுத்திய பெண் வருமா நதிகண்டு மகிழ்ந்தனரே என்பதும்

விழுத வஞ்சிறை மதுகரம் புவியின் வீழ்ந்திருப்ப
வொழுகு தேன்மொழி நாவலின் கனியென வோடிப்
பொழியும் தன்மலர்க் கரத்தினா லெடுத்தவப் போதின்
கமுது கையினிற் பறந்திடப் பயந்தளள் கன்னி

என்பதும் எடுத்துக் காட்டுகளாம்.

பதுறுத்தீன் புலவரது பிறப்பு வாழ்வு மரணம் என்பது பற்றிய தகவல்களைப் பெறமுடியாதுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சா. சேகுத்தம்பிப்புலவர்

இவர் இயற்றி இன்று நமக்குக் கிடைத்துள்ள நூல் காரணமாலையாகும். இது 1878 இல் பதிக்கப்பட்டதாக மறைந்த இரசிகமணி கனக செந்திநாதன் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். இந்தக் காரணமாலை பெயருக்கேற்ப பலவகையான காரணம் பொருந்திய நிகழ்ச்சிகளை இசைப் பாடல்களாக அமைத்துக் கோக்கப்பட்ட மாலையாக விளங்குகிறது. இந்த நூலிலிருந்து இதனை எழுதியவர், உதவி புரிந்தவர், மூலநூல் என்பன பற்றியெல்லாம் குறிப்புகளைப் பெறக்கூடியதாக உள்ளது.

புலவரவர்கள் சீறாச் சரிதத்தை இசைத் தமிழிலே பாடிய காரணமாலை என்று குறிப்பிடுகிறார். கடவுள் வாழ்த்துக்கு முன்புள்ள பகுதியில் இலங்காபுரியிற் சிறந்த காலிமாநகரத்தில் சாமுநயினார் லெப்பையவர்கள் குமாரர் சேகுத்தம்பிப் புலவரால் செய்யப்பட்டது என்ற குறிப்புக் காணப்படுகின்ற போதும் கடவுள் வாழ்த்தைத் தொடர்ந்து வருகின்ற பாடல்களிலும் இடையிலேயும் துவாக் கேட்குதலிலும் சேகுத்தம்பிப் புலவரின் ஊராகச் சித்திரிக்கப்படுவது யாழ்ப்பாணமே என்பதை நூலைக் கற்பவர் நன்கு உணர்வர். அவற்றை வைத்து ஆய்கையில் புலவர் சேகுத்தம்பி அவர்கள் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பது புலனாகும்.

அரசு வெளியீட்டினரால் 1968 இல் வெளியான முஸ்லிம் தமிழ்ப் பாரம்பரியம் என்ற நூலில் ஹாபிஸ் எம். கே. செய்யது அகமது அவர்கள் காரணமாலை என்னும் சீறா நாடகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டாறு சதாவதானி செய்குத் தம்பிப் பாவலர் இயற்றியதாக 71 ஆம் பக்கத்தில் குறிப்பிடுகிறார். பின்பு 87 ஆம் பக்கத்தில் காரணமாலையை காலி செய்குத் தம்பிப் பாவலர் இயற்றிய தாகக் குறிப்பிடுகிறார்கள். யாழ்ப்பாண சேகுத்தம்பிப் புலவர் சீறா நாடகத்தை எழுதியதாகவும் குறிப்பிடுகிறார். இந்த மூன்று குறிப்புகளும் இக்காரணமாலையையே குறிப்பிடுகின்றது. இந் நூலை எழுதியவர் கோட்டாறு செய்குத் தம்பிப் பாவலர் அல்ல என்பது மட்டும் புலனாகும். நூல் அரங்கேறியபோது புலவர் வாழ்ந்த இடமாகக் காலி மாநகர் விளங்கலாம். அல்லது புலவர் தம் தொழில் முயற்சியினைக் காலியில் மேற்கொண் டிருக்கலாம்.

இது 763 இசைப் பாடல்களால் ஆனது. கடவுள் வாழ்த்து முதல் வாழிச் சிறப்பு வரையாக 30 அதிகாரங்களாக இது வகுக்கப்பட்டுள்ளது. நபிகள் நாயகம் பூர்வீகத்தில் உண்டான சிறப்பு முதலாக அவர்கள் அரசியற்றிய சிறப்பு ஈறாக உள்ள அம்சங்களைக் கருவாகக் கொண்டுள்ளார். பெரிதும் இந்த நூலில் இவர் பெருமானாரின் ஆரம்ப காலச் சிறப்புக்களையே பேசுகிறார். புலவரின் தந்தை பெயர் சாமுனா லெப்பை என்பதும் அதனை எழுதிக் கோவை செய்தவர் அவரது புத்திரர் முகம்மது மீரான் கண்டு என்பதும் புலனாகிறது. தனது குரு கபீபு முகம்மது என்றும் அவர் வழிவந்த சதக்கத்துல்லா லெப்பை ஆலீம் அவர்களது வேண்டுகோளுக்கிணங்க ''யஃதீபுல் மஆனி'' என்ற அறபுக் கிதாபை நன்கு படித்து உணர்ந்து செந்தமிழில் வடித்ததாக கடவுள் வாழ்த்தில் குறிப்பிடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சிட்ட வரலாற்றிலே தனது நாட்டைப் பின்வருமாறு குறிப்பிடு கிறார்.

செல்வமும் செருக்கும் தினம் தினம் பெருகி
வல்லமை மிகுந்து வாழிப விலங்கைத்
தேசத்திற் சிறந்து திரு நிதம் பரவி
மாசற்ற கல்வி வளரும் யாழ்ப்பாண
நன்னகர் வாழ்வோன், நாவலர் வாழ்த்தும்
பொன்னிதிப் பெருக்கின் புகழணி கொண்டோன்
தருமம் பொறை நலம் தானம் அன்போ
டொருமை கல்வியுள்ள மனத்தன்
சாமுனா லெப்பை தவமது திரண்டு
காமுறு மகனாய் காசினி லுற்றோன்
பல்வகைக் கல்வி பார்த்துணர் சிந்தையன்
நல்வகை தழைக்கும் ராக சங்கீதன்
சொல்லார் சித்திரச் சுயப் பிரகாசன்
சல்லாபச் சேகுத் தம்பிப் புலவன்

என்று குறிப்பிடப்படுவதனால் புலவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வரே என்பது புலனாகும்.

உமறுப்புலவர் சமயம் வாய்த்த இடமெல்லாம் தனக்குப் பொருளுதவி புரிந்த அபுல் காசீம் மரைக்காயரின் புகழ் பாடுவது போல நூல் முழுவதும் பதினாறுக்கு மேற்பட்ட இடங்களில் தனக்குப் பொருளுதவி புரிந்த யாழ்ப்பாணம் சுலைமான் லெப்பை என்பவரையும் அவர் வாழ்ந்த யாழ் நகரத்தையும் புகழ்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது நூலின் சிறப்பு என்னவெனில் இயன்றவரை அரபுப் பதங்கள் கலக்காமல் செந்தமிழிலேயே எழுதப்பட்டிருத்தலாகும். நூலின் மிக நீளமான ஆசிரியப்பா ஒன்று 332 அடிகளைக் கொண்டுள்ளது. கலித்துறை, கொச்சகம், தரு அல்லது கண்ணிகள், விருத்தம், வெண்பா எனப் பலவகை பாவகைகளும் பாவினங்களும் பயின்று வந்துள்ளன. இவர் மொத்தமாக 21 வகையான இராகங்களில் பாடல்களை யாத்துள்ளார். இப்பாடல் களும் சொற்சுவையிலும் பொருட்சுவையிலும் எந்தவொரு இலக்கியத்துக்கும் இரண்டாவதாகி விடாது அமைந்துள்ளன.

எடுத்துக்காட்டாக

''கருமுகில் தவழுஞ் சோலை நிழலிற் கலாப மயிலாடும்
வருநதி யிடங்கடோறும் வளை தரளங்களீனும்
திருமலி பணைகடோறுஞ் செய்ய வண்டினங்கள் பாடும்
மருமலி மக்க நாட்டின் மகிமையிற் சிறிது சொல்வாம்''

என்று தொடங்கி

''மன்றல் செறி மனைவயின் சேர் மின்னார்கள்
மலர்க் குழலுக்கிடு தூபம் வளைந்து வான்போய்க்
கொண்டலெனவே கவியச்சோலை தோறுங்
குவிந்து மயில் கிறு கிறெனக் கூடியாடு
முண்டக மாமலர்த் தடஞ்சூழ் பண்ணை தோறும்
முழங்கி வளை தரள மணி முற்றியீனும்
அண்டர் நித மிறை யருளால் வந்து கூடும்
அதிக தவ மிகுதியுறு மக்க நாடே''

என்றும் பாடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகு தமிழில் படிப்போர் மனம் கொள்ளும் விதத்தில் பள்ளு குறவஞ்சி, தாலாட்டு போன்ற மக்கள் இலக்கியங்களில் கையாளப்பட்ட இசையைப் பின்பற்றி இவர் கவிதைகள் எழுதி னார். இவர் கையாண்டுள்ள உவமைகள் நயக்கத்தக்கன.

அலிமா நபி (ஸல்) அவர்களுக்குப் பாலூட்டும் காலம் முடிந்த தும் திருப்பி ஒப்படைக்கக் கொண்டு வரும்போது வழியிலே குழந்தை பறிக்கப்பட்ட நிலையில்

"செங்கட் பகுவாய் முடங்குழைவாற் சீயமெதிர்த்த மரை" யென அவள் வருந்துவதாகக் குறிப்பிடுகிறார். சேகுத்தம்பிப் புலவரின் இசைநயமிக்க பாடலுக்கு இது ஓர் உதாரணமாகும்.

"திருமுத்து நீதி பரவிய முத்தொராதி தெரிசனை
முத்து தேனின் முத்துத்
தெளிமுத்து சோதியுலாவிய முத்து தேவர்கள் ஜெய
முத்து சித்ரமுத்து மருமுத்து
மாமயிலினுருமுத்து மாதவர்கண் மவுனமுத் தொருமைமுத்து
மதிமுத்தினுக் கதிகபதிமுத்து நற்றவமலிந்த முத்தெழில்
கொண்முத்துக்
குணமுத்து வானேறு மணமுத்து புயல்பரவு குடைமுத்து
வெற்றிமுத்து
அருண்முத்தி ஆதம்வழி வருமுத்தியப் துல்லா அருள்
முத்து மாசில் முத்தே"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு. சுலைமான் லெப்பைப் புலவர்

இவர் இலக்கண இலக்கிய அறிவு நிரம்பப் பெற்றிருந்தார். இந்தியப் புலவர்களாலே நன்கு கௌரவிக்கப்பட்டவர் இவர். கி. பி. 1856 இல் பிறந்த புலவர் அவர்களின் தந்தையார் பெயர் முகம்மது மீரான் கண்டு ஆகும். இவர் தனது சீவனோ பாயமாக புகையிலை வியாபாரத்தை மேற்கொண்டிருந்தார். இவரின் நெருங்கிய நண்பர் புலவர் சு. மு. அசனாலெப்பை ஆகும். குலாம் காதிறு நாவலர் அவர்களுடன் புலவர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். தமிழ் நாட்டவரால் எழுதப்பட்ட பிக்ஹுமாலை, மெய்ஞ்ஞான ரத்தின சாகரம் போன்ற பிற நூல்களுக்கும் இலங்கையில் எழுதப்பட்டு வெளி யான புகழ்ப்பாவணி, சன்மார்க்க இலகு போத வினாவிடை என்பவற்றிற்கும் புலவர் அவர்கள் சிறப்புப் பாயிரம் வழங்கி யுள்ளார்கள். புகழ்ப் பாவணியையும் அச்சிட்டவர் இவரே. புலவர் அவர்கள் எழுதியுள்ள நூல்கள் வருமாறு:

குத்பு நாயகர் நிர்யாண மான்மியம்
குத்பு நாயகர் அனு சாதனம்
காசிமியா மாலை
சகறாத்து நாமா
நெய்னா முகம்மது ஒலிமுனாஜாத்து
சர்வபந்தமேக பதார்த்தோவம தருக்கநிராகணம்

என்பவைகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுள் குத்பு நாயகர் அனுசாதனம் அச்சேறாது இன்னமும் எழுத்துப் பிரதியாகவே மன்னார் தாராக்குண்டு என்னும் ஊரிலே இருக்கிறது. குத்பு நாயகர் அனுசாதனத்தில் கொடை நாயகராக தாராக்குண்டு நெய்னாமுகம்மது சாகிபு அவர்கள் குறிப்பி ப் படுகிறார்கள். அவர்களின் பரம்பரையிடமே அந்த கைஎழுத்துப் பிரதி இருப்பதாக புலவர் அவர்களின் மகளார் எனக்கு அறியத் தந்தார். குத்பு நாயகர் நிர்யாண மான்மியத்தின் கொடை நாயகராகக் காட்டப்படுபவர் யாழ்ப்பாணத்துப் பாக்கியப்பா ஆவர். புலவர் அவர்கள் காசீம் மௌலானாவின் முரீதுப்பிள்ளை களில் ஒருவர் ஆதலால் தமது ஆத்மஞான குருவை மனதில் கொண்டே காசிமியா மாலையை யாத்தார். மரண வேளையின் நிலைமையை விளக்கி சகறாத்து நாமா என்ற நூலை இயற்றினார்.

குலாம் காதிறு நாவலர் ஷாதுலி நாயகத்தைப் பதிப்பித்தபோது புலவர் அவர்களே புரூப் பார்த்து அச்சிட்டார்கள். தாராக்குண்டு மதாறு சாகிபு புலவர் அவர்கள் இவரது சமகாலத்துப் புலவராகும். இவரது தனிப்பாடல்கள் பல ஐ. எல். எம். அப்துல் அஸீஸ் நடாத்திய முஸ்லிம் பாதுகாவலன் என்ற புதினப் பத்திரிகையில் வெளிவந்தன. புலவர் அவர்கள் 1917 இல் தமது 61 வது வயதில் மரணமானபோது முஸ்லிம் பாதுகாவலன் "ஓர் அரிய வித்துவான் நிர்யாணமானார்" என்று இரங்கல் செய்தி வெளியிட்டிருந்தது.

1900 இல் வெளியான குத்புநாயகர் நிர்யாண மான்மியம் என்ற நூலின் பகுதாது நகரச் சிறப்பிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடல் வளைத்த புவி பணி நனந்தலைக
வின்று மெங்ஙன மெழுந்த தென்
றடல் வளைந்த வின நரர் தெரிந்திடவ
கழ்ந்த தாமென வகன்றிருந்
திடம் பெருங்கமடம் வலியிடங்காதிரி
யிகலினங் கண மறைந்திட
லுடல் கரந்த வுயிரென விளங்க கழி
யுடனிருந் திலகு மந்நகர்" என்று கூறுகிறார்.

நெய்னா முகம்மது ஒலி முனாஜாத்தில்

"மச்சம் பிடித் தயின்று வாகினுயிர்த் தோடுமொரு
விச்சை செய்வ தோர்ந்தே விறற்றாதை முன் பொரித்த
விச்சலரசம்பீடியென்றின் நீர் விடுத்துறுத்த
நச்சிய கோன மேவாத நய்னா முகம்மதொலி"
"வங்க மிவர்ந்த வணிகன் பொருள் கவர்வான்
அங்குளார் கொல்வதறிந்து நுமைக் கூவப்
பொங்கு பொருளு முயிரும் புரப்பவொரு
நங்கூரக் கப்பல் விட்ட நய்னா முகம்மதொலி"
"சுரரும் பராதிபருந் சுந்தரத் துறவிகளும்
வரருஞ் சித்தாந்தரொடு வாழ் சீவமுத்தர்களும்
புரருந் திருவினரும் பூதலத் தொலிக ளொடு
நரரும் புகழ்ந்திறைஞ்சு நய்னா முகம்மதொலி"

என்ற பாடல்கள் அவரின் திறமைக்குச் சான்றாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சு. மு. அசனாலெப்பைப் புலவர்

கி. பி. 1878 இல் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சுல்தான் முகிதீன் என்பவரின் புதல்வராகப் பிறந்தார்கள். ஆரம்பக் கல்வியை அப்போது பீட்டர் ஸ்கூல் என்றழைக்கப்பட்ட கில்னர் கல்லூரியில் கற்றார். ஆரம்ப வகுப்பு முதல் F. A. அதாவது 10ம் வகுப்பு வரையிலும் எப்போதும் வகுப்பில் முதலாவது மாணவனாகவே வந்தார். பின்னர் லண்டன் மெட்ரிக் சித்தியடைந்து அந்த ஆண்டு எழுதுவினைஞர் தேர்விலும் சித்தியடைந்து யாழ்ப் பாணத்தில் பகிரங்க வேலைப்பகுதி (P. W. D.) யில் எழுதுவினைஞ ராகக் கடமையாற்றினார். இக் காலத்துக்குள்ளேயே அவர் தமிழை நன்கு கற்று கவிபாடும் வல்லவரானார். இவரது நெருங்கிய நண்பர் மு. சுலைமான் லெப்பை அவர்களாவர். இவரது 18வது வயதில் புகழ்ப்பாவணியை இயற்றினார். இப் புகழ்ப்பாவணி, நவரத்தினத் திருப்புகழ் (73 பாடல்களைக் கொண்டது) முகியிய்த்தீனாண்டகையவர்கள் பேரில் ஆசிரிய விருத்தம் (10 பாடல்களைக் கொண்டது.) பதர்யிகுப் பதிற்றுத் திருக்கந்தாதி (10 பாடல்களைக் கொண்டது.) சாகுல் ஹமீது ஆண்டகையவர்கள் பேரில் முனாஜாத்து (27 பாடல்களைக் கொண்டது.) ஆகியவற்றைக் கொண்டது.

இவரது நண்பரான மு. சுலைமான் லெப்பை அவர்கள் இவரது புகழ்ப்பாவணியை குலாம் காதிறு நாவலர் அவர்களிடம் கொண்டு போய்க் கொடுத்தார்கள். அதனைப் பார்வையிட்ட புலவர் அவர்கள் வியந்து இதனை எழுதிய புலவருக்கு எத்தனை வயது என்று வினவினார். பதினெட்டு என்று விடை கிடைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும் அவரே தம்பி என்று விளித்துக் கடிதம் எழுதித் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார்.

புலவர் அவர்கள் இள வயதிலேயே ஒழுக்கத்தில் மிகவும் பேணுதல் உள்ளவராக இருந்தார். மார்க்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். கொழும்பு செய்யது மீ. அப்துர் ரஹ்மான் ஆலிம் அவர்களுடன் தொடர்பு பூண்டு அவருக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுத்து தான் அவரிடமிருந்து அரபு கற்றுக் கொண்டார். 20வது வயதில் பூக்கோயாத்தங்களின் மதிப்புக் குரிய சீடனாகி கலீபா (ஷெய்கு) என்னும் கிலாபத்தைப் பெற்றுக் கொண்டார். பெரும்பாலும் தமது வாழ்க்கையை "சூபி" (சாது) யாகவே கழித்தார்.

ஒருமுறை புலவர் அவர்களிடம் இந்தியாவிலிருந்து குலாம் காதிறு நாவலர் வருகை தரப் போவதாக அறிவித்திருந்தார். அதற்கு அசனாலெப்பைப் புலவர் அவர்கள் இங்கு வருவதானால் ஒரு புராணம் இயற்றிக் கொண்டே வரவேண்டும் என்று அன்புக் கட்டளையிட்டார். அதனை அன்புடன் ஏற்ற குலாம் காதிறு நாவலர் அவர்கள் "ஆரிபு நாயகம்" என்ற நூலை எழுதிக் கொண்டு வந்தார்கள். இந்த நூல் கலீபா அப்துல் காதர் வீதியில் உள்ள ஒருவர் வீட்டிலேயே அரங்கேற்றம் செய்யப் பட்டது. இந்த நூல் அரங்கேற்றத்தின்போது குலாம் காதிறு நாவலரின் வலதுபுறத்தே சு. அசனாலெப்பைப் புலவர் அவர் களும் இடதுபுறத்தே மு. சுலைமான் லெப்பைப் புலவர் அவர் களும் வீற்றிருந்தார்கள். அரங்கேற்றத்துக்கு பொன்னையா பிள்ளை என்பவரால் நூலிலே பிழை காண்பதற்கென்றே பண்டிதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபாபதிப்பிள்ளை, பண்டிதர் மாணிக்கம் என்ற இருவர் அனுப்பப் பட்டிருந்தனர். நூல் அரங்கேற்றமானது மாதுளை என்ற சொல் பயன்படுத்தப்படுவதற்குப் பதிலாக மாதளை என்ற சொல் பயன் படுத்தப்பட்டுள்ளதால் அதனை விளக்கிய பின்பே மேற்செல்ல லாம் என்று பண்டிதர்கள் குறுக்கிட்டனர். இந்த நிலையில் புலவர் சு. மு. அசனாலெப்பை அவர்கள் சங்க நூல்கள் தொல் காப்பியம் நிகண்டு முதலியவற்றை ஆதாரம் காட்டி மாதளை என்ற பதம் இந்த இடத்தில் சரியானதே என்று நிறுவினார்.

புலவர் அவர்கள் தமிழில் மட்டுமல்லாது அரபிலும் நல்ல புலமை பெற்று விளங்கினார். பல அரபு நூல்களை எழுதினார். மேலும் பல தமிழ் செய்யுள் நூல்களை எழுதினாராயினும், அவை அச்சேறவில்லை. திருநாகை நிரோட்டயமகவந்தாதி வெளிவந்தபோதும் கிடைக்குமாறில்லை. அவரது அரபிலும், அரபுத் தமிழிலும் தமிழிலுமான அச்சேறாப் படிவங்களை காலம் சென்ற அறிஞர் அல்ஹாஜ் ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்கள் சேர்த்து வைத்திருந்தார்கள். அவரின் மரணத்தின் பின் அவை எங்கு சென்று சேர்ந்தனவோ.

புலவர் அவர்கள் மற்றொரு புலவரான அப்துல்லாப் புலவரின் சகோதரியை மணந்தார். ஐதுறூஸ் என்ற பெயரினையுடைய ஒரே ஒரு மகனே வாழ்கிறார். ஏனைய குழந்தைகள் இளமை யிலேயே இறந்துவிட்டனர். அன்பு, ஒழுக்கம், நன்னடத்தை, மார்க்க முறைப்படி வாழ்வு என்பவற்றைக் கைக்கொண்டிருந்த புலவர் அவர்கள் 1918 ம் வருடம் ரபியுல் அவ்வல் பிறை 13ல் மரணம் அடைந்தார்கள். 40 ஆண்டு காலம் மட்டுமே உலகில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த கலீபா ஷேகு சு. மு. அசனாலெப்பையவர்கள் காலமான போது யாழ்ப்பாணம் மிஸ்கின் லெப்பைப் புலவர் அவர்களும் கொழும்பு மீரான் வைத்தியர் குமாரர் அப்துர்ரஹ்மான் ஆலிம் அவர்களும் அரபியில் "மர்தியா" இரங்கற்பா பாடினர். அவை இன்றும் உள்ளன. மேலும் அசனாலெப்பைப் புலவர் அவர்களால் பாடப்பட்ட அறபுபைத்துகள் அதாவது நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் முகிதீன் அப்துல்காதிர் ஜீலானி அவர்கள் மீதும் நாகூர் சாகுல் ஹமீது ஆண்டகை மீதும் காதிரிய்யா தரிக்கின் மீதும் பாடப்பட்டவை இன்றுமுள்ளன. இவை முற்றிலும் அறபு இலக்கணம் பேணப்பட்டு எழுதப்பட்டனவாகும். இவரது புகழ்ப் பாவணியை அச்சிட்டு வெளியிட்ட மு. சுலைமான் லெப்பைப் புலவர் அவர்களே சிறப்புப் பாயிரமும் வழங்கியுள்ளார்கள்.

பதாயிகுப்பதிற்றுத் திருக்கந்தாதியில் வருகின்ற பாடல் ஒன்றின் மூலம் அவரது தமிழ்ப் புலமையை நாம் கண்டு கொள்ளலாம்.

"அரத்தம் படரணப் பைஞ்சுகங்காள் பலவானுழக்க
குரத்தம் படரணிச் சங்க முத்தீனும் பதாயிகுக்கட்
டிரத்தம் படர கன்றெய்தியக்கோற் றெரிசித் தலங்கள்
கரத்தம் படரவே வாங்கி வம்மிக் கவிஞனுக்கே"

மற்றொரு பகுதியான சாகுல் ஹமீது ஆண்டகையவர்கள் பேரில் முனாஜாத்திலே

நஞ்சும் புறமுண் கண்ணு நகைகான்றொளிரு முறுவல்களுங் கொஞ்சும் பசிய கிளிமொழியும் குவியாதலர்ந்த முகமுதல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்சுஞ் சிறப்பிற் சொன்மடவார் வீசுமையலினுழலாது
தஞ்சம் புகுந்த வெமையாழ்வீர் சாகுல்ஹமீது நாயகமே" - 14

என்றும் முகியித்தீன் ஆண்டகை பேரில் ஆசிரியவிருத்தத்திலே

"தீதகலமுடிமிசைப் புனைகுவானும் பதத் திருமலரை
யெற்கருள்கவே
செய்தவமுஞற்று மொலிமார் யாவரும்பதவி திகழ்விலாயத்
தெய்துறத்
தோத கல்வியன் றோட்கணும் பதஞ்சூட்டிடுங் குதுபுலகு
தாபுநாதா
குறைவறுவரத்து செய்குத்தனா வங்ஙனங் கொளமறுத்
தமையினீவிர்
பாதகல விடுசபத நீர்மையான் வல்லுளிகள் பாதமவர்
தோட்சுமப்பப்
பண்புலவுமவர் சீடர்நும் வயினிரப்பப் பரிந்துநிலை
மீட்டகுருவே
போதகல விள்ளச் சுரும்பு தேனுடிண்மிர் பொலன்
கொள்பகுதா தண்ணலே
புவிமாலையை வருமாது தவமீது விளையர்டு போதரா
முகியிதீனே"

என்றும் பாடுகிறார்

## முய்யி அல்தீன் கற்புடையார் இப்னு சின்ன இப்றாஹீம்

இவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். இவரைப் பற்றிய விபரங்களும் அறியுமாறில்லை. இவர் "நபியுல்லா பேரில் பதிகமும் யானைக் காதலும்" என்ற நூலினை எழுதி வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிட்டார் என்ற தகவல் மட்டுமே கிடைத்துள்ளது. நூலும் கிடைக்குமாறில்லை. இந்த நூல் வெளியான ஆண்டு 1891 ஆகும்.

## சுல்தான் தம்பிப் பாவலர்

இவர் ஆரண முகம்மதின் காரணக்கும்மி என்ற நூலை வெளி யிட்டார். இவரும் இலக்கண இலக்கியங்களில் நன்கு புலமை வாய்ந்தவர். இவரது நூலும் நமது ஆய்வுக்குக் கிடைக்க வில்லை. இவர் கி. பி. 1898 ல் காலமானதாக முஸ்லிம் தமிழ்ப் பாரம்பரியம் என்ற நூலில் குறிப்பு காணப்படுகிறது.

## ந. மீரான் முகிதீன்

இவர் நன்கு புகழ்பெற்ற ஒரு வைத்தியர் ஆவார். இவரது காலத்தில் மத போதனைக்காகத் தமிழ்நாட்டிலிருந்து பல அறிஞர்கள் வந்து போயினரேனும் அப்போதனைகளில் கலந்து கொள்ளாதவர்கள் இவ்விடயங்களை அறிந்து கொள்வதற்காகத் தமிழில் ஒரு நூல் இல்லாதிருந்தது. இக்குறையினைப் போக்க ஆறுமுகநாவலரைப் பின்பற்றி அவரது சைவ போத வினாவிடை போன்று "சன்மார்க்க இலகு போத வினாவிடை" என்னும் நூலினை 1917 ஆம் ஆண்டு எழுதி வெளியிட்டார். முன்பு கூறப்பட்ட மு. சுலைமான் லெப்பை, சு. அசனாலெப்பை ஆகிய வர்களோடு இவரும் சம காலத்தவராக இருந்தார். இந்த இருவருமே இவரது நூலுக்குச் சிறப்புப் பாயிரம் வழங்கியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூல் 42 பாடங்களைக் கொண்டது. இஸ்லாம், ஈமான் பற்றிய விபரங்களும் தொழுகை பற்றிய விபரங்களும் 62 தலைப்புகளிலும் அதன் பின் மஅரிபத், சரீஅத் ஹகீகத் தரீக்கத் போன்ற விடயங்கள் எஞ்சிய 53 தலைப்புகளிலும் பேசப்படுகிறது.

இவர் வைத்திய நூலொன்றையும் எழுதியுள்ளார். இது ''வைத்திய நவரத்தின இலகு போதம்'' என்ற பெயரையுடையது. இவர் மார்க்க விடயங்களில் மிகுந்த ஈடுபாடு உடையவர். மு. சுலைமான் லெப்பை, சு. அசனாலெப்பை ஆகியவர்களைப் போல இவரும் செய்யது பலுலு பூக்கோயாத் தங்களின் சீடரு மாவார். தமிழ்ப் புலமையிலும் இவர் சிறந்து விளங்கினார். இவரது நூற்கள்

மஹ்மூதியா பக்தி ரசகீர்த்தனை

மெஞ்ஞானக் கீர்த்தனைகள்

ஆகியனவுமாகும். இவரது கீர்த்தனைகளில் பெரிதும் அறுபுப் பதங்கள் பயின்று வருகின்றன.

எடுத்துக்காட்டாக

ஆலமறு வா ஹீரா றொன்றாம் வடிவினைக் கொண்
டிருந்தும் - ஒளிரும்
அந்த முதும இன்னா லாஹுத் ம அரிபாவிலுறைந்ததும்
காலம் நூநுஸ்ஸானியிற் கோல றூஹுல்லமீனாய் வரிந்ததும்
பணியும்
கருது மங்கூஸ் மௌக்கூஸில் பத்தியிதய மதில்பதிந்ததும் மிக

என்ற பாடலைக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஷைகு மஹ்ரூபு லெப்பை

இவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இலக்கியகாரராவர். நான்கு இமாம்கள் எனும் வழிகாட்டிகளாகிய ஷாபி, ஹனபி, ஹன்பலி, மாலிக் ஆகியவர்களின் சரிதையை இவர் வசன ரூபகமாக எழுதி வெளியிட்டார். காலமும் நூலின் தன்மையும் அறிய முடியாதுள்ளது.

## அப்துல்லாப் புலவர்

இவர் சு. மு. அசனாலெப்பைப் புலவரின் மைத்துனர் ஆவார். இவர் மன்ப உல் உலூம் மதரசாவில் பிரதம ஆசிரியராகக் கடமையாற்றினார். இவர் பிறந்த ஆண்டு 1905 ஆகும். இவரின் புலமையை வெளிப்படுத்தத்தக்க நூல்கள் பல எழுதினாரானாலும் அச்சுவாகனம் ஏறும் தகுதியை அடையாது போய்விட்டன. இருந்தும் தாம் கற்பித்த பாலர்கள் இராகத்தோடு பாடுவதற்கென யாத்த பாடல்களின் தொகுதிகள் சிலவே இன்று எம் கைவசம் கிடைத்துள்ளன. இவர் கில்னர் கல்லூரியில் கல்வி கற்றபின் அரச உத்தியோகமொன்றை நாடாது தமிழை முறையாகக் கற்க முனைந்தார். அசனாலெப்பையைப் போன்றே ஒரு சூபி (சாது) வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார். அவரது நூற்கள் வருமாறு:

நல்வழிக் கவிதை
திருநபி புகழ்க்கீதம்
குத்பு நாயகர் பாமாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9330



இது தவிர அவ்வப்போது சமுதாயத்தில் ஏற்படும் தேவைகளுக் கேற்ப பாட்டுக்களை யாத்தும் தருவார். புலவரவர்கள் சிலகாலம் கொழும்பு அல் - ஹுசைனியா வித்தியாலயத்தில் தமிழாசிரியராக வும் கடமையாற்றினார். அவரின் கவிதைகள் சில வருமாறு.

திரு நபி புகழ்க்கீதம் 36 பாடல்களைக் கொண்டது, அவை ஒவ்வொன்றும் நன்னபியே என்று விளித்து முடிவடையும்.

கொல்ல நினைத்துமே கல்லை யுருட்டிடும்
கொடியவன் கரங்கள் அறுந்திடவே
அல்லல் நீங்கிட அறுந்தவை பொருத்திய
அன்புயர் தாஹா நன்னபியே
தேடுமிகலவர் கண்கள் மறைந்திட
சிலந்தி வலையைப் பின்னிடவே
நீடிய தௌறு மலைக்குகை தங்கிய
நிமலராம் ஹாமிது நன்னபியே.

குத்பு நாயகர் பாமாலை 38 பாடல்களைக் கொண்டுள்ளது. முதற்பகுதி விருத்தப்பாவாலானது. இதில் 33 பாடல்கள் முகியித்தீனே என்ற இறுதிச் சொல்லைக் கொண்டு முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருமுகிற் கவிகை தாங்கும் ஹபீபிற சூலுல்லாவின்
அருமறை கூறும் மார்க்கம் அருளொடு புரந்தகோமான்
வருமொரு மதியம் போல மகிதலம் துலக்குநாதர்
திருமலர்ப்பாதம் போற்றிச் சிரமிசை தாங்குவோமே.

இருளில் அலைவோர்கள் ஈடேற்றம் பெற்றிடவே
அருள் வழியைக் காட்டி வைத்த அரும்புகழார் முகியித்தீனே

நல்வழிக் கவிதை பாலர்களுக்கென்றே ஆனது. இதில் ஈமான் கொள்ளுதலில் உள்ள விபரங்கள் இனிய பாக்களாக அமைந் துள்ளன.

மாணவர் மாண்பு என்ற பாடலில்
ஆதி பெரிய வல்லோனை அன்பாய் நிதமும் துதிப்போமே
ஆல நபிமேல் ஸலவாத்தை அதிக விருப்பாய் உரைப்போமே
கல்விச்சாலை செல்வோமே கருத்தாய்ப்பாடம் படிப்பபோமே
உண்மைபேசி உயர்வோமே உலகம் போற்ற நடப்போமே
என்று தொடர்ந்து செல்கிறார்.

புலவர் அவர்கள் பெற்ற ஆங்கிலக் கல்வியுடன் அரச உத்தியோகம் பெறக்கூடிய வாய்ப்பு இருந்தும் தமிழ் மொழியின் மீது கொண்ட பற்று காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து பத்து மைல்களுக்கப் பாலுள்ள சாவகச்சேரியில் அப்போது வாழ்ந்த பண்டிதர் ஒருவரிடம் தனது சகாக்களுடன் தமிழ் இலக்கண இலக்கியங்கள் கற்பதற்காகச் சென்றார்கள். பின் சகாக்கள் நின்றுவிட தனியே சென்று பாடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்று வந்தார். இக்காலத்தில் புலவர் அவர்கள் நோயால் பீடிக் கப்பட்டார்கள். அத்துடன் அவரது படிப்பும் முடிந்தது.

புலவர் அவர்களின் தகப்பனார் பெயர் முகம்மது அப்துல்காதர். புலவர் அவர்களின் மூத்த சகோதரியையே புலவர் அசனாலெப்பை திருமணம் செய்திருந்தார். தனது இறுதிக் காலத்தில் கலிமா, தொழுகை, நோன்பு ஸக்காத் ஹஜ்ஜு என்னும் இஸ்லாத்தின் ஐம்பெருங்கடமைகளையும் இலகுவான தமிழில் எல்லோருக்கும் விளங்கும் வண்ணம் உரைநடையில் நூலொன்றை எழுதும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததார். அவரின் மறைவால் நூல் அச்சேறா மல் போய்விட்டது. அப்துர் ரஹ்மான் மௌலானாவின் ஆத்மஞான சீடரான இவருடன் ஆத்துக் கோயாத் தங்கள் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். புலவரவர்கள் மறைவதற்கு ஓராண்டுக்கு முன்ப தாக அவரைக் காணவந்த ஆத்துக் கோயாத் தங்களிடம் "இன்ஷா அல்லாஹ் அடுத்த வருடம் நீங்கள் வரும்போது நான் உயிருட னிருக்க மாட்டேன். நீங்கள் அப்போது வந்தால் எனது கபுறிஸ் தானுக்கு வந்து செல்லுங்கள்" என்று கூறியிருந்தார். கூறியது போன்றே நடந்தும் விட்டது. இதனை ஆத்துக்கோயாத் தங்கள் அடுத்த வருடம் வந்தபோது கூறி புலவரின் மகன் முஹம்மது பஸீரை அழைத்துச் சென்று சியாறத்தைத் தரிசிக்கும்போது கூறினார். மிகவும் குறைந்த வேதனத்தில் 25 வருடமாக பிள்ளைகளுக்கு குர்ஆன் ஓதிக் கொடுக்கும் பணியிலீடுபட்ட புலவரவர்கள் உள்ளதைக் கொண்டு நலமுடன் வாழும் பொறுமைக் குணத்தைப் பெரிதும் கடைப்பிடித்தொழுகினார். புலவரவர்கள் 1961 ஆம் ஆண்டு துல்ஹஜ் மாதம் பதினோராம் நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வபாத்தானார்கள். இவர் மக்களால் கண்ணாடி லெப்பை என்று அன்புடன் அழைக்கப்பட்டார்.

## தைக்காப் புலவர்

தைக்காப் புலவர் என்று இங்கு குறிப்பிடப்படும் புலவரின் உண்மைப் பெயர் முகம்மது அப்துல் காதிறு ஆகும். புலவரவர்கள் 1888 இல் பிறந்தவர். இவருடைய தந்தையாரான முகிதீன் பிச்சை ஒரு வரகவியாவர். அவர் இயல்பாகவே வாக்குச் சாதுரியம் மிக்கவராக விளங்கினார். இவர் வசையாக ஏதேனும் பாடினால் அது பலித்துவிடுவதுண்டாம்.

தமிழ் மீது ஆராத காதல் கொண்ட வரகவி முகிதீன் பிச்சை தமது மகன் முகம்மது அப்துல்காதிறை தமிழ் கற்க ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை (கல்லடி வேலன்) யிடம் அனுப்பி வைத்தார். இவரது வறுமை காரணமாக இவரது பாடல்கள் எவையும் நூல் வடிவில் இல்லை. (வெகுவிரைவில் இவருடைய பாடல்களின் தொகுப்பு வெளிவரவிருக்கிறது - ஆர்) இவரை எப்போதும் ரிபாயியா தைக்காவில் காணலாம். ஆதலால் இவரைத் தைக்காப் புலவர் எனவே அழைத்தனர். இலக்கண இலக்கியங்களில் வல்லவ ரான புலவர் அவர்கள் தமக்களிக்கப்பட்ட ஒரு சில சந்தர்ப்பங் களைப் பயன்படுத்தி மீலாது தின விழாக்களில் மாணவர்கள் பாடுவதற்காக புலவரால் தயாரிக்கப்பட்ட பல கவிதைகள் கிடைத் துள்ளன. புலவரவர்களால் தயாரிக்கப்பட்ட பல கவிதைகள் கிடைத்துள்ளன. புலவரவர்கள் தமது 70 ஆவது வயதில் 1958 இல் காலமானார். புலவரது பாடல்களில் சில வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தாகி மயிலாய் கிந்தூலுமான
முதலவன் திருத்தூதே
மக்கத் தலத்து தித்தோரே
எக்காலு மடியேனற் பேறு பெறவே
இனி தருள் புரிவீரே
ஓதுந் தவனிலை யொளியீரே
தசையைப் பெண்ணாக்கிக் கொடுத்தீர்
மதியை இத்தரணியி லழைத்தீர்
நபியே எனை ஆளும்.

செந்தாமரைப் பதத்தைத் தந்தாள வேண்டும்
எந்தன் சிந்தா குலம் விலகவே
அடியேனுக் கந்தோ துணையில்லை
வேதாதி பாதா சீதா சமேதாவிப்பன சற்சரளே
தவ ரெட்சகரே நபியே
பெண்ணாமினா பயின்ற மன்னாதிபதி
எங்கள் இன்னாதிகளகற்று வா
இறை யோன் நபிகட்கரசே

இறசூல் நபியே கருணாகரரே
எளியேன் பவனோய் பொறுத்தருளும்
மறைசேர் நாவே பொறை வாழ் மனமே
மதீனா வாழும் மகுமூதே
மங்குலங் குடையிடு மாதவ நிதியே
மாசறு நபிகளுக்கதிபர் நீரே
காலன் வருமுன் எனைக்காத்தருள் புரிவீர்



217108

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணைக் கடலே அப்துல்லா மகவே
கன்னலின் மொழி கதீஜா மணவாளா
என்னின்ன லெலாமறச் செய்வீரே
பொன்னடி பணிந்தேன் அலிமாசூகைப்
பொன்முலை யருந்திய மகுமூதே.

புலவரது காலத்திலே ஒரு சமய பக்தர் வாழ்ந்து வந்தார். அவர் ஒருநாள் கடைவீதியில் வேறு அலுவலாகச் சென்று கொண்டிருந் தார். அப்போது செ. வா. பி. என்பவருடைய கடையில் நல்ல தொப்பிகள் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டு அங்கு சென்றார். தொப்பியின் விலை 4/= என்று சொன்னார்கள். அச்சமய பக்தர் தன்னிடமுள்ள 25 சதத்தைக் கொடுத்து அதனை முன்பணமாக வைத்துக் கொள்ளும்படியும் அன்று மாலையே எஞ்சிய பணத்தைக் கொடுத்து தொப்பியைப் பெற்றுக் கொள்ளுவதாகக் கூற அதனை ஏற்க மறுத்து கடை முதலாளி பணத்தையும் தூக்கி எறிந்து அவமானப்படுத்தும் விதமாகவும் ஏசிவிட்டார். மனமுடைந்த அச்சமய பக்தர் தமது நண்பரான புலவரவர்களிடம் வந்து தெரி வித்தார். புலவர் அவர்கள் ஒரு தபால் அட்டையை வாங்கி அறம் பாடுவது போல எழுதி அனுப்பிவிட்டார். காலகதியில் அவர்களுடைய கடை நஷ்டமடைந்து மூடும் நிலையையும் அடைந்து விட்டதாம்.

இப்பழைய தலைமுறையினரில் பலர் பெரும் புலவர்களாக வாழ்ந்த போதும் நமக்கு ஒரு சிலரின் தகவல்களே கிடைத்துள்ளன. பல வாய்மொழிப் புலவர்கள் வாழ்ந்துள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்தில் அவ்வப்போது நடைபெறுகிற சமயச் சடங்கு மீறல், ஒழுக்கம் தவறல், கலவரம் ஆகிய சந்தர்ப்பங்களில் புலவர்கள் விடயத்தைக் கவிதையில் வடித்துத் துண்டுப் பிரசுரமாக வெளி யிட்டனர். சில சமயங்களில் இக்கண்டன சீட்டுக் கவிகள் வேற்று மதப் புலவர்களின் கருத்துக்கும் பதில் வெளியீடுகளாக வந்துள்ளன. இப்படிச் சில கவிதைகள் எமது கரங்களுக்கு எட்டியபோதும் அவை அச்சேறின் பிறர் மனத்தை நோவிக்கும் என்ற காரணத் தால் இங்கு வெளியிடப்படவில்லை.

இவ்வாறு கவிகள் பாடிய பலருள்ளும் சிலரையே இனம் கண்டு கொள்ள முடிகிறது.

முகம்மது மதார்ப் புலவர்
கச்சு முகம்மதுப் புலவர்
பக்கீர் முகிதீன் புலவர்

ஆகியோரும் பிறரும் இப் பிரிவிலடங்குவர். மறைந்து போன நாட்டார் பாடல்களும் சில கிடைத்துள்ளன. அதிலொன்று வருமாறு:

"முருக்க மரமே முன்னே நிற்கும் மாமரமே
கருக்குப் பனைமரமே என் காதலியைக் கண்டதுண்டோ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரபு இலக்கியப் பங்களிப்பு

## முகம்மது அப்துல் லத்தீப் ஆலிம் (சீனித்தம்பி ஆலிம்)

1887ல் யாழ்ப்பாணத்தில் பிறந்த இவர் அராபியரின் வழித்தோன்றலாவார். எகிப்திலே ஏற்பட்ட கிளர்ச்சிகளின் தாக்கத்தால் நாடு கடத்தப்பட்டு காயல் பட்டணத்தில் வந்து குடியேறி அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்தவர்களின் பரம்பரையே இவருடையதாகும்.

இவர் அரபு மொழியில் மிகுந்த பாண்டித்தியம் பெற்றிருந்தார். இவரது "தன்வீறுல் பு ஆதி பீ தஹ்சீலுல் முறாதி" என்ற நூல் அரபுத் தமிழ் மூலம் அரபு மொழியும் இலக்கணமும் கற்றுக் கொள்வோருக்காக எழுதப்பட்டதாகும். இவரது தந்தையார் பெயர் முகம்மது சதக்கத்துல்லா ஆகும். இவரது இந்த அரபு நூல் ஹிஜ்ரி வருடம் 1352.8.11ல் சென்னையில் அச்சிடப்பட்டுள்ளது. இவர் தனது நூலின் இறுதியில் வெளியிட்டுள்ள ரெஜிஸ்டர் அறிவிப்பு என்ற பகுதியில் இது முதலாவது பாகமென்றும் இரண்டாவது பாகம் கூடிய சீக்கிரம் வெளிவரும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இது 88 பக்கங்களைக் கொண்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது மற்றொரு அரபுநூல் "மஜ்மூஉன் மதா இகு" என்னும் பாமாலைக் கோவையாகும். இதுவும் 17.10.1937 இல் (ஹிஜ்ரி 1352.8.11 இல்) மதராஸில் உள்ள அப்துல் காதர் லெப்பை என்பவராலேயே அச்சிடப்பட்டுள்ளது. இது முழுவதும் அரபு இலக்கணத்தைத் தழுவி எழுதப்பட்டதாகும்.

இப் பாமாலையில்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது மௌலிது
முகியித்தீன் அப்துல்காதர் ஜீலானி மீது முனாஜாத்து
நயினா முகம்மது ஒலியுல்லா மீது முனாஜாத்து
வேலணை சுல்தான் அப்துல்காதர்(வலி) மீது முனாஜாத்து வஸீலா பைத்து.

அல்லாமா ஹாஜி முப்தியுல் மதாகிபு செய்யது முகம்மது தமீம் உஸ்தாது பேரில் மர்தியா
ஆகியனவும் அடங்கியுள்ளன.

92 ஈரடிப் பாடல்களினாலான வேலணை வெள்ளைக் கடற்கரை சுல்தான் அப்துல்காதர் வலியுல்லா முனாஜாத்தில் வரும் **3 ஈரடிப் பாடல்களின் தமிழாக்கம் வருமாறு:**

சுல்தான் காதர் வலியுல்லா (இறைநேசரே)
சூபியுங்கள் பறகத்தால் (அருளினாலே)
சுந்தர வதனம் கனவு தனில்
சூழ்ந்து வரவும் கண்டேன் யான்.
ஆழத் திரை கடலோரத்தில்
கோலக் குவி வெண்மணற் குன்றில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாலம் புரக்கும் காவலராய்
காலம் கொணர்ந்து சேர்த்ததுவோ.
சீற்ற மிகுந்த கடலினலை
சிந்து பாடி வந்து தழுவும்
சின்னஞ் சிறு கல் மணிகளினால்
சியாறமானீர் (சமாதியானீர்) ஒலியுல்லா.

மஜ்மூஉல் மதாஇகு 80 பக்கங்களைக் கொண்டது. 355 ஈரடிக் கவிதைகளால் ஆனது. ஒருவர் தனது நாட்டம் நிறை வேறினால் வேலணை, மண்கும்பான், வெள்ளைக் கடற்கரையில் சமாதி கொண்டிருக்கும் சுல்தான் அப்துல் காதர் ஒலியுல்லா பேரில் அரபியில் முனாஜாத்து ஒன்றைப் பாடவைத்து அரங் கேற்றுவதாக நேர்ந்திருந்தார். அவரது நாட்டம் நிறைவேறியது. அவர் சீனித்தம்பி ஆலிம் அவர்களிடம் முனாஜாத்து தயாரிக்கும் படி கேட்டிருந்தார். முனாஜாத்து அரங்கேற்றும் நாளுக்கு முதல்நாள் வரை புலவரவர்கள் எழுதவேயில்லை. அன்று இரவு எழுதத் தொடங்கவே அவருக்கு நித்திரை வந்துவிட்டது. அவரது கனவிலே பச்சை நிறக்குப்பாயம் அணிந்த ஒருவர் தோன்றிக் கையில் வைத்திருந்த பிரம்பால் அடித்து எழுதும்படி பணிக்க அன்று இரவிலேயே எழுந்து 92 ஈரடிப் பாடல்களையும் எழுதியதாக அவரே குறிப்பிடுகிறார். சிறந்த சமய பக்தரான இவரது பரம்பரையினரால் பேணப்பட்டு வந்த கையினால் எழுதப் பட்ட 'ரவ்ழா' என்னும் இஸ்லாமிய சமய ஞான சட்டக்கிரந்தம் இவரது மறைவின் பின் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி அல்ஹாஜ் எம். எம். அப்துல் காதர் அவர்களால் நளீமியா உயர் கல்விப்பீடத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. புலவரவர்கள் 1952ல் வபாத்தானார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகால இலக்கியப் பங்களிப்புகள்

## அறிஞர் அல்ஹாஜ் ஏ. எம். ஏ. அஸீஸ்

சிறந்த சிந்தனையாளராகவும், சமுதாயப்பற்று நிறைந்தவருமான ஜனாப் அஸீஸ் அவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டதாரி யாவார். அத்துடன் ஈழத்தின் முதல் முஸ்லிம் சிவில் சேவை யாளருமாவார். முன்னைநாள் மூதவை உறுப்பினராகவும் கொழும்பு ஸாகிறாக் கல்லூரியின் அதிபராகவும் கடமையாற்றி யுள்ளார். அசனாலெப்பைப் புலவரின் சகோதரரும் வழக்கறிஞ ருமான சு. மு. அபூபக்கர் அவர்களின் மூத்த புதல்வராவார். சிறு வயதிலேயே சமுதாய முன்னேற்ற ஆர்வ மிகுதியால் மாணவர் சங்கம் ஒன்றை அமைத்து வழிநடத்தியவர். அகில இலங்கை முஸ்லிம் வாலிய இயக்கம், இலங்கை முஸ்லிம் கல்விச் சகாயநிதி ஆகியவற்றின் ஸ்தாபகருமாவார்.

இவர் தமிழ் மொழியின் மீதும் பழைய இஸ்லாமிய இலக்கியங்கள் மீதும் ஆராத அன்பு கொண்டிருந்தார். இவர் பல யாழ்ப்பாணப் புலவர்களின் அச்சேறா நூற்களைப் பெற்று வைத்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் காத்திரமான ஆய்வுகளையும் நிகழ்த்தியுள்ளார். இவரது ஆய்வு நூற்கள் பலவும் அச்சேறாமலேயிருந்தன. முதன் முதலில் இவரது பல கட்டுரைகளின் தொகுப்பாக "இலங்கையில் இஸ்லாம்" என்ற நூல் வெளியானது. அதனைத் தொடர்ந்து

தமிழ் யாத்திரை

மிசிரின் வசியம்

கிழக்காபிரிக்க நினைவுகள்

என்பன போன்ற பிரயாண நினைவு நூற்களை வெளியிட்டார். இவரது ஆங்கில நூல் "THE WEST REAPPRATSED" என்பதாகும்.

"அறபுத் தமிழ் எங்கள் அன்புத்தமிழ்" என்று முழக்கம் செய்த இவர் சென்னை அனைத்துலக இஸ்லாமிய ஆராய்ச்சி மாநாட்டிலே கௌரவிக்கப்பட்டார். 1917ல் பிறந்த இவர் 1973ல் காலமானார்.

## சு. மீ. முகம்மது முகிதீன் ஹாஜியார்

இன்றைய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசரான மு. அப்துல் காதர் அவர்களின் தந்தையாரான இவர் இரு சமய சம்பந்தமான நூற்களை வெளியிட்டார். அவற்றில் ஒன்று மீலாத் மலர் என்ற பெயரில் வெளிவந்தது. மற்றைய தான மறுமலர்ச்சி அல்லது சன்மார்க்கம் என்ற நூல் தனித்தனியே வாலிபர்கள், பெற்றோர், பெண்கள், பிள்ளைகள் என்போருக்கு புத்திமதி கூறும் வண்ணம் எழுதப்பட்டவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மு. முகம்மது ஹுசைன் ஆலிம்

கொழும்பு ஸாகிறாக் கல்லூரியிலும் வேறும் பல முஸ்லிம் பாடசாலைகளிலும் தமிழ் ஆங்கிலம், அறபு ஆகிய மொழிகளின் ஆசிரியராக இவர் கடமையாற்றினார். இவர் ஓய்வு பெற்ற பின் முகம்மது நபி (ஸல்) அவர்களின் சரித்திரச் சுருக்கம் என்ற நூலை எழுதி வெளியிட்டர். இவர் நிறைந்த மும்மொழிப் புலமைமிக்கவராய் விளங்கினார். இவர் தனது 70 ஆவது வயதில் 1969ல் காலமானார்.

## கலாபூஷணம் சு. சுபைர் (இளங்கீரன்)

இதுவரை விளக்கிய பெரும்பாலான இலக்கியங்கள் மதத்தை யொட்டியே எழுந்து வந்தன. அந்த நிலையினை மாற்றித் தேசிய ரீதியில் சுபைர் அவர்கள் இலக்கியம் படைத்தார். 20 ஆம் நூற்றாண்டின் இறுதி ஐம்பதில் அவர் தமிழ் நாவலுக்குப் புதிய பரிணாமத்தைக் கொடுத்தார். முற்போக்கு எழுத்தாளர் களுக்குள் மூத்தவராக மதிக்கப்படும் இளங்கீரன் சரளமாகக் கதை கூறுவதில் வல்லவர். இருபத்தைந்துக்கும் மேற்பட்ட நாவல்களை எழுதிச் சாதனை புரிந்துள்ளார். சமூகப் பிரச் சினைகளுக்கான அடிப்படைகளை அணுகித் தீர்வு கூற விழைந்த ஈழத்தின் முதல் நாவலாசிரியராக அவர் மதிக்கப்படுகிறார். அத்துடன் ஈழத்துத் தமிழ் நாவலுக்கு தேசியச் சாயல் தரமுயன்ற முதல்வராகவும் அவர் மதிக்கப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருக்கு முன்வாழ்ந்த யாழ்ப்பாண முஸ்லிம் இலக்கியகாரர் அனைவருமே புலவர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவருமே காவியங்களும் செய்யுள்களுமே இயற்றினர். ஆனால் இளங்கீரனவர்கள் முதல் உரைநடை இலக்கிய கர்த்தா வாக மதிக்கப்படுகிறார். அவரது பங்களிப்புக்கள் பல துறை களில் வியாபித்துள்ளன. நாவல், சிறுகதை, நாடகம், இலக்கிய விமர்சனம், இலக்கியக் கட்டுரைகள் என்பவற்றில் மட்டுமல்லாமல் பத்திரிகையாளராகவும் சேவையாற்றியிருக்கிறார். அரசியல், பொருளாதாரம், சரித்திரம், சமூகப் பிரச்சினைகள் மதம் பற்றி யெல்லாம் கட்டுரைகள் எழுதியிருக்கிறார். அவரது பங்களிப்பு கள் தனி ஒரு சமூகத்துக்கென்றோ பிரதேசத்திற்கென்றோ அமையாமல் தேசம் தழுவியதாகவும், மனித சமூகம் தழுவிய தாகவும் அமைந்தன. முன்வாழ்ந்த யாழ் முஸ்லிம் புலவர்களின் மத சம்பந்தமான படைப்பாற்றல் வட்டத்துக்கு வெளியே எழுத்தைப் பல துறையிலும் செலுத்தினார்.

இவரது வெளிவந்த நாவல்களில் பதினைந்து இந்திய மண்வளம் கமழ்பவை.

1. வண்ணக்குமரி
2. நீதிபதி
3. பைத்தியக்காரி
4. பொற்கூண்டு
5. மீண்டும் வந்தாள்
6. மரணக்குழி
7. காதலன்
8. ஒரே அணைப்பு
9. காதல் உலகிலே
10. கலாராணி
11. அழகு ரோஜா
12. பட்டினித் தோட்டம்
13. ஆணும் பெண்ணும்
14. எதிர்பார்த்த இரவு
15. மனிதனைப் பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து மண்வளம் கமழும் நாவல்கள் பத்தாகும்.

| | | |
|---|---|---|
| 1. | புயல் அடங்குமா | 1954 |
| 2. | சொர்க்கம் எங்கே | 1955 |
| 3. | தென்றலும் புயலும் | 1955 |
| 4. | மனிதர்கள் | 1956 |
| 5. | நீதியே நீ கேள் | 1959 |
| 6. | மண்ணில் விளைந்தவர்கள் | 1960 |
| 7. | இங்கிருந்து எங்கே | 1961 |
| 8. | காலம் மாறுகிறது | 1964 |
| 9. | அவளுக்கு ஒரு வேலை வேண்டும் | 1972 |
| 10. | அன்னை அழைத்தாள் | 1978 |

நாடகத் துறையிலும் காத்திரமான பங்களிப்புகளை இவர் நிகழ்த்தியுள்ளார். இவரது பெரும்பாலான நாடகங்கள் வானொலி யில் ஒலிபரப்பாகியுள்ளன. இவை நூல் வடிவம் பெறாதிருப்பது ஒரு பெரிய குறையாகும். கணக்கின்றி இவர் கட்டுரைகள் எழுதியுள்ளார். அவையும் தொகுக்கப்படவில்லை. இவரது கட்டுரை எழுதும் வன்மைக்கு இலங்கையின் இருமொழிகள்.

பாரதி கண்ட சமுதாயம் இரண்டையும் கொள்ளலாம். பத்திரிகை ஆசிரியராக மரகதம் என்ற இலக்கியத் திங்கள் இதழிலும் ஜனவேகம் தொழிலாளி என்ற அரசியல் சார்பான வார இதழ் களிலும் பணியாற்றியுள்ளார். இப் பத்திரிகைகளின் ஆசிரியராக இருக்கும்போது மக்களின் பிரச்சினைகளுக்கு நன்கு குரல் கொடுத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மட்டுமன்றி நாடெங்கணுமுள்ள பெரும்பாலான தமிழ் முஸ்லிம் பாடசாலைகளிலும் முஸ்லிம் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளிலும் மொழி, கலை, இலக்கியம், பொருளாதாரம், கல்வி சம்பந்தமாக நிறைய உரையாற்றியிருக்கிறார். அது போன்றே எத்தனையோ மீலாத் கூட்டங்களிலும் உரையாற்றி யுள்ளார். இவரது எழுத்துக்கள் போன்றே பேச்சும் கேட்டாரைப் பிணிக்கும் தன்மை வாய்ந்தது. தெளிவான மடை திறந்த வெள்ளம் போலத் திரண்டு வரும் சொற்பொழிவுகளால் எண்ணற்ற மக்களின் இதயங்களில் வாழ்கிறார்.

ஈழத்துக்கு வருமுன் அவர் மலேசியாவில் சமகாலத்திலேயே எழுத்துத் துறையிலும் பேச்சுத் துறையிலும் காலடி எடுத்து வைத்தார். தமிழ் நாட்டில் தனக்கென ஒரு களம் அமைத்தார். அதன் பின்பு தான் பிறந்த மண்ணுக்கே மீண்டு தமிழ்ப்பணி புரிந்தார். அவரது நாவல்களிலும் சிறு கதைகளிலும் நாடகங் களிலும் வர்க்கப் போராட்டமே சித்திரிக்கப்படுகிறது. இன்னும் அவரது பேனா ஓயவில்லை! ஓயவும் கூடாது.

தென்றலும் புயலும் என்ற நாவலில் கீரன் தன்னையே நடராச னாக்கிக் கொள்கிறார். நீதியே நீ கேள் என்ற நாவலிலே தன்னை அன்சாரி ஆக்கி வளர்த்துச் செல்கிறார். இவை யாவற்றிலும் தேசியம், முத்திரை பதித்துள்ளது.

இளமையிலே வறுமையின் பிடியில் சிக்குண்டு சீரழிந்த வாழ்வு அவரைப் புடம்போட்ட தங்கமாக்கியது. சமுதாயத்தில் அடக்கி ஒடுக்கப்படுகிற சுரண்டப்படுகிற மக்களுக்காக அவர் குரல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தார். அவரைச் சமதர்ம தத்துவம் தனக்குள்ளாக்கிக் கொண்டது. அதனால் அவர் சம தர்மத்தை வளர்த்துச் சென்றார். பேச்சிலும் மூச்சிலும் எழுத்திலும் சமதர்மமே மிளிர்ந்தது. இந்த நாட்டிலே அவர் ஒரு மாற்றத்தை மறுமலர்ச்சியை மக்கள் எண்ணங்களில் ஒரு புரட்சியை ஏற்படுத்த எண்ணம் கொண்டிருக்கின்றமை அவரது படைப்புகளில் நாம் பெறும் பாடமாகும்.

இலக்கியத்துறையில் மட்டுமல்லாமல் சமுதாய வாழ்விலும் அவர் ஒரு முன்னோடியாகத் திகழ்கிறார். யாழ்ப்பாண முஸ்லிம் வாலிபர்களை அவர் முன்னேற்றப் பாதையில் இட்டுச் சென்றார். அவர்கள் சிந்திக்க வழிவகுத்தார். சமூக விவகாரங்களிலும் பொது வேலைகளிலும் அவர் தீவிர பங்கேற்றார். யாழ்ப்பாண முஸ்லிம் வட்டாரத்தில் அமைந்துள்ள சின்னப் பள்ளிவாசல் சீர்திருத்த சபையின் செயலாளராகக் கடமையாற்றி பெரிய குளம் சின்னக்குளம் ஆகியவற்றைப் புனரமைத்ததுடன் மைய வாடிக்கு காணி வாங்கியும் அக்கடமையைச் சரிவரச் செய்தார். இதற்காகச் சேர்த்த நிதியின் வரவு செலவுகளையெல்லாம் எழுதி ஒரு பிரசுரமாகவும் வெளியிட்டார். பொதுநிதி சம்பந்தமாக இப்படி வரவு செலவுகளைப் பகிரங்கப்படுத்தி பிரசுரம் ஒன்றினை வெளியிட்டது. யாழ்ப்பாண முஸ்லிம்கள் வரலாற்றிலேயே இதுவே முதல் தடவையாகும். இதற்கு முன்பும் பின்பும் யாரும் இவ்வளவு நேர்மையாக நடந்தது கிடையாது.

அவரது கல்வி எழுத்து பேச்சு அனைத்தையும் அவரின் சொந்த நன்மைக்காக என்றுமே அவர் பயன்படுத்தியது கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை மக்களின் மேம்பாட்டுக்காகவே அர்ப்பணித்தார். இவரது இலக்கியப் பணியிலான வெள்ளி விழா 1975ல் யாழ்ப் பாணத்திலும் கொழும்பிலும் நடைபெற்றது. இருவிழாக்களிலும் அவருக்கு பொற்கிழி வழங்கிக் கௌரவித்தனர். இவர் நீர்கொழும்பில் 1997.09.12 இல் காலமானார்.

## கலாபூஷணம் அப்துல் ரஹீம்

ஆசிரியரான இவர் இளங்கீரனால் அமைக்கப்பட்ட சம தர்மத் தொட்டிலில் வளர்ந்தவர். இன்ஸான் பண்ணையில் விளைந்தவர். நாட்டின் பெரிய வாரமாத இதழ்கள் வளரும் முஸ்லிம் எழுத் தாளர்களுக்கு ஊக்கம் தர முன்வராதபோது “இன்ஸான்” வார இதழ் பல இளந் தலைமுறையினரைத் தோற்றுவித்தது என்பதை அதன் அரசியல் எதிரிகளும் ஏற்றுக் கொள்வர்.

தினகரன் பத்திரிகையில் ‘மதுகரன்’ என்ற புனைபெயருடன் கவிதைத் துறையில் புகுந்த இவரை ‘இன்ஸான்’ சிறந்த சிறுகதை எழுத்தாளராக்கியது. அதே பத்திரிகையில் அரசியல் கட்டுரைகளையும் விமர்சனங்களையும் எழுதினார். பாணந் துறை மொயீன் ஸமீம், ஓடையூர் ஹனீபா, வை. அஹ்மத், மன்னி நகர்க் கலீல், பூவெளிக்கடை மன்சூர், பாகிறா (ஷம்ஸ்) அனைவருமே இவருடன் ‘இன்ஸான்’ பண்ணையில் வளர்ந்த வர்கள் ஜனாப் ஏ. ஏ. லத்தீபை ஆசிரியராகக் கொண்ட ‘இன்ஸான்’ இஸ்லாமிய வார இதழ் இவரது முதற் சிறுகதை யான “நானும் மனிதன் தான்” என்பதை வெளியிட்டு தமிழு லகுக்கு அறிமுகம் செய்தது. இவரது முதற் சிறுகதை 1968ல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியானது. தொடர்ந்து, விடியுமா, ஆசிரியம், மாத்ருபூமி, ராஹிலா, ஆலிம்சா போன்ற சிறுகதைகளை வெளியிட்டது. 1970ல் இவரது இரு சிறுகதைகளான கடசாதி, தலைப்பிறை ஆகியவற்றை மல்லிகை வெளியிட்டது. 1974 இல் "மாணிக்கத்தில் தவறு மறைக்கப்பட்டபோது" என்ற சிறுகதை வெளியானது. சிந்தாமணி வார இதழில் பாசம், அதுவும் நன்மைக்குத்தான், வாழ்வு விடியுமா, இளம்பிறையின் ஏக்கம் ஆகிய சிறுகதைகள் வெளியாயின. கடைசியாக அவர் எழுதிய மாயமான் வேட்டை தினகரன் வாரமஞ்சரியில் வெளியானது.

இவரது கதைகளில் சமுதாய அமைப்பு முறையில் ஒதுக்கப்படும் கதாபாத்திரங்களின் அவலநிலையும் அதற்கான காரணங்களையும் கருவாகக் கொண்டார். இவர் பல தொலைக்கல்வி மொடியூல்களை எழுதியதுடன் தமிழ்மொழி, இலக்கிய பாடநூல்களின் பிரதம பதிப்பாசிரியராகவும் கடமையாற்றினார். "ஈழத்துத் தமிழ்ச் சிறுகதையாக்கத் துறையில் முஸ்லிம் கலைஞர்கள் பங்கு" என்ற தலைப்பில் சென்னையில் நடைபெற்ற அனைத்துலக இஸ்லாமியத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படிக்கப்பட்ட கட்டுரையில் ஈழத்துச் சிறந்த விமர்சகர்களுள் ஒருவரான திக்குவல்லை எம். எச். எம். சம்ஸ் "றஹீம் முஸ்லிம் சமுதாயப் பின்னணியில் முற்போக்குச் சிந்தனைகளைத் தொனிப்பொருளாக வைத்து சிறந்த கதைகளைப் படைத்துள்ளார்" என்று குறிப்பிட்டார்.

அண்மையில் இலங்கையில் நடைபெற்ற நான்காவது அனைத்துலக இஸ்லாமிய தமிழாராய்ச்சி மாநாட்டின் சிறப்பு மலரான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறைக் கொழுந்தில் இவரது "இசைத் தமிழால் ஈழத்திலோர் இலக்கியம் என்ற கட்டுரை வெளியானது.

## எம். எல். எம். இக்பால்

பட்டதாரியான இவரும் சிறந்த சிறு கதைகளை எழுதியுள்ளார். தினபதியின் தினமொரு கதைத் திட்டத்தில் இவரது கதைகள் வெளியாயின. இலங்கையின் பொருளாதாரம் குறித்தும் ஒரு சிறு நூல் எழுதியுள்ளார். சில காலங்களாக செங்கதிர் கலை இலக்கிய அறிவியல் ஏட்டின் துணை ஆசிரியராகக் கடமை யாற்றியிருக்கிறார்.

## கலாபூஷணம் செல்வி லைலா முகிதீன்

பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியையும் கதீஜா முஸ்லிம் மகளிர் மகாவித்தியாலய அதிபருமான செல்வி லைலா முகிதீன் ஒரு சிறந்த முஸ்லிம் பெண் எழுத்தாளராவார். வேம்படி மகளிர் கல்லூரியின் மாணவியாக இருக்கும்போதே 1949ல் எழுத்துலகில் கால்வைத்த செல்வி லைலா முகிதீன் புனைகதை, தொடர்கதை, மொழிபெயர்ப்பு ஆகியவற்றிலும் சமயம், இலக்கியம், கல்வி என்னும் துறைகளிலும் கணக்கற்ற கட்டுரைகள் எழுதியுள்ளார். கவிதைகள் பலவும் வெளிவந்துள்ளன. ஈழத்தின் முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் முன்னோடிகளில் இவரும் ஒருவர். தமிழில் மட்டுமல்லாது ஆங்கிலத்திலும் பல பயன்தரத்தக்க கட்டுரைகளை எழுதியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது முதலாவது சிறுகதைகளான 'தற்கொலை', 'விதியா மதியா' என்பன வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் சஞ்சிகையில் 1949, 1950 ஆம் ஆண்டுகளில் வெளியானது. இவரது தொடர்கதையான 'மீண்ட இன்பம்' 1960, 61 ஆம் ஆண்டுகளில் Y. M. M. A. வெளியிட்ட 'வாலிப முஸ்லிம்' மாத சஞ்சிகையில் வெளியானது.

கவி ரவீந்திரநாத் தாகூரின் பல சிறு கதைகளை இவர் மொழி பெயர்த்துள்ளார். 'காபுலி வாலா', 'விடுதலை', 'நாகப் பாம்பு' ஆகியன மணிக்குரல் சஞ்சிகையில் 1960-65 காலப் பகுதிகளில் வெளியாயின. மற்றொரு மொழிபெயர்ப்புக் கதையான 'பேசும் கண்கள்' 1964 இல் வீரகேசரியில் வெளியானது.

கட்டுரைகளைப் பொறுத்தவரையில் ஆங்கிலத்தில் இவர் எழுதிய 'Pearl Fishing in Ceylon' 1952 இல் வேம்படி மகளிர் பாடசாலை சஞ்சிகைகளிலும் 'Mowlana Azard and his Concept of Training Courses' 1965 இல் பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரிச் சஞ்சிகையிலும் வெளியானது.

இஸ்லாமிய சமய சம்பந்தமாகவும் பல கட்டுரைகளை இவர் எழுதியுள்ளார். ரமழான் மகத்துவம் வீரகேசரியிலும் 'திருக்குர் ஆன்' மகத்துவம் ஈழநாட்டிலும் 1970 இல் வெளியானது. இதேபோல கவிஞர் சாரணாகையூமைப் பதிப்பாசிரியராகக் கொண்ட 'இக்பால்' என்ற விசேட சஞ்சிகையில் 22.7.1964



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் 'இக்பால் தத்துவம்' என்ற கட்டுரையை எழுதினார். 1959 இல் தினகரனில் நாவலர் பற்றி ஒரு கட்டுரை எழுதினார். தமிழிலக்கியங்களில் நன்கு ஊறித் திழைத்தவரான இவர் 'இலக்கியம் கண்ட ஏந்திழையர்' என்ற தலைப்பில் மணிக்குர லிலும், அன்பினைந்திணை பற்றி 1960 இல் காலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரிச் சஞ்சிகையிலும் 'இஸ்லாமிய இலக்கியங் களில் அரபுத் தமிழ்' என்ற தலைப்பில் 1968 இல் அழுத்கம ஆசிரிய பயிற்சிக் கல்லூரிச் சஞ்சிகையிலும் கட்டுரைகளை எழுதி வெளியிட்டார். 1952, 1953 ஆம் ஆண்டுகளில் இவர் பாடசாலைச் சஞ்சிகைக்கு எழுதிய சுயஸ் கால்வாய் பிரச்சினை, பாரசீக எண்ணெய்த் தகராறு என்பன பாடசாலையில் சிறந்த கட்டுரைகளுக்கான பரிசில்களைப் பெற்றவையாகும். இதனை விட பேராதனைப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் வெளியிட்ட சஞ்சிகையில் 'எழுத்தாளர் அபுல் கலாம் ஆசாத்' என்ற பெயரிலும் கட்டுரை எழுதினார்.

கல்வித்துறையில் பெற்ற அனுபவமும் கற்ற கல்வியும் அவரைக் கல்வித்துறையின்பால் நன்கு சிந்திக்கத் தூண்டின. இதனால் கல்வியோடு சம்பந்தப்பட்ட பல ஆய்வுக் கட்டுரைகளை இவர் எழுதினார். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பல்கலைக் கழகப் பட்டப்பின் கல்வித் தகுதித் தேர்விலே ஆக்கப்படைப்பாக பல்கலைக்கழக 'புகுமுக வகுப்புக்குப் பாஞ்சாலி சபதம்' என்ப தனை வெளியிட்டார். இவரது கல்வி சம்பந்தப்பட்ட கட்டுரை களில் எமக்குக் கிடைத்துள்ளவற்றின் பெயரும் வெளியான ஆண்டுகளும் சஞ்சிகைகளும் வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. முத்தமிழுள் ஒன்று நாடகம் 1961 அழுத்கம
2. கட்டுரை ஆக்கம் 1962 ஆசிரிய
3. பாடசாலைகளில் சரித்திரம் கற்பித்தல் 1966 கலாசாலைச்
4. கட்புல செவிப்புல சாதனங்கள் 1967 சஞ்சிகை
5. வகுப்பறையில் உளவியல் - 1969 காலி மகளிர் கல்லூரிச் சஞ்சிகை
6. புதிய கல்வித்திட்டம் - வளர்மதி ஆவணி 1974

இதனை விட இன்னும் ஏராளமான சிறுகதைகள், கட்டுரைகள் என்பன தினகரன், வீரகேசரி என்பவற்றில் வெளியாயின் பல துறைகளிலும் வானொலிப் பேச்சுக்களை நிகழ்த்தியுள்ள செல்வி லைலா முகிதீன் அவர்கள் மேலும் எழுத வேண்டும்.

## பூர்ணிமா

யாழ்ப்பாண முஸ்லிம் பெண் எழுத்தாளர்களுள் ஒருவரான திருமதி. அஹ்மதா ஜிப்ரி இந்தப் புனை பெயருள் மறைந் திருந்து பல தரமான சிறு கதைகள், கட்டுரைகள், கவிதைகள் என்பன எழுதியுள்ளார். 1960-61 ஆம் ஆண்டுகளில் தினகரன், ஈழநாடு, விவேகி, அமுதம், மணிக்குரல் ஆகிய இதழ்களில் இவரது படைப்புகள் வெளியாகியுள்ளன.

## ஹமீது சுல்தான்

ஒரு சாதாரண தையல் தொழிலாளியான இவர் இளமையிலேயே மாக்சியத் தத்துவத்தால் கவரப்பட்டார். இலங்கைக் கம்யூனிஸ்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியின் முக்கிய அங்கத்தவராக இருந்த இவர் சிறந்த எழுத்தாளரும் பேச்சாளருமாவார். தெளிந்த அரசியல் சிந்தனையே இவரது படைப்புகளில் பிரதிபலித்துள்ளது. அகில இலங்கை ரீதியான 'தேசாபிமானி நடத்திய கட்டுரைப் போட்டியில் 17.3.62 இல் முதற் பரிசைப் பெற்றார். இவரது கவிதைகள் பலவும் வெளியாகியுள்ளன. இவரும் சுபைர் இளங்கீரனால் உருவாக்கப் பட்டவரே. இவரது 'வெல்வோம்' என்ற கவிதை 1.11.65 இல் 'சமதர்மம்' மாதமிரு முறை இதழில் வெளியானது; மற்றொரு கவிதையான 'லெனினாலே' என்பது 10.4.63 'யுவசக்தி' மாத இதழில் வெளியானது. இவரது பல கட்டுரைகள் 'ஈழமுழக்கம்', 'தேசாபிமானி' ஆகிய இதழ்களில் வெளிவந்துள்ளன.

## ரஹீம் ராஜி

கொழும்பு பல்கலைக்கழகத்தின் இதழியல் டிப்ளோமா பெற்றதுடன் கொழும்பு முகாமைத்துவ பட்டதாரி மாணவரான இவர் வீரகேசரி நிறுவனத்தில் துணை ஆசிரியராக கடமையாற்றினார். துயரத்துளிகள், சமூகத் துரோகிகள், புதிய அகதி முகாம் நோக்கி, மனிதரைத் தேடி ஆகிய சிறுகதைகள் எழுச்சிக்குரல் பத்திரிகையில் வெளியாகின. தொடர்ந்து 200க்கு மேற்பட்ட ஆக்கங்களை வீரகேசரி, மித்திரன் வாரமலர் ஆகியவற்றில் எழுதி வெளியிட்டார். தற்போது வேலைவாய்ப்பு பெற்று ஐக்கிய ராட்சியத்தில் பணியாற்றுகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் அசீம்

அப்துல் காதர் அசீம் ஒரு விஞ்ஞான ஆசிரியர் 1990 இல் முஸ்லிம்கள் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டதை கருவாகக் கொண்டு பல கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் என்பவற்றை எழுதினார். சரிநிகர் பத்திரிகையில் இவர் எழுதிய கவிதை பலரின் பாராட்டையும் பெற்றது. கொழும்பு பல்கலைக் கழகத்தின் பொதுசனத் தொடர்புத் துறை டிப்ளோமா பட்டம் பெற்ற இவர் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற பல்வேறு ஊடகங்களிலும் மேடை கவியரங்குகளிலும் தனது திறமையை வெளிப்படுத்தி வருகிறார்.

1996 இல் இலங்கை வானொலி நடாத்திய விமர்சன விருதுக்கான போட்டியில் முதலாம் இடத்துக்கான விருதை முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்காவிடமிருந்து பெற்றுக் கொண்டார். இவருக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் கலைஞர் முன்னணி கடந்த வருடம் "கவிச்சுடர்" என்று பட்டமளித்து கௌரவித்தது.

## சிறு பிரசுரங்கள் சஞ்சிகைகள்

சீட்டுக் கவிகள் வெளிவிடும் மரபு முன்பிருந்தே இருந்து வந்தது. தொடர்ந்தும் பல சங்கங்கள் சில நூற்களையும் துண்டுப் பிரசுரங்களையும் காலத்துக்குக் காலம் வெளியிட்டு வந்தன. இப் பிரசுரங்கள் பெரிதும் சமயத்தோடண்டியே காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாப் எம். எம். முகிதீன் என்பவர் அப்போது நிலவிய சமுதாய நிலை குறித்து 'முஸ்லிம்களுக்கோர் சமர்ப்பணம்' என்ற நூலினை வெளியிட்டார். இது சமுதாயத்தில் பெரிய தாக்க மொன்றை ஏற்படுத்தியது. மு. சுலைமான் லெப்பைப் புலவர் அவர்களும் அசனாலெப்பைப் புலவர் அவர்களும் பத்திரிகை யொன்றை நடத்தினர் என்பதை அறியவரினும் போதிய ஆதாரம் கிடைக்குமாறில்லை. 1955ல் எம். வை. எம். தாஹா அவர்களும் பீ. எஸ். முகிதீன் பிச்சையும், 'இதயதீபம்' என்ற மாத இதழை வெளியிட்டனர். 1958ல் ஏ. ஸி. மஸ்கூர் அவர்களும், எம். எஸ். ஏ. ரஹீம் அவர்களும் 'தித்திப்பு' என்ற சிறுவர் மாத சஞ்சிகையொன்று வெளியிட்டனர். 1959ல் பா. ஷா. முகிதீன் பிச்சை 'அல்ஈமான்' என்ற மாத இதழை நடத்தினார். அதனை 78ல் ஏ. ஸி. மஸ்கூர் பொறுப்பேற்று 4 இதழை மட்டும் வெளி யிட்ட பின் வெளியிடவில்லை.

சன்மார்க்க இயக்கம் எம். அஹ்மது என்பவரின் தலைமையில் பல சமயப் பிரசுரங்களை வெளியிட்டது. 1958ல் தித்திப்பு பத்திரிகையின் ஆதரவில் 'ஹஜ்ஜின் மகத்துவம்' என்ற நூல் வெளியானது இதே காலத்தில் திருமதி. சித்தி ஹதீஜா முகைதீன் 'கர்பலா போராட்ட நினைவு மலர்' ஒன்றை வெளியிட்டார். இவை யாவும் இலவச விநியோகத்துக்கென்று அச்சிடப்பட்டவை யாகும்.

ஜனாப் எம். எம். யூசுப் B.A.(Hons)ET. 1976ல் மண்கும்பான் வெள்ளைக் கடற்கரைப் பள்ளிவாசலில் அடங்கப்பட்டுள்ள சுல்தான் அப்துல் காதர் (வலி) சம்பந்தமாக ஒரு நூல் வெளி யிட்டார். 'பத்ஹுத் தையான்' என்ற அரபு நூலைத் தமிழிலாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி

சமய அறிவு பெறுதல்தான் கல்வி என்ற எண்ணம் நீண்டகாலமாக யாழ்ப்பாண முஸ்லிம் மக்களிடையே நிலவி வந்தது. இக் கல்வி தேடலும் பண்டைக் குருகுல முறைக்கேற்பவே நடந்து வந்தது. இக்காலத்திலும் ஈழத்தின் பெரும்பாலான மதரசாக் களில் இம்முறையே கடைப்பிடிக்கப்படுவது கண்கூடு. இங்கு காலத்துக்குக் காலம் வருகின்ற மௌலானாக்களிடமோ அல்லது உலமாப் பெருமக்களிடமோ 'முரீது' பெற்றுக் கொண்ட லெப்பைகளே ஆசிரியர்களாகக் கடமையாற்றினர். இந்த ஆசிரியர்கள் பெரும்பாலும் தங்கள் வீடுகளில் வைத்தே போதித்தனர். முக்கியமாக இவர்கள் அரபு மொழியையும் சமயக் கொள்கைகள் நடைமுறைகள் என்பவற்றையும் கற்பித்த னர். பிள்ளைகள் தொகை அதிகமாக பள்ளிவாசல்களுக்கருகே அதனையொட்டி மதரசாக்கள் அமைக்கப்பட்டன. இப்படி அமைக்கப்பட்ட மதரசாக்களே

மதரஸதுல் மன்பஉல் உலூம்
மதரஸதுல் மஸ்ற உத்தீன்
மதரஸதுல் முஹம்மதியா ஆகும்.

பிற்காலத்தில் இவையே ஆரம்பக் கல்விக் கூடங்களாயின. இம் மதரசாக்களில் 3 வயதில் பிரவேசிக்கும் ஒரு மாணவன் 10 வயதிற்குள் தமது மதரசாக் கல்வியை முடித்துக் கொள்வான். மதரசாக்களில் இன்று வரை இலவசமாகவே ஓதிக் கொடுக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகிறது. இந்த மதரசாக்களின் ஆசிரியர்களின் வேதனத்தைச் சில வசதி படைத்தவர்கள் வழங்கினர். தமது வாழ்வில் இடையூறு ஏற்பட்ட பொழுதிலும் இவ்வரும்பணி தடைப்பட்டு விடக்கூடாது என்பதற்காக பல நிரந்தர வருவாய்களையுடைய சொத்துக்களை இம் மதரசாக்களுக்கு எழுதி வருவாய் கிடைக்கும் வண்ணம் செய்தனர்.

இம் மதரசாக்களிடையே இயல்பாக ஏற்பட்ட போட்டியுணர்வானது யாழ்ப்பாண மக்கள் அதிக கல்வியினை பெறும் வாய்ப்பினை ஏற்படுத்தியது. அல்ஹாஜ் எம். ஐ. மீரான், முகிதீன் ஆலிம், அப்துல்லத்தீப் ஆலிம், புலவர் அப்துல்லா லெப்பை, முகம்மது மீராசாகிபு, முகமது சுல்தான், அல்லா பிச்சை ஆகியவர்கள் இம் மதரசாக்களில் அரும் பணியாற்றினர்.

கிறீஸ்தவ மிஷனறிமார்களின் பாடசாலைகள் யாழ்ப்பாண மக்களுக்குப் பரவலாக நல்ல சேவையை ஆற்றிய போதும் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் கிறீஸ்தவ மதத்துக்கு மாறி விடுவார்களோ என்ற அச்சம் காரணமாக அப்பாடசாலைகளுக்குச் சென்று உயர்கல்வி பெறாது தடுத்தனர். காலகதியில் தனியார் முகாமையின் கீழ் அரச உதவி பெறும் 5ம் வகுப்பு வரை உள்ள பாடசாலைகளாக இம் மதரசாக்கள் மாறிக் கொண்டன. பெரும்பாலும் இப்பாடசாலைகளில் தமிழர் ஆசிரியர்களே போதித்தனர். இப்பாடசாலைகளில் கற்று 5ம் வகுப்புடன் பெறுகிற கல்வி போதுமானது என்ற மனத்திருப்தியுடன் வாழ்ந்தனர். ஓரிருவர் மட்டுமே முன்னோடிகளாக சூழ வரவுள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய கல்விச்சாலைகளை நாடினர். இந்த உயர் கல்வியின் மீதான நாட்டம் தமிழர்களின் செல்வாக்காலேயே ஏற்பட்டது. 1930ன் பின் முஸ்லிம்களிடையே பல கல்விமான்கள் தோன்றி முஸ்லிம்களின் உயர்கல்வி அவசியம் பற்றி நாடு பூராவும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இந்த வகையில் அறிஞர் சித்திலெப்பை, ஐ. எல். எம். அப்துல் அஸீஸ் ஆகியவர்களின் பிரசாரங்களால் பலர் மனம் திரும்பினர். எனவே 1940ன் பின் இம் மதரசாக்களில் 5 ஆவது வரை கற்றபின் வைத்தீஸ்வர வித்தியாலயம், இந்துக் கல்லூரி, மத்திய கல்லூரி ஆகியவற்றில் கற்க முனைந்தனர். 1952ல் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் 5 ஆம் வகுப்பில் மட்டும் 45 முஸ்லிம் மாணவர்கள் கற்றனர். முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் முஸ்லிம் மாணவர்களுக்கு வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் அதிக ஆதரவு தரப்பட்டது. அறிஞர் ஏ. எம். ஏ. அஸீஸ் இங்கு சேர்ந்த 3 ஆவது முஸ்லிமாவர். 1957 வரையில் முஸ்லிம் மாணவர்கள் தமது காலைப் பிரார்த்தனையை நடாத்தவும் கூட அனுமதிக்கப்பட்டனர். இதற்கு முன்னுள்ள காலங்களில் மேற் கல்வியைப் பெற முயன்ற வர்கள் சமுதாயத்தில் பெரிய தீங்கிழைப்பவர்களாகக் கருதப் பட்டார்கள். இத் தடை காரணமாகவே முஸ்லிம்கள் தம் சூழலில் உயர்கல்வி வசதியினைக் கொண்டிருந்தபோதும் மேற் கல்வியைத் தொடராதிருந்தனர்.

இன்று இந்த நிலை மாறிவிட்டது. முஸ்லிம் மாணவர்கள் தமது சமயச் சூழலிலே கல்வி பெறவேண்டும் என்ற கருத்தை யாழ் முஸ்லிம் மக்களின் சிந்தனைக்கு முதலிலிட்டவர் மர்ஹூம் ரவுப்பாச்சா ஆவார். 1931ல் சர்வதேச இஸ்லாமிய மகாநாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலஸ்தீனத்தில் (தற்போதைய இஸ்ரவேலில்) நடைபெற்றது. இம்மகாநாட்டில் இலங்கை முஸ்லிம்கள் சார்பினில் பிரதிநிதியாக கொழும்பு ஸாகிறாக் கல்லூரியின் அரபு இஸ்லாமியப் பேராசிரியராகிய ரவுப் பாச்சா அவர்கள் கலந்துவிட்டு இலங்கைக்குத் திரும்பும் வழியில் யாழ்ப்பாண முஸ்லிம்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மீலாத் விழாவில் உரையாற்றினார். அப்போதே அவர் யாழ்ப்பாண முஸ்லிம்களுக்கு ஓர் உயர் கல்வி நிலையம் தேவை என்பதை முன்வைத்து அக்கருத்தை ஜனரஞ்சகப்படுத்தினார். இதனைப் பலரும் முழுமனதாக வரவேற்றனர். 1947 வரை முன்னெடுத்துச் செல்லப்பட்ட இக் கோரிக்கையின் பயனாக மர்ஹூம் அல்ஹாஜ் டாக்டர் டி. பி. ஜாயா அவர்களும் டாக்டர் எம். சி. எம். கலீல் அவர்களும் யாழ்ப்பாணத்தில் ஸாகிறாக் கல்லூரியின் கிளையொன்றை அமைக்க முன்வந்து ஓர் ஆலோசனைக் கூட்டமொன்றைக் கூட்டினர். அப்போது அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் தலைவராகவும் மன்ப உல் உலூம் பாடசாலையின் முகாமையாளராகவும் இருந்த வழக்கறிஞர் எஸ். எம். அபூபக்கர் அவர்களும் முகம்மதியா பாடசாலையின் முகாமையாளராக எம். சதக்கத் துல்லா அவர்களும் மஸ்ற உத்தீன் பாடசாலையின் முகாமையாளராக எம். இனாயத்துல்லா அவர்களும் இருந்தனர்.

ஸாகிறாக் கல்லூரியின் கிளை ஒன்று அமைக்கப்படுவதால் இந்த மூன்று ஆரம்பப் பாடசாலைகளையும் தம்வசம் ஒப்புவிக்க வேண்டும் என்றும் மூன்றும் ஒரே பிரதேச முகாமையாளரால் நிர்வகிக்கப்படும் என்றும் அரசாங்கம் அங்கீகரிக்க ஒரு வருடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை செல்லும் என்பதனால் அது வரை ஆசிரியர்களின் வேதனங்களை வழங்குவதற்காக 1 லட்சம் ரூபா வரை தர வேண்டும் என்றும் வந்தவர்கள் தெரிவித்தனர். இக்கோரிக்கைக் கிணங்கப் பலர் பணம் தர முன்வந்தனர். 80,000/= வரை பணம் எழுதப்பட்டது. ஏற்கனவே பணம் உதவி செய்த ஒரு தனவந்தர் தன்னால் மேலும் அதிக பணத்தைத் தரமுடியும் என்றும் அதற்காகக் தனது முதலெழுத்துடன் கூடியதாகப் பாடசாலை பெயர் அமைய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார். இந்த நிலையினில் மூன்று ஆரம்பப் பாடசாலைகளின் முகாமையாளர்களும் தங்களுக்குள் பலவித கருத்து முரண்பாடு களைக் கொண்டிருந்தனர். அக்காலத்தில் முஸ்லிம் லீக்கின் தலைவராக வழக்கறிஞர் எஸ். எம். அபூபக்கர் அவர்கள் இருந் தார்கள். ரி. பி. ஜாயா, எம். ஸி. எம். கலீல் போன்றவர்களும் அவருக்கே ஆதரவாக இருந்ததால் அவரே பிரதேச முகாமை யாளராகும் வாய்ப்பினைப் பெற்றிருந்தார். இவரது நிர்வாகத்தின் கீழியங்க மஸ்ற உத்தீன் முகாமையாளர் ஜனாப் எம். இனாயத் துல்லா விரும்பவில்லை. முகம்மதியா முகாமையாளர் ஜனாப் எம். சதக்கத்துல்லா தனது முகாமையின் கீழுள்ள வாளரசன் போன்ற ஆசிரியர்கள் வேலையை இழக்க வேண்டி வந்துவிடும் என்ற காரணத்தால் அவரும் இத்திட்டத்தை விரும்பவில்லை. இத்தகைய விரும்பத்தகாத சூழ்நிலைகளினால் அவர்கள் அனைவருமே யாழ்ப்பாண முஸ்லிம்களின் எதிர்கால நலனில் அக்கறை கொள்ளாது விட்டார்கள். இதனால் ஸாகிறாவின் கிளை அமைக்கும் திட்டம் காற்றோடு கலந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1941ல் ஜனாப்கள் எஸ். எம். எஸ். ஹமீது, எஸ். கே. அஹ்மது முகிதீன், எம். ஈ. ஷாகுல் ஆகியோர் கல்விக்குழு ஒன்று அமைத்து முதியோருக்கான இராப் பாடசாலை ஒன்றை நடத்தினர். இதற்காக மாணவர்களிடமிருந்து மாதம் ஒரு ரூபாய் அறவிட்டனர்.

1948ல் ஆரம்பமான மதரசதுல் மீறானியா முஸ்லிம்களின் மத அறிவு வளர்ச்சியில் ஈடுஇணையற்ற சேவையை ஈந்துள்ளது. பெரும்பாலும் முன்கூறப்பட்ட மதரசாக்கள் திருக்குர்ஆன் ஓத மட்டுமே கற்றுக் கொடுத்தன. சமய நடைமுறைகளைப் பயிற்றுவதில் முன்நின்றது மீறானியாவாகும். 1956-1970 காலங்களில் இங்கு இலவச இராப் பாடசாலைகளும் நடாத்தப்பட்டன. சனி, ஞாயிறு நாட்களில் காலையிலும் மாலையிலும் வேறாக வகுப்புகள் நடத்தினர். இந்த வகையில் மௌலவி ஓ. எம். அப்துர்ரஸாக் அவர்களின் சேவை பாராட்டப்படத்தக்கது. இவர் தமிழகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டபோதும் 30 வருடங்களுக்கு மேலாக தம்மிடம் கற்கும் ஒவ்வொரு மாணவனையும் ஒரு சிறு ஆலிமாக்க முயன்று வந்துள்ளார். இன்று ஈழத்தையே தமது தாயகமாகக் கொண்டு அப்பணியினைத் தொடர்ந்து செய்கிறார். இலவச இராப் பாடசாலையில் கணிதம், ஆங்கிலம், சிங்களம் என்பன போதிக்கப்பட்டன. இங்கு கற்ற மாணவர்கள் அனைவரும் தமிழர் பாடசாலைகளில் முன்னணியில் திகழ்ந்தனர்.

ஆண்களைப் போன்றே பெண்களும் தமிழர் வாழுமிடங்களுக்குச் சென்று கற்க ஆரம்பித்தனர். வைத்தீஸ்வரா, வேம்படி மகளிர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகிய வற்றிற்குச் சென்று கல்வி கற்றனர். பலர் ஆசிரியைகளாகினர். இதனால் மேலும் பல பெண்கள் கற்கத் தலைப்பட்டனர்.

இக் காலத்தில் மீளவும் முஸ்லிம் மகளிருக்கான ஒரு உயர்தர பாடசாலை ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கை முஸ்லிம்களால் முன்வைக்கப்பட்டது.

இதில் காலஞ்சென்ற எம். மீரான் முகிதீன், குவாசி எம். எம். சுல்தான், எம். அப்துல் மஜீத், அல்ஹாஜ் வி. எம். எம். எஸ். அப்துல்காதர், எஸ். ஏ. றசீன், எம். எஸ். மதார் ஆகியவர்களும் ஜனாப்கள் எம். எம். எஸ். லெப்பை, எஸ். எம். முகிதீன் ஆகியவர்களுமாக எட்டுப் பேர் கொண்ட குழு மிகவும் தீவிரமாகச் செயற்பட்டது. படித்த உயர்மட்டத்தினர் சிலர் இவர்களைக் கேலியும் கிண்டலும் செய்தனர். கண்டனத்துக்காளாகினர். இவர்கள் முஸ்லிம் கல்லூரியின் கட்டிடத்தை நிறுவக் காணி வாங்குவதற்காக பல முயற்சிகளிலும் ஈடுபட்டனர். இவர்கள் வெள்ளிக்கிழமைகளில் ஜும்ஆத் தொழுகையின் பின் மக்களிடம் கையிரந்து பணம் சேகரித்தனர். பின்னர் ஒருவாறு இன்று ஒஸ்மானியாக் கல்லூரி அமைந்துள்ள நிலம் மேற்படி குழுவால் வாங்கப்பட்டது.

இதன் பின்னர் அப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களது ஆதரவுடன் அரசநிதியும் பெறப்பட்டு பொதுமக்களின் நிதியும் சேகரிக்கப்பட்டு கட்டிட வேலை தொடங்கப்பட்டது. முஸ்லிம் கல்லூரிக்கான அத்திவாரக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லை காலஞ்சென்ற அல்ஹாஜ் ரி. பி. ஜாயா அவர்கள் நாட்டினார்கள். இதற்குள் முஸ்லிம் பெண்கள் கல்லூரி ஆரம்பிப்பதற்கு முன்னோடியாகப் பாடசாலையைத் தொடங்கி நடத்த காலம் சென்ற வி. எம். எம். எஸ். அப்துல்காதர் ஹாஜியர் தனக்குச் சொந்தமான மானிப்பாய் வீதியில் உள்ள கட்டிடம் ஒன்றை கொடுத்து உதவினார். கட்டிடம் ஓரளவு பூர்த்தியான நிலையில் திறந்து வைப்பதற்கென வந்த கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் இங்குள்ள கல்வி நிலையினை அறிந்து புதிய கட்டிடத்தை ஆண்களுக்கான ஒஸ்மானியாக் கல்லூரியாகவும் ஏற்கனவே முகம்மதிய்யாக் கலவன் பாடசாலையாக இருந்ததை முஸ்லிம் பெண்களுக்கான கதீஜா மகாவித்தியாலயமாகவும் மாற்றினார். இக் காலத்தில் ஒஸ்மானியாக் கல்லூரியில் ஜனாப் ஸி. எம். எம். ஜிப்ரி, B. A, E. T. அவர்களும், கதீஜா மகா வித்தியாலயத்தில் திருமதி ஜெசீமா ரஹீம் E. T. அவர்களும் அதிபராகக் கடமையாற்றினர்.

ஒஸ்மானியாக் கல்லூரியில் ஜனாப் ஸி. எம். எம். ஜிப்ரியின் பின்னர் ஜனாப் எம். எம். யூசுப் B. A, E. T. அவர்களும், அதன் பின்னர் ஜனாப் எம். எம். ஏ. குத்தூஸ் B. A. Dip. in Ed. அவர்களும் அதிபராகக் கடமையாற்றினர். தற்போது A. H. ஹாமீம் B.Sc Dip in Ed. அவர்களும், கதீஜா மகா வித்தியாலயத்தில் செல்வி லைலா முகிதீன் B. A. Dip. in Ed. அவர்களும் கடமையாற்றுகின்றனர்.

1977ல் யாழ்ப்பாண தேசிய அரசப் பேரவை உறுப்பினர் திரு. C. X. மாட்டின் அவர்களின் முயற்சியால் கதீஜா மகா வித்தியால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்துக்காக காதி அபூபக்கர் வீதியில் காணி சுவீகரிக்கப்பட்டு தற்போது மேல் வகுப்புகள் மட்டுமே நடைபெற்று வருகின்றன. மேலும் பல கட்டடங்கள் அங்கு கட்டப்பட்டதன் பின் கதீஜா ம. வி. புதிய இடத்தில் மட்டுமே செயற்படும். எனவே 1980ல் யாழ்ப்பாண முஸ்லிம்களுக்குச் சொந்தமாக 3 ஆரம்பப் பாட சாலைகளும் 2 மகா வித்தியாலயங்களும் இயங்கும். இப் பாடசாலைகளில் இன்று கல்வி போதிக்கும் ஆசிரியர்களில் பெரும்பான்மையினர் சொந்த ஊரவர்களேயாகும்.

# சமய விழிப்புணர்ச்சி

சமய விழிப்புணர்ச்சியைப் பொறுத்தவரையில் மூன்று காலங் களாகப் பிரிக்கப்படல் பொருத்தமானது. அவை,

1. வெளிநாட்டு ஆலிம்கள் காலம்
2. உள்நாட்டு ஆலிம்கள் காலம்
3. தப்லீக் ஜமாஅத்தினர் காலம்

முதற்காலப் பிரிவு 19 ஆம் நூற்றாண்டின் முன் ஐம்பது ஆண்டுகள் வரையுள்ள காலமாகும். இக் காலப்பிரிவில் காலத் துக்குக்காலம் தென்னிந்தியாவின் தமிழ்நாடு, கீழைக்கரை, கேரளம், அந்தரத்தீவு ஆகிய பகுதிகளிலிருந்து இங்கு வந்து 3 அல்லது 6 மாதம் வரை தங்கியிருந்து மக்களை நல்வழிப் படுத்தும் முயற்சியில் ஹதீஸ் மன்றங்களை நடத்தினர். முரீது வழங்கினர். இத்தகைய ஹதீஸ் மன்றங்களில் மக்கள் கலந்து நேரான பாதையிலிருந்தும் விலகாது வாழக் கற்றுக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது காலப்பிரிவில் உள்நாட்டில் பிறந்த பலர் தம் பிள்ளைகளை இந்தியாவிலுள்ள மதரசாக்களுக்கு அனுப்பி உலமாக்களாக்கவே அவ்வாறு உலமாக்களானவர்கள் வந்து சமயப்பணிகள் புரிந்தனர். இவர்களுள் முக்கியமானவர்கள் மர்ஹூம். எம். அப்துல்லத்தீப் ஆலிம், அல்ஹாஜ் எம். ஐ. மீரான் முகிதீன் ஆலிம், மௌலவி ஓ. எம். அப்துர் ரஸாக் ஆலிம் ஆகியவர்களாவர். இவர்களுள் மூன்றாமவர் மதரசதுல் மீறானியாவில் கல்வி கற்க வருபவர்களுக்குச் சிறந்த முறையில் இஸ்லாமிய நெறி முறைகளைப் போதிப்பதுடன் ஜும்ஆப் பிரசங்கங்கள் மூலம் மக்களை நல்வழிப்படுத்த முயலுகிறார். முதல்வரான அப்துல் லத்தீப் ஆலிம் சிறந்த முறையில் மார்க்கத் தொண்டுகள் புரிந்து வந்தார்கள். இன்றும் நம்முடன் வாழ்கிற அல்ஹாஜ் எம். ஐ. மீரான் முகிதீன் ஆலிம் அவர்கள் நெடுங் காலமாக சமய மறுமலர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்து வருகிறார். சமயம் வாய்த்த போதெல்லாம் இஸ்லாமிய வரலாற்றி லிருந்து சம்பவங்களை எடுத்துக்கூறியும் மார்க்க சம்பந்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வு கூறியும் பணிபுரிந்து வருகிறார். இலங்கை வானொலி மூலம் அவ்வப்போது திருக்குர்ஆன் விளக்க வுரையும் நிகழ்த்தி வருகிறார். இவரது முயற்சியினால் நல்வழிப் படுத்தப்பட்டவர்கள் அதிகமானவர்கள். இவரும் சு. மீ. முகம்மது முகிதீன் அவர்களும் இன்றைய தப்லீ். ஜமா அத்தாருக்கு முன்பே ஞாயிற்றுக்கிழமைகளிலும் விடுமுறை நாட்களிலும் சந்திகளில் மார்க்க உபன்னியாசம் புரிந்து வந்தனர். இது பலனளிக்காமல் போகவே வேறு பல முயற்சிகளிலும் ஈடுபட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஹ்மத்துல்லா மௌலானா என்பவரது முயற்சியில் தப்லீ∴. ஜமா அத்தும் தொடங்கப்பட்டது. அப்போதைய தப்லீ∴. ஜமா அத்தின் முன்பிருந்த மாபெரும் பிரச்சினை தொழுவதற்காக ஆட்களைத் திரட்டவேண்டியிருந்ததே. ஜும் இராத் இரவுகள் பெரிய பள்ளிவாசலில் அனுஷ்டிக்கப்பட்டன. அமைதியான முறையில் சமயப்பணி புரிவதற்காக இளைய பரம்பரையினரை உற்சாகப்படுத்தி அவர்களை முன்கொண்டு வந்தார்கள்.

ஆசிரியர்களாகிய ஜனாப்கள் எம். ஏ. எம். பஸீர் அவர்களும் எம். பி. எம். ஷாபி அவர்களும் மிகவும் தீவிரமாக இவ்வியக் கத்தில் இறங்கினர். இருவருமே இளமை முதலாக பக்தியான வாழ்வினை மேற்கொண்டு வந்த காரணத்தால் எல்லோராலும் கவரப்பட்டனர். முக்கியமாக வாலிபர் இவ்வணியில் சேர்ந்தனர். உண்மையான இஸ்லாத்தை ஹயாத்தாக்கும் பணியில் ஈடுபட்டனர். இந்த இயக்கத்தில் இணைந்த வாலிபர்கள் உண்மை இஸ்லாமியராக வாழ முயன்றனர். அனாச்சாரங்கள், ஆடம்பரங்கள் என்பவற்றை வெறுத்தனர். சீதனமின்றித் திருமணம் செய்தனர். புதுப் பள்ளிவாசலைத் தமது மர்கஸாகக் கொண்டு இயங்கி வருகின்றனர்.

பெண்களும் இவ்வணியில் திரண்டனர். பெண்களுக்கும் இந்த தப்லீ∴. ஜமா அத்தார் பெண்களைக் கொண்டே உபதேசம் செய்தனர். அண்மைக் காலத்தில் எம். பி. எம். ஷாபி ஆசிரியர் அவர்களை அமீராகக் கொண்டு தப்லீ∴. இயக்கம் வெகுவேக மாகப் பரவி வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே முக்காலப் பகுதிகளிலும் ஆற்றப்பட்ட பயன் கருதாப் பணியின் பயனாக சமய மறுமலர்ச்சி ஒன்று ஏற்பட்டிருப்பதும் அனாச்சாரங்கள் கைவிடப்பட்டமையும் மறைக்கமுடியாததாகும். இதே பணியில் ஈடுபட்டு உழைக்கும் சன்மார்க்க இயக்கத்தின் தலைவர் எம். அஹமதுவையும் நாம் மறந்துவிட முடியாது.

பள்ளிவாசல்களில் தொழுகை, மவ்லிது, ஹிஸ்பு இவற்றைவிட திக்ர் மஜ்லிஸ், ராத்திபு மஜ்லிஸ் என்பனவும் நடைபெற்று வருகின்றன.

ஐதுறூஸ் மௌலானாவின் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட ஐதுறூஸ் மகாமில் வெள்ளி திங்கள் இரவுகளில் அன்று முதல் இன்று வரை திக்ர் மஜ்லிஸ் நடைபெற்று வருகிறது. அப்துர் ரஹ்மான் மௌலானாவும் அவரின் பின் தற்போது அவர்களின் மக்களும் வருடத்துக்கொருமுறை அல்லது இரு வருடங்களுக்கு ஒருமுறை வந்து செல்வார்கள். தற்போது அசனாலெப்பைப் புலவர், வழக்கறிஞர் எஸ். எம். அபூபக்கர் ஆகியவர்களின் தம்பியாகிய கலீபா எஸ். எம். யூசுப் அவர்கள் தலைமையில் திக்ர் மஜ்லிஸ் நடைபெற்று வருகிறது.

ரிபாயியா தைக்காவிலும் வெள்ளி திங்கள் இரவுகளில் ரிபாயியா றாத்திபு நடைபெற்று வருகிறது. தற்போது கலீபா சாகுல் ஹமீது அவர்கள் தலைமையில் ரிபாயியா றாத்திபு நடத்தப்பட்டு வருகிறது. எல்லாப் பள்ளிவாசல்களிலும் இஷாத் தொழுகையின் பின் 'த.்.லீம்' எனும் சமய விளக்கக் கட்டுரைத் தொகுப்புகள் வாசிக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிவாசல்கள்

அராபியக் குடியேற்றங்களோடு பள்ளிவாசல்களின் வரலாறும் தொடர்புடையது. நமது ஆய்வின்படி முஸ்லிம்களின் முதற் குடியேற்றம் நடந்த பகுதிகளான யாழ்ப்பாணத்தின் ஒல்லாந்தர் கோட்டை அலுப்பாந்தி, சின்னக்கடை வங்கசாலை வீதி ஆகிய பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்கள் தாம் வணங்குவதற்கு மூன்று பள்ளிவாசல்களை நிர்மாணித்திருந்தனர். இந்த மூன்றில் ஒன்று கோட்டைக்குள்ளும், முதலாம் குறுக்குத் தெருவில் ஒன்றும் வங்கசாலை வீதியில் ஒன்றுமாக அமைந்திருந்தன. இவற்றை விட நயினார்தீவு, மண்கும்பான் பகுதிகளிலும் பள்ளிவாசல்கள் இருந்தன. இவை யாவற்றுள்ளும் வங்கசாலை வீதியிலமைந் துள்ள மிகவும் பெரிய ஆயிரத்துக்கு மேற்பட்டோர் தொழும் ஜும் ஆப் பள்ளி 1614 ஆம் ஆண்டு போர்த்துக்கேய இனத்துவேஷர்களால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டு அதிலேயே புதுமை மாதா கோவில் கட்டப்பட்டது.

இதே காலத்தின் பின்பே நல்லூரில் ராஜதானிக்கண்மையில் இன்று நல்லூர்க் கந்தசுவாமி கோயில் அமைந்துள்ள இடத்திலும் இருந்த மிகவும் பெரிய ஜும் ஆப் பள்ளியொன்றும் இடித்து தரைமட்டமாக்கப்பட்டது. இவையிரண்டும் முழுக்க முழுக்க அராபிய சிற்பக்கலை நிறைந்திருந்தன. நல்லூர் பள்ளிவாசல் போர்த்துக்கேயரால் 1660 வரையில் இடிக்கப்பட்டது. எனினும் அங்கு மீளவும் பள்ளிவாசலை அமைத்து வாழ்ந்து வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைவிட உசன் பகுதியிலமைக்கப்பட்ட பள்ளிவாசலும் காலத்தால் அழிந்தது. இவ்வாறு முஸ்லிம்களின் ஆதி முதற் பள்ளிவாசல்கள் யாவும் முற்றாக இடிக்கப்பட்டுத் தரைமட்டமாகி விட இப்போது வாழும்பகுதியில் குடியேறிய பின்பு சிறுசிறு பள்ளிவாசல்களாக பலவற்றைக் கட்டினர். இப்படிக் கட்டப் பட்டவைகள் ஆரம்பத்தில் இப்போதுள்ள வடிவினதாக இருக்க வில்லை. பெரிதும் மண்ணாலேயே கட்டப்பட்டிருந்தன. கல்லால் ஒரே காலத்தில் முஸ்லிம் வட்டாரத்தில் மூன்றும் கடைத்தெருவில் ஒன்றும் கட்டப்பட்டன.

காலத்தால் முந்திய ஜும்ஆப் பள்ளி முஸ்லிம் கல்லூரி வீதியிலமைந்துள்ள காட்டுப் பள்ளிவாசல் என்னும் பெரிய பள்ளி வாசலாகும். இதனையொட்டியே மையவாடியும் அமைந்திருந் தது. இது 1713ல் கட்டப்பட்டது. இதே காலத்தில் தான் ஏற்கனவே சிறியதாகக் கட்டப்பட்டிருந்த அபூபக்கர் வீதியிலுள்ள ரிபாயியா தைக்காவும் முகிதீன் பள்ளி வீதியில் முகிதீன் பள்ளி யும் கட்டப்பட்டன. இன்று இந்த முகிதீன் பள்ளி இடித்துப் பெரிய ஜும்ஆப் பள்ளியாகக் கட்டப்பட்டுள்ளது. இவ்வாறு இடிபடுவதற்கு முன்பிருந்த பள்ளிவாசலின் மேன் மாடங்கள் பெரிதும் ஒரு கோயில் போலக் காணப்பட்டது. வில்வளைவான வாயில்களைக் கொண்டிருந்தாலும் மேன் மாடங்கள் குவிமாட மாய் அமையாது பல்லவர் காலச் சிற்பமுறை பேணப்பட்டிருந்தது எல்லாப் பள்ளிவாயல்களும் மொகலாய முறையைப் பேணிக் கட்டப்பட்டிருக்க இந்த ஆரம்ப 3 பள்ளிவாசல்களும் இவ்வாறின்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்து இருந்தமை நோக்கற்பாலது. முதல் ஜும்ஆப் பள்ளி யான பெரிய பள்ளிவாசலில் தற்போது 4 ஆவது முறையாக விஸ்தரிப்பு நடந்துள்ளது. உள் மண்டபத்துள்ளே இருக்கின்ற மிஹ்றாப் அமைந்த பகுதியே ஆரம்பக் கட்டிடமாகும். இக் கட்டடத்துள் நுழைவதற்குப் பயன்பட்ட வாயிற்படிகளையும் நீர்த் தேக்கம் அமைந்திருந்த பகுதியையும் இன்றும் அடையாளம் காணக்கூடியதாக உள்ளது. மிஹ்றாப் அமைந்துள்ள மண்டபச் சுவர்கள் தூண்கள் மேலே பரவப்பட்டுள்ள மரங்கள் யாவுமே பள்ளிவாயிலின் பழமையைக் காட்டி நிற்கின்றன. இதன் பின்பு தான் ஏனைய பள்ளிவாசல்களும் கற்களால் கட்டப்பட்டன. இந்தியாவின் தேவி பட்டணத்தை (சிலர் அதிவீரராமன் பட்டணம் என்பர்)ச் சேர்ந்த பல கடைத்தெரு வணிகர்கள் கூடி தாம் வணங்கவென காங்கேசன்துறை வீதியில் ஒரு பள்ளிவாயிலைக் கட்டினர். இதன் பின்புதான் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மேமன் சமூக மக்கள் ஒன்று திரண்டு இன்று கடைத்தெரு ஜும்ஆப் பள்ளியாக விளங்கும் பள்ளிவாசலைக் கட்டினர்.

மானிப்பாய் வீதியிலமைந்துள்ள முகிதீன் பள்ளியும் காலத்தால் முந்தியது என்றாலும் கட்டிடத்தால் பிந்தியது. திருத்த வேலை கள் யாவும் 11.4.1937ல் தான் முடிவடைந்துள்ளதாகக் குறிப்பு ஒன்று கூறுகிறது. சிலர் இதுவே முதற் பள்ளிவாயிலாக இருந்தது என்றும் இன்றிருப்பது போன்று கட்டிட வடிவம் பெற்ற காலம் இது என்றும் வாதிடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபூபக்கர் வீதியில் உள்ள முகிதீன் தைக்காவை சிற்பம் கட்டும் தொழிலாளர் பலர் ஒன்று சேர்ந்து சிவலர் என்று அழைக்கப்பட்ட ஒருவரின் தலைமையில் ஒரு சிறு பள்ளியாக நிறுவினர். இதனைத் தொடர்ந்தே காவல் மால் பள்ளியும் ஐதுறூஸ் மகாமும் கட்டப்பட்டது. சிவலபள்ளி இன்றுள்ளது போன்ற தன்மையில் 1825 வரை முகம்மது என்பவரின் முயற்சியால் கட்டப்பட்டது.

முஸ்லிம்கள் தொகை பெருகிவர முஸ்லிம்களின் மையவாடியும் பெரிய பள்ளிவாசலிலிருந்து குளங்களுக்கு அண்மையிலுள்ள இடத்துக்கு மாறியது. இக்காலத்திலேயே இங்கு மௌலானா அப்பா தைக்கா ஒன்று கட்டப்பட்டது. இது எந்த வடிவத்தையும் பெறாது சாதாரண ஒல்லாந்த முறையைப் பின்பற்றியிருந்தது. இது தற்போது இடிக்கப்பட்டுப் பெரிதாகக் கட்டப்பட்டுள்ளது. எனினும் ஜனாப் ஓ. எஸ். எம். ஏ. கபூர் வரைந்துள்ள பழைய பள்ளியின் படம் இதனை நன்கு சித்திரிக்கிறது.

முஸ்லிம்கள் இப்பகுதியில் குடியேறியது முதலாக அதாவது 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து 1885 அதாவது 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை இரு நூறு ஆண்டுகளுக்கு மேலாக ஜும்ஆப் பள்ளியாக இருந்த பெரிய பள்ளிவாசலில் ஏற்பட்ட ஒரு பிணக்கையடுத்து நோன்பு திறப்பதற்காகக் காய்ச்சப் பட்டுக் கொண்டிருந்த கஞ்சியில் மண்ணை அள்ளிக்கொட்டி பெரியதொரு பிரச்சினை உண்டாகவே இரு பிரிவினராக மக்கள் பிரிந்தனர். எனவே பிரிந்த சாரார் முகிதீன் பள்ளி வீதியிலுள்ள முகிதீன் பள்ளியிலும், சிவல பள்ளியிலும், மானிப்பாய் வீதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகிதீன் பள்ளியிலும் இரண்டாவது ஜும்ஆ ஒன்றினைத் தொடங்கக் கோரினர். அவர்கள் நிராகரிக்கவே காங்கேசன்துறை வீதியில் உள்ள பள்ளிவாசலில் ஜும்ஆ நடத்த மிம்பரைக் கட்டுவித்தனர். அக்காலத்தில் அதற்கு மிக அருகில் ஜும்ஆ நடைபெற்றதனாலும் அத்துடன் காங்கேசன்துறை வீதியில் உள்ள பள்ளிவாசலைச் சூழ உள்ள இடத்தில் முஸ்லிம்களின் வதிவிடங்கள் இல்லாதிருந்ததாலும் அதுவும் மக்களால் நிராகரிக்கப்பட்டது. எனவே 1885ல் நாவலர் வீதியிலுள்ள புதுப்பள்ளியை நிறுவி ஜும்ஆ நடத்தினர். சில காலம் இரு பள்ளிகளிலுமே ஜும்ஆ நடந்தது. அப்போதிருந்த சில பெரியவர்களின் முயற்சியால் ஒரு வாரம் பெரிய பள்ளியிலும் மறுவாரம் புதுப்பள்ளியிலுமாக ஜும்ஆ நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. அதன் படியே 1885 முதல் நடைபெற்று வந்தது. முன்பு தொழில் ரீதியாகவும் காலம்காலமாக வந்து குடியேறிய இடங்களைக் கொண்டும் தம்மை இரண்டு சாரராகப் பிரித்து வைத்திருந்தார்கள். இதில் ஒரு சாரார் கல்வியறிவிலும் பொருளாதார பலத்திலும் வலிமை மிக்கவர்களாக இருந்தார்கள். இதனால் இயல்பாகவே வர்க்க பேதம் தலையெடுத்தது. இக்காலப் பகுதியில் பெரிய திண்ணைகளுடன் கூடிய வீடுகளே கட்டப்பட்டன. இத்திண்ணைகள் இவர்கள் கூடிக் கலந்து பேசும் இடங்களாக இருந்தன. இந்த வர்க்கபேதம் படிப்படியாகச் சில சந்தர்ப்பங்களில் தலைகாட்டியே இருந்தது. 1947ல் கொழும்பு ஸாகிறாவின் கிளை உருவாவதைத் தடுத்ததும் இந்த வர்க்க பேதமேயாகும். ஒரு சாராரிலிருந்து மறு சாரார் தனித்துப் பிரிந்தே வாழ்ந்தனர். திருமண உறவுகளையும் கூட அண்மைக்காலம் வரை ஏற்படுத்தாதிருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனர். இப்பிரச்சினை 1966ல் பெரிதானது. சமூகத்தினை அப்போது எதிர்நோக்கிய ஒரு பிரச்சினை சார்பாக எழுந்து பேச முனைந்த குவாசி எம். எம். சுல்தான் அவர்களை புதுப் பள்ளிவாசல் நிர்வாகம் தடுத்தமை இப்பிரச்சினையை மேலும் பெரிதாக்கியது. எனவே 19.8.1966ல் முகிதீன் பள்ளியில் ஜும்ஆத் தொழுகை நடத்தப்பட்டது. ஒரே ஊரில் ஒரே நேரத்தில் 2 ஜும்ஆத் தொழுகை நடத்தப்படும் நிலைமை அடுத்த 81 வருடத்திற்குள் மீளவும் தலைதூக்கியது. இக்காலப்பிரிவில் பல சமூக ஊழியர்களும் பெரியார்களும் பிரச்சினையை சுமுக மாகத் தீர்க்காமல் வாளாவிருந்தனர். எனவே அவர்களது முயற்சியின்மை காரணமாக அந்தக் குறுகிய காலத்துள் பல சமூக சேவகர்கள் நம்மை விட்டுப் பிரிந்தனர். ஊர் பிளவுறும் போது ஒற்றுமைப்படுத்தாது வாளாவிருப்பது சமூகத்துக்கே இழிவானதும் நஷ்டம் விளைவிக்கப்படுகின்றதொன்றுமாகும் என முஸ்லிம் பொதுமக்கள் நன்கு உணர்ந்தனர். எனவே சின்னப் பள்ளிவாசல் நிர்வாகிகளும் வேறும் சிலரும் 'ஒன்றே ஜமா அத்' இயக்கத்தை நிறுவி மூன்று பள்ளிகளுக்கும் சென்று மூன்று பள்ளிவாயில்களினதும் ரஸ்டிகளைக் கண்டு சமாதான முயற்சிக்கு இணங்கச் செய்ததால் 3 வாரங்களுக்கு ஒன்றாக முஸ்லிம் வட்டாரங்களில் ஜும்ஆ 3 பள்ளிகளிலும் நடைபெற்று வருகிறது.

இதனை விட தமிழர் வாழுகிற பகுதியினால் பிரிக்கப்பட்டுள்ள கடைத்தெருவில் ஒரு ஜும்ஆ நடைபெறுகிறது. இதனைவிட 1978ல் முதலாம் குறுக்குத்தெருவில் உள்ள பள்ளியிலும் ஜும்ஆ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறுவதாக அறிய முடிகிறது. அண்மையில் இலங்கை வந்து சென்ற மௌலானா அப்துர் ரஹ்மானின் புதல்வர் அவர்கள் கூறிய கூற்று இங்கு நோக்கத்தக்கது.

"யாழ்ப்பாண நகரத்தில் மட்டும் ஒரே நேரத்தில் 3 இடங்களில் ஜும்ஆ நடைபெறுகிறது. இது தவறானதாகும். ஆலிம்களும் உலமாக்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும்." மூன்று பள்ளி வாசல்களிலும் மாறிமாறி நடப்பதானது நம்முள் ஒற்றுமையின்மை என்ற தன்மையைப் புலப்படுத்துகிறது. எனவே எல்லாப் பள்ளி வாயில் ரஸ்டிகளும் ஒன்று திரண்டு ஏதாவது ஒரு பெரிய பள்ளிவாசலை (பெரிய பள்ளிவாசலே பொருத்தமுடையது) ஒரே ஜும்ஆவை நடத்துவதும் விருப்பமானால் மூன்றோ நான்கு கதீப்களை வாரமொன்றில் ஒவ்வொருவராக பிரசங்கம் செய்ய வைப்பதும் ஏற்றமானது. இதனால் தரமான பிரசங்கங்களை நம்மால் கேட்க முடியும். ஊரிலுள்ள அனைவரும் ஒன்று சேரும் சந்தர்ப்பமும் உருவாகும். பிரிவினை நீங்கி ஒற்றுமை பலப்படும்.

இன்று மொத்தமாக யாழ்ப்பாண நரகத்தில் 14 பள்ளிவாசல்கள் உண்டு. இவற்றில் 5 ஜும்ஆப் பள்ளியாகும். இவற்றைவிட யாழ்ப்பாண மாவட்டத்தில் பருத்தித்துறை, மண்கும்பான், நயினா தீவு, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, நாச்சுக்குடா, பள்ளிக்குடா ஆகிய இடங்களிலும் காலத்தால் முந்திய பள்ளி வாசல்கள் உண்டு. வட்டக்கச்சியில் குடியேற்றத்திட்டம் ஆரம்ப மான பின்பு ஒரு பள்ளிவாசல் கட்டப்பட்டுள்ளது. இவை யனைத்துள்ளும் ஓரிரண்டைத் தவிர ஏனையவை அனைத்துக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டகால வரலாறு உண்டு. இவையெல்லாவற்றிலும் பெரிதும் மொகலாய சிற்பக்கலையே பேணப்பட்டுள்ளது. அண்மைக் காலத்தில் முகியித்தீன் ஜும்ஆ பள்ளிவாசலிலும் சின்னப்பள்ளி வாசலிலும் இஸ்லாமிய நூல் நிலையங்கள் அமைந்துள்ளன. காதி அபூபக்கர் வீதியில் அமைந்துள்ள ரிபாயியா தைக்காவில் யாருடைய சியாறமும் அமைந்திருக்கவில்லை. எனினும் ரிபாயியா ஆண்டகையவர்களின் பெயரால் கட்டப்பட்டுள்ளபடி யால் வெள்ளி திங்கள் இரவுகளில் ரிபாயியா ராத்திபு நடைபெறு கிறது. திருமணம் முடிக்குமுன் மணமகன் இங்கு வந்து பாத்திஹா ஓதியதன் பின்னரே பெண் வீடு செல்வார். மணமக ளும் திருமணம் முடிந்தபின் முதலில் இங்கு வந்ததின் பின்பே மாமியார் வீடு உட்பட ஏனைய இடங்களுக்குச் செல்வார். பிறந்த குழந்தையையும் இங்கு கொண்டு வந்து கிடத்தி பாத்திஹா ஓதிச் செல்வர். இச் சந்தர்ப்பங்களிலெல்லாம் நாரிசாவும் வழங்குவர். இச்செயல்களாலும் நயினா முகம்மது (வலி) முகியித்தீன் அப்துல்காதர் ஜீலானி (ரஹ்), சாகுல் ஹமீது ஆண்டகை ஆகியவர்களின் பெயர்களில் கொடிகள் எடுக்கப்படுவதாலும் ஏனைய பள்ளிவாயில்களை விட இது முக்கியத்துவம் வாய்ந்ததாக மக்களால் கருதப்படுகிறது. ஜும்ஆப் பள்ளிகள் அனைத்தும் ஒரே நேரத்தில் 1000 பேருக்கு மேல் நின்று தொழக்கூடிய அளவு பெரிதானவையாகும்.

முஸ்லிம் கல்லூரி வீதியில் தற்போது மூர் மார்க்கட் அமைந் துள்ள பகுதி ஒரு மகாமுக்குச் சொந்தமானதாகும். இம் மகாமில் ராத்திபு, திக்று போன்றன நடந்து வந்தன. பின்னர் இது கவனிக்காது விடப்பட இடிந்து வீழ்ந்தது. 1972ல் இந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாமில் ரஸ்டிகளாகத் தெரியப்பட்டவர்களுடன் மாநகரசபை ஒரு குறிக்கப்பட்ட வருட ஒப்பந்தத்தில் சந்தையை நிறுவியுள்ளது.

# உடைகள்

எதிர்ப்பக்கத்தில் தரப்பட்டுள்ள படம் சுமார் 75 ஆண்டுகளுக்கு முன் எடுக்கப்பட்ட யாழ்ப்பாண முஸ்லிம்கள் பற்றிய புகைப்பட மாகும். இதிலிருந்தே இதற்கு முன்புள்ள மக்கள் எத்தகைய உடைகள் அணிந்திருப்பார்கள் என்பதை ஓரளவில் அறிய முடியும். இவர்களின் அன்றைய ஆடைகள் யாவும் பெரும்பாலும் இன்றைய மாலைதீவு வாசிகளின் ஆடையை ஒத்திருந்தன. ஆண்கள் கம்பமிட்ட பல வர்ண சாறங்களையே பெரிதும் அணிந்தனர். தாடி வளர்த்தனர், தலைபூராவும் மழித்தனர், சிறுவர்கள் முதல் பெரியவர்கள் ஈறாக அனைவரும் தொப்பிகளை அணிந்தனர். இத் தொப்பிகள் இன்றைய தொப்பிகளைப் போல வல்லாது வண்ண வேலைப்பாடுகள் கொண்டமைந்து அன்னாசிப் பழ வடிவத் தொப்பிகளாகக் காணப்பட்டன. பிற்காலத்தில் குஞ்சம் வைத்த துருக்கித் தொப்பிகளை அணிந்தனர். எல்லா ஆண்களும் சால்வை தரித்தனர். சிலர் பெல்ட்கள் அகன்ற கறுத்த நிறப்பட்டிகள், சேஸ் என்பவற்றை அணிந்தனர்.

இக் காலங்களில் திருமண வைபவங்களில் மணவாளன் தலை பூராவும் மழித்துக் கொள்ள வேண்டியிருந்தது. படத்தில் காணப் படுகிற சிறுவன் கூடப் பிற்காலத்தில் மணமகனாகச் செல்லும் போது தலைமுழுவதும் மழித்திருந்ததாக அவரே கூறியதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது மகன் எனக்குத் தெரிவித்தார். எல்லோரும் பொதுவாக தமது சறத்தை கணுக்காலுக்கு மேலே உயர்த்திக் கட்டினர். பலர் சிறுவால்கள் எனப்படும் உள்ளணியும் அணிந்தனர்.

பெண்களைப் பொறுத்தவரையில் ஆரம்ப காலங்களில் சேலைகளைச் சிறுமிகளும் அணிந்தனர். காலம் செல்ல மற்றைய சமூகங்களின் செல்வாக்கு மீதூர அவர்களைப் போல உடையணியத் தலைப்பட்டனர். சுமார் 80 வருடங்களின் முன்னர் பருவம் எய்தாத சிறுமிகளுக்குத் திருமணம் செய்து வைத்தனர். பிற்காலத்தில் அது கைவிடப்பட்டது. 1960 அளவில் நான் பொலன்னறுவையில் கற்பிக்கும்போது அங்கு பாலர் வகுப்புக்கு வரும் பெண் குழந்தைகள் அனைவரும் சேலைகளை அணிந்து வருவதைக் கண்டேன். அதேபோல எங்களிடம் இரண்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த 9 வயதுடைய பருவமடையாத சிறுமிக்கும் திருமணம் நடந்தது. எனவே வெளியாருடன் தொடர்பு அற்றுத் தனித்து சமூகம் வாழும்போது இத்தகைய முன்னோர் செயல்களைப் பின்பற்றி சில விடயங்கள் நடந்திருக்கும் என்று எண்ண இடமுண்டு. எனவே யாழ்ப்பாண முஸ்லிம்களும் இதற்கு விதிவிலக்கானவர்களல்லர்.

கணவனை இழந்த பெண்டிர் ஆபரணங்கள் எதுவுமே அணியாது வெள்ளை உடைகளையே அணிந்தனர். இன்றும் இது நடைமுறையிலுண்டு. முஸ்லிம் ஆண்கள் வெள்ளியிலான அல்லது ஐம்பொன்னாலான மோதிரத்தை மட்டுமே அணிந்தனர். தங்க ஆபரணம் ஆண்களுக்கு மதத்தில் விலக்கப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. பெண்கள் காதுபூராவும் மறைக்கும் வண்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுக் காதுகளின் ஓரங்களில் துவாரமிட்டு அலுக்கத்து என்ற நகையை அணிந்தனர். இதனை விடக் கருசமணி என்று சொல்லப்படுகின்ற சிறிய கறுப்பு மற்றும் பெரிய சிவப்பு மணிகளையும் கோத்து கழுத்தில் அணிந்தனர். இதுவே ஆரம்ப காலத்தில் தாலிக்கொடி போன்று மதிக்கப்பட்டது. இவற்றைவிட மூக்குத்திகளும் அணிந்தனர். சிறுமிகள் அரையில் மேகலையணிந்தனர். தற்காலத்தில் இத்தகைய கருசமணி, அலுக்கத்து, மூக்குத்தி, மேகலை என்பன அணியப்படுவதில்லை. தற்காலத்தில் துருக்கித் தொப்பியும் அணிவது குறைந்து வருகிறது. ஒரு சிலர் மட்டும் திருமணம், மௌத்து, ஜும்ஆ போன்ற நிகழ்ச்சிகளுக்குத் துருக்கித் தொப்பி அணிந்து செல்கிறார்கள். சில வருடங்கள் வரை பெண்கள் வீதியில் நடமாடுவது குறைவாகவே இருந்தது. வாகனங்களில் செல்லும்போதும் பிறர் காணாதபடி பின் ஆசனம் பூராவும் சேலையால் மறைக்கப்பட்டிருந்தது. தற்போது அவ் வழக்கமும் இல்லை. இப்போதும் யாழ்ப்பாண முஸ்லிம் பெண்கள் பிறர் கண்படும் இடங்களில் இருக்கும்போதும் வீதிகளில் செல்லும்போதும் முக்காடு இடுகின்றனர். மத அனுஷ்டானங்களில் ஆண்களை வீடப் பெண்களே அதிக கவனம் செலுத்துவதுபோல உடை வகையிலும் பழமையைப் பேணுவதில் பெண்களே அதிக கவனம் எடுக்கின்றனர். இன்று அன்னியர்களின் நாகரிகத்துக்கு ஆட்பட்டு பெண்களும் ஆண்களும் தமது பாரம்பரிய உடைகளைக் கைவிட்டு வருவது வேதனைக்குரியதாகும். இந்த நிலை மாறுகின்ற நேரத்திலும் தப்லீஃ. ஜமா அத்தினரின் வியக்கத்தக்க முன் மாதிரிகளால் 'பர்தா' உடை அறிமுகமாகி பரவலாக மக்களால் விரும்பப் படும் முறை சிறிது ஆறுதலைத் தருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு

உணவு வகைகள் யாவும் இஸ்லாம் சமயம் அனுமதித்தவை யாகவே இருக்கின்றன. உணவுகள் பெரும்பாலும் கீழைத்தேயப் பண்பைப் பின்பற்றியே உள்ளன. எனினும் சமையல் முறைகள் இந்துக்களின் முறையில் நின்றும் வேறுபட்டன.

அனைவரும் ஒன்றாக இருந்து உண்ணும் சகன்முறை நீண்ட காலமாக நிலவிவந்தது. தற்போது எங்கேயாவது ஓரிரு இடங் களில் மட்டும் நடைபெறுகிறது. திருமணம், மௌலிது, ஹத்தம் நடைபெறுகிற வீடுகளிலே சகன்முறை நடைபெறுவதுண்டு. எனினும் இம்முறை யாழ்ப்பாண முஸ்லிம்களிடம் அருகிவிட்டது என்றே கொள்ள வேண்டும்.

விசேட காலங்களில் பல்வகைப் பண்டங்களைச் செய்வர். அடை, பாலாடை, வட்டிலப்பம், அரியதரம், ஆவிக் கொழுக்கட்டை, வாடா, முக்குளி அப்பம், தொதல் என்பன அவற்றுள் சிலவாகும். விசேட தினங்களில் நெய்ச்சோறு ஆக்குவர். பெருநாளுக்கு முதல்நாள் இரவு பல்வகைப் பண்டங் களைச் செய்து பெருநாள் அதிகாலையில் நண்பர்கள், உறவினர்கள், ஏழைகள் அனைவருக்கும் வழங்குவர். ரமழான் மாதத்தில் 15, 27 ஆம் நாட்களிலும் சிற்றுண்டிகள் தயாரித்து பக்கீர்மார், ஏழைகள், உறவினர்கள் யாவருக்கும் வழங்குவர். பெண்களின் பூப்பு நீராட்டின் போதும் நேர்ச்சையின்போதும் தலைப்பாத்திஹா ஓதி நாரிசா வழங்குவர். யாராவது ஒருவர் இறந்தால் அவர் நினைவாக ஹத்தமுல் குர் ஆன் ஓதி 3, 7,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10, 15, 36, 40, 100 ஆகிய தினங்களிலும் (இவ்வாறு நாள் குறித்து ஓதுவது விரும்பத்தக்கதல்ல என்பர் உலமாப் பெரு மக்கள்) பின்னர் வருடத்துக்கொருமுறையும் விசேட உணவு செய்து பலருக்கும் வழங்குவர். பறா அத் இரவில் ரொட்டியும், புதிதாகத் திருமணமானவர்கள் ரமழான் மாதம் 15 ஆம் நாளில் கொழுக்கட்டையும் சுட்டு உறவினருக்கு வழங்குவர்.

# சமய சமூக விழாக்கள்

அனைத்துலக முஸ்லிம்களைப் போலவே யாழ்ப்பாண முஸ்லிம் களின் பிரதான சமயத் திருநாட்கள் ஈகைத் திருநாளும், தியாகத் திருநாளுமாகும். இவை இரண்டிலும் சமயச் சடங்குகளுடன் சில பாரம்பரியச் சடங்குகளையும் நிறைவேற்றுவர். பெரு நாட்களுக்கு முந்திய இரவுகளில் பலவகையான தின்பண்டங் களைச் செய்து காலையில் உறவினர், நண்பர்கள், ஏழைகள் அனைவருக்கும் வழங்குவர். மாலையில் உறவினர் வீடுகளுக் குச் செல்வர். ரமழான், ஷவ்வால், துல்ஹஜ் ஆகிய பிறை களைக் கண்டவுடன் இளம் பெண்கள் தமது முதிர்ந்த பெண் உறவினர்களின் வீடுகளுக்குச் சென்று சலாம் உரைப்பர். 'முஷாஹபா' செய்து கொள்வார்கள்.

ஈகைத் திருநாளன்று அதிகாலையில் பித்ரா எனப்படும் 2 சேர் அளவிலான அரிசி வீதம் குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தவ ருக்குமாகக் கணக்கிட்டு ஏழைகளின் வீடுகள் தேடிச் சென்று கொடுத்து வருவர். தியாகத் திருநாளன்றும் தாம் அறுத்து குர்பான் கொடுத்த மிருகத்தின் இறைச்சியை அவ்வாறே ஏழை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கும் உறவினர்களுக்கும் வழங்குவர். பின்னர் ஆண்கள் வேறாகவும் பெண்கள் வேறாகவும் தனித்தனியே பள்ளி சென்று தஸ்பீஹ் பெருநாள் தொழுகை போன்றவற்றை நிறைவேற்றுவர். பின் விருந்தினரை அழைத்தும் தாமும் புத்தாடைகள் அணிந்து உறவினருக்கும் வாங்கிக் கொடுத்தும் உணவும் சிற்றுண்டியும் வழங்கி மகிழ்வர்.

கடந்த காலங்களில் மாலை நேரத்தில் குதிரை வண்டி அல்லது மாட்டு வண்டியில் சிலர் ஏறி உலாத்துவதும் வழக்கமாக இருந்தது. சில வருடங்களுக்கு முன்பு வரை சம வயதுள்ள பல வாலிபர் ஒன்று சேர்ந்து ஒரேநிறமான ஆடைகளை அணிந்து கூடாரம் மடக்கிய கார்களில் உலா வந்தனர். இவ்வாறு பவனி வரும் பழக்கம் இன்று அருகி விட்டாலும் கார்களில், வாடகைக்குப் பெற்றோ, சொந்தமானவற்றிலோ ஏறி உலாத்தும் வழக்கம் இன்றும் உண்டு.

லீவு தினங்களிலும் பெருநாட் காலங்களிலும் கழிகம்பு வீசுதல், கோலாட்டம், சீனடி, புலிவேசம் போடுதல், லாடம் விளையாடு தல், போர்த்தேங்காயடித்தல் என்ற விளையாட்டுக்களை வீதி யோரங்களிலும் பொது மைதானங்களிலும் நடத்தி மகிழ்ந்தனர்.

## மீலாத் விழா

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பிறந்த இறந்த மாதமாகிய ரபியுல் அவ்வல் மாதம் இவ்விழா கொண்டாடப்படும். இதனைக் கடந்த காலங்களில் யாழ்ப்பாண முஸ்லிம்கள் மிகவும் ஆடம்பர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகக் கொண்டாடினர். இதனை யாழ்ப்பாண முஸ்லிம்கள் கொண்டாடியது போன்று சிறப்பாக ஈழத்தின் எப்பாக முஸ்லிம் களும் கொண்டாடியிருக்க மாட்டார்கள். முஸ்லிம்கள் வாழ்கிற எல்லாப் பகுதிகளும் வீதிகளும் மீலாத் விழாவையொட்டிய மூன்று நாட்களுக்கும் வெகு சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு சந்தியிலும் ஒவ்வொரு பந்தலமைப்பர். இவை ஒன்றை யொன்று விஞ்சுவதாக அமையும். இந்தப் பந்தல்களை அந்தந்தப் பகுதி வாலிபர்களே முன்நின்று அமைப்பர். பாடசாலை மாணவர்கள் தத்தமது பாடசாலைகளிலிருந்து பவனியாகச் சென்று பந்தல்கள் தோறும் இஸ்லாமிய கீதம் இசைப்பர். பின்னர் இவர்களுக்கு குடிபானங்களும் சிற்றுண்டி களும் வழங்கப்படும். இந்த மாணவர்கள் சின்னப்பள்ளிவாசல் மையவாடிக்குச் சென்று அங்கு ஹத்தமுல் குர்ஆனும் துவாவும் ஓதி மீள்வர்.

எல்லாப் பள்ளிவாசல்களிலும் ரபியுல் அவ்வல் மாதம் பூராவும் இரவில் மௌலிது ஓதி நாரிசா வழங்குவர். சில பள்ளிவாசல் களில் மௌலிது ஓதி முடிக்கப்படும் நாளில் உணவு சமைத்து பெட்டிகளில் இட்டு ஆளுக்கொரு பெட்டி வீதம் வழங்குவர். ஒவ்வொரு பெட்டியும் 1/2 கொத்து முதல் 1 கொத்து வரை யிலான அரிசிச் சோற்றைக் கொண்டு இருக்கும். இந்த நாரிசா இனமத வேறுபாடின்றி சமூகமளிப்பவர் அனைவருக்கும் தரப்படும். இப்படியான பெட்டிச் சோற்றை புதுப்பள்ளி, மீறானியாக் கல்லூரி, சிவல பள்ளி, குளத்தடிப்பள்ளி ஆகிய பள்ளிகளில் வழங்கினர். இதனைவிட நெய்ச்சோறு சமைத்து கடைத்தெரு ஜும்ஆப் பள்ளி, மானிப்பாய் வீதி முகிதீன் பள்ளி, முகியித்தீன் ஜும்ஆப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளி ஆகியவற்றிலும் வழங்கினர். காலம் சென்ற கொடை வள்ளல் யூ. எம். ஐதுறூஸ் அவர்களும் பிரபல வர்த்தகரும் சமூக சேவையாளருமான எஸ். எம். மீரான் சாகிபு அவர்களும் இப்படியான பெட்டிச்சோற்றை தனிமையாக வழங்கினர். ஏனைய யாவும் பொது நிதிகளிலிருந்தே வழங்கப்பட்டன.

மர்ஹூம் எம். வரிசை முகம்மது என்பவரின் முயற்சியால் ஆலிஜனாப் எம். ஐ. மீரான் முகிதீன் ஆலிம், புலவர் எம். அப்துல்லா லெப்பை ஆகியவர்களின் அனுசரணையுடன் சுமார் 40 வருட காலம் நபிகள் பிரான் தொண்டர்சபை என்ற பெயரில் ஒரு சபையை நிறுவி மீலாத் தினத்தன்று மதிய உணவை வழங்கி வந்தனர். அவரின் மறைவுடன் இது கைவிடப்பட்டது. பின்னர் இதுபோல நடத்தப் பலர் முயன்ற போதிலும் தொடர்ந்து நீடிக்கவில்லை.

சந்திகள் தோறும் உள்ள வாலிபர்கள் மின்சார தீபங்களால் அலங்கரித்து மார்க்க உபன்னியாசகர்களைக் கொண்டு பிரச் சாரமும் செய்வர். கடந்த இரண்டு மூன்று வருடங்களாக ஒரு மீலாத்குழு இயங்கி ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு பெட்டிச் சோறு என்ற விகிதத்தில் கொண்டு சென்று விநியோகித்து வருகிறது.

மீலாத் விழாக்களை வெறும் கேளிக்கை விழாக்களாக்க சில விஷமிகளால் கடந்த காலங்களில் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பொப் நடனங்கள், பாடல்கள், நாடகங்கள், மற்றும் கேளிக்கை நிகழ்ச்சிகளைப் புகுத்த முற்பட்டவர்கள் பலத்த கண்டனங்களுக் குள்ளாகி கைவிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒடுக்கத்துப் புதன்

ஒவ்வொரு வருடமும் ஸபர் மாதத்தின் கடைசிப் புதன்கிழமையை யாழ் முஸ்லிம்கள் கடந்த காலங்களில் ஒரு சமய விழாவாகக் கொண்டாடினர். பெருமானார் நோய்வாய்ப்பட்டுக் கிடந்து பின் எழுந்து முழுகிய நாளாக இதனைக் கருதுகிறார்கள். இத்தினம் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்க முன் பாடசாலை விடுமுறை தினமாகவும் அனுஷ்டிக்கப்பட்டது. இத் தினத்தில் மதரசாக்களிலும் சில ஆலிம்களின் வீடுகளிலும் 'இஸ்ம்' என்று கூறப்பட்ட ஒரு துஆவை வாழை இலையில் எழுதி வழங்குவர். அன்று கடலில் குளிக்க வசதியுடையவர்கள் கடலில் குளிக்க ஏனையவர்கள் கடலில் ஒரு சிறு பாத்திரத்தில் நீரைப் பெற்று வந்து அத்துடன் தேங்காய்ப் பாலையும் தலைக்குப் பூசிக் குளிப்பர். பின் இஸ்மை நீரில் கழுவி அதனையும் குடிப்பர். இஸ்ம் எழுதப்பட்ட வாழை இலையை வீசிவிடாது தத்தமது கிணறுகளிலேயே இடுவர். இப்படிச் செய்வதனால் தமது நோய்கள் தீரும் எனவும் நம்பினர். இதுவும் இன்று முற்றாக மறைந்துவிட்டது.

யாழ்ப்பாண முஸ்லிம்கள் பன்னிரண்டு மாதத்தையும் தங்களது பேச்சு வழக்கில் பின்வருமாறு கணக்கிடுவர்.

| | | |
|---|---|---|
| ஆஷூரா | - | முஹர்ரம் |
| ஸவர்கழி | - | ஸபர் |
| ஆண்டவர் கந்தூரி | - | ரபியுல் அவ்வல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| முகிதீன் ஆண்டவர் கந்தூரி | - | ரபியுல் ஆஹிர் |
| மிஸ்கின் கந்தூரி | - | ஜமாதுல் அவ்வல் |
| மீரா கந்தூரி | - | ஜமாதுல் ஆஹிர் |
| தோவத்து | - | ரஜப் |
| விலாத்து (பறாஅத்து) | - | ஷ.்.பான் |
| நோன்பு | - | ரமழான் |
| பெருநாள் மாதம் | - | ஷவ்வால் |
| இடையிட்ட மாதம் | - | துல்க.்.தா |
| ஹஜ்ஜு | - | துல்ஹஜ் |

இப்பெயர்கள் யாவும் அம் மாதத்தின் விசேட அம்சங்களை மனத்தில் கொண்டு இடப்பட்டவையாகும்.

## பல்லக்கு எடுத்தல்

கடந்த 30 வருடங்களுக்கு முன்பு வரை ஒரு விசித்திரமான மூடக்கொள்கையொன்று நிலவி வந்தது. இந்துக்களின் தேரில் அவர்களது சுவாமி ஊர்வலம் வருவதுபோல அவ்லியா ஒருவர் உலா வருவதாக இது அமைந்திருந்தது. இது சில பள்ளிகளி லிருந்தும் சில தனிப்பட்டவர்கள் மூலமும் நடத்தப்பட்டன. இவ்வாறு தனிப்பட்ட முறையில் முத்து முகம்மது, சின்னத்தம்பி, செம்மாதெரு கபீபு முகம்மது ஆகியவர்கள் எடுத்தனர். அபூபக்கர் வீதியிலுள்ள ரிபாயியா தைக்காவிலிருந்து இந்தப் பல்லக்கு புறப்படும். இது முஹர்ரம் மாதத்தில் எடுக்கப்படும். ஒரு கூடுபோலச் செய்து அதன் உள்ளே ஒருவர் அமர்ந்திருப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலவும் செய்து மிகவும் தடித்த இரு நீண்ட கப்புகளின் மேல் வைத்து அதனைத் தூக்கி வருவர். உள்ளே ஒரு கதிரையை வைத்து அதனைப் போர்வையால் மூடி அதன் மீது பலவிதமான மலர்களைத் தூவி இருப்பர். கூடவே நாரிசா வண்டில்களும் செல்லும். மேற்படி பல்லக்கை பக்தி சிரத்தை யுடன் வாலிபர்கள் சுமந்து செல்வர். பல்லக்குச் செல்கின்ற வழியெல்லாம் மக்கள் கூட்டிப் பெருக்கி நீர் தெளித்துப் பயபக்தி யுடன் வரவேற்பர். தம் வாசல்களில் நீண்ட வாங்குகளில் பெரிய தட்டுகளில் தின்பண்டங்கள், வாழை, பலா, மா, மாதுளை, தோடம்பழ வகைகள், அவல் என்பவற்றை வைத்திருப் பர். கூடவே குத்துவிளக்கும் நிறைகுடமும் வைத்திருப்பர். பல்லக்கு இவ்விடங்களை வந்து அடைந்ததும் அவை யாவும் கூடவரும் சிறுவர்கட்கும் பொதுமக்கட்கும் இலவசமாக வழங்கப் படும். இந்தப் பல்லக்கைக் கீழிறக்கினால் பின்பு மேலே தூக்குவது மிகுந்த சிரமமாதலால் கீழே இறக்காமலே அப்படியே தூக்குபவர்கள் இளைப்பாறும் வண்ணம் கெவர்களையுடைய கப்புகளையும் கூடவே கொண்டு செல்வர். பல்லக்கைத் தூக்கு பவர்களில் யாராவது ஒருவர் “ஆயக்கால்” என்று கூறியவுடன் இத்தகைய கெவர்த்தடியை நிறுத்தி அதன் மீது பல்லக்கை வைப்பர். இந்தப் பல்லக்கு செய்யும் பணியில் பலர் பல நாட் களுக்கு ஈடுபடுவர். பல வண்ண வேலைப்பாடுகள் மற்றும் சருகை (வங்கி) வேலைகள், மணிமாலைகள் ஆகியவற்றைக் கொண்டிருக்கும். இது எடுக்கப்படும் காலத்தில் நாங்கள் சிறுவர்களாக இருந்தோம். பல்லக்கின் உள்ளே என்ன இருக் கிறது என்று அறியும் முனைப்பார்வம் மீதூர உயரமான ஜன்னல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், கட்டிடங்களில் ஏறி உள்ளே அவ்லியா இருக்கிறாரா என்று எட்டிப் பார்ப்போம்.

கடைசிவரை எடுக்கப்பட்ட பல்லக்கு பாசிப் பட்டனத்தில் அடங்கி யுள்ள நெய்னா முகம்மது ஒலியுல்லா பெயரிலேயே எடுக்கப் பட்டது. பல்லக்கில் வைக்கப்பட்டுள்ள கதிரையில் மலர் தூவப்பட்டிருக்கும். அதில் நெயினா முகம்மது (ஒலி) இருந்து வலம்வருவார் என்று மக்கள் நம்பினர். இப்படிப் பல்லக்கு எடுக்கும்வரை அதிகமான தொற்று நோய்கள் நிலவும் என்றும் இவ்வாறு பல்லக்கு எடுத்த பின் அத்தொற்று நோய்கள் யாவும் முற்றாக ஒழிந்துவிடும் எனவும் மக்கள் நம்பினர். இவ்வாறு பல்லக்குத் தூக்கிச் செல்லும்போது கூடச் செல்வோர் பாடிச் செல்வதற்கென அப்போது வாழ்ந்த பல புலவர்களாலும் நெய்னா முகம்மது (ஒலி) முனாஜாத்துகள் பாடியிருந்தனர். தற்போது இம் முனாஜாத்துகளில் அரபியில் ஒன்றும் தமிழிலும் ஒன்றுமாக இரண்டு உள்ளது. தற்காலத்தில் கூட முஸ்லிம் பெண்கள் இந்த நயினா முகம்மது (ஒலி) மீதான முனாஜாத்தை ஓதுவத னால் தமது வீட்டில் நோய்கள் வந்து சேராது என்ற நம்பிக்கை யில் பாடி வருகின்றனர். முக்கியமாக முஹர்ரம் மாதத்தில் பாடுவர்.

இஸ்லாம் சமய அறிவுடன் சிந்தனையும் வளர்ந்து வந்ததனால் இன்று இப்பல்லக்கு எடுக்கும் வழக்கம் அடியோடு மறைந்து விட்டது. இப்பல்லக்கினைச் சில தனியாரும் ஆரம்பத்தில் எடுத்த னர். இவற்றில் ஒன்று ஆடு கூடுபோல இருந்தது. இவையனைத் தும் சின்னப் பள்ளிவாசலுக்குச் சென்று "துஆ" ஓதி மீளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிகள்

முன்பு கூறப்பட்ட பல்லக்குடன் கூடவே கொடியும் எடுக்கப்பட்டது. தற்போது ரிபாயியா தைக்காவில் 3 கொடியேற்று வைபவங்கள் நடைபெறுகின்றன. இன்று மூன்றும் ஒரே பள்ளிவாயிலில் நடைபெற்றபோதும் இதற்கு மூன்று சம்பவங்கள் தொடர்புடையன வாகவுள்ளன. வருடாவருடம் எடுக்கப்படும் பல்லக்கு நிறுத்தப் பட நயினா முகம்மது ஒலியுல்லா பேரில் ஒரு கொடியினை தொடர்ந்து ரிபாயியா நிர்வாகம் நடத்தியது. இதுபோல முகிதீன் அப்துல் காதர் ஜீலானி அவர்கள் பேரால் முகிதீன் பள்ளியி லிருந்து எடுத்த கொடியும் அந்த நிர்வாகிகள் கைவிட அந்தக் கொடியையும் ரிபாயியா தைக்கா நிர்வாகமே ஏற்றது. "அரபி" என்று அழைக்கப்பட்ட ஒருவரால் நாகூர் சாகுல் ஹமீது ஆண்டகை பேரால் கொடி எடுக்கப்பட்டு வந்தது. அவர் காலம் செல்ல அந்தக் கொடியையும் ரிபாயியா நிர்வாகமே ஏற்றது.

தற்போது கொடியேற்றம் என்பது ரிபாயியா தைக்காவில் கொடிகள் சிலவற்றை உயரத் தூக்கிக் கட்டுதலுடன் ஆரம்ப மாகிற விழாவாக இருக்கிறது. 20 வருடங்களின் முன்பு இக் கொடியேற்றம் வேறுவிதமாக இருந்தது. பிறை கண்டவுடன் சில வீடுகளில் சந்தனக்குடம் கொடுக்கும் நிகழ்ச்சி நடைபெறும். அதைப்பெற ராத்திபு ஹலீபாவும் பிள்ளைகளும் ரபான் என்னும் சிறிய மேளத்தை அடித்து ராத்திபு செய்து பைத் ஓதிக்கொண்டு செல்வார்கள். அப்போது அந்த வீட்டிலுள்ளவர்களால் சிற்றுண்டி யும் தேநீரும் வழங்கப்படும். பின் அடுத்த நாள் அதிகாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் சுபுஹுத் தொழுகையின் பின்னர் ஒரு பெரிய பச்சைக் கொடியை மிகவும் உயரமான கம்பு ஒன்றில் ஒருவர் கட்டி வைத்திருப்பார். இக்கொடியில் பிறை நட்சத்திரம் அரபு எழுத் துக்கள் பொறிக்கப்பட்டிருக்கும். காலையில் புறப்படும் ஊர்வலத் தில் இரண்டு வண்டில்கள் பங்குகொள்ளும் முன்னே செல்கிற வண்டில் சிறிதாயும் யாராவது பையன்கள் அதனை இழுத்துச் செல்வதாயுமிருக்கும். இவ்வண்டியில் சாம்பிராணி சந்தனக் குச்சிகள் என்பன ஏற்றப்பட்டு ஒரே புகையாகவே இருக்கும். இந்த வண்டியிலே ஒரு உண்டியலும் இருக்கும். அதிலுள்ள ஒரு பெட்டியில் வெள்ளை, பச்சை நிறங்களாலான சிறிய கொடி கள் இருக்கும். முதலாவது வண்டியில் உள்ள உண்டியலில் காசு போடுவதன் மூலம் ஒரு சிறிய கொடியொன்றைப் பெறுவர். இக்கொடியினால் தமது உணவுப் பண்டங்களை மூடி இரண்டா வது வண்டிலுக்கு அனுப்புவர். இவ் வண்டிலை பெரும்பாலும் மாடு இழுப்பதுடன் பல கடகங்களையும் அதனுள் கொண்டிருக் கும். முதலாவது வண்டிலுக்கும் இரண்டாவது வண்டிலுக்கு மிடையில் மிகவும் பெரிய கொடியை ஒருவர் ஏந்தி வர அவருடன் கூடவே பைத் ஓதுகின்றவர்களும் ஓதிக்கொண்டே வருவர். பின்வரும் வண்டிலே நாரிசா வண்டிலாகும். கொடிக்கு நாரிசா வழங்கவென பலர் தத்தமது வீடுகளில் புக்கை என்று வழங்கும் பாற்சோறு, நெய்ச்சோறு, பேரீந்து, வாழைப்பழம், மாதுளை, தோடம்பழ வகைகள், பிஸ்கத்துக்கள் என்பவற்றை வழங்குவர். இதனைப் பெற்றுக் கொண்ட இரண்டாவது வண்டி லில் உள்ளவர் அதனை அங்குள்ள கடகம் ஒன்றினுள் கொட்டி விட்டு ஏற்கனவே சேர்ந்துள்ள நாரிசாக்களில் சிலவற்றை எடுத்து வழங்குவர். இப்படி ஊர்வலமாகப் போகும்போது சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களில் அனைவருக்கும் தேநீர் வழங்குவதும் உண்டு. இதுவும் பல்லக்கைப் போலவே எல்லா வீதிகளுக்கும் சென்று இறுதியில் நடு இரவின் பின் பள்ளிவாசலை வந்தடையும். இவ்வாறு ஊர்வலம் செல்வது இன்று கைவிடப்பட்டுள்ளது. ஏனைய செயல்கள் ரிபாயியா தைக்காவில் நடைபெறுகின்றன. பள்ளிவாயிலில் இறுதியாகச் சேர்ந்த நாரிசாக்கள் றாத்திபு துவா என்பன முடிந்த பின் அங்கு நிற்போருக்கு வழங்கப்படும்.

## பாட்டுப்பாடல்

விசேட தினங்களிலும் நேர்த்திக் கடனாகவும் இந்தப் பாட்டுப் பாடல் நிகழ்ச்சி நடைபெறுவது உண்டு. இன்று இதுவும் குறைந்தே வந்துள்ளது. யாழ்ப்பாண முஸ்லிம்களைச் சூழ உள்ள இடங்களில் உள்ள கோயில்களில் பாரதம், இராமாயணம் என்ற காவியங்கள் கதாப் பிரசங்கமாக நடைபெறுவது உண்டு. கதை கேட்கும் இயல்பு, விருப்பு யாருக்கும் உரியதாதலால் முஸ்லிம்களும் இத்தகைய கதாப் பிரசங்கங்களுக்குச் சென்றனர். இவ்வாறு செல்பவர்கள் நாளடைவில் மதம் மாறி விடுவார்களோ என்ற அச்சம் அன்றையத் தமிழ்ப் புலவர்களுக்கு இருந்தது. இதனால் வருடம் ஒருமுறை பொதுத் தலங்களிலும், நேர்ச்சை யாகத் தனியார் வீடுகளிலும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் பாடப்பட்டுப் பொருள் சொல்லப்பட்டன. இந்த நிலையில் பெரிதும் உமறுப் புலவரின் சீறாப் புராணமே பாடப்பட்டது. கி. பி. 1811ல் பதுறுத்தீன் புலவரின் முகிதீன் புராணம் வெளியாக பெரும்பாலும் முகிதீன் புராணமே பாடப்படுகிறது. தற்காலத்தில் நேர்த்திக் கடனாக மட்டுமே பாட்டுப் பாடல் நடைபெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறது. இத்துறையில் முகம்மது மதாறு, அப்துல்லாப் புலவர் அவர்களும் தற்காலத்தில் எம். நூறு முகம்மது அவர் களும் சிறந்து விளங்கினர்.

# முஸ்லிம்களுக்கே உரித்தான கலைநிகழ்ச்சிகள்

முற்கூறப்பட்ட விழாக்களில் கழிகம்பு வீசுதல், சீனடி விளையாட் டுக்கள், புலிவேசம், கோலாட்டம் என்பவற்றை நடத்தி மகிழ்வர். சீனடி விளையாட்டுக்களில் வல்லவர் பலர் முன்பு இருந்தார்கள். இப்போதும் இருக்கிறார்கள். இக்கலை அழிந்துவிடாது பாது காக்க இளைஞர் முன்வர வேண்டும். சங்கிலியின் இருபக்கத் திலும் அல்லது சிலம்படி கம்பின் இரு பக்கத்திலும் நெருப்புப் பந்தங்களைக் கொழுத்தி சுழன்றாடி பலவாறும் வீசி விளையாடும் விளையாட்டும் ஒன்றாகும். கோலாட்டம் என்ற விளையாட்டில் சிறியவர் மட்டுமன்றிப் பெரியவர்களும் கலந்து கொண்டனர். இக் கோலட்டத்தின்போது பாடவெனப் பல பாடல்களைக்கூட அன்றைய புலவர்கள் இயற்றியுள்ளனர்.

சில வருடங்கட்கு முன்வாழ்ந்த பக்கீர் முகிதீன் “மல்லிகை முல்லை, மணமுள்ள இறசூல்” எனத் தொடங்கும் பாடலை இதற்காக யாத்துப் பாடி வந்தார். அது எழுத்து வடிவில் இல்லாததால் இன்று அப்பாடல் பூரணமாகக் கிடைக்கவே இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சியாறங்கள் (சமாதிகள்)

யாழ்ப்பாண நகர எல்லையுள் முஸ்லிம்களின் சியாறங்கள் எதுவுமில்லை. வேலணை, மண்கும்பான் பள்ளிவாசலில் ஹழரத்து சுல்தான் அப்துல்காதர் ஒலியுல்லாவின் சியாறம் (அடக்கஸ்தலம்) உண்டு. இது பற்றி பல கதைகள் நிலவி வருகின்றன. கீழைக்கரைச் சோனகர் தாம் கடற்றொழில் புரியும் காலத்தில் (1598) இங்கு வந்து தங்கினர். அக்காலையில் இங்கு ஓர் அதிசய சம்பவம் நிகழ்ந்தது. அன்று இரவு அங்கு தங்கிய ஒருவரின் கனவில் இந்த இடத்தில் ஒரு பெரியார் அடங்கப்பட்டுள்ளார். அவரது காரணத்தினாலேயே பகலில் அந்த அதிசய சம்பவம் நடந்தது என்று கூறி அங்கு ஒரு பள்ளி அமைக்கப்படுதல் வேண்டும் என்று ஒரு பெரியார் கூறவே அவர்களாலேயே முதலாவது பள்ளி அமைக்கப்பட்டது என்பர்.

இங்கு வருடாவருடம் ஷ.்.பான் மாதம் பிறை ஒன்றில் கொடி யேற்று வைபவமும் 10ம் நாள் கொடியிறக்கு வைபவமும் அன்னதானமும் வழங்கப்படும். இக்காலையில் யாழ்ப்பாண முஸ்லிம்கள் பலர் அங்கு சென்று தங்குவர். வெள்ளைக் கடற்கரையின் கடற்கரை இந்தியாவின் நாகைப் பட்டினக் கரையைப் போன்ற அமைப்புக் கொண்டது. இந்தப் பள்ளிவாசல் அண்மைக் காலத்தில் கா. மீரான் முகிதீன் என்பவரது முயற்சி யால் புதுப்பொலிவு பெற்று வருகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர்க் கோயிலின் உள்ளே மூலஸ்தானத்துக்குப் பின்னால் ஒரு நல்லடியாரின் சியாறம் உண்டு. அது இன்னமும் இடிபடாத நிலையில் உள்ளது. அச் சியாறத்துக்கு முஸ்லிம்கள் செல்ல வென இருந்த வாயில் அடைக்கப்பட்டு விட்டதால் உள்ளே செல்லவேண்டின் இந்து ஆசாரப்படியே செல்ல வேண்டும். அங்கு மூலஸ்தானத்தைச் சூழ வர அமைந்துள்ள சுவரில் சியாறம் மறைந்துவிட்டாலும் கால்மாடு யாரும் காணக்கூடிய தாக உள்ளது. அதில் இந்து நிர்வாகிகளே என்றுமே அணையாத விளக்கு ஒன்றை ஏற்றிக் கவனித்து வருகிறார்கள். முஸ்லிம்கள் யாரும் இந்த சியாறத்தைத் தரிசிக்க விரும்பினால் உள்ளே சென்றால் கால்மாட்டை மட்டுமே காணமுடியும்.

கோட்டை முனியப்பர் கோவிலுக்குப் பின்னுள்ள மரத்தினடியிலே முத்துண்டி அவுலியா அடங்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது. நல்லூரைத் தவிர ஏனைய சியாறங்களுக்கு மக்கள் இன்றும் சென்று அங்கு அடங்கப்பட்டவர்களை தரிசிப்பர்.

# திருமண சம்பிரதாயங்கள்

சமயச் சடங்குகள் அனைத்தும் ஒழுங்குறத் திருமணங்களின் போது அனுசரிக்கப்பட்ட போதிலும் சில பழக்கவழக்கங்கள் இந்துக்களைப் பின்பற்றியே உள்ளன. ஒருவர் நான்கு மனைவி யர் வரை வைத்திருக்கலாம் என மார்க்கம் அனுமதித்தபோதும் அந்த நால்வரையும் ஒரே விதத்தில் எவ்வித குறைபாடுமற்று வைத்திருக்கக்கூடிய பொருளாதாரவளம், உடல் வளம், மனோ வளம் என்பவற்றைக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்கேற்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாதிருப்பதனால் மட்டுமல்ல தாம் வாழ்ந்து பழகிய சூழற் செல்வாக்காலும் கூட 99.99 வீதமானவர்களும் ஒரே ஒரு மனைவியருடன் தான் யாழ்ப்பாணத்தில் வாழ்கிறார்கள். அதுவே உயர் பண்பாகவும் யாழ்ப்பாணத்தவர் கருதுகிறார்கள்.

இஸ்லாமிய சட்டத்தின்படி பெண்ணைப் பெற்றவர்களிடம் எதை யுமே எதிர்பாராது இன்னமும் பெண்களுக்கு மஹர் கொடுத்து முடிக்கவேண்டும். இஸ்லாமிய சட்டப்படி பெண்களை விட ஆண் களுக்கே கூடிய பாத்தியதை உண்டு. இதே நடைமுறை ஈழத்தில் வாழும் மேமன் சமூக மக்களால் நன்கு கடைப்பிடிக் கப்படுகிறது. லிபியா, சவூதி அரேபியா போன்ற நாடுகளில் இம்முறையே அமுலிலுண்டு. இதனால் தான் நான் இப்பந்தியில் குறிப்பிட்ட மேமன் சமூக மக்களிலும் அதேபோல இஸ்லாமிய நாடுகளிலும் பெண்கள் தொகை குறைவாக உள்ளன. எங்கு பெண் உதாசீனம் செய்யப்படுகிறாளோ அங்கு அவள் தொகை மேலும் பெருகுகிறது. எங்கு கௌரவிக்கப்படுகிறாளோ, அங்கு அவள் தொகையும் குறைகிறது.

இனி திருமணம் பற்றிப் பார்க்கையில் பெ்ண் வீட்டாராலேயே முதலில் பேச்சு ஆரம்பிக்கப்படும். ஆண்வீட்டார் சம்மதம் தெரிவித்த பின்பே சீதனமாக என்னென்ன தரப்படும் என்ற கேள்வி எழுப்பப்படும். இக்கட்டத்தில் ஆண் வீட்டார் பேரம் பேசி முடிவு வந்தபின்பே முறைப்படி ஒரு நல்ல நாளில் பெண்ணின் மிக நெருங்கிய உறவினர்கள் ஆண் வீட்டுக்குச் செல்வர். அங்கு சீதனம் பற்றிக் கலந்துரையாடுவர். திருமணத்தை எப்போது நடத்தலாம் அதற்கு முன் எப்போது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவடிப் பணத்தைக் கொடுக்கலாம் என்றெல்லாம் தீர்மானிப்பர். பின் ஒரு நல்ல நாளில் செப்பு எடுப்பர். இந்த நாள் பார்க்கும் பழக்கம் யாழ்ப்பாண முஸ்லிம்களிடையே பெரும்பாலும் காணப் படுகிறது. அட்டமி, நவமி, கரிநாள், இராகு காலம் போன்ற நாட்களில் நற்காரியங்களை அவர்கள் செய்யமாட்டார்கள். திருமணத்தின் முன்பு இரு வீட்டாரும் செப்பு எடுப்பார்கள். இப்படி எடுக்கப்படும் செப்புகள் பல வகைப்படும். பழச்செப்பு, பாற்செப்பு, பலகாரச் செப்பு, சோற்றுச் செப்பு என்பவற்றில் ஏதாவதொன்றை எடுப்பர். உறவினர்கள் அல்லது கூலிக்கமர்த் தப்படுபவர்கள் தலையில் ஒற்றைப்படும் எண்ணைக் கொண்ட தாக செப்பைப் பெண்வீட்டார் ஆண் வீட்டாருக்கு அனுப்ப அது போலவே ஆண் வீட்டாரும் செப்பு எடுப்பர். இந்த செப்புகளின் எண்ணிக்கை 3லிருந்து 11 வரையுமிருக்கும். செப்பு களில் சில கேலிச் சம்பவங்கள் இடம் பெறுவதுண்டு. சுவை யான இனிப்புப் பண்டங்களின் உள்ளே மிளகாய்த் தூளோ அல்லது புளிந்த தேங்காய்ப்பூவோ, தும்போ வைத்துச் செய்வர். இது உண்போரை ஏமாற்றுவதற்காகும்.

பின்னர் ஒரு நல்ல நாளில் சவடிப்பணம் கொடுப்பர். இந்த நிகழ்ச்சி சவடி எனப்படும் தாலி வாங்குவதற்கு பெண் வீட்டார் மாப்பிள்ளைக்குக் கொடுக்கும் அன்பளிப்பாகும். பெண் வீட்டார் வழங்கும் அந்தப் பணத்துடன் 2 மடங்குகளுக்கு மேலாக ஆண் வீட்டார் சேர்த்து தாலி செய்வார்கள். இந்த நிகழ்ச்சி இந்துக்களின் பொன்னுருக்கல் நிகழ்ச்சியைப் போன்றதாகும். அல்லது ஏனைய மாகாணங்களில் நடைபெறும் அடையாளம் போடுதல் நிகழ்ச்சியை ஒத்ததாகும். இந்த அடையாளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடுதல் பெண் வீட்டாருக்கு ஆண் வீட்டார் கொடுப்பதாகும். இது நேர் மாறானதாகும். பெரும்பாலும் இது திருமணத்துக் குச் சில நாட்களுக்கு முன்பே பெரிதும் நடைபெறும். அப்போது தான் முடிவாக திருமணத்தையும் தீர்மானிப்பர்.

இந்த நிகழ்ச்சியின் பின்னர் ஒரு நாளில் மணப்பெண் வீட்டைச் சேர்ந்த சில பெண்கள் ஆண் வீட்டுக்குச் சென்று திருமணத் தினத்தைக் குறிப்பிட்டு அவர்களை அழைப்பர். இதுவும் முன்னறி விப்பின்படியே நடத்தப்படும். அத்துடன் பெண் வீட்டாருடன் சேர்ந்து பெண்களினதும் ஆண்களினதும் உறவினர்களை அழைப்பர். இவ்வாறு ஆட்களை அழைக்கும் சடங்கு முடிந்த பின் திருமண ஏற்பாடுகளைக் கவனிப்பர்.

திருமண நாளன்று நெருங்கிய உறவினர்கள் அதிகாலையில் அல்லது முதல் நாளன்றே வந்து எல்லா வேலைகளிலும் பங்கு கொள்வர். திருமணத்துக்கு அழைக்கப்படும்போது சிங்களப் பிரதேசங்களில் நடப்பது போல வெற்றிலை வைத்து அழைக்கும் பண்பு இல்லை. அழைப்பிதழ் அடித்திருந்தால் அதனை வழங்கு வர். நெருங்கிய உறவினர்களை நேரில் சென்றும் அழைப்பர். இதனைவிட திருமணத் தினத்தன்று மத்தியான உணவுக்காக விசேடமாக முதல் நாளே வீடுகளுக்குச் சென்று அழைப்பு விடுவர். திருமண நாளன்று காலையுணவு, மதிய உணவு என்பன முன்பு கூறியபடி அழைப்பின்படி வந்தவர்கள், உறவினர் கள், நண்பர்கள் அனைவருக்குமே வழங்கப்படும். பெரும்பாலும் மதிய உணவில் நெய்ச்சோறும் ஆட்டிறைச்சிக்கறி மற்றும் ஏனைய மரக்கறிகள் என்பனவும் பரிமாறப்படும். ஏனைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாணங்களில் நிகழ்வது போல பெண் வீட்டாரும் ஆண் வீட்டாரும் ஒன்றாகக் கலந்து இரவு உணவினைப் பெண் வீட்டில் வைத்துக் கொள்ளும் முறை யாழ்ப்பாணத்தில் இல்லை. என்றாலும் அண்மைக் காலங்களில் ஏனைய மாகாண முஸ்லிம் களைப் பின்பற்றி ஓரிரு வீடுகளில் நடைபெற்றது குறிப்பிடத் தக்கது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் திருமண நாளன்று மதிய உணவே பிரதானமாக அமையும். இந்த சபைக்குத் தான் அழைத்தவர்கள் வந்தார்களா என்று மிகுந்த கவனத்துடன் வீட்டிற்குப் பொறுப்பானவர் பார்த்துக் கொண்டிருப்பார். வருபவர் களை இன்முகத்துடன் வரவேற்று உபசரித்து அனுப்புவதற்காக அவர் வாசலிலேயே நிற்பார். இவ்வாறு அழைத்தவர் அதைக் கவனத்திலெடுத்துக் கட்டாயம் செல்ல வேண்டும். அவ்வாறு செல்லாவிட்டால் அவர் தன்னையும் அழைப்பையும் புறக்கணித்த தாக மனவருத்தத்துடன் அழைத்தவரும் அவ்வாறே அழைக்கப் பட்டவரின் விசேட தினங்களில் கலந்து கொள்ளமாட்டார். இந்த மதிய உணவு விநியோகம் பிற்பகல் மூன்று மணிவரை நடைபெறும்.

இரவு நடைபெறும் விடயங்களில் அதிகமானவர்கள் அழைக்கப் பட்டிருப்பார்களாதலால் திருமணத்துக்குப் பல நாட்களுக்கு முன்பே ஒரு திருமணப் பந்தலை அமைப்பர். அப்பந்தலிலேயே விருந்தினர்கள் வரவேற்கப்படுவர். இந்தப் பந்தல் அமைக்குமுன் பந்தலின் ஒரு ஓரத்தில் முள்முருக்கு கதிகால் ஒன்றினை நடுவர். இதனை முஸ்லிம்கள் பந்தற்கால் என்று சொல்வர். இந்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை கன்னிக்கால் நடுதல் என்பர். இந்துக்களைப் பின்பற்றியே இது வந்ததாதல் வேண்டும். இதன் பின்பே பெரும்பாலும் தென்னை ஓலையினால் வேயப்பட்ட பந்தல் உருவாக்கப்படும். பின் பந்தலை அழகுபடுத்த வெள்ளை கட்டப்படும். வெள்ளை என்பது வெள்ளைத் துணிகளை இணைத்து வேய்ந்தும் அடைத்தும் உள்ள கிடுகுகளை (ஓலைகளை) மறைத்துக் கட்டுதல் ஆகும். இதனை அந்த ஊரின் வண்ணானே செய்வார். அதற்காக அதிக ஊதியமும் பெறுவார். யாழ்ப்பாணத்தில் நிலவும் குடிமக்கள் முறையின் பிரதிபலிப்பே இதுவாகும். இக் காலங்களில் உறவினர்களே இவ்வேலையையும் செய்கின்றனர். முஸ்லிம்கள் மத்தியில் தொழில்ரீதியான சாதிப் பிரிவுகள் இல்லை யாதலால் இத் தொழிலைச் செய்வதை இழிவாகக் கருதுவ தில்லை. ஆனால் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இவ்வேலையை வேறு யாராவது புரிந்தால் அவரைக் கேலி செய்து 'வண்ணான்' என்றே பட்டமும் சூட்டி விடுவர்.

திருமண நாளன்று மாலை நிகழ்ச்சிகள் 6 மணிக்கே ஆரம்ப மாகிவிடும். இதையே சபை என்பர். இச் சபையில் விருந்தின ரின் ஆசனங்கள் பாய் அல்லது கம்பளமாகவே இருக்கும். அண்மைக் காலங்களில் கதிரையும் பயன்படுத்தப்படுகிறது. சபையினை நன்றாக அலங்கரித்திருப்பர். மூன்று அல்லது நான்கு சிறு ஸ்டூல்களில் அழகிய சேலைகள் விரிக்கப்பட்டு ஒன்றில் குடிபானமும் இது தேநீர், கோப்பி, சோடா அல்லது சர்பத் ஏதேனும் ஒன்றினைக் கொண்டிருக்கும் இரண்டாவதில் வெற்றிலைக் கூறுகளும் (வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை, மணப்பாக்கு) மூன்றாவதில் வெற்றிலைப் பைகளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காவதில் அத்தர், பன்னீர், சந்தனம் என்பவையும் வைக்கப் பட்டிருக்கும் வெற்றிலைப்பையில் பத்து வெற்றிலைகள், பாக்குகள் (பிற்காலத்தில் சீவல் தரப்பட்டது) புகையிலை, சுண்ணாம்பு, மணப்பாக்கு, களிப்பாக்கு, நுங்குப்பாக்கு என்பன சேர்க்கப்பட்டிருக்கும். இதுவும் அண்மைக் காலத்தில் இல்லா தொழிந்து இனிய சுவையுடன் கூடிய பீடா மட்டுமே வழங்கப் படுகிறது. வெற்றிலைப்பையில் நன்கு பழுத்த ஒரு எலுமிச்சம் பழமும் சேர்க்கப்பட்டிருக்கும்.

வீட்டின் சொந்தக்காரர் வாசலில் நின்று வருபவர்களை இன்முகத் துடன் வரவேற்பார். அவர் வந்தவுடன் சபையில் நிற்கும் சபை நடத்துபவர்கள் முதலில் குடிபானத்தை அவருக்குக் கொண்டு வந்து தருவார். அதன் பின்பு இரண்டாவது நபர் தட்டில் பரவப்பட்டுள்ள வெற்றிலைக் கூறுகளை விருந்தினருக்கு வழங்குவார். ஆரம்ப காலங்களில் இக்கூறுகள் தனித்தனியே நூலால் கட்டப்பட்டிருந்தன. பின்பு வெறுமையாகக் கொடுத் தார்கள். இன்று இவ் வழக்கம் அருகி விட்டது. இப்படி வழங்குவதன் நோக்கம் விருந்தினர் சபையில் வைத்தே அந்த வெற்றிலையை போடட்டும் என்றிருக்கலாம். பழைய காலங் களில் இவ்வாறு தாம்பூலம் தரித்தல் ஒரு கௌரவமான செயல் என நம்பினர் போலும். இதன் பின் மூன்றாவது நபர் பையில் இட்ட வெற்றிலையைக் கொண்ட தட்டினை எடுத்து விருந்தினர் முன் நீட்ட அவர் அதிலிருந்து ஒரு பையினை எடுத்துக் கொள் வார். விருந்தினர் லெப்பை, ஹாஜியார் அல்லது வைத்திய ராக இருந்தால் மட்டும் அவர் இரண்டு பைகளை எடுத்துக் கொள்வார். இனி நான்காவது நபர் அத்தர் கும்பாவையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னீர்ச் செம்பையும் கொண்டு வந்து விருந்தினர் முன் அத்தர் கும்பாவை நீட்டுவார். அவர் அத்தர் கும்பாவில் உள்ள பஞ்சினைத் தன் கலிமா விரலால் (சுட்டு விரலால்) தொட்டு தன் உடையில் பூசிக் கொள்வார். இவ்வாறு அவர் செய்து கொண்டதும் அவருக்குப் பன்னீர் தெளிக்கப்படும். இவ்வளவும் நடந்த பின்னர் அந்த விருந்தினர் விடைபெற்றுக் கொள்ளுவார்.

மணநாளன்று பெண் நாவிதை ஒருத்தி பெண் வீட்டுக்குச் சென்று பெண்ணுக்கு முகம் வழித்தல் என்னும் சடங்கை நிறைவேற்று வார். அதேபோல ஆண் நாவிதன் ஆண் வீட்டுக்குச் சென்று முகசவரம் செய்து விடுவார். பின்னது இன்று அருகி விட்டது. பெண் நாவிதை வந்து சென்றதன் பின்னர், பெண்ணின் மைத்துனி முறையானவர்கள் பெண்ணைக் குளிக்க வார்த்து வெண்ணிற ஆடை உடுத்தி குத்துவிளக்கில் விழிக்கச் செய்து பெண்ணை வீட்டுக்குள் வைத்திருப்பர். மாலையானதும் ஆண் வீட்டாருக்கு பெண்ணுக்கு மருதோன்றி இட வருமாறு அழைப்பு விடுக்கப்படும். இவ்வழைப்பினை பெண் வீட்டார் சிலர் கூட்டமாக வந்து ஆண் வீட்டாருக்கு விடுப்பர். இதற்கு வேண்டிய மருதோன்றியைச் சிலவேளைகளில் பெண் நாவிதை கொண்டு வருவார். அல்லது பெண் வீட்டார் தேடி அரைத்து வைத்திருப்பர். பெண் வீட்டா ருடன் சேர்ந்தே ஆண் வீட்டாரும் வந்து பெண்ணுக்கு மரு தோன்றி இடும் வேலையை மணமகனின் சகோதரிகளே பெரிதும் செய்வர். இவ்வாறு மருதோன்றி இட்டபின் அங்கு நடைபெறும் சபையில் பங்குபற்றி மீளுவர். இவ்வாறு பெண்கள் புறப்படும் போதும் மீளவரும்போதும் சில நேரங்களில் இரு வீட்டாரும் வெடிகள் கொழுத்தி மகிழ்வர். ஆண்களுக்கு நடப்பது போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சபையே வேறாகப் பெண்களுக்கும் நடைபெற்றுக் கொண் டிருக்கும். இப்படி சபை நடைபெறுகையில் பெண்வீட்டார் ஒரு தட்டினில் பால், பழங்கள், மலர்கள் இவற்றுடன் முட்டைகள், நெய், சிறிதளவு பணம் என்பவற்றை வைத்து ஒரு துணியால் மூடிக் கொண்டு வந்து மணமகனின் தந்தை அல்லது சகோதர ரிடம் கையளிப்பார். இவ்வாறு கையளிப்பவரும் மணமகளின் தந்தையாக அல்லது சகோதரராக இருப்பார். இச் செயல் இனி மாப்பிள்ளை புறப்பட்டு வரலாம் என்பதற்கு அடையாள மாகும்.

இவ்வாறு செப்பு வந்தவுடன் மாப்பிள்ளையின் நண்பர்களும் மைத்துனர்மாரும் மணமகனைக் கிணற்றடிக்குக் கொண்டு சென்று அறுகம்புல், தேங்காய்ப்பால், நெய் என்பவற்றைத் தலையில் தேய்த்து நீராட்டுவர். நீராட்டி முடிந்ததன் பின்னர் வெள்ளைச் சேலையொன்றால் மாப்பிள்ளையைப் போர்த்தி எரிந்து கொண் டிருக்கும் குத்துவிளக்கில் முதலில் விழிக்கச் செய்வர். விளக்குப் போலப் பிரகாசமான வாழ்வு அமையட்டும் என்ற நோக்கமாக இது இருக்கலாம். பின்பு நண்பர்கள் அனைவரும் புத்தாடை களை மணமகனுக்கு அணிவிப்பர். ஆண்கள் சறம் அல்லது நீண்ட காற்சட்டைகளை அணிவர். பொதுவாக எல்லோருமே கோட் அணிவர். தொப்பிகளும் பாதரட்சைகளும் அணிவர். பல்வேறு வாசனைத் திரவியங்களும் தடவுவர். இவ்வாறு மணமகனை நன்கு அலங்கரித்த பின் மாப்பிள்ளையின் தாயார் அல்லது சகோதரி மாப்பிள்ளையை அழைத்துச் சென்று பெண்கள் சபையில் ஒரு ஆசனத்தில் இருத்தி விடுவார். அப்போது மணமகனின் உறவினரான பெண்கள் தங்களால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயன்ற பணத்தை அன்பளிப்பாக வழங்குவர். இது எல்லா வீடுகளிலும் நடைபெறுவதில்லை. சில மணமகன்களின் தாய் மார் "சந்தோஷமாகப் பார்த்துக் கொள்ளுங்கள் ஒன்றும் கொடுக்க வேண்டாம்" என்று கூறினால் இவ்வாறு பணம் கொடுக்கும் சடங்கு நடைபெறமாட்டாது. பின்னர் மணமகன் ஆண்களின் சபைக்கு அழைத்துச் செல்லப்படுவார். எல்லா இடங்களிலும் ஆண்களின் சபையும் பெண்களின் சபையும் வெவ்வேறாகவே நடைபெறும் என்பது நினைவுகூரப்பட வேண்டும். அங்கு திருமணத்தைப் பதிவுசெய்யும் லெப்பையும் ஏனையவர்களும் வந்திருப்பார்கள்.

அங்கு லெப்பை ஒரு பாத்திஹா (துவாப் பிரார்த்தனை) ஓதிய வுடன் வந்திருப்பவர்கள் அனைவருக்கும் குடிபானமும் வெற்றி லைப்பையும் வழங்கப்படும். மாப்பிள்ளைக்குத் திருமணப் பரிசில்களை வழங்க விரும்புபவர்கள் சபையில் வைத்தே வழங்கு வர். இத்துடன் மணமகன் வீட்டு ஆண் சபை நிகழ்ச்சிகள் முடிவுறும். இதன் பின் மணமகன் ஊர்வலமாக நடந்து அல்லது காரிலே செல்வார். ஊர்வலமாகச் செல்வதாயின் பைத்துப் பாடும் கோஷ்டியினர் முதல் நாளே அறிவிக்கப்படுவதுடன் மதிய உணவுக்காகவும் அழைக்கப்பட்டிருப்பார்கள். மணமகன் சபையுள் பிரவேசிக்கும்போதும் வெளியேறும்போதும் சலாம் கூறியே புறப்படுவார். மணமகனின் மைத்துனர் அல்லது சோதரர் அல்லது தந்தையே மாப்பிள்ளையின் கையைப் பிடித்து வீதிக்குக் கொண்டு வருவார். பின் மாப்பிள்ளைத் தோழனுடன் ஊர்வலமாக நடந்து செல்வார். பைத்துக் கோஷ்டியினர் "யாஷையயதி" மாலையை இராகத்துடன் ஓதிச் செல்வர். இடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் எதிர்ப்படும் பள்ளிவாயில்களில் தரித்து 'துவா'ப் பிரார்த்தனையும் புரிவர். சிலர் வெடிகள், வாணங்கள், மத்தாப்பூக்கள், விறிசுகள் என்பவற்றை வழியெங்கும் கொழுத்தி மகிழுவர்.

மணமகன் பெண் வீடடைந்ததும் பெண் வீட்டாரின் சபை நிகழ்ச்சிகள் நிறுத்தப்படும். பெண் வீட்டு வாசலுக்கு மாப்பிள்ளை வந்ததும் மாப்பிள்ளைக்கு ஆராத்தி எடுத்து நிறைகுடமும் சரிப்பர். பின்னர் பெண் வீட்டு வாயிலில் வைத்தே (மலர் மாலைகள் தங்க மோதிரங்கள்) (சமயத்தில் விலக்கப்பட்டுள்ள போதிலும்) என்பன அணிவித்த பின் மணமகனுக்கு பால் பழம் ஊட்டுவர். எஞ்சியதை மணமகளுக்குத் தருவர். ஊட்டி முடிந்த பின் பெண்ணின் தந்தை பிள்ளையின் தந்தையிடம் மணமகனை உள்ளே அழைத்துச் செல்லட்டுமா என்று அனுமதி கேட்டுப் பெற்றபின் மணமகனுடன் கூட நிற்போர் அனைவரையும் உள்ளே வரும்படி பெண்ணின் தந்தை அழைப்பார். உள்ளே திருமணப்பதிவு நடைபெறும்.

அதன் பின்பு மாப்பிள்ளையை அழைத்துச் சென்று பெண்ணின் கையைப் பிடித்துக் கொடுத்து கையளிப்பு வைபவம் நடைபெறும். இவ்வாறு கையளிப்பு நடக்கும் போதும் லெப்பை துவாப் பிரார்த்தனை செய்வார். பின் மணமக்கள் ஒன்றாக அருகருகே அமர்ந்திருப்பர். இதன் பின்பும் சபை நிகழ்ச்சிகள் தொடர்ந்தும் நடைபெறும். மணமகன் வந்ததன் பின்னும் பெண் வீட்டார் ஆண்வீட்டுக்குச் சென்று தாலி கட்டுவதற்காக அங்குள்ள பெண்களை அழைப்பர். அவர்கள் வந்தவுடன் மணமகனின் தாயார் அல்லது மூத்த சகோதரி தாலிக்கொடியை எடுத்துக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்க மாப்பிள்ளை மணமகளின் கழுத்தில் தாலியைப் பூட்டுவார். இத்தோடு கூறைச்சேலையும் கொண்டு வந்து பெண்ணுக்கு வழங்குவார்கள். இக்கூறைச்சேலை விலை உயர்ந்ததாக இருக்கும். அதன் பின்பே வாழ்த்துப்பாடும் நிகழ்ச்சி ஆரம்பமாகும். இதுவும் இன்று முற்றாகக் கைவிடப் பட்டுவிட்டது.

கமுகம்பூ, தென்னம்பூ, உட்பட பலவகைப் பூக்கள், பொரித்த தானியங்கள் இவற்றால் மணமக்களுக்கு வீசி வாழ்த்துப் பாட ஆரம்பிப்பர். இவ்வகை வாழ்த்துப்பாடல்களைப் பாட ஒருவரோ சிலரோ கூலிக்கமர்த்தப்பட்டிருப்பார்கள். இவ் வாழ்த்தினைக் கொண்ட இலக்கியங்களும் அக்காலத்திலிருந்தன. ஆரம்ப காலங்களில் பல்வகையான பலகாரங்களையும் பழங் களையும் சபையில் கட்டித் தொங்கவிட்டிருப்பர். அவற்றையும் பறித்து மணமக்களுக்கு வீசி வாழ்த்தும் வழக்கமும் இருந்தது. பின் அம்முறை அருகி வந்து இன்று அறவே இல்லாது ஒழிந்து விட்டது.

இச்சபை நிகழ்ச்சிகள் யாவும் முடிந்ததும் மணமகனின் தாயார் மணமக்கள் இருவருக்கும் தன் கரத்தாலேயே பாலும் சோறும் ஊட்டி விடுவார். அத்துடன் அன்றைய மணநாள் நிகழ்ச்சிகள் முடிவுறும். யாழ்ப்பாண முஸ்லிம்கள் தம் ஒழுக்கத்தைப் பேணு வதில் மிகவும் கவனமுடையவர்கள் ஆதலால் ஏனைய பிரதேசங் களில் முக்கியமாக சிங்கள பண்பாட்டைப் பெற்றுள்ள முஸ்லிம் பகுதிகளில் நிலவும் வெள்ளையுடுத்தல் முதலிரவுப் பரிசோதனை என்பவை யாழ்ப்பாணத்தில் கிடையாது. முன்பும் இருந்ததில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் பல வருடங்களுக்கு முன் பருவம் எய்தாத சிறுமிகள் கூட திருமணம் செய்து வைக்கப்பட்டனர். தற்காலத்தில் என் அறிவுக்கெட்டிய வரையில் இவ்வித இளமை விவாகங்கள் நடைபெறவில்லை.

திருமணம் முடித்த அடுத்தநாள் மணமகன் அதிகாலையில் எழுந்து தனது தாய்வீட்டுக்குச் செல்லுவார். கூடவே துணை யாக யாராவது பையன்கள் செல்வர். பின் மீண்டு வருவார். திருமணம் முடிந்த பின் பெரிதும் பெண்ணுக்குச் சீதனமாகக் கொடுத்த வீட்டிலேயே ஆண் வசிப்பர். சொத்துரிமைகள் பெண்களுக்கு வழங்கப்படுவதாலேயே இந்த நிலை உருவானது. ஏனைய மாகாணங்களில் இப்படி பெண் வீட்டில் ஆண் இருந்து வாழ்வதை இழிவாகக் கருதுகிறார்கள். திருமணமான மூன்றாம் நாள் பெண் வீட்டுக்கு மணமகன் வீட்டார் முக்கியமாகப் பெண் கள் செல்லுவர். இவர்கள் ஏற்கனவே மணநாளன்று வந்த செப்பில் இருந்த முட்டைகள் பணம் இவற்றுடன் சேர்த்து ஏதேனும் தின்பண்டங்கள் செய்து கூடவே கொண்டு செல்வர். அங்கு ஒரு சிறிய தேநீர் விருந்தும் நடைபெறும். ஏழாம் நாள் மதிய உணவினை ஆண் வீட்டாரும் பெண் வீட்டாரும் ஒருங்கு கூடி "கூடித்தின்னல்" என்ற பெயரில் ஒரு விருந்து நடத்துவர். அக் கூடித்தின்னலின் முடிவில் மணமகன் மணமகளுக்கு ஒரு தங்க மோதிரத்தைப் பரிசளிப்பார். அன்று மாலை மணமகன் கடை சுற்றச் செல்லுவார். இவ்வாறு சென்று சமையலுக்கு வேண்டிய பாத்திரங்கள் பொருட்கள் எல்லாவற்றையும் வாங்கி வருவார். புதிய பானை, சட்டி, அகப்பை என்பவற்றையும் வாங்கி வருவார். இவ்வாறு கடை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றச் செல்கையில் எல்லாப் பெண்களும் மணமகனுக்கு பண அன்பளிப்பும் செய்வர். இத்தோடு ஒரு பெரிய மீனையும் வாங்கி வருவார். மீன் வந்ததின் பின் பெண்ணின் மைத்துனி மார், பெண் அறியாமலே மீனின் வாயினுள் ஒரு இரும்புக் கம்பியைச் செலுத்தி அதனை வெட்டுப்படி மணமகளிடம் கொடுப்பர். பின் அவர் மீனை வெட்ட முடியாது சிரமப்படுவ தைக் கண்டு நிற்போர் நகைத்து நிற்பர்.

கடை சுற்றி வந்த மணமகன் தான் கொண்டு வந்த மணமகளுக் கான சேலை உட்பட சகல பொருட்களையும் மணமகளின் கையில் தருவார். திருமணமான இரண்டாம் மூன்றாம் நாட் களில் புலால் உணவுகள் மணமக்களுக்குத் தரப்படுவதில்லை.

## ஸ்திரீதனம் > ஸ்ரீதனம் > சீதனம்

பெயர் மருவி வந்த நிலையிலேயே எத்தனை தூரம் இது மக்களால் வெறுக்கப்பட்டு வருகிறது என்பது புலனாகும். இஸ்லாம் முற்றாக வெறுக்கும் ஒரு பண்பாகவும், முழுக்க முழுக்க இந்துக் கலாச்சாரத்தால் கவரப்பட்டு நமது பெண்கள் பெருமூச்சு விடக் காரணமாகவும் இருப்பது இந்தச் சீதனமாகும். தமிழ்க் கலாச்சாரத்தின் ஊடுருவல் இன்று முஸ்லிம்கள் மத்தியில் நன்கு பரந்து எத்தனையோ ஏழைப்பெண்கள் கண்ணீர் வடித்து உருகும் நிலையை இது உருவாக்கியிருக்கிறது. இஸ்லாமிய சமய சட்டத்தின்படி பெண்கோரும் "மஹர்" பணத்தை ஆண் கொடுத்தே திருமணம் செய்ய வேண்டும். இன்று நிலை மாறிவிட்டது. சமயச் சட்டங்கள் பிறமத பின்பற்றல்களினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறக்கணிக்கப்பட்டு விட்டன. சமுதாயப் பழக்கவழக்கங்களும் கொள்கைகளும் அறியாமைக் கால அரேபியாவின் நிலைக்கு நம்மைக் கொண்டு வந்துள்ளது. இதனால் பெண் பிறப்பதே கூடாது என்ற மனோநிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். சீதனம் இல்லாமையினால் பல நூற்றுக்கணக்கான இளம்பெண் கள் முதுமையடைந்தும் வாழமுடியாதவர்களாக ஆக்கப்பட்டுள்ள னர். இஸ்லாம் விரும்பாத இந்த இழிநிலையை மாற்ற இளைஞர் சமுதாயம் முயலவேண்டும்.

விலைவாசி அதிகரிப்பது போல சீதனத்தின் அளவும் வருடா வருடம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. சீதனத்தின் தன்மை யாலேயே பெரும்பாலும் காணிகளின் சொத்துரிமை பெண் களுக்கே உள்ளன. இதனைவிட கைக்கூலி ஆயிரம் ரூபா முதல் பல லட்சம் ரூபாய் வரையும் இதனை விட நகைகளாக வும் பெண் வீட்டார் தரவேண்டும். 1957ல் சாதாரணமாக உழைக்கக்கூடிய ஒரு தொழிலாளியை மணமகனாகப் பெறு வதற்கு குடியிருப்புக்காணி 1 அல்லது 1/2 பரப்புடன் பணமாக 1000/= வும் நகையாக 1000/= யும் (ஏறக்குறைய 15 தங்கப் பவுண்) கொடுத்தல் போதுமானதாக இருந்தது. ஆனால் இன்று இந்த நிலை மேலும் மோசமடைந்துள்ளது. இன்று அதாவது 1979ல் குடியிருக்கக் காணியுடன் கைக்கூலி 5000/= வும் நகை யாக 5000/= வும் கொடுத்தால்தான் சாதாரண மாப்பிள்ளை ஒருவரைப் பெறக்கூடியதாக உள்ளது. கல்வியில் உயர்ந்து உத்தியோகங்கள் வகிக்கிற அல்லது வர்த்தக நிலையங்களின் உரிமையாளர் போன்ற தகுதிகள் கொண்டவர்கள் அதிக அளவு சீதனத்தைக் கோருவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாத்தின் மூன்றாவது கலீபா உதுமான் (ரலி) அவர்கள் பெரும் செல்வந்தராக விளங்கியதால் தன்னிடமுள்ள சொத்தில் ஒரு பகுதியைத் தனது மகளுக்கு அன்பளிப்பாக வழங்கினார்கள் என்றும் இதிலே இஸ்லாத்துக்கு மாறு இல்லை என்று வாதிடுவோரும் உளர். இல்லாதவர்களிடம் கூட, உள்ளவர்கள் தருவது போலத் தரவேண்டும் என்று பேரம் பேசுவதையே தடுக்க வேண்டியுள்ளது. இவ்விடயத்தில் செல்வந்தர்களும் ஒத்துழைத்து சீதனம் வாங்கவும், கொடுக்கவும் கூடாது என்ற நிலையை ஏற்படுத்தினால்தான் சமுதாயம் வளமாக அமையும்.

# தொழில்கள்

தொழில்களில் யாழ்ப்பாண இந்துக்களின் நடைமுறைகளைப் பின்பற்றியோ என்னவோ குடிமக்கள் எனப்படுகிற தாழ்த்தப்பட்ட சாதியினர் புரியும் தொழில்களை இவர்களும் புரிவதில்லை.

ஆரம்ப நாட்களிலும் இன்றும் வர்த்தகமே முதலிடம் வகிக்கின்றது. அராபிய வணிகர் காலத்திலேயே அராபியர் கொணரும் பொருட்களை நாடுகளுள் கொரண்டு சென்று அங்கு விற்று அங்கு கிடைக்கின்ற ஏற்றுமதி செய்யத்தக்க பொருட்களைக் கொண்டு துறைமுகங்களுக்கு வந்தார்கள். அந்தக் காலத்தில் இன்றைய போக்குவரத்து வசதிகள் எதுவுமே இல்லை. எனவே அராபியக் கரவன் முறையைப் பின்பற்றி ஈழத்திலும் 'தவள' முறையை அறிமுகம் செய்தனர். எல்லாக் கிராமங்கட்கும் பொருட்களை மாடுகளின் முதுகில் ஏற்றிக் கால் நடையாகவே சென்று வந்தனர். இன்றுபோல் முன்பு நகரப்புறங்கள் இருக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. இவர்களில் சிலர் இக்கிராமங்களில் நிலையாக இருந்தே பொருட்களைச் சேகரித்தனர். இப்படித் தவள முறை மன்னார், வவுனியா மாவட்டங்களில் அண்மைக் காலம் வரை நிலவி வந்துள்ளது. இது பற்றி பல கதைகள் கூட நிலவுகின்றன. பின்னர் சந்தைகள் உருவாகவே சந்தைகள் தோறும் சென்றும் வணிகம் செய்யவும் ஆரம்பித்தனர். நகரப்புறங்கள் அமைய நகரப் பாங்கர்களிலும் கடைகள் அமைத்து வணிகம் செய்தனர்.

இதனைவிட கடற்றொழிலும் இவர்கட்குக் கைவந்த கலையாக இருந்தது. கூலியாட்களை வைத்து மீன்பிடித்து கருவாடாக்கி ஏற்றுமதி செய்தல் சங்கு மற்றும் முத்துக்குளித்தல் என்பவற்றி லும் முதலில் முஸ்லிம்களே ஈடுபட்டனர். போர்த்துக்கேயர் வருகையினால் முஸ்லிம்கள் செல்வம் முற்றும் அழிக்கப்பட வணிக சமுதாயமாக இருந்த இவர்கள் தொழிலாளர்களாக மாற வேண்டிய நிலை ஏற்பட்டது. உயர் கல்வியைப் பெற்று உத்தியோகங்களைப் பெற வாய்ப்புகள் இருந்தாலும் அக் கல்வியைப் பெற மதம் மாறிக் கிறிஸ்தவராக வேண்டிய நிலை யிருந்ததனால் ஆங்கிலக் கல்வியையும் வெறுத்தனர். அப்படி ஆங்கிலம் கற்பது "ஹறாம்" எனும் விலக்கப்பட்ட செயலாகக் கருதினர்.

எனவே மீளவும் பலர் சிறு வியாபாரங்களிலேயே கவனம் செலுத்தனர். வறுமை மேலாடியபோது மீன்பிடித்தல், தையல் தொழில், சிப்பம் கட்டுதல், ஒட்டு வேலைகள் முதலியவற்றில் ஈடுபட்டனர். 1956ன் முன்னர் விரல் விட்டு எண்ணிவிடக்கூடிய அளவு தொகையினரே அரச பணிகளில் இருந்தனர். 1956ன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் பலர் எழுதுவினைஞர்களாகவும் ஆசிரியர்களாகவும் நியமனம் பெற்றனர். 1958ன் பிற்காலப் பகுதிகளில் கணிசமான அளவு வாலிபர்களும் யுவதிகளும் ஆசிரியத் தொழில் புரிவதற் குத் தெரியப்பட்டனர். இன்று வியாபாரம் தையற்றொழில் அரச உத்தியோகம் என்பவற்றையும் கிராமிய வியாபாரங்களை யும் புரிகிறார்கள்.

இவர்கள் விவசாயத்தில் நாட்டம் உடையவர்கள் அல்லர். ஏனெனில் இவர்கள் வாழ்ந்த பகுதிகள் வரண்டுள்ளது ஒரு காரணம். மற்றையது இவர்கள் சேர்ந்து வாழ விரும்புகிறார்கள். தமது உறவினரை விட்டு வெளியேறி வாழப் பின்நிற்கிறார்கள். 1950 அளவில் வழங்கப்பட்ட கிளிநொச்சிக் குடியேற்றங்களில் முரசுமோட்டையில் மூவரும் 53ல் வட்டக்கச்சியில் பதின்மருமே குடியேறினர் என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மைக் காலத்தில் விவசாயத்தில் விருப்புக் கொண்டனரேனும் முஸ்லிம்களுக்கு குடியேற்றத்துக்கென வழங்கப்பட்ட பகுதி "பள்ளிக்குடா" நீரற்றபகுதி என்பதனால் குடியேறாது விட்டனர்.

ஏற்கனவே மீசாலையில் வாழ்ந்த பலர் விவசாய நாட்டம் கொண்டு குடாநாட்டுக்கு வெளியே பெயர்ந்து போயினர். அவர்களே வடமாகாணத்தில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள முஸ்லிம்களாவர்.

முதலில் கூறியதுபோல முஸ்லிம்களில் மரம் ஏறுவோர், அம்பட்டர், வண்ணார், தோட்டி வேலைகள் செய்வோர், தச்சன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேசன்மார் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. அண்மைக் காலத்தில் மேசன் வேலைகளை சிலர் பழகுகிறார்கள். ஆயினும் பெரும்பாலும் இல்லை என்றே கொள்ளல் வேண்டும். 1970ன் பின் சில வாலிபர்கள் விசுவமடு குடியேற்றத் திட்டத்தில் குடியேறி விவசாயம் செய்து வருகிறார்கள். இஸ்லாம் சமயம் அனுமதித்த தொழில்களைப் புரிந்து நீதமாகவும் நேர்மையாகவும் நடக்கின்ற காரணத்தால் சகோதர இனமாகிய தமிழர்களுடன் சேர்ந்து அன்னியோன்னியமாய் வாழ்ந்து வருகிறார்கள். தத்தமது சமுதாயத் தேவைகளுக்கும் மார்க்கச் சடங்குத் தேவைகளுக்கு மான நாவிதர்களும் வெளி மாவட்டங்களிலிருந்தே இங்கு பெறப் படுகின்றனர்.

# சமூகசேவை இயக்கங்கள்

காலத்துக்குக்காலம் பல சமூகசேவை இயக்கங்கள் சமுதாய சேவைகளில் ஈடுபட்டுள்ளன. நமது ஆய்வுக்கெட்டிய வரையில் காலத்தால் முந்தியவை முஸ்லிம் சங்கமும் முஸ்லிம் சகோ தரத்துவ இயக்கமுமாகும். முஸ்லிம் சங்கம் என்ற பெயரில் இரண்டு சங்கங்கள் இருந்தன. அதில் ஒன்றின் ஸ்தாபகர் மர்ஹூம் ஈ. எம். கரீம் என்பவராவர். இந்த முஸ்லிம் சங்கம் தனக்கென சொந்தமாக ஒரு கட்டிடத்தைக் கூட வைத்திருந்தது. அதிலேதான் இன்று யாழ் மாநகரசபை நூல்நிலையத்தின் கிளை ஒன்றை அமைத்துள்ளது.

முஸ்லிம் சகோதரத்துவ இயக்கம், பிரபல சமூக சேவையாள ரும் முன்பு ஸாகிறாக் கல்லூரியின் கிளையொன்றை அமைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயன்றவரும் பின்பு, ஒஸ்மானியாக் கல்லூரியை அமைப்பதில் அரும்பாடுபட்டு உழைத்தவருமான மர்ஹூம் அல்ஹாஜ் வி. எம். எம். எஸ். அப்துல்காதர் அவர்களால் 1931ல் ஆரம்பிக்கப் பட்டது. இதன் செயலாளராக ஜனாப் எஸ். எம். எம். முகிதீன் நீண்டகாலம் கடமையாற்றினார். 9 பேருடன் தொடங்கப்பட்ட இச்சங்கம் 150 அங்கத்தவர்கள் வரை அங்கம் வகிக்கும் சங்க மாகச் செயற்பட்டது. இதற்குச் சொந்தமான காணி ஒன்று மானிப்பாய் வீதியிலமைந்திருந்தது. இச்சங்கம் வருடா வருடம் மீலாத் விழாவை வெகுவிமரிசையாகக் கொண்டாடியது. இக் கொண்டாட்டங்களில் மிகச் சிறந்த கட்டுரையை அல்லது பிரசங்கத்தை மொழிபெயர்த்து அச்சிட்டு மீலாத் மலர் என்ற பெயரில் இலவசமாக வழங்கினர். இப்பிரசுரம் தொடர்ந்து 7 ஆண்டுகள் வெளிவந்தது.

மீலாத் விழாவில் மற்றைய சமூகத்தவரும் இஸ்லாமிய கொள்கை களை அறிய வேண்டும் என்ற ஆவலால் யாழ்ப்பாணம் முற்ற வெளியில் 1943 முதல் 1949 வரை நடத்தினர். 1949ன் பின் முஸ்லிம் வட்டாரங்களிலேயே நடத்தினர்.

முஸ்லிம் லீக் 1941ல் தொடங்கப்பட்டது. இதனை ஜனாப்கள் கா. மீரான் முகிதீன், கே. எம். ஏ. காதர், எம். எம். சரீபு, வை. கச்சு முகம்மது ஆகியவர்கள் முன்னின்று தொடங்கினர். இதுவும் நூல்நிலையம், வாசிகசாலை ஆகியவற்றைக் கொண் டிருந்ததுடன் மீலாத் விழாவையும் கொண்டாடியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1935ல் எம். எம். அப்துல்காதர், வி. எம். எம். அபூசாலிஹ், எம். எம். யூசுப், பி. எம். எம். எஸ். அப்துல்காதர் ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்ட வை. எம். எம். ஏ. மீலாத் விழாக்களை ஒழுங்கு செய்து இளைஞர்கள் கலந்துகொள்ள சந்தர்ப்பம் அளித்து வேறும் சிறந்த பணிகளை ஆற்றியது.

1948ல் மர்ஹூம் அல்ஹாஜ் எம். எம். மீறாப்பிள்ளை அவர்களாலும் அவர்களின் இரு சகோதரிகளாலும் ஆரம்பிக்கப்பட்ட மீறானியாக் கல்லூரி பல வருடங்களாக மாணவர்கள் மத்தியில் பல சமய அறிவுப் போட்டிகளை நடத்தி வெளியாரின் உதவி பெறாது பல விலையுயர்ந்த பரிசில்களையும் வழங்கி வருகிறது.

1948.2.5ல் ஜனாப்கள் எம். அப்துல்மஜீத், எம். எச். எம். யூசுப் ஆகியோரின் முயற்சியால் முஸ்லிம் வாலிப இயக்கம் (சிவல பள்ளிச் சந்தி வாலிபர்கள்) தொடங்கப்பட்டது. 1962 வரை இடையீடின்றி இது சேவை புரிந்தது. இந்திய பேச்சாளர்களை அழைத்து மீலாத் விழாக்கள் நடத்தினர். மீலாத் விழாக்களில் பேச்சுப்போட்டியை அறிமுகம் செய்ததும் இவ்வியக்கமேயாகும்.

1954ல் ஆரம்பமான தாருஸ்ஸலாம் விளையாட்டுக் கழகம் நல்ல பல உதைப்பந்தாட்ட வீரர்களை உருவாக்கியது. இதே காலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட ஜே. எம். எஸ். ஏ. பல விளையாட்டுப் போட்டிகளை நடத்தியது. ஜனாப்கள் எம். எம். மக்பூல், எம். எம். மன்சூர், எம். ஜி. பஸீர், எம். ஏ. அஸீஸ் ஆகியவர்கள் இதில் அதிக பங்கெடுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1956ல் முஸ்லிம் சனசமூக நிலையம் தொடங்கப்பட்டது. அப்போது இலங்கையிலுள்ள அவுஸ்திரேலிய உதவி ஸ்தானிகர் ஏ. எச். பொத்விக் இதில் கலந்து கொண்டார். ஏழைப் பிள்ளை களுக்கான பால் விநியோகம், வாசிகசாலை, நூல்நிலையம் ஆகியன நடத்தப்பட்டன. புத்தாண்டு தினங்களில் பல சமய அறிவுப் போட்டிகளை நடத்தினர். பரிசுகளும் வழங்கினர். இவர்களது முயற்சியாலேயே காதி அபூபக்கர் வீதியின் தபாற் பெட்டி பெறப்பட்டது. முஸ்லிம் பெண்களுக்காக ஒரு நெசவு பயிற்சிப் பாடசாலையும் திறக்கப்பட்டது. இதனை முன்னாள் பிரதமரும் பின்னாளில் உள்ளூராட்சி அமைச்சருமாயிருந்த கலாநிதி டபிள்யூ. தஹநாயக்கா திறந்து வைத்தார். இச் சனசமூக நிலைய வளர்ச்சியில் எஸ். ஏ. ஸி. எஸ். ஹமீட், கே. எம். எஸ். ஹமீட், கே. எம். ஹம்தூன் ஆகியோர் அதிக பங்கெடுத்தனர். அதே ஆண்டில் யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் பாரியார் திருமதி. பி. ஜி. ஹட்சன் அவர்களின் முயற்சியால் மாதர் சங்கமும் தொடங்கப்பட்டது.

ஆசிரியர் Z. ஆப்தீன் அவர்களதும் நண்பர்களதும் முயற்சியால் ஆஸாத் வீதியில் இலங்கைச் சோனகர் சங்கம் ஒன்றும் அமைக் கப்பட்டது.

சின்னப் பள்ளிவாசல் சீர்திருத்த சபை என்ற பெயரில் ஒரு இயக்கம் தொடங்கப்பட்டு சின்னக்குளம், பெரியகுளம் இரண்டை யும் சீர்திருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சிரமதான நடவடிக்கைகளைக் கையாண்டனர். மையவாடிக்கும் காணி வாங்கினர். இவ்வியக்கத்தில் மர்ஹூம் எம். எஸ். மதார்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். எம். சரீபு ஆகியவர்களும் இளங்கீரனும் அதிக அக்கறை காட்டினர்.

1956ல் தொடங்கப்பட்ட முஸ்லிம் கல்விச்சபை முஸ்லிம் மகளிர் கல்லூரி ஒன்றினை அமைக்க தீவிரமாகச் செயல்பட்டது. இதில் மர்ஹூம் அல்ஹாஜ் வி. எம். எம். எஸ். அப்துல்காதர், எம். எம். சுல்தான், எஸ். ஏ. றசீன் ஆகியவர்கள் முன்னின்று உழைத்தனர்.

ஜனாப் எம். அஹமதுவைத் தலைவராகக் கொண்ட சன்மார்க்க இயக்கம் பலமார்க்க உபன்னியாசங்களை ஏற்பாடு செய்தது. பயனுள்ள பல பிரசுரங்களை வெளியிட்டது. மாணவரிடையே திருக்குர்ஆன் மனனம், பேச்சு, கட்டுரை, பாடற் போட்டிகளை நடத்தியது.

மர்ஹூம் எம். ஏ. ஸி. எஸ். ஏ. காதர் அவர்களைத் தலைவராகக் கொண்டு தொடங்கப்பட்ட முஸ்லிம் சமூக சேவா சங்கம் குறுகிய காலத்துக்குள் பல சாதனைகளைப் புரிந்தது. முஸ்லிம் வட்டாரங்களில் கூட்டுறவுச் சங்கக் கடைகளை ஆரம்பித்தமை நோன்பு காலங்களில் நல்ல ரக அரிசி பெற முயன்றமை முதலாவது பிரம்புச் சந்தூக்கு வாங்கி அன்பளிப்பு செய்தமை அனாதை மையத்துக்களை எடுத்து அடக்கம் செய்தமை என்பன குறிப்பிடத்தக்கன. இதில் குவாசி எம். எம். எஸ். அப்துல் காதர் அவர்களும் தீவிர பங்கெடுத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண, அந்திய காலச் சங்கம் ஒன்று ஆரம்பித்து சிறிது காலம் இயங்கிப் பின் மறைந்துவிட்டது. அவ்வாறே விவாக நிதி உதவிச் சங்கமும் குறுகிய காலத்துக்குள் செயலற்றுவிட்டது.

1972ல் ஜனாப் எம். எம். சஹீது, எம். எச். சலீம், எம். யூ. ஏ. கையூம் ஆகியவர்களால் ஆரம்பிக்கப்பட்ட அகில இலங்கை முஸ்லிம் முன்னேற்ற இயக்கம் இரண்டாவது பிரம்புச் சந்தூக்கை பொதுமக்களின் நிதிஉதவியுடன் செய்து அன்பளித்தது. இதனை விடச் செல்வந்தர்கள் சிலரின் உதவியுடன் ஏழைச் சிறுவர் களுக்கு இலவச (கத்னா) விருத்த சேதனமும் செய்து வருகிறது.

1974ல் சில வாலிபர்களும் இளம் ஆசிரியர்கள் சிலரும் கூடி முஸ்லிம் கல்வி அபிவிருத்திச் சங்கம் ஒன்றை ஸ்தாபித்தனர். இதன் மூலம் உயர்கல்வி பெறும் மாணவர்களுக்கு இலவச விடுமுறை கால வாரஇறுதி வகுப்புகளை நடத்தினர். முஸ்லிம் கல்விச் சகாய நிதியொன்றை ஆரம்பிக்க நிதியும் சேகரித்தனர். எனினும் அதற்குப் போதிய ஆதரவில்லாததால் செயற்பட முடியாமலுள்ளது.

1974ல் ஜனாப்கள் ஏ. ஜே. சக்காப், எஸ். ஏ. ஸி. எம். இனனூ, எம். எஸ். ஏ. ரஹீம் ஆகியவர்களால் ஆரம்பிக்கப்பட்ட முஸ்லிம் உதவுவோர் சங்கம் பொம்மை வெளிக் குடியிருப்புப் பகுதியை மணல் போட்டு மேடாக்கும் முயற்சியில் வெற்றி கண்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக் காலத்தில் சில வாலிபர்கள் ஜின்னா வீதியில் ஒரு சனசமூக நிலையத்தை அமைத்து வாசிகசாலையொன்றை நடத்தி வருகின்றனர்.

இவற்றைவிட விளையாட்டுக் கழகங்கள் பலவும் முஸ்லிம் வாலிபர்களின் திறமையை வெளிக்கொண்டு வந்துள்ளன. சம்சுன், டைகர், சன்றைஸ் போன்ற உதைப்பந்தாட்ட லீக்குகள் பலமுறை மாவட்ட சம்பியன்களாகவும் தெரியப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத் தெரிவுக் கோஷ்டிக்கும் இக் கழகங்களிலிருந்து வீரர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர். அண்மையில் தமிழ்நாடு சென்ற யாழ்ப்பாண உதைபந்தாட்டத் தெரிவுக் குழுவிலும் மூன்று முஸ்லிம் வீரர்கள் எம். முனாஸ், எம். மன்சூர், எஸ். ரமீஸ் கலந்து கொண்டனர். அண்மைக் காலத்தில் இவை யாவும் ஒன்றிணைக்கப்பட்டு முஸ்லிம் விளையாட்டுக் கழகம் என்ற பெயரில் இயங்கி வருகின்றன.

# உள்ளூராட்சி அரசியலில் முஸ்லிம்கள்

| | | |
|---|---|---|
| 1926-1934 | - | கலீபா அப்துல்காதர் |
| 1937 | - | எஸ். எம். அபூபக்கர் |
| 1948 | - | எஸ். எம். அப்துல்காதர் |
| 1951 | - | வி. எம். எம். அபூசாலி ஹாஜியார் |
| | - | எஸ். எம். அபூபக்கர் |
| 1954 | - | வி. எம். எம். அபூசாலி ஹாஜியார் |
| | - | எம். எம். சுல்தான் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1958 - வி. எம். எம். அபூசாலி ஹாஜியார்
- எம். எம். சுல்தான்

1965 - வி. எம். எம். அபூசாலி ஹாஜியார்
- எம். எம். சுல்தான்

1969 - எம். ஜி. பஸீர்
- எம். ஏ. ஸி. எஸ். ஏ. காதர்

1979 - பி. எஸ். முகிதீன் பிச்சை
- ஆர். எம். இமாம்
- எம். எம். காசிம்

# வெளியேற்றப்படும்போது யாழ்ப்பாணத்திலிருந்த பள்ளிவாசல்களும் சிலவற்றின் படங்களும்

## ஜும்ஆ பள்ளிவாசல்கள்

1. முஸ்லிம் கல்லூரி வீதி பெரிய பள்ளி
2. நாவலர் வீதி புதுப்பள்ளி
3. முகிதீன் மஸ்ஜித் வீதி முகைதீன் பள்ளி
4. மானிப்பாய் வீதி முகைதீன் பள்ளி
5. கடைத்தெரு ஜும்ஆ மஸ்ஜித்
6. முதலாம் குறுக்குதெரு ஜும்ஆ மஸ்ஜித்
7. சாவகச்சேரி ஜும்ஆ மஸ்ஜித்
8. மண்கும்பான் ஜும்ஆ மஸ்ஜித்
9. நயினாதீவு ஜும்ஆ மஸ்ஜித்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏனைய மஸ்ஜிதுகள்

1. அபூபக்கர் வீதி மொகிதீன் தைக்கா
2. அபூபக்கர் வீதி றிபாயியா தைக்கா
3. கமால் வீதி காவல் மால் தைக்கா
4. ஐதுரூஸ் மக்காம் வீதி ஐதுரூஸ் மக்காம்
5. நாவலர் வீதி முகம்மதியா தைக்கா
6. குளத்தடி பள்ளிவாசல்
7. பொம்மைவெளி அபூபக்கர் மஸ்ஜித்
8. சாபி நகர் தைக்கா
9. கே. கே. எஸ். வீதி மஸ்ஜித்
10. ஆஸ்பத்திரி வீதி போரா பள்ளி
11. கொடிகாமம் மஸ்ஜித், பருத்தித்துறை மஸ்ஜித்

# கிளிநொச்சி மாவட்டம்

1. நாச்சிக்குடா ஜும்ஆ பள்ளி
2. கரடிப்போக்கு ஜும்ஆ பள்ளி
3. பள்ளிக்குடா தைக்கா

217108

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9330


பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தின் சில பள்ளிவாசல்கள்




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org